

கல்கி
KALKI
15.9.1963 30 காசு

ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு !



நீங்கள் போலிப் பற்களை அணிந்திருந்தால் 'ஸ்டெரடென்ட்' உபயோகித்து ஆக்ஸிஜனுல் சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பைப் பெறுங்கள். அது போலிப் பற்களை நன்ருகத் துலக்குகின்றது. 'ஸ்டெரடென்ட்' தண்ணீரில் கரைத்ததும் ஆக்ஸிஜன் கலந்த திராவகமாகி, சீக்கிரத்திலே போலிப் பற்களின் மிகச்சிறிய இடைவெளிகளுக்குள் புகுந்து உணவுப் பருக்கைகளை அப்புறப் படுத்துகிறது. பற்களில் படிந்துள்ள கறைகளையும் அழுக்குகளையும் கழுவி விடுவதுடன், தொத்து நோய் வாராமலும் துர்நாற்றம் அடிக்காமலும் இருக்கச் செய்கின்றது. இதன் விளைவு, 'ஆக்ஸிஜனுல்' சுத்தம் செய்யப்பட்ட பளபளப்பு-ஒளி மிகுந்த போலிப் பற்கள் !



பழைய வல்கனைட் போலிப் பற்களுக்கும் புதியதான ப்ளாஸ்டிக் வகைகளுக்கும் 'ஸ்டெரடென்ட்' சமமாகவே பயன்படுகிறது.



ஸ்டெரடென்ட் ஆக்ஸிஜன் முறை போலிப்பல் துலக்கி


கடிதம் எழுதினுல் **இலவச சாம்பிள்** அனுப்பப்படும்.

விலாசம் : அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
த.பெ. எண் 9009 கல்கத்தா-16.

அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTST-3 TM

கல்கி




பட விளக்கம்
67-ம் பக்கம் பார்க்க...

பொருளடக்கம்

சோபகிருது. ஆவணி 30உ செப்டம்பர் 15உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

புசிக்கவும் ஆசை, புகைக்கவும் ஆசை?



உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும் உகந்தது

பனாமா

சம்பிரதாய விருந்துகளின்போது புகைபிடிப்பது இக் காலத்திலே விலக்கல்ல. வசதி அளிக்கப் பெற்றிருப்பின், உணவருந்தும் போது தாராளமாக நீங்கள் புகை பிடிக்கலாம். எங்கே சிகரெட் இடம் பெறவில்லையோ அன்றி வழங்கப்பெறவில்லையோ அங்கே நாமாக சொந்த சிகரெட்டைப் பற்றவைக்காமலிருப்பதே பண்பாட்டுக்கு அடையாளம்.



விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

இழுக்க
இழுக்க
இன்பம்-
இறுதிவரை

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 612 TAM. Greens' Advtg.



மலர் 23 — இதழ் 7

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

புதிய நிதி மந்திரியின் பொறுப்பு


ஸ்ரீ காமராஜ் அவர்கள் ஏதோ ஒன்றைச் சொல்லப் போக, அதை ஆயுதமாக வைத்துக் கொண்டு பிரதமரவர்கள் தமது காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டார்! இது நாம் சொல்லுவது மட்டுமல்ல; உலக பத்திரிகைகள் எல்லாம் இவ்வாறுதான் விமரிசித்திருக்கின்றன. தீராத தலைவலியாக இருந்த சகாக்களை வெளியேற்றி ஆசுவாசம் பெற்றுவிட்டார் ஸ்ரீ நேரு அவர்கள். இருந்தாலும் 'காமராஜ் திட்டம்' 'காமராஜ் திட்டம்' என்று கூறிக் காங்கிரஸ் கட்சியினர் நம் தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவருக்குத் தயாள மனப்பான்மையுடன் அகில இந்திய முக்கியத்துவம் அளித்துவிட்டனர்.

நாட்டு மக்கள் தங்களுக்களித்த பொறுப்பை உதாசீனம் செய்து தேச நிர்வாகத்தைவிடக் கட்சிதான் பெரிதென நினைப்பவர்களைப் பதவி துறந்த உத்தமர்கள் என்றும் காந்திஜியின் வாரிசுகள் என்றும் 'அபிமானிகள்' கூசாமல் புகழ்கிறார்கள். நாட்டு நலனுக்காகக் காங்கிரஸையே கலைக்க வேண்டும் என்று காந்திஜி கூறியதற்கு எதிர் மாறாகக் காங்கிரஸின் நலனுக்காக ஆட்சியமைப்பையே குழப்பத்தில் தள்ளி விட்டு ஆட்டம் பார்க்கிறார் பிரதமர். போக வேண்டிய மந்திரிகள் சிலர் போனார்களாயினும் நெருக்கடி காலம் என்று சொல்லப்படும் சமயத்தில் நிர்வாகக் காரணம் எதுவுமேயில்லாமல் இவ்வாறு அரசாங்கத்தில் குழப்பம் விளைவித்திருப்பது கிரமமற்ற செயல். கட்சிக்குப் பலம் தேடுவதற்காக ஏராளமான மந்திரிகள் ராஜிநாமா செய்வதை ராஷ்டிரபதியவர்கள் எப்படி ஏற்கலாம் என்ற வினாவும் எழுகிறது.

பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் என்னவெல்லாம் செய்து காங்கிரஸுக்குப் பலம் தேடப்போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. ஸ்தாபன அமைப்பிலோ, 'தொண்டர்' கணக்கிலோ, பணபலத்திலோ காங்கிரஸ் அடைந்துள்ள ஊட்டம் வேறெந்தக் கட்சிக்கும் கிடையாது. அப்படியிருக்க அந்தக் கட்சியை மக்கள் சமீபகாலமாகக் கைவிடத் தொடங்கிவிட்டார்கள் என்றால் அதற்குக் காரணம் அதன் கண்மூடித்தனமான கொள்கைகள்தாம். இந்தக் கொள்கைகளை மாற்றிக் கொள்வதில் காங்கிரஸுக்குக் கருத்து இல்லை. மக்களை இன்னும் நன்றாக ஏமாற்றி வஞ்சிப்பது எப்படி என்பதிலேயே அதன் கவனமெல்லாம் இருப்பதன் விளைவே 'காமராஜ் திட்டம்' என்று சொல்லப்படும் ஏற்பாடு. என்ன வியாதி என்பதை அறிந்து அதற்கு மருந்து செய்ய வேண்டும். ஊதிப் போன உடலுக்கு இன்னும் ஊன் பெருக்கும் மருந்து கொடுப்பது போலிருக்கிறது இப்போது நடைபெறும் திட்டம்.

ராஜ்யங்களில் இதுவரை அதிகாரத்திலிருந்தவர்கள் இனியும் வெளியேயிருந்து சர்க்காரை ஆட்டி வைப்பார்கள். ஆட்சியிலுள்ளவர்களுக்கு உள்ள கட்டுப்பாடுகள் இவர்களுக்குக் கிடையாதாகையால் சர்வ சுதந்திரமாக எல்லா இடங்களிலும் புகுந்து, பழைய அதிகார தோரணையைப் பிரயோகித்துக் காங்கிரஸ் கஜானாவை நிரப்பிக் கொள்வார்கள். ராஜாஜி எழுதியதுபோல் இனி ஒரே ராஜ்யத்தில் இரண்டு முதன் மந்திரிகள் இருப்பார்கள்.

ராஜ்யங்களின் விஷயம் இப்படியானாலும், ராஜிநாமாக்கள் எனப்படும் இந்த மறைமுக 'டிஸ்மிஸ்' உத்தரவினால் மத்திய சர்க்காரில் சில நன்மைகள் ஏற்படக்கூடும் என்று நம்ப இடமுண்டு. முக்கியமாக, இந்த ஊழல் ஏற்பாட்டிலும் ஒரு நல்ல அம்சம் இருப்பதைக் கண்டு மக்கள் மகிழ்கிறார்கள். அஸ்மஞ்ச தர்பார் செய்த ஸ்ரீ மொரார்ஜி தேசாயின் வெளியேற்றம்தான் அந்த நல்ல அம்சம். மொரார்ஜி தேசாய் வெளியேற வேண்டும் என்று



ராஜாஜி நீண்ட காலமாகக் கூறிவந்தது இப்போது வேறு விதத்தில் நிறைவேறி விட்டது. 'மொரார்ஜி போய்ச் சேர்ந்தாரே, அவருடன் அவருடைய புது வரிகளும் தொலை போகாதா? பாமர மக்களின் காப்பாகக் கையிலும் கழுத்திலும் இருந்த பொன் மீண்டும் முன்போல் தூய்மை பெற்று மின்னுதா? பொற்கொல்லர்கள் மீண்டும் புனர் வாழ்வு பெறமாட்டார்களா? ஒட்டிய வயிற்றை மேலும் இறுக்கிக் கட்டச் செய்யும் கட்டாயச் சேமிப்புத் திட்டம் எடுபடாதா? காங்கிரஸ் தனது கொள்கையில் ஏதும் தவறே யில்லாதது போல் காட்டிக் கொண்டாலும் தேர்தலை முன்னிட்டாவது மொரார்ஜியின் அக்கிரமப் பிரேரணைகளை ரத்து செய்யாதா?' என்றெல்லாம் மக்கள் ஆவலுடன், ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறார்கள். நிதி மந்திரி ஸ்தானத்துக்குச் சுற்றித் திரிந்து மறுபடியும் வந்து சேர்ந்த ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் விஷயம் தெரிந்தவர், துணிந்து நடவடிக்கை எடுக்கக் கூடியவர். அவரது துணிச்சலால் தங்களுக்கு நன்மை பிறக்கலாம் என்று மக்களுக்கு ஒரு நம்பிக்கை உள்ளது. மக்களுக்கு ஆறுதல் அளிப்பது போல் புது மந்திரி அவர்களும் தங்கக்

கட்டுப்பாடு, கட்டாயச் சேமிப்பு இவற்றைக் குறித்துப் புனராலோசனை செய்யப் போவதாகக் கூறியிருக்கிருர்.

இந்தச் சமயத்தில், உயிர் போன பின்பும் பிசாசாக வந்து பயமுறுத்துவது போல் பதவியிலிருந்து விலகிய ஸ்ரீ மொரார்ஜி அவர்கள் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. தமது திட்டங்களை அரசாங்கம் கைவிடக் கூடாது என்று அவர் அதில் கேட்டுக் கொண்டிருக்கிருராம். இதிலிருந்தே அவருடைய குற்றவாளி மனப்பான்மையும், பதவியை விட அவருக்கு எவ்வளவு விருப்பம் இருந்திராது என்பதும் தெரிகின்றன.

அதெப்படியாஞலும் கட்சியின் கௌரவமோ மொரார்ஜியின் கௌரவமோ பங்கமாகக் கூடாது என்பதற்காகக் கட்டாயச் சேமிப்பு, தங்கக் கட்டுப்பாடு முதலிய உத்தரவுகளைத் தொடரவிடுவது நாட்டுக்கும் நன்மையல்ல; காங்கிரஸுக்கும் நன்மையல்ல.

இவ்விஷயத்தில் ஸ்ரீ டி. டி. கே. தமது பொறுப்பை எப்படி வகிக்கப் போகிருர் என்பதைப் பாரத நாடே அக்கறையுடன் கவனிக்கிறது.


பிரதமர் அதிசயிக்கிருர்!

அரசியல் சாஸனத்தின் பதினேழாவது திருத்தத்தை ஆட்சேபித்து மக்கள் சபை நாயகருக்கு 39,500 குறிப்புகள் வந்திருப்பதாக ஆசாரிய ரங்கா அவர்கள் சில நாட்களுக்கு முன் தெரிவித்திருக்கிருர். ஒரு மசோதாவுக்கு இவ்வளவு ஆட்சேபனை இருக்குமாஞல் மசோதா எவ்வளவு தவருனது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

ஆயிரம், பதிஞயிரம் என்று பணத்தைக் கொட்டி வாங்கிய நிலத்துக்குத் தாம் பூரணமான சொந்தக்காரர் என்று ஒருவர் உரிமை பாராட்ட முடியாமல், 'நீயும் ஒரு ஜமீன்தார்' என்று பொய்யாகப் பெயர் வைத்து அரசாங்கம் இஷ்டப்பட்டால் அந்த நிலத்தை எடுத்துக் கொள்ளலாம்; அரசாங்கம் தன் இஷ்டப்படி தரும் நஷ்ட ஈட்டைச் சொந்தக்காரர் முணுமுணுக்காது ஏற்றுக் கொள்ள வேண்டும்—இப்படிப்பட்ட நிலைமை சுதந்திர ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது.

உணவுத் துறைக்காகக் கோடிக் கணக்கில் செலவிட்டும் உற்பத்தி பெருகாததைக் கண்டு பிரதமருக்கு ஆச்சரியமாக இருக்கிறதாம். ஆச்சரியப்படுவதை விட்டு விட்டு அவர் உண்மையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பணத்திஞல் மட்டும் செய்யக் கூடிய காரியமல்ல விவசாய உற்பத்தி. அத்தொழிலில் ஈடுபட்டவர்களின் ஊக்கமும் உற்சாகமும் இல்லாத வரையில், விஷயம் தெரியாத சர்க்கார் அதிகாரிகள் மனம் போனபடி எவ்வளவுதான் பணத்தை விரயம் செய்தாலும் உற்பத்தி பெருகாது. விவசாயப் பெருங் குடிகளின் ஈடுபாட்டைத் தகர்த்து, அவர்கள் 'நாளைக்கு நம் உரிமை என்ன ஆகுமோ' என்று தத்தளிக்கும் நிலையைத்தான் காங்கிரஸின் நிலச்சட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. உற்பத்தியின் முக்கிய கருவியாகிய உரிமையாளரை அடக்கி நசுக்கிவிட்டு, 'உற்பத்தி பெருகவில்லையே' என்று பிரதமர் அதிசயிப்பதுதான் நமக்குப் பேரதிசயமாக இருக்கிறது!

உணவு உற்பத்தி பெருகுவதற்கு உரிய உண்மையான நடவடிக்கை ஏதேனும் உண்டெனில் அது நிலச் 'சீர்திருத்த'ச் சட்டங்களைக் கைவிடுவதுதான்.



என்ன சேதி?

பஞ்சாயத்து ராஜ்யம் !

ஸ்ரீபெரும்பூதூர் பஞ்சாயத்தில் அடங்கிய பிரதேசத்தில் அரிசி மில் தொடங்க அனுமதி கேட்டு ஒருவர் பஞ்சாயத்துக்கு மனுச் செய்துகொண்டார். அதைச் சில திருத்தங்கள் செய்து அனுப்பும்படி கூறிவிட்டார்கள். திருத்தங்கள் செய்து அவர் பஞ்சாயத்துக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார். சர்க்காருக்கும் எழுதியிருந்தார். மாதம் இரண்டாகியும் பஞ்சாயத்திலிருந்து எவ்விதத் தகவலும் வரவில்லை. சர்க்காரிடமிருந்து வேண்டிய உதவிகள் வந்துவிட்டன. பஞ்சாயத்தி லிருந்து பதில் வராததால் அந்த நபர் ஆலைக் கட்டிட வேலையைத் தொடங்கிவிட்டார். இதையறிந்த பஞ்சாயத்தார் அவர் அனுமதி யின்றி வேலை தொடங்கியதாக வழக்குத் தொடர்ந்தார்கள். நீதிபதிகள், ஒரு கடிதத்துக்கு இரண்டு மாதம் வரை பொறுத்திருந்தும் பதில் வரவில்லையெனில் அது சம்மதம் என்று கொண்டதில் தவறில்லை என்று தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். இந்த வழக்கில் ஏற்படும் செலவை, பஞ்சாயத்துச் செலவில் சேர்க்காமல் அங்கத்தினர்கள் தங்கள் கையை விட்டுப் போட வேண்டும் என்றும் தீர்ப்புக் கூறி யிருக்கிறார்கள்.

இவ்விஷயத்தினின்று பஞ்சாயத்து ராஜ்யம் எந்த லட்சணத்தில் நடைபெறுகிறது என்பது தெரிகிறது.

கேரள கவர்னர் யோசனை

கேரள கவர்னர் ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் தற்பொழுதுள்ள மொழிவாரி ராஜ்ய அமைப்பை ஒழித்துவிட்டு மூன்று நான்கு ராஜ்யங்கள் சேர்ந்து மண்டலம் (Zone) என்று வழங்குவதற்குப் பதிலாக அவற்றையே ராஜ்யங்களாக அமைப்பது தேச ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பேருதவியாக இருக்கும் என்று கூறுகிறார். பாரத நாட்டை மூன்று நான்கு பெரும் ராஜ்யங்களாகப் பிரித்து ஆட்சி நடத்துவது பல விதத்திலும் சௌகரியம் என்று கூறுகிறார். மொழிவாரி ராஜ்யம் முடிந்துபோன விஷயம் என்று கருதாமல் ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் கவர்னராக இருந்துகொண்டே இத்தகைய நல்ல கருத்தை வெளியிட்டதற்குப் பாராட்டுகிறோம். நல்ல கருத்துக்கள் வேரூன்றக் காலம் பிடிக்கலாம். அதற்காக முயற்சியைத் தளரவிட்டுவிடக் கூடாது.

ஆங்கிலத்துக்கே முதலிடம்

ஹிந்தி வெறியர்கள் எத்தனை பித்தலாடகப் புள்ளி விவரங்கள் தந்தாலும், பத்திரிகைகளின் விற்பனையி லிருந்து உண்மை நிலை ஐயம் திரிபறத் தெரிகிறது. மற்ற எல்லா மொழிகளையும் விட ஹிந்தியில் அதிக தினசரிகள் இருந்த போதிலும் ஹிந்திப் பத்திரிகைகள் மொத்தம் ஏழரை லட்சம் பிரதிகள் தான் அச்சாகின்றன. ஆனால் ஆங்கில தினசரிகளோ பதிநான்கு லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றனவாம்! இதேபோல் வார, மாத சஞ்சிகைகளிலும் ஆங்கிலப் பத்திரிகைகள்தான் அதிகம் விற்பனையாகின்றன. யாருடைய கட்டாயமுமின்றி மக்கள் தங்கள் சௌகரியத்தையொட்டி வாங்குபவையே பத்திரிகைகள். எனவே பத்திரிகை விற்பனை கூறும் விவரமே மக்களின் சுயேச்சையான கருத்தைப் பிரதிபலிக்கும் உண்மை.

தொழிற்சங்கப் பிரமுகர் பிரிவு

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ எஸ். குருஸ்வாமி அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். ரயில்வே தொழிலாளர் சம்மேளனம் தோன்றிய நாளாகக் கால் நூற்றாண்டுக்குமேல் அதன் பொதுக் காரியதரிசியாகவும், தலைவராகவும் பணி புரிந்திருக்கிறார் ஸ்ரீ குருஸ்வாமி. அகில உலக மகாநாடுகளிலும், ராஜ்ய சபையிலும் தொழிலாளர் நிலையை விளக்கிப் பரிகாரங்கள் தேடியிருக்கிறார் அவர். தொழிலாளர் உரிமைகளுக்கும் நலத்துக்கும் அந்தரங்க சுத்தத்துடன் உழைத்த ஸ்ரீ குருஸ்வாமி அவர்களைத் தொழிலாளர் உலகம் என்றும் நன்றியுடன் நினைவு கொள்ளும்.

கெய்ரோன் பிரச்னை

காமராஜ் திட்டம் அமுலுக்கு வந்தும் பதவியிலிருந்து நீக்கம் பெறாத பஞ்சாப் முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரோன் அவர்கள் ஒரு பெரும் பிரச்னையாகிவருகிறார். பஞ்சாப் ஸிவில் ஸர்ஜன் ஒருவரின் உத்தியோக விஷயத்தில் அவர் பிரத்தியேக முறையில் குறுக்கிட்டுச் சொந்த விருப்பு வெறுப்புக்களைக் காட்டியிருக்கிறார் என்று நம்பும் வகையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஸ்ரீ கெய்ரோனைப் பற்றி ஏற்கனவே உள்ள பல புகார்களோடு இதுவும் சேர்ந்திருக்கிறது. மக்கள் சபையில் பல அங்

கத்தினர்கள் இவ்வித அதிகார துஷ்பிரயோகத்தை வன்மையாகக் கண்டித்து, கெய்ரோனை உடனே பதவியிலிருந்து நீக்க வேண்டும் என வற்புறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் முன் காலத்தில் நேர்மை உணர்வுக்குப் பெயரெடுத்திருந்த பிரதமர் நேரு அவர்கள் இப்போது சிறுமை கண்டு பொங்கவில்லை. கெய்ரோனின் எதிர்வாதத்தைக் கேட்டு, அதன் பின்னும் அவர் குற்றவாளி என நிரூபணமானால் ஒழிய அவரைக் கண்டிக்கக் கூடாது என்கிறார். நீதிமன்ற வழக்கப்படி இது சரியாகவும் தோன்றும். ஆனால் சாமானிய தர்மங்கள் அரசாட்சியிலிருப்பவர்களுக்குப் போதா. ஆட்சியாளர்கள் விஷயத்தில் குற்றம் ருசுவாகாது இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று பெரும் அளவில் சந்தேகம் தோன்றவும் இடமளிக்கக் கூடாது. குற்றம் நிரூபணமாகும்வரை ஒருவரை நிரபராதி என்று கருதுவது சாமானிய விஷயங்களில் பொருந்தலாம். ஆனால் ஒரு ராஜ்ய நிர்வாகத்தில் முக்கியமான பொறுப்பு ஏற்ற ஒருவர் ஸீஸரின் பத்னி போல் சந்தேகத்துக்கே இடமளிக்காதவராய் இருக்க வேண்டும். இந்த விதிக்கிணங்கத்தான் ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன் அவர்கள் சென்ற ஆண்டு பதவியை விட வேண்டியதாயிற்று. அவர் மீது ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் உண்மையெனத் தெளிவாக நிரூபணமாகா விடினும் பெருத்த சந்தேகத்துக்கு அவர் ஆளாகி விட்டார் என்ற ஒரே காரணத்துக்காக அவர் பதவியிலிருந்து விலகினார். ஸ்ரீ கெய்ரோன் விஷயம் இதற்குச் சிறிதும் மாறுபட்டதல்ல. என்றாலும் நமது பிரதமர் வழக்கம் போல் இந்தச் சாமானிய விஷயத்திலும் தமது குழுப்ப மனப்பான்மையைக் காட்டியிருக்கிறார்!

பிரதமர் நடவடிக்கை எடுப்பது இருக்கட்டும்; இவ்வளவு பேச்சுக்கள் எழுந்த பின்பும் கெய்ரோன் தாமாக விலகாதது அவருடைய பதவி ஆசையையே காட்டுகிறது. 'இந்தக் காரணத்துக்காகவே அவரை வேலை நீக்கம் செய்தாக வேண்டும்' என்கிறார் ராஜாஜி.

வெள்ளித் [கல்கி அடுத்த இதழ்] திரை மலர்

வெள்ளித் திரைக்குப் பொன்விழா. இந்தச் சொல்லைக் கேட்கக் காதுக்குக் குளுமையாக இருக்கிறதல்லவா? ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டுக்கு இறக்குமதியான இந்த வெள்ளித்திரைக் கலை, எப்படியெல்லாமோ முன்னேறி இன்று பொன்விழாக் கொண்டாட வேண்டிய அளவுக்குப் பெரிதாக வளர்ந்திருக்கிறது!

கையாளுகிறவர்கள் கையாண்டால் இந்த அரிய கலை சமூகத்தையே சீர்திருத்திவிடக் கூடிய ஆற்றல் பெற்றது. இது இன்னும் வளர வேண்டும், நற்கலையாக. இந்த நல்லெண்ணத்துடன் அதன் பொன் விழா ஆண்டினை யொட்டி அடுத்த 'கல்கி' இதழ் வெள்ளித்திரை மலராக வெளிவருகிறது.

நட்சத்திர உதயம் —ஏ. வி. மெய்யப்ப செட்டியார்


வரிமுறைக்கு ஒரு வரைமுறை உண்டா? —ஏ. எம். ஸ்ரீனிவாசன்

பண்டைய நாளையப் படப்பிடிப்பு — ஓவியர் ராஜத்தின் சித்திர விளக்கம்

திரை உலகுக்கு ஒரு சுந்தரம் —நகைச்சுவை நடிகர் தங்கவேலு

வெள்ளைத் திரையில் கறுப்பு மை —அகிலன்

இன்னும் குணசித்திர நடிகர் நாகையா, கவிஞர் கண்ணதாசன், டைரக்டர் கே. சுப்பிரமணியம், ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி ஆகியோரது ரசமான கட்டுரைகளும் புகைப்படப் பகுதிகளும், நகைச்சுவை அம்சங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன.

போகிற  போக்கில்...

சிட்டுக்குருவி

பாஞ்சால முதல் அமைச்சரான ஸ்ரீ கெய்ரோன் அவர்களைப் பற்றிப் பார்லிமெண்டிலும் சரி, பத்திரிகையிலும் சரி பேசாத நாளெல்லாம் பிறவாத நாள் என்றுதான் சொல்ல வேண்டும். சுப்ரீம் கோர்ட் கெய்ரோனின் சில நடவடிக்கைகளைக் கண்டித்துத் தீர்ப்பளித்திருக்கிறது. இந்தத் தீர்ப்பைப் பார்த்துப் பாஞ்சாலத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதாம். இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென பார்லிமெண்டில் அங்கத்தினர்கள் செய்த முயற்சி பலிக்கவில்லை. பலிக்காமல் போனதைப் பற்றி ஆச்சரியமும் இல்லை. ஆனால் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வெளியான பிறகு கெய்ரோன் பதவியில் இருப்பதும் அவரை மேலிடமும் 'நவீன காங்கிரஸ் கௌதம புத்தராக' ஆக்காமல் இருப்பதும் தான் ஆச்சரியம்.

ஃ ஃ ஃ

'அவன் தம்பி அங்கதன்' என்ற பழமொழியை நண்பர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். ஒரிஸ்ஸா விவகாரம் இந்தப் பழமொழியை ஞாபகப்படுத்துகிறது. திரு பட்நாய்க் ராஜிநாமா செய்து விடுவாரல்லவா? அவருக்குப் பதிலாக உதவி முதலமைச்சராக இருக்கும் திரு பிரேன் மித்ரா முதலமைச்சராக வருவார் எனவும், அவரை ஒரிஸ்ஸா சட்டசபை காங்கிரஸ் கட்சி 'ஏகமனதாக'த் தேர்ந்தெடுக்கும் எனவும் திரு பட்நாய்க் அறிவிக்கிறார். திரு மித்ராவை அறிமுகப் படுத்தி வைக்க ரொம்பச் சிரமப்பட வேண்டியதில்லை. திரு ஹரி கிருஷ்ண மெஹ்தாப் மந்திரிகள் மீது சாட்டிய குற்றச்சாட்டில் கதாநாயகரான திரு பட்நாய்க்குக்கு அடுத்தபடியாக இடம் பெற்றவர் இவரேதான். இவரையும் திரு பட்நாய்க்கையும் பற்றி மெஹ்தாப் சொன்ன ஒரேயொரு வாக்கியத்தை மட்டும் ஞாபகப்படுத்துகிறோம்: ''1942ம் ஆண்டிலெல்லாம் நீங்கள் இருவரும் எப்படி இருந்தீர்கள், உங்கள் வாழ்க்கை நிலை என்ன என்பதெல்லாம் எனக்குத் தெரியாதா?''

எனவே, திரு மித்ரா முதல் அமைச்சராக வருவதில் ஆச்சரியமே இல்லை. பெருமாள் போய் பெத்த பெருமாள் வந்த கதைதான் எல்லா இடங்களிலும் நடக்கும் என்பதற்கு இது ஒரு சான்று.

மக்கோவா என்ற ஒரு தீவுக்குச் சீன தேசத்திலுள்ள குருடர்களையெல்லாம் சீன அரசாங்கம் அனுப்பி வைப்பதாக ஹாங்காங் செய்தியொன்று கூறுகிறது. இவர்களுக்கு ஒரு வழி—டிக்கெட் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். இதன் அர்த்தம் என்னவென்றால் இவர்கள் திரும்பி வரக் கூடாது என்பதுதான். குருடர்களை ஏன் அனுப்புகிறார்கள் என்றால் இவர்களால் உற்பத்திக்கு எந்தவித உதவியும் கிடையாதாம். ஆகவே, குருடு, செவிடு ஆனவர்களுக்கெல்லாம் கம்யூனிஸ சாம்ராஜ்யத்தில் இடமில்லை என்கிறது. கம்யூனிஸத் தலைவர்களில் யாரும் திடீரெனக் குருடாகி விட்டால் அவரையும் அனுப்புவார்களா என்று கேட்காதீர்கள். இப்படிக் கேள்வி கேட்பதெல்லாம் முதலாளித்துவ மனப்பான்மை என்று கூறிவிடுவர் கம்யூனிஸத் தோழர்கள்.

ஃ ஃ ஃ

பிரஜா – சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் பதவியை ஏற்க முடியாதெனத் திரு அசோக் மேத்தா ஏன் கூறினாரென்று ஒரு பெரிய புதிராக இருந்தது. அந்தப் புதிர் டில்லியிலிருந்து வெளிவரும் செய்தி மூலம் விடுபடுகிறது. அதாவது அவர் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தியாவின் பிரதிநிதியாக ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மையாருடன் செல்லுகிறாராம். திரும்பி வந்ததும் மந்திரியாவாரா என்று கேட்காதீர்கள். யார் கண்டார்கள்?

ஃ ஃ ஃ

அம்ரோஹா தொகுதியில் தோல்வியுற்ற ஹபீஸ் மகம்மது இப்ராஹிம் மத்தியமாகாண கவர்னராகப் போகப் போகிறாராம். அதற்கான ஏற்பாடுகள் வெகு வேகமாக நடைபெறுவதாக லட்சுமணபுரியிலிருந்தும் டில்லியிலிருந்தும் வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு உப – தேர்தலுக்கும் காங்கிரஸ் தோல்வி ஏற்படுமானால் கவர்னர் பதவிக்கு ஓர் ஆள் தயார் என்கிற நிலைமை ஏற்படும். பிறகு கவர்னர் பஞ்சமே இருக்காது. ஆகவே இதற்காக அடிக்கடி உப-தேர்தல்களை நடத்திக் கொண்டு போக வேண்டும். அப்படி செய்து விட்டால் ஆள் கிடைக்காத கஷ்டம் அரசாங்கத்துக்குத் தீர்வதோடு எதிர்க் கட்சிகளுக்கும் உதவியாக இருக்கும். இந்த மாதிரியாகச் செய்வது 'க்ஷேம நல' சர்க்காரின் கடமைகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

பழனியில்

பதினேழாவது திருத்தப் பிரேரணை எதிர்ப்பு மாநாடு


14-9-1963-ல் நடைபெறுகிறது

கர்நாடக மாநில சுதந்திரக் கட்சி தலைவர்

திரு ஜீனராஜ் ஹெக்டே, பி. ஏ. பி. எல். தலைமை வகிப்பார்

ராஜாஜி அவர்களும் கலந்து கொள்ளுவார்கள்.

மற்றும் பல பிரமுகர்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள்.



23

வாய்மொழிந்து வாமனனும்
மாவலிபால் மூவடிமண்
நீஅளந்து கொண்ட
நெடுமாலே —

[வாமனனும் - (வாமனாவதாரத்தில்) பிரும்மச்சாரியாகச் சென்று. மாவலிபால் - மாவலிச் சக்கரவர்த்தியிடம். மூவடிமண் - மூன்று அடி நிலம். வாய் மொழிந்து - உனது நாவினாலேயே யாசித்து. நீ அளந்து கொண்ட - உனது திருவடிகளால் அளந்து கொண்ட. நெடுமாலே - திருவிக்கிரமனாக வளர்ந்த பெருமானே!]

—தாவியநின்
எஞ்சா இணை அடிக்கே

[தாவிய - உலகைத் தாவி அளந்த. நின் - உன்னுடைய. எஞ்சா - எல்லையற்ற. இணை அடிக்கே - திருவடிக்கே.]

எஞ்சா இணையடிக்கே
ஏழ்பிறப்பும் ஆளாகி
அஞ்சா திருக்க
அருள்!

[ஏழ்பிறப்பும் - ஏழு ஜன்மத்திலும், அதாவது எத்தனை ஜன்மம் எடுத்த போதிலும். ஆளாகி - தாசனாகி. அஞ்சாதிருக்க அருள் - எந்தப் பயமும் இல்லாமல் இருக்கும்படி அருள் செய்வாயாக, அபயம் தருவாயாக!]

பிறவிகளைக் கண்டு பயப்படவில்லை. எந்த ஜன்மம் எடுத்தாலும் உன்னிடம் பக்தி இருந்தால் எனக்குப் பயம் இல்லை என்கிறார்.

வாய்மொழிந்து வாமனனும்
மாவலிபால் மூவடிமண்
நீஅளந்து கொண்ட
நெடுமாலே — தாவியநின்
எஞ்சா இணைஅடிக்கே
ஏழ்பிறப்பும் ஆளாகி
அஞ்சா திருக்க
அருள்!

வாழ்க்கையில் பயத்துக்கு மருந்து. இறைவனிடம் செலுத்தும் பக்தியே யாகும். அந்தப் பக்தி இல்லையாயின், எப்பொழுதும் எதைக் கண்டும் பயப்பட வேண்டியதாக இருக்கும்!



நாடெங்கும் நவராத்திரி

அ. ரா. கிருஷ்ணமூர்த்தி

இந்துமத தந்த்ர சாஸ்திரங்களில் ஆங்கிலேயர் ஒருவருக்குப் பற்றுதல் ஏற்பட்டதைப் பற்றி ரஸமான ஒரு நிகழ்ச்சி உண்டு. அந்த வெள்ளையருக்கு ஸர் ஜான் உட்ராஃப் என்று பெயர். சென்ற நூற்றாண்டின் முடிவில் கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றி வந்தார். அப்போது நீதிமன்றத்துக்கு வரும் சில வக்கீல்கள் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு வருவது வழக்கம். என்ன என்று தெரிந்து கொள்ளத் துரைக்கு ஆவல். ஒரு நாள் வக்கீல்களை விசாரித்தார். 'கோரியவற்றைத் தரத் தக்க மஹா துர்க்கையின் பிரசாதம் இது' என்று பதில் சொன்னார்கள். துரையின் மனத்தில் பளிரென்று ஒரு யோசனை உதயமாயிற்று. அவர் இங்கிலாந்தில் இருந்தபோது ஒரு பெண்ணைக் காதலித்து வந்தார். அவள் அவரை மணக்க இசையவில்லை. கோரியவற்றைத் தரக்கூடிய வல்லமை, இந்துமத தெய்வமான துர்க்கா தேவிக்கு இருக்குமானால் நாம் ஏன் அந்தத் தெய்வத்தின் மூலம் நம் ஆவலை நிறைவேற்றிக் கொள்ளக் கூடாது என்று எண்ணமிட்டார். வக்கீல்களைக் கலந்தாலோசித்தார். துரையின் மனோபீஷ்ட சித்திக்காக 'சண்டி ஹோமம்' நடத்தப்பட்டது.

என்ன ஆச்சரியம்! சிலநாட்களுக்குள் இங்கிலாந்திலிருந்து துரைக்கு ஒரு கடிதம் வந்தது. அவருடைய காதலிதான் எழுதியிருந்தாள். அவரை மணக்கச் சம்மதம் தெரிவித்திருந்தாள். துரைக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவருக்கு அன்று முதல் இந்துமத சாஸ்திரங்களில் மிக்க பற்றுதல் உண்டாயிற்று. அந்த சாஸ்திரங்களை அதன் மூல மொழியிலேயே படிக்க விரும்பி வடமொழி பயின்றார். பல நூல்களைப் படித்தார். முக்கியமாகத் துர்க்கைபற்றிய தந்த்ர சாஸ்திரங்களில் அவருக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. பல நூல்களை ஆராய்ந்தார். பின்பு தந்த்ர சாஸ்திரத்தைப் பற்றிப் பல நூல்களை எழுதினார்; சிலவற்றை மொழிபெயர்த்தார்.

இந்துமத வழிபாட்டு நியதியில் இந்த சக்தி தேவியான துர்க்கையைப் பூஜிக்கும் வழக்கம் எப்போது முதல் வழக்கத்துக்கு வந்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சரித்திர காலத்துக்கு முன்பாகவே பல நாடுகளில் சக்தி தேவியை மூலத் தெய்வமாகத் தொழுது வந்திருக்கின்றனர். மஹாபாரத யுத்தத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு, துர்க்கையைத் தியானிக்கும்படி உபதேசம் செய்கிறார். தேவி ஸூக்தம், (ரிக் வேதம்) கேந உபநிஷத், மார்க்கண்டேய புராணம், ஸ்கந்த புராணம் முதலியவை தேவியின் மகிமையைப் பற்றி அழகாகச் சொல்கின்றன. இன்னும் தேவி பாகவதம், தேவி மாகாத்மியம் முதலிய நூல்கள் துர்க்கையின் புகழைப் பற்றிக் கூறுகின்றன. பழைய இலக்கியங்கள் பலவற்றில் துர்க்கையைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆதிசங்கரரின் அமருசதகத்திலும், பாண மகாகவியின் காதம்பரியிலும், சண்டிசதகத்திலும் ஸோமதேவரின் கதாஸரித் ஸாகரம் என்னும் நூலிலும் துர்க்கையைப் பற்றி ஏராளமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.








பவிஷ்ய புராணம் தேவி வழிபாட்டின் மூன்று முறைகளைப் பற்றிச் சொல்லுகிறது. ஜபம், யக்ஞம், மந்திர அநுஷ்டானம் முதலியவற்றால் பக்தி முறைப்படி பூஜிப்பது சாத்விகமுறை. தேவியின் வீர தீரச் செயல்களைச் சொல்லும் புராணங்களைப் படித்து உயிர்ப் பலி அளித்துப் பூஜிப்பது ராஜஸிகம். மந்திரம், தந்திரம் முதலியன இன்றி, கள் முதலிய போதை வஸ்துக்களையும், இறைச்சியையும் படைத்துத் தொழுவது தாமஸிகம். தேவியை முறைப்படி பூஜிப்பவர்கள் புரட்டாசி மாதம் சுக்லபட்சத்தில் தேவியைக் கொலு வைத்து ஒன்பது நாட்கள் வரை பூஜிக்க வேண்டும். புரட்டாசி மாத சுக்ல பட்சத்து முதல்நாளன்று அஸ்த நக்ஷத்திரமும் கூடும். அந்த நாள் தேவி பூஜைக்கு மிகவும் உகந்த நாள். நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் முறையே மாஹேஸ்வரி, கௌமாரி, வாராஹி, மஹாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி, மஹா ஸரஸ்வதி, நாரஸிம்மி, சாமுண்டி முதலிய தேவியர்கள் முதன்மை பெறுகின்றனர். ஒவ்வொரு நாளும் தேவியை வழிபட முடியா விட்டாலும் அஷ்டமியன்று அதாவது நாரஸிம்மி (பத்ரகாளி) தோன்றிய எட்டாவது நாள் விசேஷ பூஜை செய்தாலே போதுமானது. மற்ற எல்லா நாட்களிலும் பூஜை செய்த பலன் அந்த ஒரு நாள் பூஜைக்கு உண்டு. நடைமுறையில் மூன்று தேவியர்களே முதன்மையாக நிற்கின்றனர். துர்க்கா, ஸரஸ்வதி, லக்ஷ்மி இந்த மூவரும் நவராத்திரியில் சாதாரணமாகப் பூஜிக்கப்பெறும் தெய்வங்கள்.

புராண காலத்தில் மது கைடபர் என்று இரண்டு அரக்கர்கள் இருந்தார்கள். இவர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள். இவர்களோடு மஹாவிஷ்ணு நீண்ட காலம் போரிட்டும் வெற்றியடைய முடியவில்லை. இந்த வெற்றி எக்களிப்பில் மது கைடபர்கள் விஷ்ணுவை நோக்கி, ''உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், தருகிறோம்'' என்றார்கள்.

''மகா வீரர்களாகிய உங்கள் இருவரையும் கொல்லும் பெருமை எனக்கு வேண்டும்'' என்ற வரத்தை மஹாவிஷ்ணு கேட்டார். மது கைடபர்களுக்கு ஆனந்தம்தாங்கவில்லை. மும்மூர்த்திகளில் ஒருவரான மஹாவிஷ்ணுவே தங்களிடம் வரம் கேட்கிறார் என்ற பூரிப்பில், ''சரி, அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி விட்டார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் விழித்துக் கொண்டார்கள். தங்கள் மடமையை உணர்ந்தார்கள். இனி என்ன செய்வது, வரம் தந்தாகி விட்டது. இருந்தாலும் ஒரு நிபந்தனைதான் போட்டு வைப்போமே என்று எண்ணினார்கள். தங்கள்











இருவரையும் பூமியில் மட்டுமே கொல்ல வேண்டும் என்பது அந்த நிபந்தனை. 'பூமிக்கே போகாமல் இருந்து விட்டால் போகிறது. அங்கே போனால்தானே இந்த விஷ்ணு நம்மைக் கொல்லப் போகிறார்!'' என்று சமாதானப்படுத்திக் கொண்டார்கள். பகவான் தம் மாயா சக்தியால் தமது துடையையே பூமியாகச் செய்து இரண்டு அரக்கர்களையும் அதில் அமர்த்தி சம்ஹாரித்து விட்டார். அப்போது யோக மாயை வடிவெடுத்து விஷ்ணுவுக்குத் துணையாக நின்றவர் பராசக்தி அம்மைதான்.

தேவி மாஹாத்மியத்தில் அன்னை மஹிஷாசுரனை சம்ஹாரித்த வரலாறு காணப்படுகிறது. மஹிஷாசுரனிடம் தோல்வியுற்ற தேவர்கள் மகேஸ்வரனையும், மஹா விஷ்ணுவையும் சரண் புகுந்தனர். இந்த அசுரன் பெண் தவிர வேறு யாராலும் மரணமடைய மாட்டான் என்ற வரம் பெற்றவன். அதனால் மும்மூர்த்திகளாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்களுக்குச் சினம் பொங்கிற்று. அப்போது அவர்கள் முகங்களிலிருந்து எழுந்த ஒளித்திரள் பெண் உருவம் பெற்று நின்றது. அதுவே சண்டிதேவி. மும்மூர்த்திகளும், தேவாதியர்களும் தங்கள் தங்கள் ஆயுதங்களை ஸ்ரீ சண்டிதேவிக்கு அளித்தனர். தேவியின் ஆயிரம் கரங்கள் மஹிஷன் படையை அழிக்கத் தொடங்கின. தேவியின் கோபக்கனலிலிருந்து ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி அசுரப் படையை அழிக்கலாயினர்.

பிறகு, மஹிஷாசுரன் தனித்து நின்று எருமை உருவம் தாங்கித் தேவியோடு தனிப் போர் செய்ய முற்பட்டான். பல மாய உருவங்கள் தாங்கி எதிர்த்தான். மஹிஷாசுரனைக் கீழே தள்ளி அவன் தலையைத் துண்டித்து யுத்தத்தை முடித்தாள் தேவி. இதனால்தான் தேவிக்கு மஹிஷாசுரமர்த்தினி என்று பெயர். இந்த மஹிஷாசுரனைப் பற்றிய செய்தி மார்க்கண்டேய புராணத்தில் வருகிறது. அதன்படி மஹிஷாசுரன் காசியபர்—அதிதி ஆகிய இருவருக்கும் பிறந்தவன். தலை மட்டும் எருமை வடிவமாகப் போகக் கடவது என்று ஸுபார்சுவ முனிவரால் சபிக்கப்பட்டான். மஹிஷாசுரன் வாழ்ந்த பகுதி, மஹிஷ மண்டலம் என்று பெயர் பெற்றிருந்தது. அப் பகுதிதான் இன்றைய மைசூர் பிரதேசம். இதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் எருமை நாடு என்றே குறித்துள்ளனர். அசோகன் தன் காலத்தில் மஹாதேவன் என்ற புத்த பிக்ஷுவை மஹிஷ மண்டலத்துக்கும் ரக்ஷிதா என்ற பிக்ஷுவைப் பனவாசிக்கும் (மைசூரின் வடமேற்குப் பகுதி) அனுப்பி வைத்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இதையெல்லாம் பார்க்கும் போது மஹிஷ மண்டலம் என்ற பெயரும் மஹிஷாசுரமர்த்தினி வழிபாடும் அசோகன் காலத்துக்கு முன்பே பிரபலமாகி இருந்தன என்று தெரிய வருகிறது.

இந்தியாவின் மேற்குப் பகுதிகளிலுள்ள மக்கள் ஒரு குத்துக் கல்லை நட்டு அதன் மீது செந்தூரம் பூசி அதை 'மஹி ஷோபா' என்ற பெயரோடு கொண்டாடுகின்றனர். ராமர், ராவணனைப் போரில் கொன்று இலங்கையை வென்ற திருநாள் இந்த மஹா நவமிநாள் என்று சிலர் கூறுகின்றனர். அதனால்தான் வடநாட்டில் நவராத்திரி நாட்களில் 'ராமலீலா' கொண்டாடுகின்றனர் போலும். வெற்றியைக் கொடுக்கும் ஆயுதங்களையும், போர்க்கருவிகள், குதிரை யானை முதலியவைகளையும் விசேஷமாக இந்நாட்களில் பூஜிப்பது உண்டு. வேதங்களின்படி க்ஷேமத்தையும், நிறைவையும் தரும் தெய்வமான இந்திரனின் அம்சங்கள் இந்த ஆயுதங்களும், படைக்கலன்களும்.

மஹிஷாசுரமர்த்தனியையும் மஹாநவமியையும் இந்தியாவில் கொண்டாடாத பகுதிகளே கிடையாது என்று கூறலாம். வேறு எங்குமே கேட்டிராத அளவுக்கு விஜயநகர மன்னர்கள் துர்க்கையின் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வந்தனர்.

மஹா நவமி நாட்களில், அந்தந்த நாள் சடங்குகளின் போதும், அங்கு கொலு வைக்கப்பட்டிருக்கும் துர்க்கையம்மனுக்குப் பலவித உயிர்ப் பலிகள் இடுவது வழக்கம். முதல் நாளன்று ஒன்பது எருமைகள், ஒன்பது செம்மறியாடுகள், ஒன்பது வெள்ளாடுகள் பலியிடப்படும். மற்ற ஒன்பது நாட்களும், பலியிடப்படும் பிராணிகளின் எண்ணிக்கை தினமும் இரு மடங்காகப் பெருகிக்கொண்டே போகும்.

இந்த மஹாநவமி விழாவில், துர்க்காஷ்டமி, மஹாநவமி, விஜயதசமி என்ற கடைசி மூன்று நாட்களும் மிக விசேஷமான நாட்கள்.

மஹிஷனின் பிரதேசமான மைசூரிலோ, மஹிஷாசுரமர்த்தனிக்குத் தனிக் கோயிலே அமைத்து வழிபடுகின்றனர். சாமுண்டி மலை மீது கோயில் கொண்டிருக்கும் தேவியைச் ''சாமுண்டேசுவரி'' என்ற பெயரில் வழிபடுகின்றனர். சாமுண்டி மலை மீதுள்ள இந்த ஆலயத்தில் முற்காலத்தில் தேவியைத் திருப்திப்படுத்த அநேக நரபலிகள் இடப்பட்டன என்று தெரிகிறது. யுத்தத்தில் தோற்றுப் போன வீரர்களின் காதுகளையும், மூக்குகளையும் நறுக்கி மாலையாகக் கோத்துச் சாமுண்டேசுவரிக்கு அணிவித்து அழகு பார்ப்பதில் ஓர் ஆனந்தம் கொண்டனர், சாமுண்டி பக்தர்கள். கல்கத்தா பகுதியில் துர்க்கை பூஜை என்று இந்த விழா கொண்டாடப்படுகிறது. துர்க்கா பூஜா நாட்களில் பெண்களுக்குப் பிறந்தகத்தில் விசேஷ அழைப்பு, பரிசுகள் முதலியன உண்டு.

சீக்கிய மதத்தின் பத்தாவது குருவான குருகோவிந்த் சிங் தேவியைப் பற்றி 'சண்டி—தி—வார்' என்ற காவியமே பாடியிருக்கிறார். இப்போதுகூடப் பஞ்சாப் பிரதேசத்திலுள்ள அநேகர் அதிகாலையில் எழுந்தவுடன் முதல் முதலாக இந்தச் சுலோகத்தைச் சொல்லித் தேவியை மானசீகமாகத் துதிப்பது வழக்கத்திலிருக்கிறது. பஞ்சாப் பிரதேசத்தில் தேவியை ''சண்டி'' என்ற பெயரில் தொழுகின்றனர். பஞ்சாபியர்களுக்குச் சண்டி மாதா ஒரு முதன்மையான தெய்வம். தேவியின் பெயரில் தோன்றிய சண்டிகர் என்ற நகரம் கிழக்கு பஞ்சாபின் தலைநகராக விளங்குகிறது.

தென்னாட்டில் நவராத்திரி என்ற பெயரில் பெண்கள் தங்கள் வீடுகளில் தேவியைக் கொலு அமர்த்தி வழிபடுகின்றனர். தமிழ் நாட்டிலுள்ள ஆலயங்களில் 'தசரா' விசேஷ நாட்களாகக் கொண்டாடப் படுகின்றன. சிவாலயங்கள் ஒவ்வொன்றிலும் மஹிஷாசுரமர்த்தனியின் உருவத்தை ஏதாவதொரு திருக்கோலத்தில் காணலாம்.



பார்லேயின்

க்ளூகோ

பிஸ்கெட்டுகள் ஊக்கத்தையும் ஊட்டத்தையும் அளிக்கின்றன.

க்ளூகோ உட்கொண்டு
ஊக்கமாக இருங்கள்

பார்லே ப்ராடக்ட்ஸ் மானு. கோ. பிரை லிட். பம்பாய்-57

P.P. 862 R TAM EVEREST


குண்டு மல்லிகை

மேஜர் ராமதுரை பிச்சுமணியுடன் 'சீட்டாடுவது பொழுது போக்குவதற்காகவோ, தம் பேரனைச் சூதாடியாக்குவதற்காகவோ அல்ல! தம்மிடமிருந்து வீரப் பதக்கங்களைத் தம் பேரன் ஜெயித்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

அவர் தம் பூர்வீகச் சொத்துக்கள், பாங்க் செக் புத்தகங்கள், இரும்புப் பெட்டிச் சாவிகள் முதலானவற்றை எந்த வித நிபந்தனையுமின்றித் தம் பேரனுக்குக் கொடுக்கத் தயாராக இருந்தார். ஆனால் அவர் அரும்பாடுபட்டுச் சுயமாகச் சம்பாதித்த வீரப் பதக்கங்களை மட்டும் பேரனிடம் சாமான்யமாகக் கொடுத்துவிட விரும்பவில்லை. வீரப் பதக்கங்கள் என்பவை வீர தீரங்கள் காட்டிச் சூராதி சூரன் பெற வேண்டிய சின்னங்கள். அவருடைய பேரனோ, இந்தக் காலத்தில் வீர தீரங்களைக் காட்டுவதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. ஆனால் சீட்டாட்டத்தில் அவரை ஜெயித்தே அந்தப் பதக்கங்களைப் பேரன் பறித்துக் கொள்ள வேண்டுமென்று ! அவர் துடித்தார். ஆனால் வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கில்லையாகையால் தாத்தாவுக்கும் பேரனுக்குமிடையே வீரப் பதக்கங்கள் அடிக்கடி கை மாறிக் கொண்டிருக்குமே தவிர, பிச்சுமணியின் கைக்கு எல்லாப் பதக்கங்களும் இன்னும் போய்ச் சேர்ந்துவிடவில்லை. அதுதான் மேஜருக்கு ஒரு மனக் குறை! சாதாரணமாக வயதான கிழவர்கள் தங்கள் பேரனுக்கு ஒரு கல்யாணம் செய்து



வைத்து, அவன் கையில் ஒரு குழந்தையைப் பார்த்துவிட வேண்டும் என்று ஆசைப்படுவது தான் உலக வழக்கம். வீரப் பரம்பரையில் உதித்த மேஜரோ, தம்முடைய பேரன் தம்மிடமிருந்து வீரப் பதக்கங்களை யெல்லாம் ஜெயித்து அவன் சட்டை மீது வரிசையாக அணிந்து கொள்வதைத் தம்முடைய ஆயுட் காலத்திற்குள் ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டு மென்று தவித்தார். ஆனால் அதற்காக அவர் சீட்டாட்டத்தில் வேண்டுமென்றே தோற்றுப் போவது போலவும் ஆட மாட்டார். போர்க் களத்தில் எதிரியை மடக்கி



அரு.ராமநாதன்

ஜெயிக்க வேண்டும் என்ற வெறியோடு போராடுவது போல் அவர் வெகு ரோஷமாகச் சீட்டு விளையாடுவார்.

தம்முடைய பேரன் தம்மைப் போல் பட்டாளத்தில் சேர்ந்து வீர சாகசங்கள் புரியாவிடினும் பயந்தாங் கொள்ளியாக இல்லாமலாவது இருக்கலாம் என்று எண்ணினார் மேஜர். அதுவும் அவர் துச்சமாகக் கருதும் பெண்ணினத்தைச் சேர்ந்த ஒருத்தியிடம் போய் அவன் 'கையெடுத்து வேணுமானாலும் கும்பிடுகிறேன்' என்று கூறிக் கெஞ்சிக் கூத்தாடுவது அவருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பிச்சுமணியோ கோபத்துடன் வெளிப்பட்ட அவரைக் கண்டு மேலும் நடுங்கினான்.

வசந்தி வெகு அலட்சியமாக, ''என்ன பிச்சு? உன் வாட்ச்மேனைப் பார்த்து இப்படி 'டான்ஸ்' ஆடுகிறாய்?'' என்று சிரித்தாள்.

''அது வாட்ச்மேன் இல்லே...''

''பின்னே?''

''என் தாத்தா!''

மேஜரின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல் மாறிவிட்டது.

வசந்தி திடுக்கிட்டு அவரை உற்றுப் பார்த்தாள். ஆனால் அடுத்த கணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு தன் உதடுகளிலும், கருவிழிகளிலும் அளாதியான ஒரு புன்முறுவலை வரவழைத்தவளாய், ''ஓ! எக்ஸ்கியூஸ்மி! பட்டாளத்து மேஜர் என்றால் தோட்டத்தில் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு 'ரைட் — லெப்ட்' என்று வீர நடை பழகுவார் என்று நினைத்திருந்தேன். ஆனால் நீங்கள் ஆட்டுக் குட்டியை விரட்டிக் கொண்டிருந்ததால் இந்தத் தப்பு நேர்ந்து விட்டது!'' என்றாள்.

பிறகு அவள் மெல்ல மேஜர் அருகில் பவ்யமாகச் சென்று கண்களில் ஒரு கலக்கத்தை வரவழைத்துக் கொண்டு ''தாத்தா! தயவு செய்து என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தை சொல்லுங்கள்!'' என்றாள்.

''சொல்லா விட்டால் என்ன செய்வாய்?'' என்று மேஜர் கத்தினார்.

''அழுது விடுவேன், தாத்தா!''

''பெண்களுக்கு வேறு என்ன தெரியும்?''

''வேறு என்ன தாத்தா தெரியணும்?''

''தாத்தா, தாத்தா என்கிறாயே! நான் அவனுக்குத்தான் தாத்தா! உனக்கு இல்லே!''

''அப்படிச் சொல்லாதீர்கள்! உங்களைப் போல் எனக்கு ஒரு தாத்தா இல்லையே என்று இருந்தது! வாயளவிலாவது தாத்தா

என்று கும்பிட அனுமதியுங்கள், தாத்தா!'' என்று சொன்ன வசந்தி, சட்டென்று பிச்சுமணியின் பக்கம் திரும்பி, ''பிச்சு! நீ பெரிய அதிர்ஷ்டசாலி! இப்படியொரு தாத்தா கிடைப்பது அபூர்வம்!'' என்றாள். பிறகு மெல்லச் சிரித்துக் கொண்டே, ''ஆனால் பிச்சு...இமே கொலுக் கூடத்தின் சுவர்களில் புலித்தலையும் எருமை மாட்டுத் தலையுமாக மாட்டியிருக்கிறதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அது ஏதோ மிருகக் காட்சிசாலை மாதிரி இருக்கு! அந்தத் தலைகளை யாராவது விலைக்கு வாங்கி, வீட்டுச் சுவர்களில் மாட்டுவார்களா என்றுகூட நினைத்தேன்!'' என்றாள்.

''அந்தத் தலைகள் எல்லாம் காசு கொடுத்து வாங்கியதல்ல, வசந்தி! என் தாத்தா வன வேட்டையிலே சுட்டுக்கொண்டு வந்தவை.''

''ஓ! உன் தாத்தா வேட்டைக்குக் கூடப் போவாரா?'' என்று புது உற்சாகமடைந்த வசந்தி, ''பிச்சு! என் காலேஜ் 'நான்—டிடைல்' புத்தகத்தில் புலி வேட்டையைப் பற்றி ஒரு அத்தியாயமே இருக்கு! ஆனால் புரொபஸர்கள் யாரும் நேரே புலி வேட்டைக்குக் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுவதில்லை. அதனாலே....பிச்சு! உன் தாத்தா வேட்டைக்குப் போனால் என்னையும் கூட்டிக் கொண்டு போகச் சொல்கிறாயா? பிளீஸ், பிச்சு!'' என்று குழந்தை போல் கெஞ்சினாள்.

பிச்சுமணி என்ன பதில் சொல்வான்? அவனால் பரிதாபமாகத் தன் தாத்தாவை ஏறிட்டு நோக்கத்தான் முடிந்தது!

மேஜர் திருதிருவென விழித்தபடி வசந்தியை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு, ''என் சொத்து விவரங்களைப் பற்றி நீ எதுக்காக விசாரித்தாய்?'' என்று மிரட்டுவதுபோல் கேட்டார்.

''நான் சொத்து வரி அதிகாரியோ என்று பயப்படாதீர்கள், தாத்தா! சாதாரணமாகத்தான் கேட்டேன்.!''

''ம்! உன் அக்கா இன்னும் என்னென்ன விசாரித்து வரச் சொன்னாள்?''

''என் அக்கா எதுவும் சொல்லவில்லை தாத்தா! நானாகவேதான் கேட்டேன்!''

''ஓஹோ! பெரிய மனுஷி! உனக்கு இன்னும் என்னென்ன விவரங்கள் தெரிய வேணும்?''

''நீங்கள் எதற்காகப் பெண்களை வெறுக்கிறீர்கள்?''

''அது உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை.''

''ஆனால் ஒரு வார்த்தை தாத்தா! பெண்களைக் கும்பிடக் கூடாது என்று சொன்னீர்களே அது தப்பு!'' என்று ஆரம்பித்த வசந்தி தன் உதடுகளில் நளினமாக ஒரு புன்னகையை நடனமாடவிட்டு, ''நீங்கள் அம்மன் கோவிலுக்குப் போனால் அம்மனைப் பெண் என்று நினைத்துக் கையெடுத்துக் கும்பிடாமல் இருப்பீர்களா?'' என்று கேட்டாள் மெல்ல.

''நான் அம்மன் கோவில் பக்கமே போக மாட்டேன்!''

''ஒருவேளை அம்மனே வந்து உங்கள் கண் முன்னால் பிரத்தியட்சமானால்?''

''கண்ணை மூடிக்கொள்வேன்!'' என்று விரச்சிட்ட மேஜர், ''நீ இங்கிருந்து போகிறாயா, இல்லையா?'' என்று வீறிட்டுக் கத்தினார்.

''தாத்தா! நீங்கள் இப்போது ரொம்பக் கோபமாக இருக்கிறீர்கள். இன்னொரு சமயம் வருகிறேன்!''

''நீ வரவே வேண்டாம்!''

—''அப்படிச் சொல்லாதீர்கள் தாத்தா! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!'' என்று சொன்ன வசந்தி ஒரு புன்முறுவலுடன் பிச்சுமணியை நோக்கி, ''பிச்சு! சீரியோ! பை! பை!'' என்று உற்சாகமாகக் கையை ஆட்டிக் கூறிவிட்டு மான் குட்டி போல் துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே போய் மறைந்தாள்.


ஒரு சூறைக் காற்று வந்து, மறைந்தது போலிருந்தது.

வசந்தி போனதும் மேஜர் ராமதுரை மெல்லத் தம் பேரனின் பக்கம் பார்த்தார்.

பிச்சுமணி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அவனிடம் என்ன கேட்பது, எப்படிக் கேட்பது என்பதே மேஜருக்குப் புரியவில்லை. அவர் தொப்பென்று ஒரு சோபாவின்மீது உட்கார்ந்துவிட்டார்.

தம் கையிலிருந்து பொக்கிஷத்தை யாரோ தட்டிப் பறிக்க முயல்வது போல் அவருக்கு ஒரு பிரமை உண்டாகி, அவருக்கு எதிராக எங்கோ எப்படியோ ஒரு போர்முனை உருவாகிறது என்பதும், அவருடைய மனக் கோட்டைகளையெல்லாம் தகர்த்தெறிய ஒரு பெரும் படையெடுப்பு வரப்போகிறது என்பதும் அவருக்குத் தெளிவாகப் புலனாயிற்று. ஆனால் அதே சமயம் அந்தப் படையெடுப்பை முறியடித்து எதிர் முனையைக் கிள்ளியெறிந்து வெற்றிக்கொடி நாட்டிவிட வேண்டுமென்ற ரோஷமும் அவருடைய வீர பரம்பரையின் ரத்தத்தில் கொந்தளித்து நின்று வைராக்கியமாக மாறியது.


அருணகிரி விலாஸ்
சீயக்காய்
பவுடர்
REGD
ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI.




மிக நேர்த்தியான எம்ப்ராய்டரி!
மெர்ரிட்*
தையல் மெஷினில்
மிகச் சுலபமாகச் செய்யலாம்!
MERRITT
நீங்கள் கவனிக்கவேண்டிய மெர்ரிட்டின் தனிப் பெருஞ்சிறப்புகள்:
மிகச் சிறந்த ஸிங்கர் எண்ணெயையும் தையல் ஊசிகளையும் கேட்டு வாங்குங்கள்.
மிகச் சுலபமான 'ஸிங்கர்' தவணைமுறை திட்டத்தில் 'மெர்ரிட்' தையல் மெஷினை இன்றே வாங்குங்கள்.

அத்தியாயம் பத்து

நகைச் சுவை

உமா தன் வீட்டில் உட்கார்ந்து அவள் டியூஷன் சொல்லிக் கொடுக்கும் குழந்தைகளின் காப்பி நோட்டுகளையும் பாடத் தாள்களையும் திருத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

"அக்கா! அக்கா!" என்று கூவிக் கொண்டே வசந்தி குதித்தோடி வந்தாள்.

அவளைக் கண்டதும், ஆடிப் பெருக்கின் புது வெள்ளம் பொங்கி வருவதைக் காணும்போது ஒருவித உற்சாகம் உண்டாகுமே, அதே உற்சாகம் உமாவுக்கு உண்டாயிற்று! "வாடி, வசந்தி!" என்று அவள் ஆவலோடு துள்ளி எழுந்தாள்.

"அக்கா! அக்கா!" என்று வசந்தி தாவிப் பாய்ந்து, உமாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கியவளாய், "என் அக்கா! என் அருமை அக்கா! மை டியரஸ்ட் அக்கா!" என்று பலபடியாகக் கொஞ்சினாள்.

"விடுடி வசந்தி! உன் பலத்தையெல்லாம் என்னிடம் காட்டுகிறாயே!"- என்று செல்லமாகக் கடிந்துகொண்ட உமா, மெல்ல வசந்தியின் முகத்தைத் தன் இரு கைகளாலும் நிமிர்த்திப் பார்த்தாள். குண்டு மல்லிகை மொட்டுப்போன்ற அந்த முகத்தில் படர்ந்திருக்கும் குறும்புத்தனங்களும், புன்சிரிப்பும் உமாவின் நெஞ்சைக் கொள்ளை கொண்டன.

"என்னடி வசந்தி! என்ன விஷயம்? ஏதாவது விஷமத்தனம் பண்ணிவிட்டு, என்னைச் சிபாரிசுக்குக் கூப்பிட வந்திருக்கிறாயா?"

"இல்லையக்கா!" என்று வசந்தி சுற்றும் முற்றும் பார்த்தபடி, "உன் பாட்டி எங்கே?" என்று பயத்துடன் கேட்டாள்.

"பயப்படாதே! பாட்டிக்குக் கிணற்றடியிலே கங்காஸ்நானம் நடக்கிறது!"

"நல்ல வேளை! ஓ! மை காட்" என்று வசந்தி தன் கையை நெஞ்சில் வைத்து எடுத்து வானத்தை நோக்கி அபிநயம் பிடித்துக் காட்டினாள். பிறகு அவள் பிரமாதமான விஷயங்களையெல்லாம் சொல்லத் துடித்தவளாய், "அக்கா! பழைய காலம் மறைந்தொழிந்து விட்டதென்று நினைத்திருந்தேன். ஆனால் அது இன்னும் சில இடங்களில் ஒட்டிக் கொண்டிருக்கிறது, அக்கா! ராஜா ராணி கதைகளுக்குக் கூட இந்தக் காலத்தில் அதுவும் இந்த மெட்ராஸில் இடம் இருக்கக்கா!" என்றாள் ஆச்சரியத்தோடு.

"என்னடி வசந்தி! திடீரென்று கால ஆராய்ச்சியும் கதையும்?"

"நிஜம்தான் அக்கா! ஒரு கடைசி ராணியம்மாவை இப்போ நான் பார்த்துவிட்டுத்தான் நேரே வருகிறேன்!" என்றாள் வசந்தி.

"அது யாரடி கடைசி ராணியம்மா?"

"பிச்சுமணியின் பாட்டிதான் அக்கா!" என்று உற்சாகத்தோடு கூறிய வசந்தி அன்று காலையில் பிச்சுமணியின் வீட்டுக்கு அவள் மன்னிப்புக் கேட்கப் போனது முதல் அங்கு நடந்தது, கண்டது, கேட்டது அனைத்தையும் விவரித்துச் சொல்லி விட்டு, "அக்கா! இதெல்லாம் வேடிக்கையாக இல்லை?" என்று சுவாரஸ்யமாகக் கேட்டாள்.

"வேடிக்கையா? பிச்சுமணியிடம் மன்னிப்புக் கேட்கிற சாக்கில் அவன் வீடுவரை போய் ரகளை பண்ணிவிட்டு வந்திருக்கிறாயா? அழகாயிருக்கிறதடி! சமாதானம் செய்யப் போய் அவன் தாத்தாவையும் சண்டேசுவரராக்கி விட்டு வந்திருக்கிறாய்!" என்று உமா கடிந்து கொண்டாள்.

"அடேடே! சண்டேசுவரர் குண்டேசுவரர் என்று நீகூட ஹாஸ்யமாகப் பேச ஆரம்பித்து விட்டாயே அக்கா!" என்று வசந்தி அவளுக்குப் பாராட்டுரை வழங்கினாள்.

"போதுமடி! நீ பண்ணின கலாட்டாவிலே பிச்சுமணி என்ன தவி தவித்திருப்பான்? அவன் தாத்தாவும் எவ்வளவு சங்கடப்பட்டிருப்பார்? அதை நீ கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாயா வசந்தி?"

"பின்னே என்ன அக்கா! 'எக்ஸ்க்யூஸ்மி' என்று நான் மன்னிப்புக் கேட்ட பிறகும், அந்த 'ஓல்டு மேன்' எரிந்து விழுந்தார். அதுவும் அவர் பெண்களையே வெறுக்கும் 'வுமன் ஹேட்ட'ராம்! அவர்...அவர் .... ஒரு பெண்ணின் காலில் விழுந்து கெஞ்சணும் அக்கா! அப்போதுதான் அவர் மூளை சீர்திருத்தமடையும்!" என்று வசந்தி முழக்கமிட்டாள்.

"ஏண்டி நீ ஆண்களுக்கு எதிர்க் கட்சி கட்டிக்கொண்டு இரிகிறாய்? நீ பி. ஏ. படிக்கிறதுக்கு 'லேபிளா' அது?"

"அக்கா! இந்த உலகத்தை விட்டே ஆண்களின் ஆட்சியும் பெண்களின் அடிமைத்தனமும் ஒழிய வேண்டும். அப்போதுதான் இந்த உலகத்தில் புதுமையான வாழ்க்கைத் தத்துவம் உதய

மாகும். பாரக்கா! நிச்சயம் அப்படி நடக்கத்தான் போகிறது! வருங்காலம் பெண்களின் யுகமாகத்தான் இருக்கும்!'' என்று வசந்தி பெண்களின் புதிய சமுதாய லட்சியத்துக்குத் தீர்க்க தரிசனம் கூறினாள்.

உமாவோ பிச்சுமணியைப் பற்றி வசந்தி கூறிய விவரங்களைச் சிந்திப்பதில் மூழ்கினாள். அவற்றிலெல்லாம் பிச்சுமணிக்கு அப்பா அம்மா இடையாது என்ற பரிதாபம்தான் உமாவின் நெஞ்சைத் தொட்டது. ஆனால் வசந்தியோ பிச்சுமணியின் வீட்டில் கொட்டிக்கிடக்கிற செல்வச் செழிப்பையும், கடைசி ராணியம்மாவின் ஏராளமான நவரத்தின நகைகளைப் பற்றியுமே பெரிதாக நினைத்து வெகு சுவாரசியமாக மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''அப்பப்பா! எத்தனை நகைகள்! பிச்சுமணியின் பாட்டி அத்தனை நகைகளையும் தன் உடம்பில் தூக்கிக் கொண்டு எப்படித்தான் நடமாட முடிந்ததோ, அக்கா!'' என்றாள் வசந்தி.

''இந்தக் காலத்துப் பெண்களாக இருந்தால் கல்லூரிப் புத்தகங்களைத் தூக்குவதற்குக்கூட உடம்பில் பலம் இருக்காது. ஏனென்றால் ஒல்லியாய், ஒடிந்து விழுகிற மாதிரி இருக்கிறது தான் நாகரிக அழகு என்று நினைக்கிறதுகள்!''

''நான் ஒன்றும் ஒடிந்து விழுகிற குச்சி இல்லையக்கா! நானும் உன்னை மாதிரி குண்டாகத்தான் இருக்கேன்'' என்று சிரித்த வசந்தி தன் புதுமைக் கொள்கையை விட்டுக் கொடுக்க விரும்பாதவளாய், ''ஆனால், அக்கா.... பெண்களுக்கு நகைச் சுவை வேண்டுமே தவிர, நகைச் சுமை கூடாதென்பது இந்தக் காலத்துத் தத்துவம்! ஆனால் அந்தக் காலத்தைப் பார்! அடிமைகளுக்குக் கால் விலங்கு, கை விலங்கு, கழுத்துச் சங்கிலி யெல்லாம் போட்டுப் பாதாளச் சிறையில் அடைத்து வைத்திருப்பது போல, அந்தக் காலத்துப் பெண்களுக்கு ஆண் வர்க்கம் குயுக்தியாய் நகைகள் என்னும் பெயரில் பல கட்டுத் தளைகளைப் போட்டு அந்தப்புரம் என்னும் அழகான சிறைக்குள் அடைத்து வைத்து வந்திருக்கிறது!'' என்றாள்.

''அப்படி யில்லையடி வசந்தி! அந்தக் காலத்துத் தமிழ்ப் பெண்கள் அணிந்திருந்த ஒவ்வொரு நகைக்கும் அர்த்தம் உண்டு. அந்த நகைகள் எல்லாம் பெண்களின் தனிச் சொத்துடைமையையும் குறிக்கும்'' என்றாள் உமா.

''போக்கா! அந்தக் காலத்தில் தும்முறதுக்குக் கூட ஒரு அர்த்த அனர்த்த வியாக்கியானம் வைத்திருப்பீர்கள்!'' என்று சொன்ன வசந்தி திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு மணிகள் குலுங்குவது போல் கலகலவெனப் பலமாகச் சிரித்தாள்.

''என்னடி சிரிக்கிறே வசந்தி?''

''இல்லையக்கா! நான்மட்டும் அந்த வீட்டில்...'' வசந்தி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

''என்ன வசந்தி! என்ன சொல்கிறாய்?'' என்று உமா பரபரப்போடு தன் தங்கையின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

''இல்லையக்கா; ம்.... அதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?''

''எதுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்கிறாய்?''

''வந்து....அக்கா!... நான் மட்டும் அந்த வீட்டில் அந்தத் தாத்தாவுக்குப் பேத்தியாகப் பிறந்திருந்தால் என்ன செய்வேன் தெரியுமா?''

''என்ன செய்வாய்?''


''முதல்லே அந்தக் கடைசி ராணியம்மா போட்டிருந்த நகைகளையெல்லாம் எடுத்து...''

''எடுத்து?''

''என் அருமை அக்காவுக்குப் போட்டு அழகு பார்ப்பேன்!''

''ஸ்ஸ்...அசடு மாதிரி பேசாதேடி!''

அந்தச் சமயம் இறைற்றடிப் பக்கமிருந்து, ''ஏண்டி உமா! யாரடி அது?'' என்று ஜானகிப் பாட்டியம்மாள் சரப் புடவை சொட்டச் சொட்டக் கூவிக் கொண்டே வந்து நின்று, ''உன் இரட்டை வால் வசந்தியா?'' என்றாள் கிண்டலாக.



"என்ன, பாட்டி! இவ்வளவு சீக்கிரமாய்க் குளித்துவிட்டு வந்துவிட்டாய்? கங்கையம்மன் கோபித்துக்கொண்டு ஜலதோஷம் பிடித்துவிடாதோ?" என்று பதிலுக்குக் கிண்டலாகச் சொன்ன வசந்தி, தன் அக்காவை நோக்கிக் கையை ஆட்டிச் சிரித்தபடியே "அக்கா, நான் போயிட்டு வருகிறேன்! பாட்டி, குட்பை, சீரியோ!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

"நில்லுடி வசந்தி! ஓவல்டின் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!" என்றாள் ஜானகிப் பாட்டி.

"வேண்டாம் பாட்டியம்மா! நான் ஓவல் சாப்பிட்டால் எனக்கு ஒன்பது உபதேசமும் எங்கள் அப்பாவுக்கு ஒரு வகை புராணமும் கேட்க வேண்டியிருக்கும்!" என்று வசந்தி சொல்லிவிட்டுக் குடுகுடுவென்று அங்கிருந்து ஓடியே போய்விட்டாள்!

அத்தியாயம் பதினொன்று

பிள்ளையார் விளையாட்டு

உமா எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டுத் தளதளவென்று வந்து தன் வீட்டு முற்றத்து வெயிலில் தன் ஈரக் கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

தெருக் கதவை யாரோ மெல்லத் தட்டும் சத்தம் கேட்டது.

"யாரது?" என்று உமா கேட்டுக்கொண்டே தன் கூந்தலைக் கோதியபடி நடந்து சென்று தெருக் கதவைத் திறந்து பார்த்தாள்.

உடனே, "நீயா?" என்று அவள் வியப்புடன் தன் புருவங்களை உயர்த்தித் தன் எதிரில் நின்றவனை நோக்கினாள்.

பிச்சுமணிதான் அவள் எதிரே கையில் ஒரு சிறு பொட்டலத்துடன் நின்று கொண்டிருந்தான்! அவனுடைய சிவந்த முகம் அப்போதுதான் மலர்ந்த ரோஜாவைப்போல் இருந்தது.

அவனுடைய பேபி ஆஸ்டின் கார் உமாவின் வீட்டு வாசல் முன்னாலேயே தெருவில் அடக்கவொடுக்கமாக நின்று கொண்டிருந்தது.

"என்ன பிச்சுமணி? என்ன விஷயம்?" அமைதியான குரலில் கேட்டாள் உமா.

"ஒன்றுமில்லை.... வந்து... வந்து.." என்று தயங்கிய பிச்சுமணி, "நான் பொரி உருண்டை கொண்டு வந்திருக்கிறேன்!" என்று முடித்தான்.

உமாவுக்குப் புரியவில்லை! பிச்சுமணியை அவள் அதிசயமாகப் பார்த்தபடி, "பொரி உருண்டையா?" என்று மலைப்புடன் கேட்டாள்.

"ஆமாம்! உங்கள் வீட்டுப் பிள்ளையாருக்குக் கொண்டு வந்திருக்கிறேன்!"

உமாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"என் பிள்ளையார் பொரி உருண்டை கேட்க மாட்டாரே?" என்றாள் உமா ஒரு புன்முறுவலுடன்.

"பிள்ளையாருக்குப் பொரி உருண்டை என்றால் ரொம்பப் பிடிக்கும். அவராகக் கேட்கா விட்டாலும் நானாகவே கொடுக்க நினைத்தேன்!"

"ஏன்?" என்று கேட்டாள் உமா.

"பிள்ளையாருக்கு வைத்த குண்டு மல்லிகைப் பூவை எனக்குக் கொடுத்தீர்கள் இல்லையா? அதிலிருந்து எனக்கு ஒரு புது உற்சாகமும், தைரியமும் பிறந்திருக்கின்றன. பிரமாதமான காரியங்களெல்லாம் செய்யப் போகிறேன்."

"ஓ! மல்லிகைப் பூவுக்குப் பதில் பொரி உருண்டையா?" என்று ஒரு புன்முறுவலுடன் சொன்ன உமா பிச்சுமணியின் வெகுளி உள்ளம் வருந்தக் கூடாதே என்பதற்காக, "சரி, கொடு!" என்று வாங்கிக் கொண்டாள்.

"உங்கள் தங்கைதானே வசந்தி என்பது....?" என்று பிச்சுமணி மெல்ல ஆரம்பித்தான்.

"ஆமாம்! உங்கள் வீட்டுக்கு வசந்தி மன்னிப்புக் கேட்க வந்திருந்தாளாம். ஆனால் அங்கே நடந்ததையெல்லாம் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போனாள்!" என்றாள் உமா.

"எல்லாவற்றையும் சொன்னாளா?" என்று பரபரப்புடன் கேட்ட பிச்சுமணி ஒரு கணம் ஏதோ யோசித்தவனாக "உங்கள் இரண்டுபேரையும் அக்கா தங்கை என்றே நினைக்க முடியவில்லை!... நீங்கள் எவ்வளவு அமைதியாயிருக்கிறீர்கள்? எவ்வளவு அன்பாய்ப் பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் தங்கை வசந்தி.." என்றான்.

"இல்லே, அவள் கொஞ்சம் விளையாட்டுப் பெண்! ஏதாவது குறும்புத்தனமாகப் பேசுவாள். ஆனால் மனசில் ஒரு வித்தியாசமும் இராது. அவள் பேசுகிற எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே!... உன் தாத்தாவிடமும் சொல்லு....." என்று கனிவுடன் சொன்ன உமா, 'சரி; நீ போகலாமே?' என்று சொல்லாத குறையாகக் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போகத் தயாரானவள்போல் தெருக் கதவைப் பிடித்துக் கொண்டு நின்றாள். (தொடரும்)



இரண்ய - நரசிம்ம யுத்தம்

நடுக்கம் தீர்த்த பெருமான்

பொன்னிமா நதி புனல் மல்கி வளம் கொழிக்கும் புண்ணியம் பெற்றது சோழநாடு. இந்நாட்டில் சோழ மன்னர்களால் எடுக்கப் பெற்ற கோயில்கள் மிகப் பலவாகும். அவைகளுள் சில அம்மன்னர்களது பெருமைக்கும், புகழுக்கும், சிற்ப நுணுக்கத்துக்கும் நிலைக்களமாய் இன்றும் விளங்குகின்றன. அங்ஙனம் விளங்குவனவற்றுள் கும்பகோணத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள திருபுவனம் திருக்கோயிலும் ஒன்றாகும்.


தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேச்வரர் ஸ்வாமி கோயில் கும்பாபிஷேகம் ஆவணி 21ம் தேதி 6-9-63ல் சிறப்பாக நடந்தது. கோயில் திருப்பணிக்காகச் சுமார் ஐந்தரை லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மூன் ராஜ கோபுரம் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்பட்டுத் திருப்பணி செய்யப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. சுவாமி கோயில் விமானம் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. மற்றும் அம்மன் கோயில் சரபர் கோயில் விமானங்கள் சுற்றுக் கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. மற்றும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிப்பிராகாரம், முன் கோபுரத்துக்கும் இரண்டாம் கோபுரத்துக்கும்இடையில் திருப்பணி, சரபர் சந்நிதியில் கருங்கல் தளவரிசை, பொதுமக்களுக்குத் தங்கும் வசதி, தண்ணீர் வசதி முதலியன செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீ சரபமூர்த்திக்கு ஒரு வெள்ளி ரதமும் செய்யப்பட்டுள்ளது.

திரிபுவன வீரபுரம் என்பதே இத்தலத்தின் பழைய பெயராகும். இப்பெயரே இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இப்பெயர் திருபுவனம் என்று மருவி வழங்கப்படுகிறது. இதுவன்றி வில்வ வனம், திரிபுரவனம், தேவக்ஷேத்திரம், நிம்பாண்டிய க்ஷேத்திரம் என்ற வேறு பல பெயர்களும் இத் தலத்துக்கு உள்ளன.

திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி இருக்கிறது. இதற்கு முதற் கோபுரமாகிய திருத்தோரணத் திருவாயில், இரண்டாம் கோபுரமாகிய திருமாளிகைத் திருவாயில், அர்த்த மண்டபத்தின் திருவாயிலாகிய திருவணுக்கன் திருவாயில் என்னும் மூன்று முக்கிய வாயில்கள் இருக்கின்றன. எனவே தெய்வப் பாக்கிழாராகிய சேக்கிழார் பெருமானும், திருத் தொண்ட புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள மூன்று திருவாயில்களும் இக் கோயிலுக்கு அமைந்திருக்கும் பெருஞ் சிறப்பு பாராட்டுக்குரியதாகும். அவைகளன்றி அர்த்தமண்டபத்தின் தென் பகுதியில் ஒன்றும் வட பகுதியில் ஒன்றும் ஆக இரு வாயில்களும் பிறவும் இருக்கின்றன. முதற் கோபுரம் ஏழு நிலைகளுடனும், இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளுடனும் கூடி வாயில்களை அழகுபெறச் செய்கின்றன.


மூல ஸ்தானத்தில் எழுந்தருளி யிருக்கும் இறைவனின் பெயர் ஸ்ரீ கம்பஹரேசுவரர். தமிழில் நடுக்கம் தீர்த்த பெருமான் என்று பொருள். இக்கோயில்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருப் பெயர் திருபுவனயீச்சரமுடைய மகாதேவர். அம்மையின் பெயர் அறம் வளர்த்த நாயகி. வடமொழியில் தர்மஸம்வர்த்தினி என்று அழைக்கப்படுகிறாள். பிரகலாதன் திருமால் தேவர் மனிதர் முதலாயினோர்க்கு விளைந்த கம்பத்தினை (நடுக்கத்தை - அபாயத்தை) நீக்கி அருளியதால் சிவபெருமானுக்கு இப் பெயர் ஏற்பட்டது.



திருபுவனம் கோயில்

மகர வடம் - ராமாயண சிற்பங்கள்





நாட்டியப் பெண்கள்

இரண்யன் இரணியாக்கன் என்று இரண்டு சகோதர அசுரர்கள் கடும் தவம் புரிந்து வரங்களைப் பெற்றனர். இரணியன் தேவர் மனிதர் விலங்கு முதலிய யாவராலும் எத்தகைய ஆயுதத்தாலும் அகம், புறம் எவ்விடத்திலும் பகல், இரவு என்ற இரு வேளையிலும் சாகாவரம் பெற்றான். அதனால் செருக்குற்று எல்லாரையும் துன்புறுத்தி வந்தான். பிரகலாதன் அவனுக்குப் பிறந்த புண்ய புதல்வன். திருமாலிடம் அன்புடையவன். இது இரண்யனுக்குப் பெரும் கோபத்தை உண்டாக்கியது. சிறுவனைப் பல வகையில் கொல்ல முயன்றான். திருமாலின் அருளால் சிறுவன் வாழ்ந்து விளங்கினான். ஒரு நாள் நாரணன் தூணிலும் உளன் துரும்பிலும் உளன் என்று சிறுவன் சொல்ல இரணியன் தூணை எட்டி உதைத்தான். நரசிம்மர் வெளிப்பட்டு இரணியனைக் கிழித்துக் கொன்று அவனது குருதியைப் பருகினார்.

இரணியனின் மேல் கொண்டிருந்த கோபம் அவனைக் கொன்றும் தணியாமல் உலகத்தையே நரசிம்மர் அழிக்கத் தொடங்கினார். பிரகலாதனும் திருமகளும் ஆற்றியும் கோபம் தணியவில்லை. அதைக் கண்ட தேவர்களும், முனிவர்களும் சிவனிடம் முறையிட்டனர். சிவபெருமான் சரபப் பறவை உருவம் கொண்டு நரசிம்மத்தைத் தூக்கிச் சென்றார். சரபம் தன்மீது பட்ட உடனேயே நரசிம்மத்தின் கொடுமை அடங்கியது. திருமால் தம் இயல்பான நல்லுணர்வைப் பெற்றார். தங்களுக்கு விளைந்த கம்பத்தினை (நடுக்கத்தை) நீக்கி அருளியதால் நடுக்கம் தவிர்த்த பெருமான் என்று திருப்பெயர் ஏற்பட்டது. சரப மூர்த்தியும் அங்கு வீற்றிருந்து அருள் செய்கின்றார். திரிபுவனத்தில் உள்ள சரபர் உற்சவர்போல் வேறு எங்கும் கிடையாது.

மூன்று அசுரர்கள் தங்கள் தவ வலிமையால் பெரு வலிமைபெற்றனர். அவர்களை அழித்துவிட தேவர்கள் கடும் போர் விளைத்தனர். அசுரர்கள் மண்ணுலகத்தை மாறு வேடத்தில் அடைந்தனர். ஒரு காட்டில் வில்வமரங்களுக்கு இடையில் ஒரு லிங்கத்தைக் கண்டனர். அதனிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களுடைய நடுக்கத்தைத் தீர்த்த பெருமான் என்ன வரம் வேண்டும் என்று கேட்கத் தங்கள் விருப்பம் போல் உலவித் திரிய பொன், வெள்ளி, இரும்பு என்ற மூன்று கோட்டைகள் யாவராலும் அழிக்கப் படாதனவாக வேண்டும் என்று கேட்டு அவைகளை அடைந்தனர். அருள் பெற்றதும் மறுபடியும் தேவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தனர். இன்னல் பொறுக்கமுடியாத விண்ணோர் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் திரிபுரர்களை அழித்தார். திரிபுரர்கள் தவம் கிடந்த இடம் ஆதலால் இத்தலத்துக்குத் திருபுவனம் என்று பெயர் வந்தது.



சரபர் சந்நிதியில் உள்ள நாட்டியப் பெண்

சுகோஷன் என்னும் வேடவன் கம்ப நடேசுவரரை வழிபட்டு மறுபிறவியில் அரசனாய்ப் பிறந்தான். வரகுண தேவன் என்னும் பாண்டிய மன்னன் பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபட்டும் நடுக்கம் தீராததால் திருவிடைமருதூரிலிருந்து மேற்கே செல்லத் திருபுவனத்து எல்லையை அடைந்ததும் நடுக்கம் தீர்ந்து அச்சம் நீங்கப்பெற்றான். அதனால் இங்கு தங்கி இப்பெருமானுக்குப் பணிகள் பல புரிந்து சென்றான். இத்தல விருக்ஷம் வில்வம். சுவாமி கோயில் பிராகாரத்தில் இருக்கிறது. இத்தலத்தில் சரப தீர்த்தம், ஞான தீர்த்தம், வியாச தீர்த்தம், பிருகு தீர்த்தம், சித்த தீர்த்தம் ஆகிய ஆறு தீர்த்தங்கள் உள.

இக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுவதால் இன்றைக்குச் சுமார் 775 ஆண்டுகள் ஆகின்றன. இக்கோயில் சோழச் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. கோயில் கோபுரம் மிகப் பெரியது. கல்லால் ஆனது. வெளிச் சுவர்களில் அற்புதமான சிற்பங்களைக் காணலாம். இராமாயணம் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. மனுநீதிச் சோழன் வரலாறும் அழகாக அமைந்துள்ளது. தேர்க்காலில் பாலகனைப் போட்டு நீதி வழங்கிய காட்சி அற்புதமாக உள்ளது.

எல்லாம் நம் தலைவிதி என்கிற ரீதியில் மேலே மேலே சுமத்தப்படும் துன்பங்களை அநுபவிக்கப் பழகிக் கொள்ளாமல் அச்சமின்றி மக்கள் தங்களுடைய நியாயமான உரிமைக் குரலை எழுப்ப நடுக்கம் தீர்த்த பெருமான் அருள்புரிவாராக.

சரபமூர்த்தி - உற்சவர்



என். நாகரத்தினம்

வள்ளுவர் வாழ்கிறார்



பல திருவள்ளுவர் கழகங்களை நிறுவிய
இ. ப. சுப்பிரமணிய தாசர்

திருவள்ளுவருடைய சரியான காலத்தை ஆராய்ந்து தெரிந்து கொள்ள முடியாமல் தங்களுக்குள் கருத்துப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற பேராசிரியர்களோ அவருடைய சமயம் என்னவென்று சமயாசமயங்களில் வம்பு செய்துகொண்டிருக்கிற ஆராய்ச்சியாளர்களோ இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் தயவுசெய்து எந்தவிதமான ஆச்சரியத்தையும் அடையவேண்டாம்.

''என்னடா இது? பெரிய வேதனையாக இருக்கிறது! இந்த மனிதர் திருவள்ளுவர் நிச்சயமாக 1800 ஆண்டுகளுக்கு முன்னால் தான் எப்போதோ இருந்திருக்க வேண்டுமென்று சிறிதும் கவலைப்படாமல் அவரைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் அவர் இன்னும் வாழ்ந்துகொண்டிருப்பதாகச் சொல்லி மிரட்டுகிறார்களே?'' என்று எந்த ஆராய்ச்சியாளரும் பயப்படவும் வேண்டாம். திருவள்ளுவர் காலம் என்ன? சமயம் என்ன? அவர் பிறந்தது எப்போது? இறந்தது எப்போது? அவரோடு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்? திருக்குறள் முதல் நூலா? வழி நூலா? என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு வேண்டிய இரகசியங்களை ஒன்றுவிடாமல் இந்தக் கட்டுரையில் சொல்லி விடுவதென்று இருக்கிறோம்.

'அடடா! இதென்ன அநியாயம்? அந்த இரகசியங்களையெல்லாம் இப்படிப் பகிரங்கமாகச் சொல்லிவிட்டால், திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் ஆராய்ந்து கொண்டிருப்பவர்களும், புத்தகம் எழுதிக் கொண்டிருப்பவர்களும், மேடைகளில் பேசிக் கொண்டிருப்பவர்களும் என்ன ஆவது?' என்று யாரும் தயங்க வேண்டியதில்லை. திருவள்ளுவரைப் பற்றி இங்கே சொல்லப் போகிற இரகசியங்கள் நிச்சயமாக யாரையும் பாதிக்காதவை என்பதற்கு முதலிலேயே உத்தரவாதம் அளித்து விடுகிறோம்.

நாம் நினைத்துப் பெருமிதப்படத் தகுந்த முன்னோர் தலைமுறை ஏதோ ஒன்றில் எப்போதோ திருவள்ளுவர் என்ற தெய்வப் புலவர் நம் தமிழ் நாட்டில் பிறந்திருக்கிறார் என்பதும் திருக்குறள் என்கிற உலகப் பொது மறையைத் தந்திருக்கிறார் என்பதும், அந்தப் பொது மறையும், அதை இயற்றித் தந்திருக்கிற திருவள்ளுவப் பெருந்தகை யாரும் தமிழ் மக்களின் நெஞ்சிலும், நினைப்பிலும் சொல்லிலும் செயலிலும் நிரந்தரமாக வாழ்கிறார்கள் என்பதும் எக்காலத்திலும் யாராலும் மறுக்க முடியாத உண்மை. தமிழ்நாட்டின் பழைய தலைமுறைப் புலவர்களில் மிகவும் யோகக்காரர் திருவள்ளுவர்தான். 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' என்று கம்பனை மானிடனாக வியந்த பாரதியார் 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று இளங்கோவடிகளைச் சேரன் தம்பியாகச் சொல்லிப் புகழ்ந்துவிட்டு, 'தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்' என்று திருவள்ளுவரை மட்டும் தனியாகச் சிறப்பித்துத் தெய்வமாக உயர்த்தி வைத்துப் புகழ்கிறார். எல்லாவற்றைப் பற்றியும் தீர்க்க தரிசனம் கூறியிருக்கும் கவியரசர் பாரதியார் திருவள்ளுவருக்கு மறுமலர்ச்சித் தமிழகத்தில் ஏற்படப் போகும் பெரும் புகழைப் பற்றியும் இப்படித் தெளிவாகத் தீர்க்க தரிசனம் கூறியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும்.

தெருவெல்லாம் குறள் முழக்கம்

திருவள்ளுவருடைய காலத்தையும், சமயத்தையும் பற்றியே வீணாக ஆராய்ச்சிசெய்து மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிற பேராசிரியர்கள் இன்றைக்குத் தமிழ் நாட்டின் சிற்றூர்களிலும், பேரூர்களிலும், எத்தனை எத்தனை வள்ளுவர் வாசகசாலைகளும், குறள் மன்றங்களும், கழகங்களும், இலக்கியப் பேரவைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் அப்படியே மலைத்துப் போவார்கள். 'திருவள்ளுவருடைய காலம் என்ன?' என்று கேட்கிறவர்களிடம் ''அதைப் பற்றி நீங்கள் அநாவசியமாகக் கவலைப்பட வேண்டாம் ஐயா! இப்போதெல்லாம் திருவள்ளுவருக்கு யோக காலம்'' என்று தாராளமாகப் பதில் சொல்லலாம். கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தா நகரத்தில் உள்ள ஹெளரா திருவள்ளுவர் மன்றம் வரை ஆண்டுதோறும் திருக்குறளையும் திருவள்ளுவரையும் கொண்டாடும்சங்கங்களையும் விழாக்களையும் கணக்கெடுத்தால் கணக்கில் அடங்காது. திருக்குறள் கவியரங்கம், திருக்குறள் பட்டி மன்றம், திருக்குறள் அட்டாவதானம் என்று விதம் விதமாக நடைபெறும்



நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது இந்தக் கால் நூற்றாண்டு காலத்துக்குள் திருக்குறள் என்னும் ஓர் அறநூல் ஒரு மாபெரும் இயக்கமாகியிருப்பதைப் புரிந்து கொள்ளுகிறோம்.

தமிழர்களின் 'பைபிளாக' விளங்கும் திருக்குறளை வகுப்புகள் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் பரவச் செய்து வரும் பொதுமன்றங்களைப் பற்றி இக் கட்டுரையில் விவரிக்க நேரிடுவதற்காகப் பெருமைப்படுகிறோம். தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களில் பல ஊர்களில் திருவள்ளுவர் கழகங்களை நிறுவியவரும், நிறுவக் காரணமாக இருந்தவருமான ஒருவரைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளலாம்.

'கை விசேடம்' என்று நம்மவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு. ஒரு காரியம் தொடங்கப்பட்டு நன்றாக நடைபெறுவதற்கும், நடைபெறாமற் போவதற்கும் அந்தக் காரியத்தைத் தொடங்கி வைத்த கைகளைக் காரணமாகச் சொல்லுவார்கள். இந்த ஆபத்தான பரீட்சைக்குப் பயந்துதான் பலர் எந்தக் காரியத்தையுமே தங்கள் கைகளால் தொடங்கி வைப்பதில்லை. திருக்குறளைத் தமிழ் நாடெங்கும் பரப்புவதற்காகக் கழகங்களையும், மன்றங்களையும் தொடங்கி வைக்கிற நோக்கத்தோடு பல ஆண்டுகளுக்கு முன் நாகர் கோவிலுக்கு அருகில் உள்ள திருப்பதிசாரம் என்ற அழகிய ஊரிலிருந்து தைரியமாகக் கிளம்பினார் ஒரு பெரியவர். அவருடைய கைவிசேடத்தினால் தமிழகத்தில் தோன்றிய திருவள்ளுவர் கழகங்கள் இன்று வெள்ளி விழாவும் பொன் விழாவும் கொண்டாடுகிற நிலைக்கு வளர்ந்துள்ளன. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை மீனாட்சிசுந்தரர் திருக்கோவிலின் வடக்காடி வீதித் திருச் சுற்றில் வடக்குக் கோபுரத்து வாயிலருகே இருக்கும் தகரக் கொட்டகையில் சாயங்கால வேளைகளில் ஓர் அற்புதமான காட்சியைக் காணலாம். கடம்ப மரங்களும் வேப்ப மரங்களும், தென்னை ஓலைகளும் காற்றில் அசைந்தாடும் ஆடி வீதித் திருச்சுற்றில் அந்தப் பக்கமாகக் கோபுர வாயிலில் உள்ள இசைத் தூண்களை யாராவது கல்லால் தட்டி எழுப்புகிற கணீரென்ற இன்னொலியையும் மீறிக்கொண்டு,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று கம்பீரமானதொரு குரல் சொற்பொழிவோ, மாணவர்களுக்குக் குறள் வகுப்போ நடத்திக் கொண்டிருக்கும்.

சுற்றிலும் ஆர்வம் நிறைந்த மாணவர்களோ தமிழன்பர்களோ உட்கார்ந்து மிகவும் சுவாரஸ்யமாகப் பாடம் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அந்தக் கம்பீரமான குரலுக்குரியவர் யார், தெரியுமா? தென்பாண்டி நாட்டு நாகர்கோவிலைச் சேர்ந்த திருப்பதிசாரம் திருக்குறள் அட்டவதானி தி. ப. சுப்பிரமணிய தாசர் என்பவர்தான். இன்றைக்குத் தமிழ் நாட்டில் நடைபெறும் குறள் வகுப்புக்களுக்கும், சொற்பொழிவுகளுக்கும், அட்டாவதானங்களுக்கும் கால் நூற்றாண்டுக் காலத்துக்கு முன்பே 'வித்திட்டவர் இந்தப் பெரியவர்தான். இப்போது முப்பத்தாறு ஆண்டுகள் நிறைந்துவிட்ட தென்காசித் திருவள்ளுவர் கழகத்தையும், இருபத்திரண்டு ஆண்டுகள் நிறைந்து கொண்டிருக்கிற மதுரைத் திருவள்ளுவர் கழகத்தையும் தோற்றுவித்து வளர்த்த பெருமை இவரையே சாரும். இவருடைய கை விசேடத்தால் இன்னும் பல திருவள்ளுவர் கழகங்களும், சின்னஞ்சிறு வள்ளுவர் மன்றங்களும் தோன்றியிருக்கின்றன என்றாலும் திருக்குறளுக்கென்றே தோன்றிய பல்கலைக் கழகங்களைப் போலப் பணி புரிந்து வரும் இந்த இரண்டு பெரும் நிறுவனங்களை வளர்த்ததற்காகவே திரு சுப்பிரமணிய தாசரைத் தமிழ் மக்கள் தலைமுறை தலைமுறையாகக் கொண்டாடிக்கொண்டிருக்கலாம்.



சேலம் குகை திருவள்ளுவர் கழக விழா

ஒழுக்கத்துக்கு ஓர் இலக்கியம்

திரு தி. ப. சுப்பிரமணிய தாசர் கழகங்களும், மன்றங்களும் தோற்றுவிப்பதற்குத் திருக்குறளையும் திருவள்ளுவரையும் தேர்ந்தெடுத்தார் என்பதற்காகவே, தனியாக அவரைக் கொண்டாட வேண்டும். திருக்குறள் ஓர் ஒப்பற்ற ஒழுக்க இலக்கியம். இந்த நாட்டு மாணவர்கள் சிந்தனையிலும், பொது மக்கள் நினைவிலும் எவ்வளவுக்கு அது பரவிப் பதிகிறதோ, அவ்வளவுக்குத் தேசிய இலாபம் உண்டு. ஒரு சங்கத்தையோ, வாசகசாலையையோ,மன்றத்தையோ, சாதாரணவிழாக்க

ளுடனே, ஆண்டு விழாக்களுடனே தொடர்ந்து நடத்துவதென்பது நடைமுறையில் எவ்வளவு அசாத்தியமான காரியம் என்பதை நாம் நன்கு அறிவோம். கையில் கால் காசு இல்லாமல் பாங்குக் கணக்குப் புத்தகமும் வரவு செலவும் இல்லாமல் ஒருசங்கம் வெறும் ஆர்வத்தையே முதலீடாகக் கொண்டு ஆரம்பமாகிறபோது அதற்குச் செயலாளரும் தலைவரும் கிடைப்பதே



சிவகங்கை வள்ளுவர் விழாவில்

சிரமம். அதே சங்கம் வளர்ந்து, பெரும் பத்திரிகைப் புகழும் பாங்குக் கணக்கில் மீறி இருப்பும் ஏற்பட்ட பிறகோ செயலாளர் பதவிக்கும் தலைவர் பதவிக்கும் வர விரும்பாதவர்கள் கிடைப்பது சிரமம். எல்லாருமே தலைவராகவும் செயலாளர்களாகவும் வரத் துடிக்கிற சமயம்தான் ஒரு சங்கத்தின் சோதனைக் காலம். ஆனால் இந்த விதத்தில் கூட திருவள்ளுவர் யோகக்காரராயிருக்கிறார் என்பதை இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ஒழுக்க இலக்கியமான திருக்குறளைப் பரப்புகிற சங்கங்களோ, கழகங்களோ, தமது பணிகளில் சோதனையோ, நிர்வாகத் தகராறோ இல்லாமல் தொடர்ந்து நடைபெற்றுத் திருவள்ளுவருடைய அதிர்ஷ்டத்தை இன்னும் நிரூபித்துக்கொண்டிருக்கின்றன. முப்பத்தாறு ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிற தென்காசித் திருவள்ளுவர் கழகத்தையும் இருபத்திரண்டு ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற மதுரைத் திருவள்ளுவர் கழகத்தையும் தவிர இருபத்து மூன்று ஆண்டுகளாக இயங்கும் சேலம் திருக்குறள் கழகமும், இராசிபுரம் திருக்குறள் ஆட்சி மன்றமும், கல்கத்தா ஜெனரா

திருவள்ளுவர் மன்றமும் பத்தாண்டுகளாகப் பணியாற்றிவரும் காரைக்குடித் திருக்குறட் கழகமும் தேவகோட்டைத் திருவள்ளுவர் கழகமும் மிக அண்மையில் தோன்றிய சிவகங்கை வள்ளுவர் இலக்கியப் பேரவையும், இன்னும் பல சங்கங்களும் திருக்குறளைப் பரப்பும் நற்பணியில் அயராமல் தளராமல் உழைத்துக் கொண்டிருக்கின்றன. வைகாசி, ஆனி மாதங்களில் தினப் பத்திரிகைகளைப் பிரித்துப் பார்த்தால் மேற்கூறிய திருவள்ளுவர் கழகங்களும், மன்றங்களும் இரண்டு நாள் விழா என்றும், மூன்று நாள் விழா என்றும், நான்கு நாள் விழா என்றும் தங்களுடைய ஆண்டு விழாக்களையும், குறள் மகாநாடுகளையும் நடத்திக் கொண்டிருக்கிற செய்திகளைப் பரவலாகப் பார்க்கலாம்.

இந்தத் திருக்குறள் மாநாடுகளிலும், ஆண்டு விழாக்களிலும் பேச்சுக் கேட்க வருகிற பொது மக்கள் ஆர்வமாக எதிர்பார்க்கிற ஓர் அம்சம் இலக்கியப் பட்டி மன்றம் ஆகும். ஒருவரைத் தலைவராகவும் நீதிபதியாகவும் நியமித்துக் கொண்டு கட்சிக்கு மூவரோ, அறுவரோ தனித் தனியே பிரிந்து நின்று விவாதிப்பதுதான் பட்டி மன்றம். பட்டி மன்றத்தில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வெற்றியடைந்தார்கள் என்பதைத் தீர்ப்பாக வழங்குவது தலைவருக்குரியது. பொதுவாகவே இருவர்



காரைக்குடியில் திருக்குறள் கழக விழாக் காட்சி

மாறுபட்டுச் சண்டை போடுவதைப் பார்ப்பதில் பலருக்கு ஓர் சுவாரஸ்யம் உண்டு. ஓர் இலக்கிய மேடையில் இருவர் கருத்தில் மாறுபட்டுச் சிரித்துக் கொண்டே நாகரிகமாகக் கருத்துச் சண்டை போடுவதைப் பார்ப்பதில் மக்களுக்கு எத்தனை ஆர்வமும், சுவாரஸ்யமும் உண்டு என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் காரைக்குடி கம்பன் விழாவிலோ, குறள் விழாவிலோ பட்டி மன்றம் நடைபெறும்போது போய்ப் பார்க்க வேண்டும். "வள்ளுவர் அதிகம் சிறப்பிப்பது அமைச்சனையா அல்லது அரசனையா?" என்ற தலைப்பு இந்த ஆண்டில் காரைக்குடி திருக்குறள் கழகத்தார் பட்டி மன்றத்திற்குக் கொடுத்திருந்த தலைப்பு. வள்ளுவர் அரசனைத்தான் அதிகம் சிறப்பித்திருக்கிறார் என்ற கட்சியை வலியுறுத்தி முதலில் பேசித் தொடங்கி வைத்தவர் திரு சா. கணேசன்



புடவை வியாபாரி: எந்த நிறத்தில் அம்மா உங்களுக்குப் புடவை வேண்டும்?

வாங்க வந்தவள்: காப்பிக் கலரில் வேண்டும்.

வியாபாரி: அம்மா! உங்கள் வீட்டில் காப்பிக்கு எவ்வளவு பால் சேர்க்கிறீர்கள்?



ஒரு சிப்பாய் தனக்குக் கொடுக்கப்படும் ஆகாரத்தில் கல்லும் மண்ணும் இருந்ததாக ராணுவ அதிகாரியிடம் புகார் செய்தான்.

ராணுவ அதிகாரி: இம்மாதிரியான புகாருடன் என்னிடம் வராதே. நமது தாய்நாட்டுக்காகப் போராடும் சேவையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஞாபகம் இருக்கட்டும்.


சிப்பாய்: சரிதான் ஸார்! ஆனால் அதற்காக நான் நமது தாய்நாட்டையே சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியுமா என்ன?

அவர்கள் ஆவார்களா? வள்ளுவர் அதிகம் சிறப்பித்திருப்பது அமைச்சனைத்தான் என்ற கட்சியை வலியுறுத்தி முதலில் பேசித் தொடங்கி வைத்தவர் திரு அ. ச. ஞான சம்பந்தன் அவர்கள். இந்த இரு கட்சியிலும் இவர்கள் இருவரையும் தொடர்ந்து மற்றும் மூன்று மூன்று பேர் வீதம் விவாதம் செய்தார்கள். உண்மை வாழ்விலேயே நீதிபதியாகிய திரு எஸ். மகராஜன் அவர்கள் இந்த இலக்கியப் பட்டி மன்றத்துக்கும் நீதிபதியாக வந்து வாய்த்திருந்தார்கள். சுவாரஸ்யத்துக்குக் கேட்கவா வேண்டும்? ஞானசம்பந்தமும் கணேசனும் நெருங்கிய நண்பர்களா யிருந்தும் இலக்கிய மேடையில் கட்சி கட்டிக்கொண்டு ஒருவரை ஒருவர் எதிர்த்தும், மறுத்தும் பேசுவதைக் கேட்பதில் மக்களுக்குத்தான் எவ்வளவு ஆர்வம்! இந்தப் பட்டி மன்றங்கள் மேடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நடுக் கூட்டத்தில் உட்கார்ந்து அவையில் இருப்பவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைக் கவனித்தால் சுவையா யிருக்கும். "அரசர் கட்சிக்காரர் வெளுத்து வாங்கிவிட்டாருங்க!..... நிச்சயமா அமைச்சர் கட்சி 'தோற கவா' தான்" என்று ஒரு இரசிகர் அரசர் கட்சியை ஆதரித்துப் பேச, அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத அமைச்சர் கட்சி இரசிகர் ஒருவர் "அதென்ன ஒரேயடியா அப்படிச் சொல்லிட்டீங்க...கடைசிவரை பொறுத்துப் பார்த்தாலில்லே தெரியும்? திருவள்ளுவர் அமைச்சரைத்தான் சிறப்பித்துப் பாடியிருக்கிறாரின்னு முடிவாகப் போகுது பாருங்க...." என்று முதலில் பேசியவரைச் சீறுவார். இப்படி மேடையில் விவாதம் நடைபெறும் போதே இரசித்துக்கொண்டிருக்கிற கூட்டத்திலும் விவாத மனப்பான்மை வந்துவிடும். சேலம் திருவள்ளுவர் கழகத்தார் சில ஆண்டுகளுக்கு முன் நடத்திய ஒரு பட்டி மன்றத்து விவாத அரங்கத்தில் விவாதத்துக்கு உரிய பொருள் என்ன தெரியுமா?

திருவள்ளுவரின் கருத்து ஆள்வினையா? (முயற்சி) ஊழ்வினையா? (விதி) என்பது. இந்த மாதிரித் தலைப்பினைப் பேசும்போது இரண்டு கட்சிக்காரர்களும் நகைச் சுவையாகவும் குத்தலாகவும் பேசுவதற்கு முயலுவார்கள். ஊழ்வினைக் கட்சிக்காரர் பேசி முடித்துவிட்டு உட்கார்ந்ததும் அடுத்தாற்போல் பேச எழுந்திருக்கிற ஆள்வினைக் கட்சிக்காரர், "எனக்கு முன் பேசியவரின் ஊழ்வினையை (தலை விதியை) நினைத்து நீங்களும் நானும் 'ஐயோ பாவம்!' என்று இதுவரை பரிதாபப்பட்டோம்" என்று எடுத்த எடுப்பிலேயே குத்தலாகத் தொடங்குவார். கூட்டத்தில் உடனே பலத்த கைதட்டல் ஒசை எழும். தென்காசித் திருவள்ளுவர் கழகத்தார் சமீபத்தில் பேராசிரியர் அ.சீ. ரா. அவர்கள் தலைமையில் நடத்திய பட்டி மன்றம் ஒன்றின் தலைப்பு, "திருவள்ளுவர் சமயவாதியா, உலகியல்வாதியா?" என்பது. நெல்லை வள்ளுவர் இலக்கியப் பேரவையார் அண்மையில் நிகழ்த்திய ஒரு பட்டி மன்றத்தின் தலைப்பு "வள்ளுவத்தின் அடிப்படை சமுதாய சீர்திருத்தமா? பொருளியல் சீர்திருத்தமா?" என்பது. இந்தப் பட்டி மன்றங்களில் பெரிய 'சஸ்பென்ஸ்' என்னவென்றால் தலைவருடைய மேஜை மேல் இருக்கும் எச்சரிக்கை மணிதான். தலைவரின் எச்சரிக்கை மணியைப்பற்றியும் திருக்குறள் மாநாடுகளில் வழக்கமாக உள்ள வேறு சில சுவையான நிகழ்ச்சிகளைப்பற்றியும் அடுத்த கட்டுரையில் பார்க்கலாம். (29-ந் தேதி இதழில் முடியும்)

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலிவ் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

உங்கள் கேசத்திற்கு போஷாக்கு அளிக்கிறது. பாமாலிவ் உபயோகிப்பதால் நீண்ட, செழிப்பான கேசம் இயற்கையாக வளருகிறது. ரோஜா, லெவண்டர் அல்லது மல்லிகை—இம்மூன்று வசீகரிக்கும் சுகந்தங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

உயர்தரமான தேங்காய் எண்ணெயுடன் தனிப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கலவை. இது அழுக்கு சுத்தம் செய்யும் ஷாம்பு என்பதுடன், ஒரு கூந்தல் அழகு சாதனமும் ஆகும். பாமாலிவ்வின் செழிப்பான நுரை கூந்தலுக்கு ஊட்டத்தைக் கொடுப்பதுடன் உங்கள் தலையையும் கூந்தலையும் [illegible] புத்துயிரூட்டுவதனால், புதிய ஆரோக்கியமான கேச வளர்ச்சி ஏற்படுகிறது.

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியெடுப்பது பாமாலிவ்





எடையினுல் ஏக்கமா!


எடை குறைந்து எடுப்பாய்விளங்க

லி மி க ல்

பாவையரைப் படரும் பைங்கொடி யென வர்ணித்தான் பாவலன்! உடலோடு நன்றாகப் பொருந்திய உடையணிந்து கொடிபோன்ற எழிலுருவத்துடன் உலவும் நாரீமணி தான் இன்றைய நவநாகரீக சமுதாயத்தின் சின்னம். உடல் கனம் குறைவதற்குக் கடினமான தேகப் பயிற்சிகளோ, பத்தியங்களோ தேவையில்லை. லிமிகல் அருந்தி எளிய முறையில் இளைக்கலாம்.

லிமிகல் பானம் தயாரிப்பது வெகு சுலபம்—நீரில் கரைத்து அருந்த வேண்டியதுதான். ஒரு தம்ளர் லிமிகல் பானத்தில் ஒருவேளை ஆகாரத்தின் முழுச்சத்தும் அடங்கியிருக்கிறது. சாரம் மிகுந்த புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்டுகள் விட்டமின்கள், மற்றும் மினரல்கள் இவற்றைச் சரியான அளவில் சேர்த்து சாஸ்த்திரீய முறையில் தயாரிக்கப்பட்ட உணவுதான் லிமிகல். ஒரு நாளைக்கு 900 கலோரிகள் கொடுக்கும் லிமிகல் பானத்தை அருந்தும் காலத்தில் உடல் இளைக்குமே தவிர நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் திகழ்வீர்கள்.

லிமிகலைப் பரீட்சார்த்தமாக அருந்தியவர்களின் உடல் நிறை வாரத்திற்கு சுமார் 3லிருந்து 5 பவுண்டுகள் வரை குறைந்திருக்கிறது. லிமிகல் அருந்திவரும் காலத்தில் உங்கள் வழக்கமான அலுவல்களைக் கவனித்து வரலாம்!



உங்கள் டாக்டரும்

லி மி க ல்

அருந்தும்படிதான் சிபார்சு செய்வார்

"ஸ்லிம்மிங் ஈஸ் ஸிம்பிள்" என்னும் இலவச புத்தகத்தைப் பெற எழுதுங்கள்.

ஸாராபாய் கெமிகல்ஸ்
த. பெ. எண் 1688, பம்பாய்-1

சில்லறை விலை: 225 கிராம் டின் ரூ. 6.50. வரிகள் தனி



"சோஹ்ராப்! உன் கதி இப்படியா ஆக வேண்டும்?"

"ருஸ்தம்! அழுது என்ன பயன்? நீ வந்த வழி அப்படி!"

"தஹ்மீனு! பெற்ற மகனை இழந்த உன் சோகத்துக்கு யாரால் ஆறுதல் கூறமுடியும்?"

ஏறக்குறைய இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த கதையாகப் பாரசீக நாட்டில் உலவி வரும் இந்தக் கதையைப் படிப்பவர்கள் மனத்துக்குள் புலம்புவார்கள்.

வீரமும் காதலும் இணையும் அருமையான கட்டம், ருஸ்தம் என்னும் வீரனும் தஹ்மீனு என்னும் எழிலரசியும் ஒருவருக்கொருவர், உள்ளத்தைப் பறிகொடுத்து ஒன்று சேருவது. பிரியும் கட்டமோ அதைக் காட்டிலும் துடிப்பு நிறைந்தது.

தாய்ப்பாசமும், தந்தையின் வாஞ்சையும், மகனின் தந்தைப் பற்றும் ஒன்றையொன்று மேவிக் கதைக்கு விறுவிறுப்பைச் சேர்க்கும் உத்தியை என்னவென்பது? கடைசியில் தந்தை தன் மகனைத் தன் மகன் என்று தெரிந்து கொள்ளாமல் போரில் கொலை செய்யும் கட்டமோ ஒரு பெரும் சோக சிகரம். மகனைக் கொன்ற தந்தை தன் மகனென்று அறிந்து புலம்புவதைக் காணும்போது ரசிகர்கள் உருகிக் கரைந்தே ஆக வேண்டும். இப்படி வீரமும் காதலும் பற்றும் பாசமும் துயரமும் சோகமும் பின்னிப் பிணைந்து உருக்கும் கதையைப் படித்தவர்கள் மேற் கூறியவண்ணம் கூறிப் பெருமூச்சு விடுவார்கள்.

சோஹ்ராப் ருஸ்தமின் இந்தக் கதையைத் திரைச் சித்திரமாகப் பார்த்தவர்களும் அன்று என்னோடு சேர்ந்து பெருமூச்சு விட்டார்கள்!

எதற்கு? திரைச் சித்திரத்தை அவ்வளவு இறம்பட எடுத்திருக்கிறார்கள் என்பதற்கா? இல்லை, இல்லை!

கதையில் காணும் அந்த உணர்ச்சிகளைக் கதாநாயகர்களிடம் காணமுடியவில்லையே என்பதனால்தான்! படத்தைப் பார்க்கும் பொழுது ஏற்பட்ட ஏமாற்றத்தைத் தாள முடியாமல்தான்!

சிறந்த நடிகர் என்று போற்றப்படும் பிருத்விராஜின் நடிப்புக்கூட ஓரிரண்டு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சோபிக்கவில்லை.

ஒரே ஒரு காட்சி மறக்கமுடியாததாக மனத்தில் பதிந்து விட்டது. படத்தின் தரத்தையே உயர்த்தும் காட்சி அது.

சோஹ்ராபுக்கும், ருஸ்தமுக்கும் போர் தொடங்கும் நேரத்தில், சோஹ்ராப் வீசிய கத்தியை ருஸ்தம் பிடிக்கிறான். கத்தியின் பிடி சோஹ்ராப்பின் கையிலும், கத்தியின் கூர்மையான பாகம் ருஸ்தமின் கையிலும் காட்சி தருகின்றன. ருஸ்தமின் கையிலிருந்து ரத்தம் சொட்டுகிறது. ஆயினும் பிடி தளரவில்லை. இரண்டு இணையற்ற வீரர்களின் நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பிறகு பிடியும் கத்தியும் வேறாகப் போன காட்சி ருஸ்தமின் பலத்தையும் பொறுமையையும் காட்டுவதாக அமைந்துள்ளது. அவன் காதலிலும் வீரத்தைக் காணக்கூடிய இரண்டொரு கட்டங்கள். இவற்றைத் தவிர மற்ற இடங்களெல்லாம் போர் படு 'போரா'க இருக்கின்றன.

ருஸ்தமின் காதலியாக நடிக்கும் சுரையாவைப் பல ஆண்டுகளுக்குப் பின் பார்க்கிறோம்; நடிப்பைக் காணவில்லை.

இரண்டொரு காட்சிகள் கண்களுக்குக் குளுமையாக இருப்பது போல இரண்டொரு பாடல் வரிகள் காதுக்குக் குளுமையை அளிக்கின்றன.

மும்தாஜின் உடல் வனப்பைக் காட்டிப் படத்தை ஓட்ட முயற்சி செய்கிறார்கள்.

பாரசீக நாட்டின் பழங்கதையான ருஸ்தம் சோஹ்ராப் உலகம் முழுதும் பரவியுள்ள கதை. அதைப் படமாக்கும்போது எவ்வளவு பெருமையாகச் செய்ய வேண்டும் என்பதைப் படாதிபதி சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

படம் எப்படி ஓடுமோ? — இதை எண்ணிப் பார்க்கும்பொழுது ரசிகர்கள் மேற்கண்டவாறு கூறிப் பெருமூச்சு விடவே செய்வார்கள்:

"சோஹ்ராப்! உன் கதி இப்படியா ஆகவேண்டும்?"

"ருஸ்தம்! அழுது என்ன பயன்? நீ வந்த வழி அப்படி!"



அந்தஸ்து மோகம் பிடித்து, அகம்பாவம் கொண்டு வாழ்ந்த செல்வச் சீமாட்டி ராஜலட்சுமி அம்மாளின் ஏக புதல்வன் கோபால். ஓர் ஏழைப் பெண்ணை மணந்த பாவத்துக்காக, கைக்குழந்தையுடன் தன் வீடு தேடி வந்த மருமகளைத் துரத்தியடிக்கிறாள். அவள் படாத பாடும் பட்டுக் குழந்தையை வளர்த்துப் பெரியவனாக்க, அவனும் ஓர் அநாதையைக் காதலித்து மணக்கிறான். அந்த மருமகளின் மூலம் குடும்பம் ஒற்றுமைப்படுகிறது.

ஒரு சினிமாப் படத்துக்குத் தேவையான கண்ணீர், சிறைவாசம், மிடுக்கு, கோபம், நோய், சிகிச்சை ஆகியவைகளெல்லாம் வருகின்றன என்ற காரணத்தால் இந்தக் கதையைப் படமாக்க நினைத்தார்கள் போலும்.

கதாநாயகன், கதாநாயகி இருவரையும் மீறிக்கொண்டு பாட்டி ராஜலட்சுமி அம்மாள் படத்தின் பிரதான பாத்திரமாக விளங்குகிறாள். பணக்காரப் பாட்டியின் அந்தஸ்து மோகம், இமிர், அகம்பாவம் ஆகியவைகளைத் திறமையாக வெளிப்படுத்தக் கண்ணாம்பாளை விட யாரால் முடியும்? நடை, பேச்சு, பாவனை எல்லாமே ஒன்றுக்கு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு பாத்திரத்துக்கு ஒற்றுமையாயிருக்கின்றன.

அசோகன் முரட்டுத்தனத்தோடு சோகத்தையும் சேர்த்துக் கொண்டு நடிக்கிறார். தாயன்புக்குக் கட்டுப்பட்டுத் துடிக்கிறார். ஆனால் சில சமயம் நடிப்பு அதிகமாகி எல்லாமே செயற்கை என்று சொல்லும்படியாகிவிடுகிறது.

இதுவரையில் உப பாத்திரமாகவே நடித்து வந்த சந்திரகாந்தா இப்படத்தில் கதாநாயகி கஸ்தூரியாக நடிக்கிறார். கவர்ச்சியாகத் தோன்றிக் காதலிப்பதோடு கண்ணீர் விடவும் செய்கிறார்; ராஜலட்சுமிப் பாட்டியிடம் நடுநடுங்கிப் பணிவிடைகள் செய்து நல்ல பெயர் வாங்குவதோடு நடிப்பிலும் நல்ல பெயர் வாங்கிவிட்டார்.

நாகேஷின் ஹாஸ்ய வெடிகள் நன்றாயிருக்கின்றன. சிரிக்க வைப்பதோடு ரஸிக்கவும் வைக்கின்றன. மனோரமாவும் அவருடன் நன்கு ஒத்துழைக்கிறார்.

அம்மாவுக்குப் பயந்து நடுங்கும் பிள்ளையாக வந்து நோயாளியாக அவதிப்படும் நேரத்தில் மருமகளின் பணிவிடையில் நெகிழ்ந்து கண்ணீர் உகுக்கும் போது எல்லோரையும் நெகிழ வைக்கிறார் பாலையா.

கண்ணீர் விடும் சிறந்த நட்சத்திரமான ஸ்ரீரஞ்சனியை விட்டால் துயரப்படும் தாய்ப் பாத்திரத்துக்கு வேறு யாரைப் போடுவது? அத்தனை இயல்பாக அவரால் எப்படித்தான் நடிக்க முடிகிறதோ?

இந்தக் கதையைப் படமாக்க எந்த எந்த உணர்ச்சிகள் உதவும் என்று நம்பி இறங்கினார்களோ, அந்த அந்த உணர்ச்சிகளெல்லாம் கைகொடுத்து உதவியிருக்கின்றன; ஆனால் சாயாக இணையாமல் காலைவாரி விட்டிருக்கின்றன. அந்த உணர்ச்சிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து கதைக்கு மெருகூட்டுவதற்குப் பதிலாகத் தனித் தனியே நிற்கின்றன. நன்றாக வைக்க வேண்டிய சாம்பாரில் மிளகாய்ப் பொடியின் பச்சை நெடி அடித்தால் எப்படியிருக்கும்? போட்டிருக்கும் காய் பார்வைக்கு மட்டும் வெந்து, உள்ளுக்குள் வேகாமலிருந்து விட்டால் என்ன ருசியைத் தரும்?

பாடல்களைப் பற்றி எதுவுமே கேட்காதீர்கள்; ஒரே பாடாய்ப் படுத்துகின்றன.

பெண்மையின் இலக்கணமாகத் திகழ்ந்த கஸ்தூரி பல துயரங்களையும் சகித்துச் சிதைந்த குடும்பத்தை ஒன்று சேர்த்தாள்... என்பது திரைக் கதையின் அடிப்படைக் கருத்து. ஆனால் சிதைந்து போன கதையை யாராலும் சீர்ப்படுத்த முடியவில்லையே! சாகக் கிடக்கும் தந்தைக்கு விமான மார்க்கமாக வந்த மருந்தை எடுத்து வந்த மகன் அதை டாக்டரிடம் கொடுக்காமல் வம்பு செய்து ஆத்திரத்தைக் கொட்டுவதும், அதைக் காரணமாக வைத்துக் கொண்டு படத்தை நீட்டுவதும் கொடுமையிலும் கொடுமை! தந்தையிடம் ஒரு மகன் அவ்வளவு ஆத்திரத்தைக் காட்ட வேண்டுமா?

ஒளிப்பதிவில் சிறந்த கலைஞரான ஸ்ரீ தம்பு அற்புதமாகத் தம் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார். நீலகிரியின் சிகரங்களில் மேகங்கள் உறவாடும் காட்சிகளும், தேயிலைத் தோட்டக் காட்சிகளும் மனத்தில் பதிந்துவிட்டன.


பெரிய நடிகர்களைத் தேடி அலையாமல் சாதாரணத் துணை நடிகர்களை வைத்துக் கொண்டே படம் எடுத்து வெளியிட்டிருக்கும் திரு ஜி. என். வேலுமணி பாராட்டுக்குரியவர்தான்.

திரு ரா. கி. ரங்கராஜனின் மூலக் கதை எப்படியோ! திரைக் கதையில் விசேஷமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. இது சத்தியம்!

கண்ணருகில் வைத்து காட்சிகளைப் பார்க்கும் வசதி யமைந்தது

GEVABOX

இந்தியாவில் தயாரிக்கப்பட்டது



கேவாபாக்ஸ் ஒரு பாக்ஸ் காமிரா — ஆனும் முற்றிலும் மாறுதலானது. உதாரணமாக கண்ணருகில் காமிராவை வைத்து காட்சிகளைப் பார்ப்பதற்கேற்ற வசதியைக் கூறலாம். நீங்கள் படமெடுக்க விரும்பும் நபரையோ, காட்சியையோ மிகத் தெளிவாகப் பார்க்கலாம். காட்சி பொருள்களுக்கேற்றவாறு படத்தை அகன்றதாகவோ. அல்லது செங்குத்தானதாகவோ பதியவைக்கலாம்.

இதில் உள்ள விசேஷ அம்சங்கள்

* ப்ளாஷ் பொருத்தக்கூடியது
* எளிதில் பிலிம் இணைக்க முடியும்
* ஷட்டர் ஸ்பீட்கள் : 1/50. 1/100 செகண்டு ,"B" செட்டிங்
* கண்ணருகில் வைத்துப் பார்ப்பதற்கேற்ற வசதி யமைந்ததால் அகன்ற அல்லது செங்குத்தான படங்கள் எடுக்க உகந்தது
* நேர்த்தியான அமைப்பும், உறுதியான முழு உலோகத்திலும் தயாரிக்கப்பட்ட காமிரா
* 120 ரோல் பிலிமுக்கு ஏற்றது



கேவாபாக்ஸ்—எங்கும், எவருக்கும் ஏற்றது

எங்கள் டீலர்களிடம் கேவாபாக்ஸ் காமிராவை ஒரு முறை பாருங்கள்

ALLIED PHOTOGRAPHICS LIMITED
அலைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்
கஸ்தூரி பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு. பம்பாய்-1

PSAPL 6/62 B

கோவை அரசினர் கலைக் கல்லூரி


நான்கைந்து பள்ளிச் சிறுவர்கள், தங்கள் சிறுவர் சங்கத்துக்கான நன்கொடை வசூலிக்க ஒரு பெரிய மனிதரை அணுகினார்கள். அவர் பணத்தை எடுத்துக் கொடுத்தவுடன் அந்த வருங் கோஷ்டியின் தலைவன் தன் சட்டைப் பையிலிருந்து ஓர் அச்சடித்த கார்டை எடுத்து அதில் பணம் கொடுத்த பெரிய மனிதரின் பெயரை எழுதி 'இனி நீங்கள் எங்கள் சங்கத்தின் இணைப்பு அங்கத்தினர்' என்று சொல்லி நீட்டினான். அந்தக் கனவான் யோசித்தவாறு "இந்தப் பதவியின் மூலம் உங்கள் சங்க நிர்வாகத்தில் எனக்கு என்ன உரிமையும் அதிகாரமும் கிடைக்கும்?" என்று கேட்டார்.

"அதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நம் சங்கத்துக்கு நன்கொடை கேட்டு அடுத்த வருடம் நாங்கள் வந்து நிற்கும் போது நன்கொடை கொடுக்கும் உரிமையை இப்போதே பெற்று விட்டீர்கள்" என்று ஒரு போடு போட்டான் பின்னால் நின்று கொண்டிருந்த மற்றொருவன்.

எந்த விதமான பதவியையும் உரிமையையும் எதிர்பார்க்காமல் அவைகளுக்காகக் கவலைப்படாமல், நூறாகவும், ஆயிரமாகவும் வாரி வழங்கித் தங்களூர் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அதன் நூற்றாண்டு விழாவை யொட்டி, சம்பளச் சலுகைகளும், பரிசுகளும், பதக்கங்களும் பெற்றுப் பெருமைப்பட வேண்டும் என்று பல கனவான்கள் பத்து வருடங்களுக்கு முன்பே கோவை நகரில் தங்களுக்கும், தாங்கள் படித்த கல்லூரிக்கும் பெருமை தேடிக் கொண்டு விட்டார்கள்.

ஆம்! கோவையில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கு இப்போது வயது ஏறத்தாழ நூற்றிப் பத்து ஆகிறது.

தனி மனிதனைப் பொறுத்தவரை வயதின் முதிர்ச்சி அவனுடைய தளர்ச்சியைக் குறிக்கிறது. ஆனால் அதே



என். ஸி. ஸி. அணிவகுப்பைப் பார்வையிடுகிறார் திரு காமராஜ்


வயதின் முதிர்ச்சி ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சியையும், திடத்தையும் குறிக்கிறது. எத்தனையோ இன்னல்களையும், கஷ்டங்களையும் தாண்டி, இன்று தன் நூற்றிப் பத்தாவது ஆண்டில் பூரணப் பொலிவுடன் விளங்கும் இந்தக் கல்லூரிக்கு வித்திட்டவர் 1852ம் ஆண்டில் கோவை ஜில்லாக் கலெக்டராகப் பணியாற்றிய இ. பி. தாமஸ் ஆவர். அதைத் தொடர்ந்து பதினாறு வருட காலத்தில் மிடில் ஸ்கூல், ஹைஸ்கூல் பருவத்தைத் தாண்டி 1897ம் ஆண்டில் நடந்த முதல் எப். ஏ. (அதாவது பிற்கால இண்டர்மீடியட்) பரீட்சைக்கு இரண்டே மாணவர்களை அனுப்பி வெற்றி பெறச் செய்து, கல்லூரி அந்தஸ்தைப் பெற்றது.

அன்று பிரின்ஸிபாலாக இருந்து கோவை வாசிகளுக்குக் கல்லூரிப் படிப்பை அறிமுகப்படுத்தியவர் வி. ஜி. ஃபினாக்கன் என்னும் ஆங்கிலேயர்.

இன்று தமிழ் மொழியின் மூலம், பொருளாதாரத்தையும், புவி இயலையும், சரித்திரத்தையும், அரசியலையும், மனோதத்துவத்தையும் முதன் முதலாக மாணவர்களுக்குப் போதிக்க முடியும் என்பதைத் துணிந்து நிரூபித்து மற்றக் கல்லூரிகளுக்கு வழிகாட்டியாக விளங்கும் இந்தக் கல்லூரிக்கு முதல்வராகப் பணியாற்றுபவர் திரு முனியப்பன்.

திரு முனியப்பன் சென்னை ராஜதானிக் கல்லூரியின் பழைய மாணவர். பி. எஸ்ஸி.யிலும், எம். ஏ.யிலும் முதல் இடத்தைத் தட்டிக்கொண்டு போனதோடல்லாமல் ஏராளமான அசல் தங்கப் பதக்கங்களையும் பெற்று அமெரிக்காவில் உள்ள இல்லினாய்ஸ் சர்வ கலாசாலையில் ஆராய்ச்சித் துறையில் எம். எஸ். பட்டத்தையும் முதல் பிரிவில் பெற்று வந்திருக்கும் ஒரு ரசாயனப் பேராசிரியரும் கூட. பத்து வருட காலத்துக்கும் மேலாகச் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பாடம் போதித்த அநுபவத்தை மீண்டும் தொடர்ந்து பெற, கோவைக் கல்லூரியிலும் எம். எஸ்ஸி., எம். ஏ. வகுப்புகள் தொடங்கப்படும் காலம் சீக்கிரமே வராதா என்று

துடித்துக் கொண்டிருக்கிறார். பொறி இயல் கல்லூரிகளும், மனை இயல் கல்லூரியும், விவசாயக் கல்லூரியும், வன இயல் கல்லூரியும் இருக்கும் கோவை நகருக்கு ஆராய்ச்சி வசதியுள்ள போஸ்ட் கிராஜுவேட் வகுப்புகளுள்ள கல்லூரியும் ஒரு மருத்துவக் கல்லூரியும் மிக மிக அவசியம் என்றுதான் தோன்றுகிறது. சென்னை சர்வ கலா சாலையும் அரசாங்கமும் இந்த விஷயத்தில் கொஞ்சம் அக்கறை காட்டலாமே! திரு முனியப்பன் கல்வித் துறையில் கெட்டிக்காரர்




புதிய ஹாஸ்டல் கட்டிடம்

என்று பெயர் வாங்கி விருப்பதோடு நில்லாமல், கண்டிப்புக்காரர் என்ற பட்டத்தையும் மாணவர்களிடம் பெற்றிருக்கிறார். அவருடைய கண்டிப்பு மாணவர்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம்; ஆனால் அதையே அந்த மாணவர்களின் பெற்றோர் விரும்பி வரவேற்பார்கள். அந்தக் கண்டிப்பு மாணவர்களின் பிற்காலக் கட்டுப் பாடும் லட்சியமும் நிறைந்த நல்வாழ்வுக்கு உரமாக அமையும் என்று அவர்களுக்குத் தெரியுமே.

சுமார் ஆயிரத்து நூறு மாணவர்கள் படிக்கும் இந்தக் கல்லூரிக்கு நல்ல ஹாஸ்டல் வசதியும் இருக்கிறது. சமீபத்தில் தமிழ்நாட்டு முதன் மந்திரி காமராஜ் முன்னிலையில் ஹாஸ்டல் வாசத்திற்காகக் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை அமைச்சர் பக்தவத்சலம் திறந்து வைத்திருக்கிறார்.

பிரமுகர்களுடன் மாணவர் தலைவர்கள்



பி. ஏ. பட்டப் பாடத்திற்குத் தமிழில் போதனை அளிப்பதோடு வழக்கமான ஆங்கில மீடியத்தில் பி.எஸ்ஸி., பி.காம். பட்டத்துக்கான பாடங்களும் இங்கு அளிக்கப்படுகின்றன. புகுமுக வகுப்பில் மாத்திரம் மாணவிகளை அனுமதிப்பதில்லை. மற்ற வகுப்புகளில் மாணவிகள் நிறையவே சேர்ந்து படிக்கிறார்கள்.

பி. ஏ. வகுப்பில் தமிழ் மொழி மூலம் விசேஷ பாடங்களைக் கற்கும் சில மாணவர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர்கள் தங்கள் வருங்காலத் திட்டத்தைப் பற்றி ஒன்றும் புரியாத நிலையிலேயே இருப்பதாகத் தான் கவனிக்க வேண்டியிருந்தது. அப்படி



திரு முனியப்பன்

இருக்கும் மாணவர்களுக்கு அரசாங்கம் முன்கூட்டியே உத்தியோக வாய்ப்புகளில் ஏதாவது விசேஷ சலுகைகள் அளிக்க முன்வந்தால்தான் அந்தமாணவர்களுக்கு உற்சாகம் ஏற்பட வழியுண்டு. சம்பளச் சலுகையும் உதவிப் பணமும் கிடைக்கின்றன

என்ற அடிப்படையில் இந்த வகுப்பில் சேரும் மாணவர்களின் உள்ளங்களில் சங்கடமும் கூடவே தோன்றுகிறதே!

கோவைப் பிரமுகர்களில் தொண்ணூறு சதவிகிதத்திற்கு மேலேயே இந்தக் கல்லூரியில் உருவாக்கப்பட்டவர்கள்தான். கோவைக் கிழாரும், ஜி. ஆர். தாமோதரனும், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையும் இந்தக் கல்லூரி வாழ்க்கையில் இணைந்து நின்றவர்கள்தான்.

"முன்பெல்லாம் மாணவர்கள் முதல் வரிசைப் பெஞ்சுகளில் உட்காரப் போட்டி போட்டுக்கொண்டு முன்வருவார்கள். பின் வரிசைகள் காலியாக இருக்கும். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாத மாணவர்களை அந்த ஆசிரியர் உடனடியாகப் பின் வரிசைக்கு அனுப்பி வைப்பார். அந்த மாணவன் சரியாகப் பதில் சொல்லத் தன் முறை எப்போது வரும் என்று காத்திருந்து பதிலையும் சொல்லி ஓடும் ரயிலைப் பிடிக்க வரும் அவசரத்துடன் மீண்டும் முன் வரிசைக்கு வந்து உட்கார்ந்து விடுவான்.

"இப்போதோ வகுப்பில் நுழையும்போதே கடைசி வரிசையைப் பிடிக்க மாணவர்கள் போட்டியிடுகிறார்கள். முன் வரிசை காலியாக இருந்தாலும் ஆச்சரியமில்லை. ஆசிரியர்களும் கேள்விகள் கேட்டு மாணவர்களைத் துன்புறுத்துவதில்லை. காலம் முன்னேறுகிறது. மாணவர்கள் இடம் பின்னேறுகிறது" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார் இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் ஒருவர்.

கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, கல்லூரி வகுப்புகளில் சேர்ந்து எப். ஏ. படிக்காதபோதிலும் அவர் இந்தக் கல்லூரி மாணவர்தான். காரணம் நிறையவே இருக்கிறது. அப்போதெல்லாம் கல்லூரி முதல்வர்கள் கல்லூரிக்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கும் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கும் பாடம் போதிப்பார்கள்! 'உயர்நிலைப் பள்ளியா!... ஹூம்!' என்ற அலட்சியத்துடன் இருக்க மாட்டார்கள்.

கவிஞர் அன்று நான்காவது பாரம் படித்துக்கொண்டிருந்தபோது கல்லூரி முதல்வர் இ.—எச். எலியட் வாரத்துக்கு ஒரு முறை அந்த வகுப்புக்கு ஆங்கிலக் கட்டுரைப் பாடத்துக்கு வருவார். எலியட்டுக்குக் காது கொஞ்சம் மந்தம். உள்ளங்கையைக் குவித்துக் காதருகில் வைத்துக் கொண்டு பிறர் பேசுவதைக் கேட்பார்.

ஒரு தடவை அவர் கவிஞரின் வகுப்பில் வந்து அமர்ந்து மாணவர்களைக் கட்டுரை எழுதச் சொல்லிவிட்டுக் கல்லூரி ரைட்டருடன் பேசிக் கொண்டிருந்தார். சீக்கிரமே கட்டுரையை எழுதி முடித்த ராமலிங்கத்துக்குப் பொழுது போகவில்லை. சிறு வயதிலிருந்தே சித்திரம் வரைவதில் அவருக்கு ஆர்வம் அதிகம். எஞ்சிய நேரத்தை எலியட்டின் படம் வரைவதில் செலவழித்து, நோட் புத்தகத்தில் அற்புதமான கேலிச் சித்திரத்தைத் தீட்டி வைத்தார். அதை முதல்வர் கவனித்தும் விட்டார்.

விளைவு எதிர்பாராதது. எலியட் தம்முடைய குறைபாடுகளைச் சித்திரிக்கும் ஓவியமாக அது இருந்தும்கூட ராமலிங்கத்தின் திறமையைப் புரிந்து பள்ளித் தலைமை உபாத்தியாயரை வரவழைத்துப் பையனின் கலை ஆர்வத்தை வளர்க்க வழி செய்யுமாறு கூறினார்.

இந்தச் சம்பவம் நடந்து பத்து வருடங்களுக்குள்ளாகவே ராமலிங்கத்தின் கலைத் திறமை தலைநகர் தில்லியை எட்டிப் புகழையும் கொண்டு வந்து சேர்த்தது. 1912ம் வருடம் டில்லியில் நடந்த பிரிட்டிஷ் ராஜாவின் முடிசூட்டு விழாவின் போது அவர் வரைந்து அனுப்பி இருந்த ராஜா—ராணி ஓவியத்துக்குப் பரிசாக அவரை நேரில் தர்பாருக்கு வரவழைத்து முப்பது பவுன் பெறுமான தங்கப் பதக்கத்தை ராணியே அணிவித்தார்.

எல்லாம் கல்லூரி முதல்வர் எலியட் அன்று காண்பித்த கருணையில் விளைந்தது. எலியட் மாதிரி மாணவர்களின் விசேஷ ஈடுபாட்டைக் கவனித்து அதில் ஊக்கம் ஏற்பட வகை செய்யும் முதல்வர்கள் அதிக எண்ணிக்கையில் இன்று நாட்டுக்குத் தேவை.

கல்லூரிக் கட்டடங்களுக்கிடையே உள்ள மரத்தடிகளில் கூட்டம் கூட்டமாக நிற்பதோ, தகுந்த காரண மில்லாமல் விடுமுறை தினங்களுக்குப் பிறகு கல்லூரி திறக்கப்படும் தினத்தன்று வராமலிருப்பதோ தவறு என்று குறிக்கும் விதிகள் அமுலில் இருக்கின்றன. இந்தச் சட்டங்கள் ஏதோ தங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக ஒருவேளை இந்தக் கல்லூரி மாணவர்கள் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கலாம். 'இன்று சட்டங்களை அனுசரித்து நடக்கப் பழகுபவன் நாளை சட்டங்கள் இயற்றும் தகுதியைப் பெறுபவனாகிறான்' என்ற ஓர் அறிஞரின் வார்த்தைகளை அவர்கள் மனத்தில் கொள்ளலாமே!

ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் ஹாஸ்டல் மாணவர்களுக்குச் சுதந்திர இரவு. மாலையிலேயே தலா நாலைந்து ரொட்டித் துண்டுகளைக் கொடுத்துவிட்டு ஹாஸ்டல் சமையலறையை மூடிவிடுவார்களாம். திரைப்படங்கள் பார்க்கவோ நண்பர்களைச் சந்திக்கவோ வெளியே விரும்பும் மாணவர்கள் வெளியே ஹோட்டல்களில் சாப்பிட்டு அந்த வாராந்தர 'ப்ரீ நைட்'டை (Free Night) அனுபவிக்கிறார்கள்.

'ஹாஸ்டலை விட்டு வெளியே போக முடியாதவர்கள் தங்கள் வயிறுகளுக்கும் 'ப்ரீ நைட்' என்று சொல்லிப் படுத்துவிடுவார்கள்' என்றார் ஒரு மாணவர்.

சாப்பாட்டில் இருக்கும் கல், காப்பியில் இல்லாத சர்க்கரை, சிறிய அறைகளில் ஓடும் பெரிய மூட்டைப் பூச்சி எல்லாமே, சில மாணவர்களிடம் சிறந்த நகைச்சுவைப் பண்பைத் தோற்றுவித்திருக்கின்றன.

"இந்த ஹாஸ்டல் வட்டாரத்தில் எலுமிச்சம் பழ வியாபாரம் அதிகமாக நடக்கும்" என்று சொன்ன ஒரு மாணவ நண்பர் அவசரமாகத் தொடர்ந்து, "வித்தியாசமாக நினைத்துவிடாதீர்கள்! இங்கு எண்ணெய் ஸ்நானத்திற்கான வசதியில்லை. ஆகையால் எலுமிச்சம் பழச் சாற்றைத் தேய்த்துக் குளிக்கப் பழகிவிட்டோம்!" என்று முடித்தார்.

அறிவுக் கனலே, அருட் புனலே! 32

ராமகிருஷ்ணர் சிந்தித்தார்.

'எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டாலும் சத்தியத்தைத் தியாகம் செய்துவிட முடியுமா? 'இது சத்தியம்—இது அசத்தியம்' என்று ஓர்ந்து பார்த்து சத்தியத்தைக் கொள்ளவும், அசத்தியத்தைத் தள்ளவும் வேண்டியது என்றென்றும் அவசியம்தானே? இன்று சத்தியத்தையும் 'எனக்கில்லை' என்று அம்பாளிடம் அர்ப்பித்து விட்டேனாயின், சத்தியத்தை இழந்த என்னுடைய இந்த அர்ப்பணம் மட்டும் எப்படிச் சத்தியமானதாகும்? இதற்கு முன் ஞானத்தையும் அஞ்ஞானத்தையும், நன்மையையும் தீமையையும், புண்ணியத்தையும் பாபத்தையும், புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் அவளுக்கு என்று அர்ப்பணித்தேனே அதெல்லாம் எப்படிச் சத்தியமாகும்? எனவே....'

''அம்பிகே!.... உனக்கு என்னுடைய சத்தியத்தை மட்டும் தரமாட்டேன். சத்திய — அசத்திய உணர்வை மட்டும் எனக்கென்று வைத்துக் கொள்வேன். இந்தச் சுயநலத்தை, அகம்பாவத்தை மன்னித்துவிடு!'' என்று அம்பிகையாகத் திகழ்ந்த சாரதையிடம் நாத் தழுதழுக்கக் கூறி நமஸ்கரித்தார் ராமகிருஷ்ணர்.

ஆம். சத்தியத்தை யார்தான் துறக்க முடியும்? தமது இயற்கை அநுபவங்களை சாஸ்திர பூர்வமாக நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் பன்னெடுங் காலம்-பன்னிரு ஆண்டுகள்-சாதனை புரிந்த ராமகிருஷ்ணர் அந்த ஆசை பூர்த்தி பெற்ற பின் சாதனைகளை யெல்லாம் அம்பிகைக்கு அளித்து விட்டாலும் சத்தியத்தை மட்டும் அளிக்க முடியவில்லை.

இதில் விந்தை யொன்றும் இல்லை. இன்று பாரதத்தின் துவஜ வாசகமாக விளங்கும் 'சத்தியமேவ ஜயதே' என்ற முண்டக உபநிஷத மந்திரமும் இதைத் தான் சொல்கிறது: ஆப்தகாமர்களான, அதாவது ஆசைகள் பூர்த்தி பெற்ற, முனிவர்கள் மோக்ஷத்தைப் பெற எந்தத் திவ்வியமான மார்க்கத்தில் செல்கிறார்களோ அது சத்தியத்தாலேயே பரப்பப்பட்டு இருக்கிறது என்கிறது அந்த மகாமந்திரம். மோக்ஷம் என்பதைச் சத்தியத்தின் எல்லை நிலம் என்கிறது. ஆக சத்தியம் என்பது 'இது வேண்டும்; இது வேண்டாம்' என்று நிர்ணயித்து ஆசைகளின் பூர்த்தியைப் பெறும் நிலைக்கும் அப்பாற்பட்ட தத்துவம். அதைத் தியாகம் செய்ய யாருக்கும் உரிமையோ, அதிகாரமோ, தகுதியோ இல்லை. 'சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு' என்றார் வள்ளுவர் பெருமான். உலகுக்கெல்லாம் ஒளியூட்ட வந்த ராமகிருஷ்ணர் எப்படி அந்த விளக்கை விலக்க முடியும்?

ஆனால் அம்பிகைக்கு இல்லாமல் தமக்கென ஏதொன்றையோ வைத்துக் கொள்ளவும் அவரால் முடியவில்லை. இதனால் அவர் வேறொன்று செய்தார். அற்புதமான முறையில் பிரச்னைக்குத் தீர்வு கண்டார். தம்மையே பரிபூரணமாக அம்பிகைக்கு அளித்துக் கொண்டு விட்டார்! அப்போது தானாகவே அவரது சத்திய-அசத்தியப் பாகுபாடும் அம்பிகையுடையதாகி விட்டது. தம்மையே தியாகம் செய்தபின் தாம் சத்தியத்தைச் சிந்திப்பதாகவும், சொல்வதாகவும், செய்வதாகவும் அவர் உரிமை கோருவதற்கு இல்லாமல் போய் விடும் அல்லவா? இப்படித் தமக்கென எந்தச் சுமையும் இல்லாமல் இருக்கத்தானே அவர் விரும்பினார்?

கழுத்தில் அணிந்திருந்த மாலைகளைக் கழற்றி ஆற்றோட்டத்தில் விடுவது போல் தமது எல்லா உணர்வுகளையும் கழற்றி அம்பிகையில் சேர்த்தார் ராமகிருஷ்ணர். ஆனால் சத்தியம் என்பது தம்மால் கழற்ற முடியாத ஒன்று; அது உடலுக்கு மேலுள்ள மாலையன்று; தமது இதயமே அதுதான் எனக் கண்டார். இதயத்தை எப்படிப் பிடுங்கிப் பிரவாகத்தில் போட முடியும்? இதனால் தாமே நீரோட்டத்தில் இறங்கி விட்டார். தனித்துத் தண்ணீரில் விட முடியாத திரியை, தீபத்தில் சேர்த்துக் கங்காஸாகரத்தில் விடும்போது தீபத்துடன் திரியும் நீரில் மிதப்பதுபோல், ராமகிருஷ்ணர் அம்பிகை என்ற அன்புப் பெருக்கில் இறங்கியவுடன் அவருள் கொழுந்து விட்ட சத்தியப் பிழம்பும் அம்பிகையின் வசமாயிற்று.

சத்திய ஸ்வரூபமான தேவி என்ற சரஸ் அவரை சத்திய மார்க்கத்திலன்றி வேறெதில் அடித்துச் செல்லும்?

அதனால்தான் அவர் சொன்னதெல்லாம் சத்தியமாயிற்று. ''அம்பிகை என்னைச் சத்தியமற்ற சிந்தனைகளில் செலுத்த மாட்டாள்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லும் திட உணர்வு அவருக்கு உண்டாயிற்று. தம்

ரா. கணபதி

யில் எழும் எந்தக் கருத்தும், எந்த எண்ணமும் சத்தியமானதே என்று கூறும் பெருநிலை அவருக்குக் கிடைத்தது. சிந்தனையிலும், சொல்லிலும் எதைச் சத்தியம் என்கிறோமோ அதையே செயலில் தர்மம் என்கிறோம். இதனால்தான் ராமகிருஷ்ணர் 'நான் அதர்மமாக எதையும் செய்ய அம்பிகை அநுமதிக்க மாட்டாள்' என்று சர்வ நிச்சயமாகக் கூறினார். சத்திய - தர்மமூர்த்தியாகத் துலங்கினார்.

அம்பிகை என்ற அன்பு ஆற்றில் நாம் இறங்கும் முன்பே அவர் இட்டிருந்த உணர்வு ஆரங்களும் இப்போது அலைகளில் அசைந்து வந்து அவரை அடைந்தன. ஆனால் முன்போல் அவற்றை அவர் தமது பளுவாகச் சுமக்க வேண்டியிருக்கவில்லை. ஆற்றில் இறங்குபவனின் ஆடை அவனைப் பற்றியிருக்கும்போதே நீரோட்டம் அதனைத் தன் போக்குப்படி விரித்தும் சுருக்கியும் சுமப்பதுபோல் அவருள் பட்டும் படாமலும் ஒட்டியிருந்த அந்த உணர்வுகளை அம்பிகையே சுமந்தாள். ராமகிருஷ்ணர் இதன் பின் புரிந்த தியாகம், யோகம், தவம்—அவர் பேசிய பேச்சு, பாடிய பாட்டு, ஆடிய ஆட்டம் – அவர் கொண்ட இன்பம் துன்பம், கோபம் சாந்தி எல்லாமும் பேருக்குத்தான் அவருடையனவாயிருந்தன.

சாரதாமணியை ஷோடசியாக உபாசித்ததுடன் தமது சாதனை வாழ்வு முடிந்து விட்டது என்று ராமகிருஷ்ணர் கருதிய போதிலும் அவருக்கு அதன் பின்னும் வேறு சில விருப்பங்களை உண்டாக்கி அநுபவங்களை அளித்தாள் தேவி. சர்வமத சம்மதம் என்ற மகத்தான உணர்வை உலகுக்கு அவர் அளிக்க வேண்டும் என்பதற்காகவே தேவி இவ்வாறு அருளிச் செய்தாள்.

மதுரா நாதர் மறைந்தபின் கல்கத்தாவைச் சேர்ந்த சம்பு சந்திர மல்லிக் என்பவர் ராமகிருஷ்ணருக்கு இன்னொரு மதுரா நாதராக வந்து வாய்த்தார். அவருக்குத் தேவைப்பட்ட சௌகரியங்களைச் செய்து கொடுத்து ஊழியம் புரிந்தார். அவர் பிரம்ம சமாஜத்தில் ஈடுபாடு கொண்டவர். எனவே, கிறிஸ்துவ வேதமாகிய விவிலிய நூலினை அவர் பாராயணம் செய்வதுண்டு. ராமகிருஷ்ணருக்கும் படித்துக் காட்டுவார். அதிலிருந்து ராமகிருஷ்ணருக்குக் கிறிஸ்துவ சம



யத்தில் பற்றுதல் உண்டாயிற்று. தம்மை எதுவும் பற்றக் கூடாது என்று இருந்த போது இப்படி ஒரு பற்றுதல் உண்டானது அம்பிகையின் சித்தமே என நம்பினார் ராமகிருஷ்ணர். எனவே, அவளே அதனைப் பூர்த்தி செய்வாள் என்ற திட புத்தியுடன் தமது பிரயத்தனம் எதுவுமின்றி அவளுடைய கையிலுள்ள கருவியாக இருந்தார். அவர் நினைத்தவாறே நிகழ்ந்தது.

தக்ஷிணேசுவரத்துக் காளி கோயிலுக்குத் தக்ஷிணபாகத்தில் யதுநாத மல்லிக் என்ற மெய்யன்பரின் மாளிகை இருந்தது. ராமகிருஷ்ணர் அந்த இல்லத்தின் தோட்டத்தில் உலவுவதுண்டு. அப்படியே வீட்டுக்குள்ளும் செல்வார். அங்குள்ள வரவேற்பு அறைச் சுவரை பல அருமையான சித்திரங்கள் அழகு செய்யும். அன்னை மேரியின் அரவணைப்பில் அன்பு கசியும் குழந்தை இயேசு அந்த அழகுகளுக்கு அழகு செய்வார். ஒரு நாள் ராமகிருஷ்ணரின் கண்கள் அந்த ஓவியத்தில் ஆழப் பதிந்தன. கருத்தும் அதிலேயே ஊன்றியது; ஊறியது. ஜகன்மாதாவின் மடியில் துவளும் குழந்தையாகிய அவருக்கு அன்னையின் அணைப்பிலிருந்த இயேசுநாதரிடம் தனி ஆகர்ஷணம் இருந்தது பொருத்தம்தானே? ஓவியத்தைப் பார்க்கப் பார்க்க இயேசுநாதரின் எளிமையும், பெருமையும் பொருந்திய வாழ்க்கையை எண்ணி ராமகிருஷ்ணரது உள்ளம் நிரம்பியது. குழந்தையாகத் தோன்றிய தேவகுமாரனை நோக்கினார். ஆம், தேவகுமாரனையேதான் நோக்கினார் — தேவகுமாரனின் சித்திரத்தையல்ல. அன்னையின் வஸ்திரத்தை அளைந்து கொண்டு அந்தக் குண்டுக் கைகள் நெளிந்து வளைந்தன. குழந்தையின் 'கொழு கொழு'வென்ற உடலும் புரண்டது. செல்வனை அணைந்திருந்த தாயின் தூய இருக் கைகளும் அசைந்து பிடியைச் சரிப்படுத்திக் கொண்டன. அவனும் அங்கு உயிரோடு நின்றான் — தெள்ளத் தெளிந்த எளிமையின் பிறப்பிடமாக. இந்தப் பிறப்பிடத்தில் பிறந்த எளிமைதான் அதோ அந்தக் குழந்தை! மாபெரும் உபதேசகரான பின்பும் இந்தக் குழந்தைத் தன்மையை விடாமலிருக்கப் போகும் குழந்தை!

தாய் - சேய் இருவரின் சரீரத்திலிருந்தும் ஒளிக் கற்றைகள் புறப்பட்டு ராமகிருஷ்ணரது இதயத்துக்குள் பிரவேசித்தன. அங்கு ஒரு மூலை முடுக்கின்றி அவை வியாபிக்கத் தொடங்கின. அவ்வளவுதான்! முன்பு ராமகிருஷ்ணரின் இதயத்தில் திரண்டிருந்த ஹிந்து சமயத்துக்கு மட்டுமே உரித்தான உணர்வுகளெல்லாம் வெளியேறுவது போலிருந்தது.

''தேவி, ஜகன்மாதா! என்ன காரியமடி செய்கிறாய்?'' என்று ராமகிருஷ்ணர் கூவினார்.

அவர் கூவியதற்கு ஏதும் பலன் இல்லை.

ஹிந்து மதத்தினர் மட்டுமே வழிபடும் தேவ தேவியரெல்லாம் அவரது நெஞ்சத்திலிருந்து நீங்கிக் கொண்டேயிருந்தனர். அந்த நீக்கத்தைத் தடுத்து அவர்களைத் தம்மில் தேக்க வேண்டும் என்று எந்த ஜகன்மாதாவை அவர் வேண்டிக் கொண்டாரோ, அவளுமே நீங்கத் தொடங்கினாள்.

இயேசு நாதரும், அவர் உபதேசித்த கிறிஸ்துவ சமயமுமே இதயத்தில் வழிய, தம்மைப் பரிபூரணமான கிறிஸ்துவராகவே உணர்ந்தார் ராமகிருஷ்ணர். யதுநாத மல்லிகரின் வீட்டிலிருந்து தியான நிலையில் புறப்பட்டார். அவரால் பவதாரிணியின் சந்நிதிக்குக் கூடச் செல்ல முடியவில்லை. நேரே தமது அறைக்குச் சென்றார்.

மூன்று நாட்களுக்கு இயேசு நாதர் என்ற அன்பு வெள்ளத்தின் அலைகளே அவரது சித்தத்தில் முட்டி மோதிக் கொண்டு சுருண்டு துவண்டன. மூன்றாம் நாள் முடிகிற சமயம், பஞ்சவடியில் உலவிக் கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர். எதிரே எதையோ கண்ட ராமகிருஷ்ணரின் திவ்விய மேனி சிலிர்த்தது. செக்கச் சிவந்த நிறமும், கூம்பிய குவளை போன்ற அருள் நிறைந்த இரு விழிகளும், தோளில் சரியும் முடியும், சற்றே தட்டையான நாசியுமாக ஒரு மனிதர் — மனிதரா, தேவரா?—அவரையே உற்றுப் பார்த்தபடி அவரை நோக்கி வந்து கொண்டிருந்தார். முதல் பார்வையில் 'யாரோ அந்நியர்' என நினைத்தார் ராமகிருஷ்ணர். ஆனால் அவர் அருகில் வர வர 'இவர் யாரோ' அல்ல; 'அந்நியர்' அல்லவே அல்ல; தமக்கு மிக நெருக்கமான ஒருவர் என்ற உணர்வு பொங்கியது.

தெய்விகம் பொழியும் அந்தத் திரு உருவம் ராமகிருஷ்ணரை நெருங்க நெருங்க இதயத்தாலும் அவரிடம் நெருங்கினார் ராமகிருஷ்ணர். அந்த நெருக்கத்தின் அழுத்தத்தில் பிறந்தது போல் அவரது வாய் கூவிற்று. ''இயேசு நாதா! கிறிஸ்து பெருமானே! மகா யோகியே! ஆண்டவனின் அன்புப் புதல்வனே! பரமபிதாவுடன் ஒன்றிய அற்புத மகனே! மானுடரைச் சோகத்திலிருந்து காப்பதற்காகச் சிலுவையில் அறைபட்டு இதயத்தின் இரத்தத்தை

வடித்த தயையின் வடிவமே!'' என்று தீர்க்கமாக விளித்தார் ராமகிருஷ்ணர்.

தயை வடிவம் அவருக்கு மிக அருகில் வந்து விட்டது. அவரைத் தீண்டி விட்டது. தீண்டியதோடல்லாமல் அவரை ஆரத் தழுவிக் கொண்டது. தழுவிய படியே மெல்ல மெல்ல அவருக்குள் நழுவவும் தொடங்கியது.

முன்பு காளியையும், கண்ணனையும், சீதையையும், ராதையையும் எப்படித் தம்மில் கொண்டாரோ அவ்வாறே இப்போது இயேசுநாதரைத் தம்மில் கொண்டார் ராமகிருஷ்ணர்.

நித்திய சத்தியத்தைக் கிறிஸ்துவ சமயத்தாலும் பெறலாம் என்ற நிச்சயத்தைப் பெற்றுவிட்டார் ராமகிருஷ்ணர்.

அதன்பின் தாமாகவே பழைய ஹிந்து தர்மங்கள் அவரிடம் பூக்கத் தொடங்கின.

மதமாற்ற வேலைகள் வெகு தீவிரமாகி ஹிந்து மதத்தைக் கிறிஸ்துவ மதம் விழுங்கிவிடுமோ என்ற நிலை ஏற்பட்ட போது அவ்விதம் நிகழாமல் நமது தர்மத்தைப் பாதுகாக்க அவதரித்தவர் ராமகிருஷ்ணர். இது பாரதத்துக்கு அவரது அவதாரத்தால் கிட்டிய பணியாகும். ஆனால் உலகுக்கு அவர் ஆற்றிய பணியும் உண்டு. மத உணர்வை இழந்து, நூதன விஞ்ஞான மயக்கினால் லௌகிக வாழ்வே வாழ்வு என்று கருதிய உலக மக்களுக்கு மத உணர்வை அளிக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு இருந்தது. அதனால் எல்லா மதங்களின் உண்மையையும் அவர் அநுபவித்து நிரூபிக்கவேண்டியிருந்தது. இதை முன்னிட்டே அவர் கிறிஸ்து சமயத்தின் பெருமையை நுகர்ந்தார்.

முன்பு அவதாரங்கள் நிகழ்ந்த போதெல்லாம் உலக நாடுகள் தொடர்பின்றிச் சிதைந்து கிடந்தன. ஆனால் ராமகிருஷ்ணரின் காலத்தில் உலகம் சுருங்கி விட்டது. எனவே, உலகம் முழுவதற்கும் பணி செய்ய இந்த அவதாரத்திலேயே இயன்றது.

ராமகிருஷ்ணரது அவதாரத்தில் இரு தனிப் பெரும் சிறப்புக்களை அவரது அடியார்கள் கூறுவார்கள். ஒன்று, மனைவியை அருகில் வைத்துக்கொண்டே அவர் பிரம்மசரியம் காத்தது. இரண்டாவது, அவர் ஹிந்து மதத்தை மட்டுமின்றி உலக மதங்கள் யாவற்றையும் அநுபவபூர்வமாக மெய்ப்பித்தது.

புத்தர் பிரானிடமும் ராமகிருஷ்ணருக்கு ஈடுபாடு ஏற்பட்டது. புத்தர் ஆத்மாவைப் பற்றிக் கூறவிடினும்அவர் ஓர் ஆத்ம ஞானி என்றே சொல்வார் ராமகிருஷ்ணர். புத்தர், தர்மம், சங்கம் என்ற மூன்றுமே புரி ஜகந்நாதத்தில் அமைந்துள்ள கண்ணன், சுபத்திரை, பலராமர் ஆகிய மும்மூர்த்தங்கள் என்று அவர் கூறுவார்.

ஜைன சமய ஸ்தாபகரான மஹாவீர தீர்த்தங்கரரின் சிலா வடிவம் ஒன்றைத் தமது அறையிலேயே வைத்துத் தூபம் அளித்துப் பணிந்து வந்தார் ராமகிருஷ்ணர்.

சீக்கியர்களின் பத்து குருமார்களும் ராஜரிஷியான ஜனக மகாராஜனின் பத்துப்பிறப்புக்கள் என அவர் கூறுவார்.

'மின் விளக்கின் ஒளி வெவ்வேறிடங்களில் வெவ்வேறு விதமாயிருப்பினும் அந்த எல்லா ஒளிகளும் ஒரே பொது இடத்திலிருந்துதான் வருகின்றன. இவ்வாறே, வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு நாடுகளில் தோன்றிய மதாசாரியர்கள் யாவரும் ஒரே மூலப்பொருள் பெருக்கும் சைதன்யச் சுடரை வெளிவிட்ட தீபஸ்தம்பங்களாவர்' என்று பிற்காலத்தில் பரமஹம்ஸர் கூறியதுண்டு.

இந்தச் சாதனைகள் யாவும் நிறைவுற்றபின் ராமகிருஷ்ணர் தம்மைப் பற்றிச் சில உண்மைகளையும், ஆத்மிகமான சில பொது உண்மைகளையும் உணர்ந்தார். இவற்றை அவரது மகா சாதனையாகப் பக்தர்கள் கருதுகிறார்கள்.

தாம் உலகுக்கு ஆத்மிக உணர்வை அளிப்பதற்காக அதிகாரம் பெற்று வந்த அவதார புருஷர் என்பதை ராமகிருஷ்ணர் உணர்ந்தார். ஒரு குறிப்பிட்ட சாதனை மார்க்கத்தில் சித்திபெறவே சாதாரண ஜீவர்களுக்குப் பல்லாண்டுகள் பிடிக்கும்போது தம்மைப்போல் சகல மார்க்கங்களிலும் பன்னிரண்டே ஆண்டுகளில் பூரணத்துவம் பெற வேண்டுமானால், தாம் ஜீவகோடியைச் சேர்ந்தவராக இருக்க முடியாது என்று தெளிந்தார்.

இதில் அகம்பாவத்துக்குச் சற்றும் இடமில்லை. ராமகிருஷ்ணரின் எளிய வாழ்வே அவர் எவ்வளவு அகம்பாவமற்றிருந்தார் என்பதற்குச் சான்று. சகல ஜீவராசிகளும் பிரம்மமே என்பதை அறிந்தவர் ராமகிருஷ்ணர். அப்படியிருக்க அந்தப் பிரம்மம் அவதாரமாக வருவதில் அவர் விசேஷப் பெருமிதம் கொள்ள இடமேது?


கர்ம வசப்பட்டவர்களை அதனின்று விடுவித்து வீட்டுக்கு வழிகாட்டத் தாம் பிறந்திருக்கிறோம் என்பதை ராமகிருஷ்ணர் அறிந்திருந்தார். எனினும், விந்தையிலும் விந்தையாக, கர்மத்தின் வசப்படாத தமக்கு என்னவோ நிரந்தரமான மோக்ஷம் என்றுமே கிடையாது

புதிய மர்பி

மாடல் டிஏ/டியு 0552

ஆல் வேவ் 3 பேண்ட் பியனோ கீஸ்விச்

ஏஸீயும் ஏஸீ/டீஸீ



புதிய மர்பி மாடல் டிஏ/டியு 0552 "லாங் லுக்" நேர்த்தியான கைத்திறமையுடனும், ஒப்புயர்வில்லா சிறப்புடனும் உங்கள் இல்லங்களை அலங்கரிப்பதுடன், கேட்கும்பொழுது உங்களை எல்லையில்லா மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. மர்பி ரேடியோ அகில இந்தியா முழுவதும் சிறப்பு வாழ்விற்கு ஓர் சான்று. மர்பி ரேடியோ உங்கள் இல்லங்களை மகிழ்விக்கட்டும்.

இன்றே விஜயம் செய்யுங்கள் அருகில் இருக்கும் மர்பி ரேடியோ வியாபாரியிடம்.



murphy radio

மர்பி ரேடியோ இல்லத்தை மகிழ்விக்கிறது

NATIONAL MRI 1963-

என்பது ராமகிருஷ்ணர் தம்மைப் பற்றி அறிந்திருந்த இரண்டாவது முடிபு. ''ராஜ்யத்தில் ஒழுங்கீனமுள்ள மட்டும் போலீஸ் இருந்துதானே ஆக வேண்டும்?'' என்று அவர் சிரித்துக்கொண்டே கேட்பார். அதாவது எத்தனை அவதார புருஷர்கள் தோன்றினாலும் மக்கள் மாயையிலேயேதான் உழன்று கொண்டிருப்பார்கள்; அப்படி அவர்கள் உழன்று கொண்டிருக்கும் வரையில் அவர்களின் பொருட்டுத் தாம் மீண்டும் மீண்டும் அவதரித்துக் கொண்டேதான் இருக்க வேண்டும் என்று அவர் கண்டார். மற்றவர்கள் வீடு பெற வேண்டும் என்பதற்காகத் தாம் வீட்டினைத் தியாகம் செய்ய வேண்டும் என்று கண்டார். இதைவிடப் பெரிய தியாகம் எது உண்டு?

தமது ராமகிருஷ்ண அவதாரம் எப்போது முடியப் போகிறது என்பதையும் அவர் அறிந்திருந்து கூறி வந்தார்... ''நான் எப்போது எல்லார் கையிலிருந்தும் உணவைப் பெற்று உண்கிறேனோ அப்போது என் முடிவு நெருங்கிவிட்டது என்று தெரிந்து கொள்'' என்று அவர் சாரதாமணியிடம் கூறியதுண்டு. தமது சரீரத்தைச் சுட்டிக் காட்டி, ''இந்தக் கூட்டைத் தேடி எப்போது பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வருகிறார்களோ அப்போது சர்வேசுவரி அதனை எடுத்துக் கொண்டு விடுவாள்'' என்று தம் சீடர்களிடம் அவர் கூறியிருக்கிறார்.

இனி, ஆத்மிகமான அவரது பொது முடிவுகளைப் பார்க்கலாம்:

சர்வமத சம்மதம் என்ற மகத்தான உண்மையை முதன் முதலில் அநுபவ பூர்வமாகச் சொன்ன ஆசாரிய புருஷர் தாமே என்பதை ராமகிருஷ்ணர் அறிந்திருந்தாரோ இல்லையோ, அந்தக் கருத்தையே மிகவும் முக்கியமானதாக வலியுறுத்தி வந்தார்.

ஒரே லட்சியத்தை அடையப் பல பாதைகள் இருப்பது போல் ஒரே ஆத்மாநுபவத்தை அடையப் பல சமயங்கள் உள்ளன என்பார் அவர்.

ஒரே சர்க்கரையினால் ஆன பலவித பணியாரங்களைப் போலவும், ஒரே களிமண்ணால் ஆன பலவித பாத்திரங்கள் போலவும், ஒரே தங்கத்தினால் ஆன பலவிதமான ஆபரணங்கள் போலவும் ஒரே பிரம்மம் பல நாம ரூபங்களில் பல்வேறு மதங்களால் அடையப்படுகிறது என்பார்.

பச்சோந்தி பலப் பல வண்ணங்களை மாற்றிக் கொள்ளும் போது ஒவ்வொரு வண்ணத்தில் மட்டும் அதனைக் கண்டவர்கள் பச்சோந்தியின் நிறம் அந்த



"இவ்வளவு வயசாச்சே! எனக்கு நினைவு தெரிஞ்ச நாளா நான் யாரையும் பத்தி இழிவாப் பேசினது கிடையாது.... என்ன சொல்றேன், சரிதானு?"

"ரொம்ப சரி! எப்பவுமே நீங்கள் உங்களைப்பத்தித்தானே பேசறேள். பிறத்தியாரைப் பத்திப் பேச எங்கே உமக்கு நேரம் இருக்கு?"

ஒன்றுதான் என்று சர்ச்சை செய்வது போன்றதே சமயச்சண்டைகள் என்பார்.

'எந்த மதாநுஷ்டத்தாலும் ஆண்டவனை அநுபவிக்கலாம். கற்கண்டு பணியாரத்தைக் குறுக்காகப் பிடித்துக் கொண்டு தின்றால் என்ன? நேராகப் பிடித்துக் கொண்டு தின்றால்தான் என்ன?' எனக் கேட்பார்.

'குழந்தைகளின் உடல் நிலைகளைப் பொறுத்துத் தாயானவள் ஒன்றுக்குச் சோறும் வியஞ்சனமும் படைக்கிறாள்; இன்னொன்றுக்குக் கஞ்சி கொடுக்கிறாள்;

ஒரு குழந்தை வெண்ணெயும் ரொட்டியும் பெறுகிறது. இப்படித்தான் மனிதர்களின் மன நிலைக்கு ஏற்ப ஆண்டவன் பல மார்க்கங்களைத் தந்திருக்கிறான்'' எனக் கூறுவார்.

இப்படிச் சொல்லும் போதே, ஒவ்வொருவரும் தாம் பிறந்த மதத்தைத்தான் அநுஷ்டிக்க வேண்டும் என்பதையும் குறிப்பால் உணர்த்தி விடுவார். அவதார புருஷராகிய தம்மைப் போல் உலகிலுள்ள எல்லோரும் சகல மதங்களையும் அநுஷ்டிக்க வேண்டும் என்று அவர் ஒரு போதும் கூறியதில்லை. ''ஒவ்வொருவரும் தமது சமயத்தையே பின்பற்ற வேண்டும்'' என வெளிப்படையாகவே அவர் மொழிந்ததுண்டு. பிற மதங்களை யாரும் தூஷிக்கலாகாது என்பதே அவரது உபதேசம்.

பாவ சமாதியில் தோய்ந்து ஒரு நாள் அம்பிகையிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்த போது அவர் மதுர மதுரமாகச் சொன்னார். ''அம்மா! எத்தனை கடிகாரங்கள் இந்த உலகில்? ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணி காட்டுகிறது: 'என் மணிதான் சரி' என்கிறார் ஹிந்து. 'இல்லை, என்னுடையதுதான் சரியானது' என்கிறார் முஸல்மான். 'இடையவே இடையாது. என் கடிகாரம்தான் உண்மையான மணி காட்டுகிறது' என்கிறார் கிறிஸ்துவர். உன்னை யார் பூரணமாக அறிய முடியும், தாயே? ஆனால் ஏதோ ஒரு துளி உன்னைத் தெரிந்து கொண்டு, ஏதேனும் ஒரு நாம ரூபத்தில் உன்னைப் புரிந்து கொண்டு ஒருவன் உள்ளம் உருகி அன்பைக் கொட்டிவிட்டால் நீ அவனை உன்னிடம் சேர்த்துக் கொண்டு விடுகிறாய்'' என்றார்.

என்ன அற்புதமான வாக்கு? இந்த உலகில் ஒரே சமயத்தில் பலவேறு நாடுகளில் பல வேறு மணியாகக் காலம் கோலம் செய்கிறது. அவரவர்களுக்கு அந்தக் காலம்தான் சரி. ஆனால் மற்றவர்களுக்கு அது பொருந்துமா?

உருவமற்ற பிரம்மத்துடன் ஒன்றியிருக்கும் நிலையைச் சொல்லும் அத்வைதம், உருவமுள்ள பிரம்மத்தைப் பக்தி செய்யும் துவைதம் இரண்டும் உண்மையானவையே என்பது ராமகிருஷ்ணரின் சித்தாந்தங்களில் ஒன்று.

உருவமற்ற நீர் உருவமுள்ள பனியாக உறைவது போல் பரம்பொருளே தெய்வங்களாகத் தோன்றுகிறது என உபதேசித்தவர் ராமகிருஷ்ணர்.

'நான் உயரம்; நான் பருமன்; நான் இன்ன குலத்தைச் சேர்ந்தவன்; நான் இன்ன பதவியில் உள்ளவன்' என்பது போன்ற 'நான்' எல்லாம் வெறும் காயான நான். இந்த 'நான்' என்பதை 'நான் ஆண்டவனின் அடிமை; நான் ஆண்டவனின் சகா; நான் ஆண்டவனின் சதி' என்பது போலத் திருத்தி விடும் துவைத பாவனை காயைப் பழுக்க வைக்கிறது. அத்வைதமாக, 'எனது யானும் வேறாக, எவரும் யாதும் யானாக' இருப்பதற்கு இந்தப் பழுத்த 'நான்' தான் முதல் படி. காயைப் பழமாக்கிப் பின்தான் அது இற்றுப் போய் அற்று விழ வேண்டும். — இது ராமகிருஷ்ணரின் அற்புத உவமை. துவைத பாவனையின் முதிர்ச்சியில் தானாக அத்வைதம் பிறக்கும் என்பதே அவர் வலியுறுத்திய கொள்கை.

இப்படிக் கூறிய போதிலும், 'யாவரும் 'தங்களது வேஷ்டி முனையில் அத்வைதத்தை முடிச்சுப் போட்டு வைத்துக் கொண்டிருக்க வேண்டும்' என்று பணித்திருக்கிறார் ராமகிருஷ்ணர்.

ஹிந்து சமயம் என்ற பொதுப் பெயரில் உள்ள பல பிரிவுகளும் ஆண்டவனிடம் இட்டுச்செல்பவையே என்பார். பயங்கரம், பீபத்ஸம் இவை சேர்ந்த வாமாசாரம், வீராசாரம் இவையும் தெய்வத்திடம் அழைத்துச் செல்லும் என்பார். 'ஒரு வீட்டுக்குத் தெரு வாசல் வழியே வரலாம்; புறக்கடை வழியாகவும் வரலாம் அல்லவா? இவை அசுத்தமான புறக்கடை வழிகள். நீங்கள் அந்த வழியில் செல்ல வேண்டும் என நான் சொல்ல வில்லை. ஆனால் அவ்வழியில் வருபவர்களைத் தூஷிக்காதீர்கள்' என உபதேசித்தார்.

கர்மம், பக்தி, ஞானம் யாவற்றையும் ராமகிருஷ்ணர் ஒப்புக் கொண்ட போதிலும் பொதுவாக உலக மக்களால் கர்மத்திலிருந்து விடுபட முடியாது; எனவே அவ்வழியேதான் அவர்கள் உய்ய வேண்டும் என்ற முடிவையும் கண்டிருந்தார்.

''வேலைக்காரி தனது யஜமான் வீட்டில் சகல காரியங்களையும் செய்கிறாள். அந்த வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்கிறாள். பாத்திரம் பண்டங்களை யெல்லாம் பார்த்துப் பார்த்து ஜாக்கிரதை செய்கிறாள். அந்த வீட்டுக் குழந்தைகளைக் குளிப்பாட்டி, அவற்றுக்கு உணவூட்டிப் பராமரிக்கிறாள். குடும்பத்து உறவினரிடமும், நண்பர்களிடமும் அன்புடன் பழகுகிறாள். குடும்ப நலனுக்காக அவர்களில் சிலருடன் சண்டையும் பிடிக்கிறாள். இவ்வளவெல்லாம் செய்தாலும் அவள் தனக்கென்று வேறொரு வீடு இருக்கிறது

என்பதை மறப்பதில்லை. இதே போல் தான், சம்சாரியே! நீயும் உலகத்தில் இரு: உன் குடும்பத்துக்காகக் கடமையைத் தவறாமல் செய்: ஆனால் உன் இதய அந்தரங்கத்தில் இந்தக் குடும்பம் உன்னுடையதல்ல — அல்லது நீ இந்த குடும்பத்தவனல்ல என்பதை மறவாதே. மோக்ஷ சாம்ராஜ்யம்தான் உன் இருப்பிடம் என்பதை மறவாதே'' என உபதேசித்தார் ராமகிருஷ்ணர்.

சர்வ மத சம்மதத்தை அடிப்படையாகக் கொண்டு அகில உலக ஸ்தாபனம் ஒன்று எழப் போகிறது என்பது ராமகிருஷ்ணர் அறிந்திருந்த உண்மைகளில் இன்னொன்று. இன்று ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் இல்லாத பெரிய தேசம் ஏதேனும் உண்டோ?

கடைசிப் பிறப்பை அடைந்த பல உத்தம ஜீவர்கள் தம்மைத் தேடி வரப் போகிறார்கள் என்பதையும் ராமகிருஷ்ணர் அறிந்திருந்தார்.

அப்படிப் பலர் வரவும்தான் செய்தார்கள். ஆனால் ஆயிரம் ஆயிரம் தாராகணங்கள் உதித்தும் தானென்ன? பூர்ணிமை நிலவு பிறந்தால் அல்லவா இருள் நீங்கும்? பூர்ணிமை நிலவான நரேந்திரனுக்காகத்தான் காத்துக் கிடந்தார் ராமகிருஷ்ணர். (தொடரும்)

மேலே: சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடந்த கூட்டத்தில் காலஞ்சென்ற கவி ச. து. சுப்பிரமணிய யோகியார் அவர்களது குடும்பத்தாருக்கு எண்ணாயிரம் ரூபாய் நிதியைச் சென்னை முதன் மந்திரி காமராஜர் வழங்கினார். இவ்வைபவத்துக்கு டாக்டர் பி. நடராஜன் தலைமை வகித்துச் சிறப்பித்தார். எஸ். டி. எஸ். யோகியாரின் கவிதைத் தொகுதி 'தமிழ்க் குமரி'யைத் திரு ஆர். வேங்கடராஜுலு வெளியிட்டார்.



இடது: ஆகஸ்டு மாதம் 23ந் தேதியன்று அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார் அவர்களுக்கு மகாராஷ்டிர ராஜ்ய நிதி அமைச்சர் திரு எஸ். ஜி. பார்வே அவர்கள் தலைமையில் ஸ்ரீ ஷண்முகானந்த சபையின் சார்பில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. இந்தப் பாராட்டு விழாவில் பம்பாயிலுள்ள சுமார் ஐம்பது ஸ்தாபனங்களுக்கு மேல் கலந்து கொண்டு விழாவை வெற்றிகரமாக நடத்த உதவின.

கடைசிப் படம்: ஆகஸ்டு மாதம் 22ந் தேதியன்று பம்பாய் ராஜ்ய கவர்னர் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் அவர்கள், ஏககாலத்தில் மூவாயிரம் ரஸிகர்கள் உட்கார்ந்து ரஸிக்கும்படியான ஷண்முகானந்த சபையின் பெரிய கட்டடத்தைக் குத்து விளக்கேற்றித் திறந்து வைத்தார்கள். கவர்னருக்கு அருகில் நிற்பவர்தான் பம்பாய் ஷண்முகானந்த சபையின் தலைவர் ஸ்ரீ டி. வி. ராமாநுஜம்.





மேற்கிந்தியத் தீவின் வெற்றி

இங்கிலாந்தில் லீட்ஸ், ஓவல் டெஸ்டுகளில் மேற்கு இந்திய கிரிக்கெட் குழுவினருக்குக் கிடைத்த வெற்றியால் அவர்களுக்கு விஸ்டன் கோப்பை உறுதியாகிவிட்டது. இந்த வெற்றிக் குதூகலத்தை மேற்கிந்தியத் தீவு முழுதும் கொண்டாடுகிறது; காப்டன் வோரலை 'கிங்ஸ்டன் நகர சுதந்திர மனிதன்' ஆக்கிக் கௌரவிக்கிறது. கிரிக்கெட் ஆட்டத்தில் நிஜமாகவே மேற்கிந்தியக் கிரிக்கெட் குழு இங்கிலாந்தை முற்றுகையிட்டுவிட்டது. மேற்கிந்தியத் தீவு ஆட்டக்காரர் ஹன்ட் முதல் டெஸ்டிலும் கடைசி டெஸ்டிலும் சதம் போட்டது மறக்க முடியாததல்லவா?

பிரிட்டிஷ் கார்பியன் தீவிலுள்ள பார்படாஸ், பிரிட்டிஷ் கினி, ஜமைக்கா, டிரினிடாட்டில் ஆகிய நான்கு பிரதேசங்களிலுமிருந்து கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அநேகமாகச் சனிக்கிழமை மத்தியானத்தில் மட்டுமே மேற்கிந்தியத் தீவினர் ஆடுவார்களாம். சமீப காலமாக ஞாயிற்றுக் கிழமைகளிலும் விளையாடத் தொடங்கியிருக்கிறார்கள்.

பார்படாஸ் தீவில் சுமார் இரண்டு லக்ஷம் மக்கள் வசிக்கிறார்கள். இங்கே கிரிக்கெட் வேரூன்றி யிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மூன்று பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களான வால்காட், வோரல், வீக்ஸ் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தான். இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்டுகளில் அனைவரது மனத்தையும் கவர்ந்த சாபர்ஸும் பார்படாஸைச் சேர்ந்தவர். இவருக்கு ஆஸ்திரேலிய ஆட்டக்காரரான ஹார்வியைச் சமானமாகக் கூறலாம். இவர் இப்பொழுது இடதுகையினால் கூக்ளியாகப் பந்தை வீசுவது பாட்ஸ்மென்களுக்கு ஆபத்தாக இருக்கிறது. பிரபல பந்து வீச்சு நிபுணர் கிரிப்பித்தும் இந்தத் தீவைச் சேர்ந்தவர்தான்.

டிரினிடாட்டில் குவீன்ஸ்பார்க் பிரபல கிரிக்கெட் கிளப்பாகத் திகழ்கிறது. இங்குதான் டெஸ்ட் மாட்சுகளெல்லாம் நடைபெறும். 1956ம் வருஷம் இந்தக் கிளப் நூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியது என்றால் அதன் பெருமையை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

'உலகத்தில் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்த 'ஆல் ரௌண்டர்' யார்?' என்று கேட்டால் உடனே 'காரி கோமஸ்' என்று தயங்காமல் பதிலளித்து விடுவார்கள். அவர் இந்த டிரினிடாட் பிரதேசத்தைச் சேர்ந்தவர். டிரினிடாட் சர்க்காரில் கான்ஸ்டன்டைன் மந்திரி பதவி வகித்திருக்கிறார் என்றால் கிரிக்கெட் ஆட்டத்துக்கு அவர்கள் அளித்துள்ள கௌரவம் நன்கு புரிகிறது.

ஜமைக்கா 'கறுப்பு பிராட்மன்' என்று புகழ் பெற்ற ஜார்ஜ் ஹெட்லி பிறந்த இடம். சபீனா பார்க் இங்குள்ள பிரபலமான கிரிக்கெட் மைதானம்.

பிரிட்டிஷ் கினியின் தலைநகரான ஜார்ஜ் டவுனில் பார்டா கிளப் மிகப் பழமையானதும், அருமையானதும் அழகு படைத்ததுமான கிரிக்கெட் மைதானம்.

சமீபத்தில் நம் நாட்டில் எம். ஸி. ஸி. கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் வந்து ஆடியிருக்கிறார்கள். நம் நாட்டு ஆட்டக்காரர்களுக்கு விரைவான பந்து வீச்சுக்காரர்களின் பந்தைத் தேக்குவதில் மேலும் பயிற்சி யடைவதற்காக மேற்கிந்திய பந்து வீச்சு நிபுணர் ஹாலே வரவழைக்க விருக்கிறார்கள்.

மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர் இந்தியாவுக்கு வந்திருந்தபோது இந்தியக் கோஷ்டியுடன் ஆடியது நினைவிருக்கும். பம்பாயிலும் டில்லியிலும் நடந்த டெஸ்ட்களில் ஆட்டம் 'டிராவா'யிற்று. இரண்டாவது கான்பூர் டெஸ்டில் இந்தியாவுக்குத் தோல்வி கிடைத்தது. மூன்றாவது கல்கத்தா டெஸ்டில் இந்தியா இன்னிங்க்ஸ் தோல்வி யடைந்தது. சென்னையில் நடந்த நான்காவது டெஸ்டில் மறுபடியும் தோல்வி. இந்தியா இப்படிப் படு தோல்வி யடையக் காரணம் மேற்கிந்திய கிரிக்கெட் குழுவில் ஹால், கில்கிரைஸ்ட் போன்ற விரைவாகப் பந்தை வீசும் திறமையாளர் இருந்தனர். அவர்களது பம்பர்களையும் பீமர்களையும் இந்தியக் கோஷ்டியினரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மேற்கிந்தியக் கிரிக்கெட் குழுவில் பதினொரு ஆட்டக்காரர்களுமே நன்கு பந்தையடிக்கக் கூடியவர்கள். பந்தைத் தேக்குவதில் நெருப்பாக விளங்குபவர்கள். ஒவ்வொரு பந்தைத் தேக்கவும் அவர்கள் 'உயிரை'க் கொடுத்து ரன் ஏற விடாமல் தடுத்தது அனைவருக்கும் நினைவிருக்கும். கன்ஹாய் பந்தை யடிப்பதிலும், விக்கெட்டைக் குறிபார்த்துப் பந்தைத் தேக்கி எறிவதிலும் அசகாய சூரராயிருந்தார். இப்படிப் பலவிதத்திலும் சிறந்து விளங்கிய மேற்கிந்தியத் தீவுக் கோஷ்டிக்கு இங்கிலாந்திலும் இப்பொழுது மாபெரும் வெற்றி கிட்டியதில் அதிசயமில்லை. — குண்டுமணி

பொன் விலங்கு



முப்பத்தாறாவது அத்தியாயம்

நெஞ்சின் ஆழத்தைத் தொடுகிற அந்தப் பார்வையில் அவளுக்குக் கட்டுப்பட்டான் சத்தியமூர்த்தி. சில விநாடிகளுக்குப் பின் அவளுக்கு மறுமொழி கூறியபோது அவன் மனம் மிகவும் நெகிழ்ந்திருந்தது.

''சத்தியமாக மட்டுமின்றி நித்தியமாகவும் நீ என் மனத்தில் தங்கியிருப்பாய் மோகினி! உன் அம்மா உயிருடன் வாழ்ந்திருக்கும் போதே நீ அநாதைதான். அம்மா போன பின் இப்போதோ நீ இன்னும் நிராதரவாகவும், நிச்சயமாகவும் அநாதையாகி விட்டாய்! ஆனால் இனி நீ அநாதையுமில்லை. உன்னை நீயே அநாதையென்று வருணித்துக் கொள்ளுவதற்கும் இனிமேல் நான் விடமாட்டேன். உடம்பும் முகமும் அழகாயிருக்கிற பெண்ணொருத்திக்குக் கணவனாயிருக்கிற ஆண்மகனே நிமிர்ந்து நடக்கிற இந்த உலகத்தில் இதயமும் அழகாயிருக்கிற உன்னைக் கைப் பிடித்த நான் அதற்காக எவ்வளவோ பெருமைப்படலாம். எவ்வளவோ நிமிர்ந்து நடக்கலாம்.''

''மேளதாளமில்லாமல் சந்தனம் வெற்றிலை பாக்கு இல்லாமல் நடந்து முடிந்துவிட்ட இந்தக் கலியாணத்துக்கு உலகம் மரியாதை செய்யுமா அன்பரே?'' என்று அவள் கேட்ட கேள்விக்குச் சத்தியமூர்த்தி கூறிய பதிலில் ஒரு பெரிய காவியமே உள்ளடங்கியிருந்தது.

''மனத்தின் சந்தோஷமே மங்கல வாத்தியங்களாகவும், பரஸ்பர நம்பிக்கையே அங்கோரமாகவும் - நடைபெறும் காந்தர்வ விவாகங்களைப் பற்றி

மணிவண்ணன்

இதிகாசங்களிலும்காவியங்களிலும் தான் இதுவரை படித்திருக்கிறோம் மோகினி! கொட்டும் அடைமழையில் காரிருளில் வஸந்தசேனையையும், சாருதத்தனையும் போல் மணந்து கொண்டவர்களும் இந்த நாட்டுக் காவியங்களில் தெய்வீகக் காதலர்களாகத்தானே வாழ்கிறார்கள்.''

''யார் அந்தக் காதலர்கள்? அவர்களைப் பற்றி எனக்குக் கொஞ்சம் சொல்லுங்களேன்! உங்களோடு பேசிக் கொண்டிருக்கிற நேரம் வளர வளர நான்

உற்சாகத்தை அடைவதாக உணர்கிறேன். ஜமீன்தாரும் கண்ணாயிரமும் மாமிசக் கழுகுகளாக வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் மனமில்லாமல் போலியாக ஏதாவது சிரித்துப் பேச வேண்டியிருக்கிறது! இன்னும் சிறிது நேரத்துக்கு அந்தப் பாவிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமாகப் போகிறது!''

சத்தியமூர்த்தி மோகினியின் இந்த வேண்டுகோளைக் கேட்டுச் சிரித்தான்.



''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''தன் கணவனிடம் வேண்டுகோள் விடுக்கிற மனைவியை நினைத்தால் சிரிப்பு வராமல் வேறென்ன செய்யும்?''

அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது நர்ஸ் மோகினிக்காக ஒரு கிளாஸ் நிறையச் சாத்துக்குடிப் பழ ரஸத்தைப் பிழிந்து கொண்டு வந்து வைத்தாள். சத்தியமூர்த்தி நர்ஸ் வைத்த இடத்திலிருந்து அந்தக் கிளாஸைத் தன் கையால் எடுத்துச் சிரித்துக் கொண்டே மோகினியிடம் நீட்டினான்.

''முதலில் நீங்கள் கொஞ்சம்....'' என்று வெட்கத்தினால் சிவக்கும் முகத்தோடு அவனை வேண்டினாள் அவள். அந்தக் கிளாஸிலிருந்து சாத்துக்குடி ரஸத்தைச் சிறிது பருகி விட்டுக் கிளாஸை அவளிடம் நீட்டினான் சத்தியமூர்த்தி. அந்த நேரத்தில் ஸ்கிரீன் மறைவுக்கு அப்பால் ஜமீன்தாரும் கண்ணாயிரமும் உட்கார்ந்திருந்த பகுதியில் குமரப்பனுக்கும் வேறு யாருக்குமோ பேச்சுத் தடித்து உரத்த குரல்கள் எழுந்து சண்டை போடுவது போல் ஒலிக்கவே என்னவென்று பார்ப்பதற்காகச் சத்தியமூர்த்தி வெளியிலே எழுந்து வர வேண்டியதாயிற்று.

குமரப்பனும் ஜமீன்தாரும் தான் உரத்த குரலில் வாதாடிக்கொண்டிருந்தார்கள். கழன்று விழுந்து விடுகிறாற் போல் இருந்த ஜமீன்தாரின் உருண்டை விழிகள் கோபத்தினால் சிவந்திருந்தன. மீசை துடிதுடிக்க உரத்த குரலில் ஏதோ கத்திக் கொண்டிருந்தார் அவர். சண்டையைத் தடுக்கவும், வேடிக்கை பார்க்கவும், வார்டு வாசலில் டாக்டர்களும், நர்ஸுகளும், ஆஸ்பத்திரி வேலையாட்களுமாகக் கூட்டம் கூடத் தொடங்கியிருந்தது.

''உங்கள் இஷ்டம் போல் ஆட்டிப் படைக்க இதுவும் குத்துவிளக்கு காரியாலயமில்லை! இது ஆஸ்பத்திரி என்பது நினைவிருக்கட்டும் ஜமீன்தார்வாள்! குத்துவிளக்கு காரியாலயத்தில் வேண்டுமானால் உங்கள் மீசை ஆடும் போதே வேலையாட்களின் கைகால்களும் ஆடும். இங்கே யாரும் உங்களுக்காக அப்படி நடுங்க மாட்டார்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்....'' என்று குமரப்பன் அவரை எதிர்த்துக் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தான்.

ஜமீன்தாரோடும், கண்ணாயிரத்தோடும் சண்டை போட நேர்ந்த காரணத்தைக் குமரப்பனிடம் அருகில் நெருங்கி விசாரித்தான் சத்தியமூர்த்தி. சத்தியமூர்த்தி அதை எவ்வளவுக்கு எவ்வளவு மெதுவான குரலில் விசாரித்தானோ அவ்வளவுக்கு அவ்வளவு இரைந்த குரலில் குமரப்பனிடமிருந்து பதில் வந்தது.

''அப்போதிருந்து நானும் பார்த்துக் கொண்டே இருக்கிறேனடா சத்தியம்! பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? பத்து நிமிஷத்துக்கு ஒரு தரம் அந்த நர்ஸைக் கூப்பிட்டு, 'உள்ளே பேசிக்கொண்டிருக்கிற ஆளை வெளியே போகச் சொல்லு' என்று இவர்கள் தூண்டிக்கொண்டிருக்கிறார்கள். 'வார்டுலே கட்டுக் காவல் ஒன்றுமே கிடையாதா? கண்ட காலிப் பயல்கள் எல்லாம் உள்ளே போய்ப் பேசிக்கிட்டிருக்கானுகளே! கேள்வி முறை இல்லையா?' என்று இதோ அமர்ந்திருக்கிறார்களே, இந்த மேன்மை தங்கிய ஜமீன்தாரவர்கள் சிறிது நேரத்திற்கு முன் என் காதிலும் விழும்படி கண்ணாயிரத்திடம் திருவாய் மலர்ந்தருளினார். அதுவரை பொறுமையாயிருந்த என்னால் உன்னையும் என்னையும் 'காலிப் பயல்களாக' வருணித்ததைக் கேட்ட பின்பும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. 'காலிப் பயல்' என்று இன்னொருவனைத் திட்டவேண்டுமானாலும் அப்படித் திட்டுகிறவனுக்கும் அதற்கு ஒரு யோக்யதை வேண்டுமல்லவா?'' என்று குமரப்பன் ஆத்திரமாகவும், ஆவேசமாகவும் கூறிய பதில் சத்தியமூர்த்திக்கும், உட்புறம் மோகினிக்கும் வெளியே கூடியிருந்த கூட்டத்துக்கும், ஜமீன்தாருக்கும், கண்ணாயிரத்துக்கும், எல்லாருக்குமே தாராளமாகக் கேட்கிற இடி முழக்கக் குரலாக இருந்தது.

''ஓகோ! ஜமீன்தார் அவர்கள் அவசரமாக உள்ளே போய்ப் பார்த்துப் பேசவேண்டும் போலிருக்கிறது. நாம் அதற்குக் குறுக்கே நிற்பானேன்? மறுபடியும் மாலையில் வந்து பார்த்துக் கொள்ளலாம். ஒரு நிமிஷம் இரு. உள்ளே போய்ச் சொல்லிக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று அலட்சியமாக ஜமீன்தார் பக்கம் ஒரு பார்வை பார்த்த பின் குமரப்பனிடம் கூறிவிட்டுச் சத்தியமூர்த்தி உட்புறம் சென்றான். படுக்கையில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்த மோகினி கன்னத்தில் கையூன்றியபடி மெல்ல அழுதுகொண் டிருந்தாள். அவன் பரிவுடன் அவளருகே சென்று கேட்டான்: ''ஏன் அழுகிறாய் மோகினி?''

''சற்று முன் வெளியே உங்கள் நண்பர் இரைந்து பேசியதெல்லாம் காதில் விழுந்தது. நான் என்ன செய்வேன்? எனக்கு மிகவும் வேண்டியவர்கள் என் அருகில் அதிக நேரம் இருக்க முடியவில்லையே என்பதை நினைத்தேன். அழுகை வந்துவிட்டது. நான் பெரிய பாவி. என்னைச் சுற்றி ஒரே நரகமாக இருக்கிறது....''

''கவலைப்படாதே மோகினி! அந்த நரகத்தினிடையே நீ ஒரு சொர்க்கமாக இருக்கிறாய். உன்னை மறுபடியும் நான் மாலையில் வந்து பார்க்கிறேன்.''

''நீங்கள் மறுபடியும் வந்து பார்க்கப் போகிறீர்கள் என்ற ஞாபகத்திலேயே மாலைவரை கவலை இல்லாமல் கழிந்து விடும். மாலையில் வரும்போது சிறிது நேரத்துக்கு முன் நீங்கள் கூறினீர்களே; அந்த வஸந்தசேனையையும், சாருதத்தனையும் பற்றி எனக்குச் சொல்ல வேண்வேண்டும்.''

ஆகட்டும் என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தான் சத்தியமூர்த்தி.

''இன்னொரு காரியமும் நீங்கள் எனக்காகச் செய்ய வேண்டும்.''

''என்ன காரியமோ?''

''இன்று வெள்ளிக் கிழமை. கடந்த மூன்று வருஷங்களாக ஒரு வெள்ளிக் கிழமைகூடத் தவறாமல் மீனாட்சி கோவிலில் அர்ச்சனை செய்துகொண்டு வருகிறேன். இன்றைக்கும் அர்ச்சனை



எழுதுவதில்
கவர்ச்சியும்
இன்பமும்
பெறுவதற்கு
Iris
INKS
ஐரிஸ் இங்குகள்.
5 மங்காத
நிறங்களில்
PERMANENT
ROYAL BLUE
Iris
RECHLAB'S
Iris
INK
MADE IN INDIA
ரிஸர்ச் கெமிகல் லாபரட்ரீஸ்
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை-20
550, எட்டாவது மெயின் ரோடு,
மல்லேஸ்வரம், பெங்களூர்-12


முகப்
பருக்களை
லிச்சென்ஸா
போக்கும்
Lichensa
● 108 நாடுகளிலுள்ள
டாக்டர்களால்
குறிப்பிடப்படும் மருந்து
● பிரபலமான எல்லா
கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்
DZ-1676 TM


EYETEX
REGD.
மீன் விழியோ!
மான் விழியோ
ஐடெக்ஸ்
கண் மை
விழியோ!
அரவிந்த் லாபரட்டரீஸ்
தபால்பெட்டி 1415 ... மதறாஸ்-17.

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹேயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட். K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/63

முறை நிற்காமல் நடந்துவிட வேண்டும். சங்கீத விநாயகர் கோவில் தெருவில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் முன்பு அடிக்கடி உங்களிடம் அனுப்புவேனே அந்தப் பையன் இருப்பான். அவனைப் பார்த்து அவனிடம் ஒரு ரூபாய் பணம் கொடுத்து அர்ச்சனையை நடத்திவிடச் சொல்ல வேண்டும்.''

''அதற்கென்ன? கட்டாயம் சொல்லி விடுகிறேன். என் கேள்வியைத் தப்பாக நினைத்துக் கொள்ளாவிட்டால் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமென்று நினைக்கிறேன்....'' என்று சொல்லித் தயங்கினான் சத்தியமூர்த்தி.

''என்ன கேட்கப் போகிறீர்கள்? நீங்கள் எதைக் கேட்டாலும் தப்பாக நினைத்துக் கொள்ளப் போவதில்லை.''

''எதை நோக்கமாக வைத்து, எந்த விளைவை எதிர்பார்த்து இந்த அர்ச்சனை, பிரார்த்தனை எல்லாம் செய்கிறாய் மோகினி?'' சிரித்துக்கொண்டே அவன் கேட்ட இந்தக் கேள்விக்கு அவள் உடனே பதில் சொல்லிவிடவில்லை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள். மெல்லப் புன்னகை புரிந்தாள். பின்பு கூறினாள்:

''என்னுடைய பிரார்த்தனையும், அர்ச்சனையும் நான் எதிர்பார்த்ததை விடப் பெரிய சௌபாக்கியத்தை எனக்குக் கொடுத்திருக்கின்றன. உங்களைப் போன்ற உத்தமரை அடைவதற்கே நான் முன் பிறவியில் தவம் செய்திருக்க வேண்டுமே....?'' என்று சொல்லி மறைய முயலும் நாணமும் மலர விரியும் புன்னகையும் நிறைந்த முகத்தால் அவனைப் பார்த்துக் கை கூப்பினாள் அவள். ஆஸ்பத்திரியில் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்படுமுன் 'தன் வீட்டிற்கே தான் இன்னும் போகவில்லை என்றும் மல்லிகைப்பந்தலிலிருந்து வந்து இறங்கியதும் நேரே ஆஸ்பத்திரிக்கு அவனைப் பார்க்கவே வந்ததாகவும்' பேச்சுப் போக்கில் அவள் குறிப்பிட நேர்ந்தது. அதற்காகவும் அவன் அவளைச் செல்லமாகக் கோபித்துக்கொண்டான்.

''உங்கள் ஞாபகத்தில் எத்தனை பெரிய இடத்தை நீங்கள் எனக்கு அளித்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்து எனக்கே பயமாக இருக்கிறது. நான் அவ்வளவு பாக்கியம் செய்திருப்பவளா? சொந்த வீட்டிற்குப் போகாமல் பெற்றோரையும், உடன் பிறந்த தங்கையையும்கூடப் பார்க்காமல் நேரே என்னைத் தேடிக்கொண்டு ஓடி வந்திருக்கிறீர்களே? இப்படிச் செய்யலாமா நீங்கள்?''

''என்ன செய்வது? காரணம் புரியாமலே சிலரிடம் நம் மனம் ஒன்றி விடுகிறது. அந்தச் சிலருக்காக நாம் தவிக்கிறோம், அழுகிறோம், ஏங்குகிறோம். சுற்றமும் சூழலும் படைத்து வைத்து விட்ட உறவுகளைக் காட்டிலும் இதயமும் உணர்வும் புரிந்துகொள்ளுகிற உறவுகள் அதிக வலிமை அடைந்து விடுகின்றன. ஏதோ விட்ட குறை, தொட்ட குறை என்கிறார்களே அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. மூன்று வருடங்களாக அர்ச்சனையும், பிரார்த்தனையும் செய்வதாகச் சொல்கிறாயே, மூன்று வருடங்களுக்கு முன் உன்னைப்போல் உடம்பும் மனமும் அழகிய பெண்ணொருத்தி இருப்பதாகவே நான் நினைத்திருக்க முடியாது. என்னைப் போல் உன்னைக் காப்பாற்ற ஒருவன் நடுவழியில் வருவேன் என்று நீயும் எதிர்பார்த்திருக்க முடியாது.

> **பொன் விளைந்த**
>
> **சுற்றமும் சூழலும் படைத்து வைத்து விட்ட உறவுகளைக் காட்டிலும் இதயமும் உணர்வும் புரிந்து கொள்ளுகிற உறவுகள் அதிக வலிமை அடைந்து விடுகின்றன.**

இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்தால் வாழ்க்கையில் சில விஷயங்கள் முன்னும், பின்னும் முடிவும் இல்லாத தனித் தனி ஆச்சரியங்களாக மட்டுமே நிற்கின்றன....''

''ஆச்சரியம்தான்! அந்தக் காலத்தில் ஆரம்ப நாட்களில் 'வழி சொல்ல வருவான் ஒருவன்' என்று தொடங்குகிற பதம் ஒன்றிற்கு அபிநயம் பிடிக்கிறபோதெல்லாம் நான் என் மனத்திற்குள், 'நமக்கு வழி சொல்ல யார் வரப் போகிறார்கள்?' என்று ஏக்கத்தோடு நினைத்துக் கொள்வேன்.''

இதற்குச் சத்தியமூர்த்தி ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். ஆனால் அதற்குள் ஜமீன்தாரும் கண்ணாயிரமும் வார்டின் டாக்டரையும் உடன் அழைத்துக்கொண்டு உள்ளே வந்துவிட்டார்கள். சத்தியமூர்த்தி கண் பார்வையினாலேயே அவளிடம் குறிப்பாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான். வாசலில் வெளிப்புறம்

காத்திருந்த குமரப்பன் மிகவும் கோபமாக இருப்பதற்கு அடையாளமாக வலது கை முஷ்டியைக் குவித்து மடக்கி இடது உள்ளங்கையில் குத்தியபடி, குறுக்கும் நெடுக்கும் உலாவிக்கொண்டிருந்தான்.

''காலிப்பயல்களாம்; காலிப்பயல்கள்! அதைச் சொல்வதற்கு இந்தக் காலிப் பயலுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? குடி, சூதாட்டம், குதிரைப் பந்தயம், முறை தவறிய கேளிக்கைகள், விளையாட்டுக்கள், லீலைகள்—எல்லாம் இந்தக்காலிப்பயல்களிடம்தான் உண்டு. ஒரு தலைமுறையில் பிரான்ஸிலிருந்த 'ப்யூடலிஸ' வாழ்வின் (பிரபுத்துவ வாழ்க்கை) ஊழல்களை நையாண்டி செய்து எமிலி ஜோலாவும், பால்ஸாக்கும் இலக்கியம் எழுதின மாதிரி இந்த நாட்டிலும் இப்படிக் காலிகளை நையாண்டி செய்து யாராவது தைரியசாலிகள் இலக்கியம் படைக்க வேண்டுமடா சத்தியம்!'' என்று இதயம் குமுறும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டே சத்தியமூர்த்தியோடு புறப்பட்டிருந்தான் குமரப்பன். முதலில் அவர்கள் இருவரும் வடக்கு மாசி வீதிக்குள் புகுந்து சங்கீத விநாயகர் கோயில் தெருவுக்குப் போய் மோகினியின் பக்கத்து வீட்டுச் சிறுவனிடம் வெள்ளிக்கிழமை அர்ச்சனை முறையை நினைவுபடுத்திவிட்டு அப்புறம் பேச்சியம்மன் படித்துறைத் தெருவுக்கு வந்தார்கள்.

சத்தியமூர்த்தியின் வீட்டை மாடியிலும் முன் பகுதியிலும் இடித்துக் கட்டிக்கொண்டிருந்ததால் அங்கே தங்குவதற்கு வசதியும் இடமும் மிகக் குறைவாக இருக்கும் போலத் தோன்றியது. குமரப்பன் டவுன் ஹால் சாலையில் இருக்கும் தன் நண்பன் ஒருவனுடைய அறையில் தங்கிக் கொள்வதாகவும், மாலையில் வந்து சத்தியமூர்த்தியை மீண்டும் சந்திப்பதாகவும் கூறிவிட்டுச் சென்றான். சத்தியமூர்த்தி வீட்டுக்குள் நுழைந்தபோது படியிறங்கி எங்கேயோ வெளியேறிக் கொண்டிருந்த தந்தை அவனைப் பார்த்ததும் அவனோடு பேசிக்கொண்டே உள்ளே திரும்பினார். சமையலறை நிலைப்படியில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்த அம்மா மிகவும் இளைத்துத் தளர்ந்து போயிருந்தாள். அவள் பக்கத்தில் வெந்நீர்ப் பை, மருந்துப் பாட்டில்கள், அவுன்ஸ் கிளாஸ் என்று நோயாளியின் சூழ்நிலை உருவாகியிருந்தது. பிள்ளையைப் பார்த்ததும் அம்மாவின் தளர்ந்து வாடிய முகத்தில் மலர்ச்சி பிறந்தது. ''ஏண்டா சத்தியம்; லீவுக்கு வரப்போவதாக ஒரு கடிதாசு கூடப் போடலியே நீ?'' என்று பிள்ளையை வரவேற்று விசாரித்துவிட்டு உட்பக்கம் திரும்பி, ''ஆண்டாள்! சத்தியம் அண்ணன் வந்திருக்குது....காப்பி...போடு'' என்று குரல் கொடுத்தாள். ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து நூல் வேலை செய்து கொண்டிருந்த இன்னொரு தங்கை கலியாணி மெல்ல எழுந்து வந்து அப்பாவை அண்டினாற் போல் நெருங்கி நின்று கொண்டாள்.

''நவராத்திரி விடுமுறை இன்னும் எத்தனை நாள் மீதமிருக்கிறது? இன்னும் ஒரு வாரம் இங்கு இருந்துவிட்டுப் போவாய் அல்லவா? நீ போன தடவை வந்திருந்தபோது லீவுக்கு இங்கே வரப் போவதில்லை என்று சொல்லியிருந்ததாக ஞாபகம். ஏதோ காலேஜ் பையன்களை அழைத்துக் கொண்டு 'சோஷல் சர்வீஸ் காம்ப்' போகப் போவதாகக் கூறியிருந்தாய். 'காம்ப்' போகவில்லையா?'' என்று அப்பா கேட்டார்.

''காம்ப் நேற்றே முடிவடைந்து விட்டது. இன்று காலையில் முதல் பஸ்ஸிற்கு நானும் குமரப்பனும் புறப்பட்டு வந்தோம்...'' என்று தந்தைக்கு மறுமொழி கூறத் தொடங்கிய சத்தியமூர்த்தி குமரப்பன் மதுரையில் பார்த்துக்கொண்டிருந்த குத்துவிளக்கு கார்ட்டூனிஸ்ட் வேலையை விட்டு விட்டதைப் பற்றியும், மல்லிகைப்பந்தலில் வந்து கடை வைத்திருப்பதைப் பற்றியும் தந்தையிடம் தெரிவித்தான். ஆனால் குமரப்பனைப் பற்றி அவன் கூறியவற்றைத் தந்தை அவ்வளவு சுமுகமாக விரும்பிக் கேட்கவில்லை. முகத்தைச் சுளித்து 'உச்சு'க் கொட்டினார்.

''உதவாக்கரைப் பயல்களைப் பற்றியும் பிழைத்து உருப்படத் தெரியாதவர்களைப் பற்றியும் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது? ரொம்பவும் திமிர் பிடித்துப் போய் அவன் இந்த வேலையைச் சரியாகப் பார்க்கவில்லையாம். கண்ணாயிரமும், ஜமீன்தாரும் அவனைச் சீட்டுக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிவிட்டதாகச் சொன்னாங்க.... அவன் ஏதோ கண்ணாயிரத்தையும், ஜமீன்தாரையும் கேவலப்படுத்தற மாதிரிப் படம் எல்லாம் எழுதி அவர்களிடமே கொடுத்தானாமே?''

சத்தியமூர்த்தி தந்தைக்குப் பதில் சொல்லவில்லை. தந்தை கூறியதிலிருந்து குமரப்பன் அந்தக் காரியாலயத்தில் வேலை பார்க்க விருப்பமின்றி அவனாகவே இராஜினாமாச் செய்த உண்மையைச் சற்றே திரித்து மாற்றி ஜமீன்தாரும் கண்ணாயிரமும் தாங்க

ளாகவே அவனைச் சீட்டுக் கிழித்து அனுப்பிவிட்டதாகப் பொய் சொல்லித் திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. தங்களுடைய சொந்தத் திருப்திகளையும் மகிழ்ச்சிகளையும் கூடப் பொய்யிலிருந்து தேடுகிறவர்களை நினைத்து, அவன் மனம் அந்த விநாடியில் பெரிதாக — மிகப் பெரிதாக நையாண்டி செய்து சிரித்தது.

''ஆமாம், நீதான் காலையில் முதல் பஸ்ஸுக்கே வந்துவிட்டதாகச் சொல்லினாயே? வீட்டுக்கு வருவதற்கு ஏன் இவ்வளவு நேரமாயிற்று? பஸ் ஏதாவது தகராறு ஆகி நடு வழியில் நின்றுவிட்டதா?'' என்று தந்தையின் அடுத்த கேள்வி பிறந்தது.

''பஸ் ஒன்றும் தாமதமாகவில்லை.. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் நேரே எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்குப் போய் ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருந்தது. அதனால் நேரமாகி விட்டது'' என்று சுபாவமாகப் பதில் சொன்னான் சத்தியமூர்த்தி.

''அடேடே! ஜமீன்தாரைப் பார்ப்பதற்காகக் கண்ணாயிரம் இன்றைக்கு என்னைக்கூட எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்குத்தான் வரச் சொல்லியிருக்கிறார். ஏதோ குளுகோஸ் டப்பா அது இது என்று சாமான் எல்லாம் வாங்கிக் கொண்டு வரச் சொல்லி ஒரு பெரிய 'லிஸ்டு' கூடக் கொடுத்தனுப்பியிருக்கிறார். நீ வருகிறபோது நான் ஆஸ்பத்திரிக்குத்தான் எதிரே புறப்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்றார் அவன் தந்தை. தன்னுடைய தந்தை ஜமீன்தாருக்கும் கண்ணாயிரத்துக்கும் எடுபிடி வேலையாளைப் போல் அலைந்து கொண்டிருப்பதை அறிந்த சத்தியமூர்த்தியின் மனம் கொதித்தது. அந்தக் கொதிப்போடு கொதிப்பாக இன்னொரு விளைவையும் எதிர்பார்த்தான் அவன். 'என் தந்தை ஜமீன்தாரும் கண்ணாயிரமும் கூப்பிட்டனுப்பியிருக்கிறபடி ஆஸ்பத்திரிக்குப் போகப் போகிறார். அங்கே அவர்கள் என் தந்தையிடம் ''காலையில் உங்கள் பிள்ளையாண்டானும், அந்தத் திமிர் பிடித்த 'கார்ட்டூனிஸ்ட்'டும் இங்கே வந்திருந்தார்கள்'' என்று தொடங்கிக் கோள் சொல்லிக் கோபமூட்டிவிடப் போகிறார்கள். அதைக் கேட்டுக்கொண்டு இங்கே வந்து அப்பா என்னிடம் கூப்பாடு போடப் போகிறார்' என்று மாலையில் நடக்கப் போவதை இப்போதே அவனால் அநுமானம் செய்ய முடிந்தது. 'இத்தனை வயதுக்கு மேல் இப்படிக் கண்ணாயிரத்தைப் போல் மானம் மரியாதை தெரியாதவர்களுக்குக் காரியம் செய்துகொண்டு அலையாதீர்கள்



அப்பா!' என்று தந்தைக்குச் சொல்ல நினைத்து அதைத் தான் சொல்வது பொருத்தமாக இராதென்று தன்னை அடக்கிக் கொண்டான் அவன். தந்தை ஆஸ்பத்திரிக்குப் போன பின்பு அம்மா அவனோடு நிறையப் பேசிக் கொண்டிருந்தாள். ''இந்த வயதில் ரொம்ப அலைகிறார். நல்லவர்கள் — கெட்டவர்கள் தெரியாமல் எல்லோரோடும் அலைகிறார்'' என்று அம்மா அவனிடம் தந்தையைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டாள்.

பகல் உணவுக்கும் தந்தை வரவில்லை. சத்தியமூர்த்தி தனியாகவே சாப்பிட்டான். உணவுக்குப் பின் நடுக் கூடத்துத் தூணில் சாய்ந்துகொண்டு நவநீத கவியின் ''சப்த சமுத்திரம்'' என்ற புதிய கவிதைத் தொகுதியைப் படித்துக்கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. அந்தக் கவிதைத் தொகுதியில் பெண்களின் ஏழு பருவ வாழ்க்கையையும், ஏழு தனித் தனிச் சமுத்திரங்களாக உருவகப்படுத்தி மிக அழகாகப் பாடியிருந்தார் நவநீத கவி. சந்தங்களிலும், சப்த அழகிலும் கூட இந்தப் பெயர் நூலுக்குப் பொருத்தமாக வரும்படி நவநீத கவி இரட்டை அர்த்தத்தில் இந்தப் பெயரை வைத்திருந்தார். கூடத்தின் இன்னொரு பக்கம் அம்மாவும் தங்கைகளும் பல்லாங்குழியில் சோழி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அப்பா யாரும் எதிர்பாராத விதமாகக் கோபத்துடனும், கண்ணாயிரத்துடனும் வீட்டின் உள்ளே நுழைந்தார்.

' காலச் சுவரில் ஓவியமாய் — என்றும்
கரையா நினைவிற் காவியமாய்
நீலக் கடலிற் பேரலையாய் — மனம்
நீந்தித் தீராப் பெருவெளியாய் '

என்று கண் பார்வையில் பட்டுக் கருத்தைக் கவர்ந்து கொண்டிருந்த 'சப்த சமுத்திர' வரிகளில் அவன் ஈடுபட்டிருந்தபோது. ''ஏண்டா! நீ செய்யறதெல்லாம் உனக்கே நல்லா யிருக்கா...? கண்ணாயிரமும், ஜமீன்தாரும் ரொம்ப வருத்தப்பட்டாங்க'' என்று அப்பா கூப்பாட்டுடன் வந்தார். (தொடரும்)

மாதர் உலகம்

ஓஹோ, மாமியார்களே!



அனுசூயா

"நான் நேற்று பாமா வீட்டுக்குப் போயிருந்தேன். அவள் அப்போது செய்து கொண்டிருந்ததைப் பார்த்தால்...." என்று உஷா மேலே சொல்லாமல் நிறுத்தினாள்.

"என்ன செய்துவிட்டாள்? மாமியாருக்கு எண்ணெய் தேய்த்து விட்டுக் கொண்டிருந்தாளா?" என்று மஞ்சுளா திகைப்புடன் கேட்டாள்.

"அப்படி ஒன்றும் பாபகரமான காரியம் செய்து விடவில்லை."

"பின்னே தென்னை மரத்திலேறித் தேங்காய் பறித்துக் கொண்டிருந்தாளா?"

"ஏன் மஞ்சு! உனக்கு மற்றவர்கள் செய்கிறதைப் பற்றிச் சாதாரணமாகவே நினைத்துப் பார்க்கத் தோன்றாது போலிருக்கிறது" என்று முக்தா கடிந்தாள்.

"அவள் ஹாஸ்டலில் இருந்தபோது தோட்டத்திலிருந்த ஒரு தென்னை மரத்தில் பாதி ஏறிவிட்டாள். அப்போது வார்டன் வந்துவிட்டார். அவர் தலை மறைகிறவரைக்கும் அப்படியே இருந்துவிட்டு அப்புறம் இறங்கினாள். அதனால்தான் அப்படிக் கேட்டேன். அவள் ஒரு குரங்கு மாதிரி..."

"ஆமாம், உங்கள் வீட்டுக் குரங்கு இரட்டைப் பின்னல் போட்டுக்கொண்டு டாக்ஸியில் ஏறி வரும் இல்லையா?" என்று கேட்டுக் கொண்டே பாமா வந்தாள்.

"ஒன்றுமில்லை பாமா! நீ நேற்று பழைய பேப்பர் வாங்குகிறவனிடம் புத்தம் புதுப் புத்தகங்களைப் போட்டுக் கொண்டிருந்தாயே அதைப் பற்றிச் சொல்ல வாயெடுத்தேன்..." என்று உஷா சமாதானம் கூறினாள்.

"என்ன, என்ன புத்தகம்? என்னிடம் சொன்னால் நான் வாங்கிக் கொண்டிருந்திருப்பேனே!" என்று முக்தா தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டே கூறினாள்.

'என்னமோ புத்தகங்கள்! 'இல்லற விஞ்ஞானம்', 'ஓஹோ கல்யாணப் பெண்ணே!' 'குடும்ப மர்மம்', 'ஓஹோ கல்யாணப் பிள்ளையே!', 'இன்பகரமான குடித்தனம்' 'கணவன் மனைவியுடன் பழகுவதெப்படி?' 'மனைவி புருஷனைப் பார்ப்பது எப்படி?' என்று உஷா அடுக்கிக் கொண்டே போனாள்.

"ஏய்! என்ன 'கப்' விடுகிறே?" என்றாள் பாமா.

"கடைசியில் சொன்ன புத்தகம் நானாகச் சேர்த்துக் கொண்டேன். நீ அது மாதிரி ஒன்று எழுதேன்!" என்றாள் உஷா.

"உனக்குக் கல்யாணமாகட்டும். இரண்டு பேருமாகச் சேர்ந்து எழுதுவோம்."

"உனக்குக் கல்யாணமாகி ஏழெட்டு மாதங்கள் கூட ஆகவில்லையே? அதற்குள்ளே ஏன் அந்தப் புத்தகங்களைப் போட்டுவிட்டாய்?" என்று முக்தா விசாரித்தாள்.

"அதெல்லாம் என் கல்யாணத்துக்கு 'பிரஸெண்டா' வந்தது. அந்தப் புத்தகப் பரிசுகளைப் பார்த்த போதே என்னைப் பெற்ற அம்மாவுக்கும், புது அம்மாவுக்கும் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது."

"புதுசா ஒரு அம்மாள் எங்கே இருந்து முளைத்தாள்?" என்று மஞ்சுளா கேட்டாள்.

"என் மாமியாரைச் சொல்கிறேன். நான் அவரை 'அம்மா' என்றுதான் கூப்பிடுகிறேன். அவர்கள் இரண்டு பேரும் புத்தகங்கள் கொடுத்த பேரை வாய் வலிக்கிற வரை வாழ்த்தினார்கள். 'ஏதாவது நல்லதாகக் கொடுக்கிறதா இருந்தால் கொடுக்கட்டும்; இல்லாவிட்டால் பேசாமல் சாப்பிட்டு விட்டுத் தேங்காய்ப் பையை வாங்கிக் கொண்டு போகட்டும். இந்தப் புத்தகங்கள் கொடுக்கவில்லை என்று யார் அழுதார்கள்?' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் அந்தப் புத்தகம் எதையும் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை" என்று பாமா விவரம் தெரிவித்தாள்.

"சகுந்தலையை அவள் புருஷன் வீட்டுக்கு அனுப்புகிறபோது அவள் அப்பா புத்திமதி சொல்லி அனுப்பவில்லையா? அப்படிச் சொல்கிறதற்குப் பதிலாகப் புத்தகங்களில் எழுதுகிறார்கள்" என்று முக்தா சொன்னாள்.

"எந்த சகுந்தலை? டபிள்யூ. பி. சகுந்தலையா? பாடம் நடக்கிற போது பட்டாணிக் கடலை தின்று கொண்டிருப்பாளே அவளா?" என்று மஞ்சுளா குறும்பாகக் கேட்டாள்.

"இல்லை. எம். கே. சகுந்தலா. மகரிஷி கண்வரின் பெண்" என்று பாமா தெரிவித்தாள்.

"வண்டுக்குப் பயந்துகொண்டு போய் ஒரு ராஜாவைக் கல்யாணம் செய்துகொண்டாளே அவள்தானே? நாம் அது மாதிரி ஒரு அல்ஸேஷியன் நாய்க்குப் பயந்துகொண்டு ஒருத்தரைக் கல்யாணம் செய்து கொண்டால் மண்டை உருளும்!" என்றாள் உஷா.

"கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கு வரும்? என்று வசனம் உண்டு. கணவன் மனைவி அந்நியோந்நியமா இருக்கிறது தானே வர வேண்டும். ஒருத்தர் மீது ஒருத்தர் ஆசையா இருந்தால் ஒருத்தரோடொருத்தர் பழகுகிற விதம் தானே சரியாக அமைந்துவிடும்" என்றாள் முக்தா.

"என் பாட்டி ஒரு கதை சொல்லுவாள்: ஒரு பிள்ளைக்கு அவன் அம்மாதான் எப்போதும் சாதம் போடுவாளாம். நாட்டுப் பெண் போட விடமாட்டாளாம். ஒருநாள் அவன் வெளியூருக்குப் போகும்படியாகி விட்டது. பின்னே இராத்திரி நேரம் கழித்துவந்தான். விளக்கில் எண்ணெய் இல்லாததால் எரியவில்லை. தாழ்வாரப் பக்கம் நட்சத்திர வெளிச்சம் தெரிந்தது. அந்தப் பிள்ளை அங்கே சாப்பிட உட்கார்ந்தான். மனைவி பாத்திரத்திலிருந்து கையில் எடுத்துப் போடப்

போட அவன் தமாஷாகப் பேசிக்கொண்டே சாப்பிட்டான். பொழுது விடிந்தது. அந்தப் பெண் மாட்டுக்குப் பருத்திக் கொட்டை வைப்பதற்காக அது ஊற வைத்திருந்த பாத்திரத்தை எடுத்துப் பார்த்தாள். அது காலியாக இருந்தது. இருட்டில் அவள் சாதமென்று பருத்திக்கொட்டையை எடுத்துப் போட்டிருக்கிறாள். உப்பில்லை, உறைப்பில்லை என்று சொல்லாமல் அவள் புருஷன் அதைச் சாப்பிட்டிருக்கிறான். ஆசையில் அவனுக்கு அது தேவாமிர்தமாய் இருந்திருக்கிறது'' என்று உஷா சொன்னாள்.

''இது பழைய காலக் கதை. கணவன் மனைவியைப் பற்றி என் தாத்தா சொன்ன இந்தக் காலக் கதை ஒன்று ஞாபகம் வருகிறது'' என்று மஞ்சுளா ஆரம்பித்தாள்.

''ஒரு புத்தகத்திலே கணவனும் மனைவியும் ஒருவர் மற்றொருவரது 'மூட்' எப்படியிருக்கிறதென்று கவனித்து அதற்கேற்றபடி நடந்துகொண்டால் மனஸ்தாபமே ஏற்படாது என்று எழுதியிருந்தது. இதை ஒரு கணவனும் மனைவியும் படித்தார்கள். தங்கள் மனம் சரியான நிலைமையில் இல்லை என்பதை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வதற்காக ஒரு சங்கேத ஏற்பாடு செய்து கொண்டார்கள். கணவன் ஆபீஸிலிருந்து வரும்போது அவன் மனம் சரியாயில்லாவிட்டால் கைக் குட்டையை எடுத்துக் கழுத்தில் சுற்றிக் கட்டிக் கொண்டுவிடுவான். அந்த அபாய அறிவிப்பைப் பார்த்ததும் மனைவி அவனிடம் பேசிப் பழகுவதில் ஜாக்கிரதையாக நடந்து கொள்வாள். பிறகு கைக்குட்டையை அவிழ்த்து எடுத்த பிறகுதான் தைரியமாகப் பேசுவாள். அதே போல் மனைவியின் 'மூட்' சரியாயிருந்தால் அவள் மேல் புடவைத் தலைப்பை வழக்கம் போல் தொங்கவிட்டுக் கொண்டிருப்பாள். கோபமாயிருந்தாலோ தலைப்பை இழுத்து இடுப்பைச் சுற்றிக் கொண்டு வந்து முன் பக்கமாகச் செருகிக் கொள்ள வேண்டும்....


''ஒரு நாள் புருஷன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தபோது 'ரிப்பன் சொன்னேனே, வாங்கிக் கொண்டு வந்தீர்களா?' என்று கேட்டாள். அவன் வாயைத் திறந்து பதில் சொல்லாமல் தலையை ஆட்டினான். 'எப்போதும் இப்படித்தான்' என்று அவள் முணுமுணுத்தாள். 'என்ன முணுமுணுக்கிறே? இந்தக் குடையாலேயே மண்டையில் போடுவேன்' என்றான். 'என் கையில் எவர்ஸில்வர் மத்து இருக்கிறதாக்கும்' என்று அதை ஓங்கினாளாம்!''

இந்தக் கதையைக் கேட்டு முக்தாவும் மற்றவர்களோடு சேர்ந்து சிரித்தாள். சிரிப்பதில் அவள் எப்போதுமே சிக்கனம். —

''சண்டை ஏன் வந்தது தெரியுமா? அன்று அவள் புருஷன் தன் மேலதிகாரியுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்திருந்தான். மனசு சரியாயில்லை. அவன் மனக் குழப்பத்தில் அபாய அறிவிப்பு அடையாளமான கைக்குட்டையை அவன் கழுத்தில் மாட்டிக் கொள்ளவில்லை. அவளுக்கோ அன்றெல்லாம் தலைவலி. பக்கத்து வீட்டு அம்மாளோடு வேறு சண்டை. மனசு கொஞ்சம்கூடச் சரியாகவே இல்லை. அதனால் அவள் புடவைத் தலைப்பை மறந்து போய்த் தொங்க விட்டுக் கொண்டிருந்தாள். இடுப்பில் செருகிக் கொள்ளவில்லை'' என்று மஞ்சுளா கதையை முடித்தாள்.

''ஏன், மஞ்சு, எனக்கு ஒரு சந்தேகம். உன் தாத்தா கதை சொன்னார் என்றாயே, அவர் இருந்த காலத்தில் எவர்ஸில்வர் மத்து கிடையாதே'' என்றாள் பாமா.

''கதைக்குக் காலும் கையும் எங்கே இருக்கிறது என்று பார்த்துக் கொண்டிருப்பார்களாக்கும்! உள்ளூற ஆசையிருந்தால் தகராறு ஏற்படாது. இந்த 'டிரிக்'கினால்



எல்லாம் ஒன்றும் பலிக்காது என்று எடுத்துச் சொல்கிற கதைதானே!'' என்று மஞ்சுளா சமாதானம் கூறினாள்.

''அது என்னவோ உண்மைதான். இந்தக் காலத்துப் பெண்களுக்கு இந்த யோசனைகளே தேவையில்லை. நாள் கழித்துத்தான் கல்யாணமாகிறது. எத்தனையோ புத்தகங்கள் படித்து அவர்களுக்குப் பல விஷயங்கள் தெரியும். தவிர புருஷன், மாமியார் முதலியவர்களிடம் பயந்துகொண்டு பணிந்து நடக்கிறதென்பது அவர்கள் இரத்தத்தில் ஊறிப் போயிருக்கிறது. என்னைக் கேட்டால் மாமனார், மாமியார்களுக்குத்தான் இது மாதிரி புத்தகங்கள் வேண்டும்'' என்றாள் முக்தா.

''மாமனார்கள் கூடப் பாதகமில்லை. கல்யாண சமயத்தில் அவர்கள் கேட்டபடி அதிகப் பணத்தைக் கொடுத்து விட்டால் பிறகு வாயைத் திறக்க மாட்டார்கள். நாட்டுப் பெண்களிடம் அன்புடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்வார்கள். மாமியாருக்குத்தான் அவள் இன்னொரு வீட்டுப் பெண், தன் வீட்டில் புகுந்தவள் என்ற எண்ணம் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது'' என்று உஷா கூறினாள்.

''அது சகஜம். அதற்காக அவர்கள் மேல் குறை சொல்லக் கூடாது. ஆனால் அவர்கள் நாட்டுப்பெண் என்றால் சுவீகாரப் பெண்ணைப்போல் பாவித்து நடந்து கொள்ளலாம். அதனால் அவர்களுக்கு நஷ்டமில்லை. பின்னே, நாட்டுப்பெண் இரண்டு பேரும் அடிமையாக நடந்து கொள்வார்கள்'' என்றாள் முக்தா.

''நாட்டுப்பெண் என்கிறவளும் ஒரு சிறு பெண்தானே? அதற்கு அதன் வீட்டில் என்ன பழக்க வழக்கம்? அதற்கு என்ன இன்னைப் பிடிக்கும்? அதற்கு எது எதில் ஆசை? இதைப் பற்றியெல்லாம் எந்த மாமியாராவது யோசனை செய்து பார்க்கிறது உண்டா? 'என் நாட்டுப் பெண்ணுக்குப் பறங்கிக்காயில் வெல்லம் போட்டுக் கறி பண்ணினால் ரொம்பப் பிடிக்கும். அதற்காகச் செய்தேன்' என்று இதுவரை எந்த மாமியாராவது பெருமையாகச் சொல்வதுண்டா? கடைசியில் சின்ன விஷயம். இது மாதிரி செய்தால் நாட்டுப் பெண் அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவாள்....'' என்றாள் பாமா.

''உன் மாமியார் உன்னை அப்படித் திருப்திப்படுத்தக் கூடாது என்று நான் கடவுளை வேண்டிக் கொள்கிறேன். நீ அவளைத் தூக்கி வைத்துக் கூத்தாடினால் ஆபத்துத்தான்'' என்று மஞ்சுளா பரிகாசம் செய்தாள்.

''ஓஹோ மாமியார்களே!' என்று ஒரு புத்தகம் எழுதலாம். ஆனால் அதை எப்படி 'பிரசன்ட்' செய்கிறதாம்?'' என்றாள் உஷா.

''சீரோடு சீராக வைத்துவிடுகிறது'' என்றாள் முக்தா.

''மெல்லிசு வெள்ளித் தகட்டினால் மேலே அட்டை போட்டுக் கொடுத்துவிட்டால் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள்'' என்று மஞ்சுளா யோசனை கூறினாள்.

''பாமா! இப்போதே உன்னைப் பற்றி ஜோசியம் சொல்லி விடுகிறேன். உனக்குப் பின்னைக் குழந்தைதான் பிறக்கப் போகிறது. நீயும் ஒரு மாமியாராகப் போகிறாய். ஆகையால் ஜாக்கிரதையாயிரு!'' என்று உஷா வேடிக்கையாக எச்சரித்தாள்.

''எனக்குக் கூடத்தான் நான் இதையெல்லாம் சொல்லிக் கொள்கிறேன். பாபம், அந்த மாமியார்களை நினைத்தால் கோபமாக இருக்கிறது; பரிதாபமாகவும் இருக்கிறது. அநாவசியமாகத் தாங்களும் தொந்தரவு பட்டுக் கொண்டு மற்றவர்களையும் மன நிம்மதி இல்லாமல் செய்து விடுகிறார்கள். அவர்கள் வயதானவர்களாய், உலக அநுபவம் உள்ளவர்களாய், பெரியவர்களாய், இலட்சணமாய் நடந்து கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று பாமா முத்தாய்ப்பு வைத்தாள்.

ஃ ஃ ஃ

''இந்தக் கல்யாணப்பெண்ணுக்கு நீங்கள் ரொம்ப வேண்டியவர்கள் போலிருக்கிறதே?''

''இல்லை, இல்லை. நான் அவள் மாமியார்''

ஃ ஃ ஃ

குடும்ப அகராதி

அடுத்த வீடு: நம்முடன் சண்டை போட்டாகவேண்டும் என்பதற்காகவே உலகத்தில் பிறந்தவர்கள் வசிப்பதற்காக ஏற்பட்டது. தபால்காரர்கள் நமக்கு வரும் தபால்களை அந்த வீட்டில் போட்டுத் தமாஷ் அநுபவிப்பார்கள். அந்த வீட்டில் இருப்பவர்களால் சில நன்மைகள் உண்டு. நமது வீட்டுக்கு வரும் பிச்சைக்காரர்களை அவர்களிடம் போகச் சொல்லலாம். நம்முடைய குழந்தைகளுக்கு உடம்பு அசௌகரியம் ஏற்பட்டால் அவர்கள் 'கண்ணில் கொள்ளி வைக்கும்படி' வாழ்த்தலாம். அக்கம் பக்கத்து வீடுகள் மட்டும் ஒன்றை ஒன்று இடித்துக்கொண்டு சண்டை போட்டுக் கொள்வதில்லை!

ஃ ஃ ஃ

வாசற்படி: இது வீட்டுக்கு வீடு இருக்குமென்று பெரியவர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டில் அதிகப்படியாக இருக்கும் அரிசியை மாவாகச் செய்து இதன் முன்னால் கோலங்கள் போடலாம். இது வீட்டுக்கு முன் இருப்பதனால் ஏற்படும் கஷ்டமாவது: மோட்டார் வண்டியை வீட்டுக்குள் நேரே ஓட்டிச் செல்ல முடிவதில்லை;

வீட்டுக் குறிப்புகள்

'காப்பி ஆறிவிட்டது. சற்று இரு. சுட வைத்துத் தருகிறேன்' என்று கூறுவதுண்டு. அப்படி இரண்டாம் முறை சுட வைப்பதில் ஒரு கெடுதல் இருக்கிறது. காப்பி ஆறிவிட்டால் அதிலிருந்து பசை போன்ற ஒரு பொருள் தனியாகப் பிரிந்துவிட்டிருக்கும். இரண்டாம் முறை காப்பியைச் சுடவைக்கும் போது அது மறுபடியும் காப்பியுடன் கலந்து விடுவதில்லை. அந்தப் பசை தனியாகவே வயிற்றுக்குள் போகும். அதனால் தேகத்திலுள்ள இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படும்.

ஃ ஃ ஃ

பருப்பு வேகவைக்கும்போது அதில் சிறிய கரண்டி முட்டை நல்லெண்ணெய் விட்டுப் பெருங்காயத்தையும் பொரித்துப் போட்டு வேகவைத்துப் பாருங்கள். அந்தப் பருப்புக் கலந்த சாம்பாரோ ரஸமோ கமகமவென்று வாசனை வீசிக்கொண்டு ருசியா யிருக்கும்.

போர் பந்தர் கீர்த்தி மந்திர்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

“பூலோகத்தில் மனிதனுடைய சரித்திரத்தில் மிகப் பெரிய விஷயம் என்ன என்றால் அவனுடைய லௌகிக சித்திகள் அல்ல. அவன் கட்டி வைத்த, உடைத்துப் போட்ட ஏகாதிபத்தியங்கள் அல்ல. சத்தியத்தையும் தர்மத்தையும் தேடிக் கொண்டு யுகத்துக்கு யுகம் அவனுடைய ஆத்மா வளர்ச்சியடைந்து வந்திருக்கிறதே அதுதான் மிகப் பெரிய விஷயம். இந்த ஆத்ம வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறவர்கள் மானுட சமுதாயத்தின் ஞான இதிகாசத்தில் நிரந்தர ஸ்தானம் பெற்று விடுகிறார்கள். கால தேவதையானவள் எவ்வளவு காலமாக மற்றவர்களை மறந்து விடுகிறளோ, அது போலவே வீரர்களையும் புறக்கணித்து விடுகிறள். ஆனால் மகான்கள் எப்பொழுதும் கால தேவதையின் ஞாபகத்தில் ஸ்திர வாசம் செய்து கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகளின் பெருமை அவர் நடத்திய தீவிரமான போராட்டங்களைக் காட்டிலும் அவருடைய பரிசுத்த வாழ்க்கையிலே தான் தங்கி யிருக்கிறது. உலகத்தின் அழிவுச் சக்திகள் மேலும் மேலும் போய்க் கொண்டிருந்த தருணத்தில் ஆத்மாவுக்குச் சிருஷ்டி சக்தி உண்டு; ஜீவ சக்தியை அளிக்கும் தன்மையும் உண்டு என்று அவர் வற்புறுத்திப் பேசினரே அதிலேதான் அவருடைய பெருமை இருக்கிறது.”

இப்படி மகாத்மாவின் ஆன்மீக சக்தியைப் பாராட்டியவர் வேறு யாருமில்லை. இன்று நமது ராஷ்டிரபதியாக விளங்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்தான். அவ்வளவு பெருமைக்கும் புகழுக்கும் உரியவராயிருந்த மகாத்மா காந்தியின் அவதாரத் தலம் தான் போர்பந்தர். நாம் நம் நாட்டில் பிறந்து வளர்ந்த பெரியவர்களை மாத்திரம் வழிபடுகிறதில்லை; அவர்கள் பிறந்த ஊரையும் புனிதமான தலமாகக் கருதி, அங்கு சென்று வழிபட்டு வருகிறோம். சம்பந்தர் பிறந்த ஊர் என்பதற்காகச் சீகாழிக்கும், அப்பர் பிறந்த ஊர் என்பதற்காகத் திருவாமூருக்கும், சுந்தரர் பிறந்த ஊர் என்பதால் திருநாவலூருக்கும், மணிவாசகர் பிறந்தார் என்பதற்காகத் திருவாதவூருக்கும் சென்றிருக்கிறோம். இதைப் போலவே ஆழ்வார்கள் பிறந்த தலங்களுக்கும் சென்று வந்திருக்கிறோம். ஏன், சொல்லப் போனால் கம்பர் பிறந்த ஊராகிய திருவழுந்தூருக்கும் ராமானுஜர் பிறந்த ஊராகிய ஸ்ரீ பெரும்புதூருக்குமே ஒரு நடை நடந்திருக்கிறோம். இப்படிப் பெரியவர்களின் அவதாரத் தலங்களுக்கெல்லாம் சென்று வரும் நம்மிடையே மாந்தருக்குள் ஒரு தெய்வமாக வாழ்ந்த மகாத்மா காந்தியின் ஜனன பூமிக்குச் சென்று வர வேண்டாமா?

கீர்த்திமந்திர்



போர்பந்தர் செல்ல முதலில் அகமதாபாத்திலிருந்து ராஜ்காட் செல்ல வேணும். அங்கு ரயில் மாற்றி ஜெட்சலார் செல்ல வேணும்; திரும்பவும் ரயில் மாறிப் போர்பந்தர் போய்ச் சேர வேணும். தக்க வசதி உடையவர்கள் பம்பாயிலிருந்தே வாரம் இரு முறை செல்லும் ஆகாய விமானத்தில் செல்லலாம். வடநாட்டு யாத்திரையைக் காரிலேயே செய்பவர்கள் என்றால் ராஜ்காட்டிலிருந்து ஜாம்நகர் சென்று அங்கிருந்து போர்பந்தருக்குக் காரிலேயே சென்று சேரலாம். ஜாம்நகர் போர்பந்தர் ரோடு அவ்வளவு வசதியாக இராது. என்றாலும் ரயிலில் செல்வதைவிடக் காரில் செல்வதுதான் நல்லது. ஜாம் நகரிலிருந்து பஸ் வசதியும் உண்டு.

போர்பந்தர் சென்றதும் அங்குள்ள வீதிகளும் வீடுகளும் ஒரே வரிசையாகவும் நேராகவும் அழகாகவும் அமைந்திருப்பதே நமக்கு முதலில் தென்படும். பழைய வீடுகளே காணக் கிடைக்காது. எல்லா வீடுகளுமே மூன்று நான்கு அடுக்குகளுடன் கூடியதாக இருப்பதால் மிகுந்த செல்வச் செழிப்புள்ள நகரமாகவே தோன்றும். வீதிகளின் இரு புறத்தும் நடைபாதையும், நிழல் தரும் மரங்களும் இருப்பதால் அது ஒரு பூஞ்சோலை நகரமாகவே காணப்படும். போர்பந்தர் ஒரு கடற்கரைப்பட்டினம் ஆதலால் நல்ல இனிய காற்று எப்போதும் வீசிக் கொண்டே யிருக்கிறது. துறைமுகத்தோடு கூடிய நகரம் ஆனதால் வணிக மக்கள் நிறைந்திருக்கின்றனர். வாணிபம் செழிப்பாக நடக்கிறது. ஆம்! நமது மகாத்மா காந்தியும் ஒரு 'பனியா' வகுப்பைச் சேர்ந்தவர்தானே. பனியா என்றால் வாணிபம் செய்பவர்கள் என்றுதான் பொருள். இங்குள்ள வணிகர்கள் பெரும்பாலோருக்கு ஆப்பிரிக்கா கண்டத்துடன் தான் வியாபாரம் அதிகம். ஆப்பிரிக்க நாட்டுடன் ஏற்றுமதி இறக்குமதி செய்வதால் வியாபாரம் செழிப்பாக இருக்கிறது. இந்நகர்ப் பிரமுகர்கள் பலர் ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே நிரந்தரமாகக் குடியேறி யிருக்கிறார்களாம். வியாபாரத் தொழில் நிலையங்கள் நிறுவி அங்கேயே வாழ்ந்து வருகிறார்களாம். நமக்கும் தெரியுமே, காந்திஜி பாரிஸ்டர் பட்டம் பெற்றதும் ஆப்பிரிக்க நாட்டுக்குத்தானே சென்றிருக்கிறார். அங்குதானே அவரது அரசியல் வாழ்வுக்கு வித்திடப்பட்டிருக்கிறது. இப்போதுகூட ஆப்பிரிக்காவுக்குக் கப்பல்

மார்க்கமாகச் செல்கிறவர்கள் இப்போர்பந்தர் துறைமுகம் வழியாகச் செல்கிறார்களாம்.

இந்தப் போர்பந்தர் ஆதியில் சுதாமபுரி என்றுதான் பேர் பெற்றிருக்கிறது. சுதாமர் என்பவர் யார் என்று பலருக்குத் தெரிந்திராது. ஆம், அவரைத்தான் குசேலர் என்று நாம் அழைத்து வந்திருக்கிறோம். குசேலர் கதைதான் நமக்குத் தெரியுமே. சின்னப் பையனாக இருக்கும்போது கண்ணனோடு ஒரு சாலை மாணாக்கனாக இருந்திருக்கிறார். பின்னர் தம் மனைவி சுசீலையோடு இல்லறம் நடத்தி இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்; அதன்பின் வறுமையில் வாடி யிருக்கிறார். பின் தம் மனைவியின் ஆலோசனைப்படி தம்மோடன் கொஞ்சம் அவலையும் எடுத்துக் கொண்டு கண்ணனைக் காணத் துவாரகைக்கே சென்றிருக்கிறார். குசேலரையும் அன்புடன் ஏற்று உபசரித்து அவர் செல்வத்தில் திளைக்கக் கண்ணன் அருள் புரிந்திருக்கிறான். இந்தக் குசேலர் கதையைத்தான் வல்லூர் தேவ ராஜப்பிள்ளை குசேலோபாக்கியானம் என்று பாடல்களாகவே பாடியிருக்கிறார். அதில் குசேலனை,

தன்னுயிர்போல் மன்னுயிர் புரந்தாய்
சான்றவர்க் குறுதி என்றென்றும்
மன்னிய மறைநூல் மொழிந்திடுமதுமன்
வாய்மையே என்றுணர்ந்தவனும்
துன்னிய உலகில் இருதிணை உயிரும்
தூங்கிய மகிழ்ச்சி மீக்கூர
நன்மையே புரிவான் தன்னுழும்வாழ்தல்
நாடிடன் தீமை செய்தலையே

என்று கூறுகிறார். இந்தக் குசேலரின் மனைவியான சுசீலையையும்,

மாசிலாக் குலத்து வந்தாள்
வருவிருந்து உவப்ப ஊட்டும்
நேசமிக்குடையாள் கொண்கன்
நினைப்பறிந்து ஒழுகும் நீராள்
தேசுறு வாய்மை உள்ளாள்
சினந்திடல் என்றும் இல்லாள்
பேசுநின் கற்பு வாய்த்தாள்
பெற்றதே கொண்டு உவப்பாள்

என்றே பாடுகிறார். இந்தச் சிறப்பையெல்லாம் அப்படியே காந்திஜிக்கும் கஸ்தூரிபாவுக்குமே ஏற்றலாமே என்று தோன்றும். ஆம் சுதாமர் பிறந்த ஊரிலேயே காந்திஜி பிறந்ததும் ஒரு பொருத்தமாகத்தானே இருக்கிறது. சுதாமர் பிறந்த ஊரைத்தான் சுதாமபுரி என்று அழைத்திருக்கின்றனர். இதைப் பற்றிப் பகவத் கீதையே பேசுகிறது. இங்குள்ள பழமையான கோயில் சுதாமர் கோயில் தான். அக்கோயிலில் கிருஷ்ணனையே பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இக்கோயிலின் இடைவெளியில் '84 கோணங்கள்' என்று சிறு மேடை எழுப்பி யிருக்கிறார்கள். சதுரமான ஒரு மைதானத்தில் 84 வளைவுகள் உள்ள சுவர் எழுப்பி மேடை அமைத்திருப்பதன் காரணமாக இதனை 84 கோணங்கள் என்று அழைக்கின்றனர்.

இச்சுதாமர் கோயிலை விட இன்று பிரசித்தி பெற்றிருப்பது 'கீர்த்தி மந்திர்'. காந்திஜி




சுதாமர் கோயில்

பிறந்த வீட்டின் பக்கத்திலேதான் இக்கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். அவரது புகழுக்கும் கீர்த்திக்கும் ஏற்றவண்ணமே பெரிதாகக் கட்டியிருக்கிறார்கள். காந்தியடிகளின் பிறந்த அறையைக் காணும் போது நமக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கும். கீர்த்தி மந்திரில் கஸ்தூரிபாய் காந்தியின் படங்களைப் பெரிதாக எழுதி வைத்திருக்கிறார்கள். மேல் மாடியிலும் கீழே உள்ள அறைகளிலும் காந்திஜியின் வாழ்வை விளக்கும் பல வகைப் படங்களும் இருக்கின்றன. நூல் நிலையம் ஒன்றும் அமைத்திருக்கிறார்கள். காந்திஜி சிறுவனாக இருந்த போது உபயோகித்த பொருள்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். சிறுவனாக இருந்தபோது அவர் உபயோகித்த நெருப்புப் பெட்டிகள் துண்டுக் காகிதங்கள் சில்லறைச் சாமான்கள் இன்று அரிய கண்காட்சிப் பொருள்களாக அங்கே இருக்கின்றன. மகாத்மா காந்தி அவரது சுய சரிதையில் போர்பந்தரைப் பற்றி அதிகம் எழுதவில்லை.

''சுதாமபுரி என்று அழைக்கப்படும் போர்பந்தரில் 1869 அக்டோபர் இரண்டாம் தேதி நான் பிறந்தேன். குழந்தைப் பருவத்தில் நான் போர்பந்தரிலேயே இருந்தேன். அங்கே என்னைப் பள்ளிக் கூடத்தில் வைத்தது நினைவு இருக்கிறது. கொஞ்சம் சிரமத்துடன்தான் பெருக்கல் வாய்பாட்டை நெட்டுருப் போட்டேன். மற்றச் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு எங்கள் உபாத்தியாயரை ஏளனம் செய்தேன் என்பதைத் தவிர அந்த நாட்களைக் குறித்து வேறு எதுவுமே எனக்கு ஞாபகம் இல்லை'' என்று மட்டுமே அவர் எழுதியிருக்கிறார். இதற்கு மேலே அவர் எழுதாதற்குக் காரணம், ஏழு வயது நிரம்பு முன்னே அவர் தம் தந்தையார் வேலை பார்த்து வந்த ராஜ்கோட்டுக்குச் சென்று விட்டதுதான். அங்குதான் அவர் பள்ளியில் சேர்ந்து ஒழுங்காய்க் கல்வி கற்க ஆரம்பித்திருக்கிறார்.

கீர்த்திமந்திருக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் சங்கர் மந்திர், கீதாமந்திர், திருமால் மந்திர் என்னும் கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் சிறப்பானது கீதா மந்திர்தான். அக்கோயிலின் சுவர்களில் பகவத் கீதை முழுவதும் தெளிவாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி மிகவும் பாராட்டிப் படித்ததும் அவர் வாழ்வைச் செம்மைப்படுத்தியதும் பகவத் கீதை என்ற நூலே. கீதை சொல்லும் பாதையில் நடந்த காந்திஜியின் அவதாரத் தலத்தில் கீதாமந்திர் ஒன்று கட்டி அதில் கீதா போதனைகளை எழுதி வைத்திருப்பது மிகப் பொருத்தம் என்று தோன்றுகிறது.



மணமகளின் அம்பு

△ சங்கர ராம் △

நாற்புறங்களிலும் மலைகள். நடுவில் கிண்ணம் போன்ற ஒரு சிறு சமவெளியில் பனை ஓலையால் மூடப்பட்ட ஐம்பது, அறுபது வீடுகள். அவைகளில் ஒன்று மட்டும் மிகப் பெரியதாக இருந்தது. அதற்கு உட்புறத்தில் கூரைக்கு நாலைந்து அடி தாழ்வாக ஒரு விசாலமான 'மண் மச்சும்' இருந்தது. அவ் வீட்டின் கூடத்தில் வீட்டு எஜமானி ஒரு பார்வையை இழந்துவிட்டபோதிலும் அவளுடைய தோற்றம் கம்பீரமாகவே இருந்தது.

''சொக்கையா! ஆதிகாலத்திலே இந்த வட்டாரத்து மலைகளை ஆண்டு வந்தவங்க ஒன்பது குடும்பங்கள்தான். எப்படி வந்தாங்களோ, எப்பொழுது வந்தாங்களோ யாருக்கும் தெரியாது. பாண்டவர்கள் இங்கே தங்கியிருந்ததாக ஒரு நம்பிக்கை. அதனாலே தான் நம்ப மலைகளுக்கும் ஆறுகளுக்கும் அவர்களுடைய பெயர்களை வைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. ஆனால் நாங்கள் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான்....''

''அதிலே சந்தேகம் என்ன அம்மா? இன்னிக்கும் துரை, துரைச்சி என்கிற பட்டம் உங்களுக்கு இருக்கிறதே!''

''எங்கள் பட்டத்தைச் சொல்லு. யார் மதிக்கிறார்கள்? ஆனால் இன்றைக்கும் நாங்கள் கொள்வன கொடுப்பன எல்லாம் எங்களுக்குள்ளேதான்.''

''எனக்குத் தெரியாதா அம்மா?'' என்று சொக்கையா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே சுமார் பதினெட்டு வயதுள்ள ஒரு நங்கை விரைவாக வந்து ''அம்மா, என் அம்புக் கூட்டை எங்கே வைக்கச் சொன்னாய்?'' என்று வினவினாள்.

''மச்சு மேலே இரும்புப் பெட்டி ஓரமாய் வைத்ததாக வேலைக்காரி சொன்னாள். இப் பொழுது எதற்கு?''

''நானும் சண்பகமும் விளையாடப் போகிறோம்'' என்று சொல்லிக்கொண்டே அவள் ஓடி விட்டாள்.

''விளையாட்டாவது? வேட்டையாடத் தான் போவார்கள். பிறந்தது ஒன்றும் ஆணாக இருக்கக் கூடாதா? இவ்வுலகத்தையே அடக்கி ஆளுவானே. சுபாவம், தோற்றம், தைரியம் எல்லாவற்றுக்கும் தன் பாட்டனாரையே கொண்டிருக்கிறாள். அவர் அம்பாலே யானையைக்கூடக் கொன்று விடுவாராம். நம்ம தருமர் மலையிலே அவரைப் போன்ற வீரர் யாரும் இருந்ததில்லையாம். இவளும் அப் படியே தயாராகிவிட்டாள் என்று எல்லாரும் சொல்கிறார்கள்.''

''வமிசம் எப்போதும் வீணாகாது தாயே!''

''என்ன வமிசமோ, என்னவோ போ. இருந்தாலும் எங்களுடைய மங்கையர்க்கரசி போல் யாரும் அதிருஷ்டக்கட்டையாயிருக்கமாட்டார்கள். தகப்பனை இழந்து, நானும் குருடாகி....'' என்று துரைச்சி நடுங்கும் குரலில் கூறினாள்.

''ஆண்டவன் ஆணையை யார் அம்மா மீற முடியும்? ஊம், இன்னும் கலியாணத்துக்குப் பத்து நாள் இருக்குமா?'' என்று கேட்டான் சொக்கையா.

''அடுத்த வெள்ளிக்கிழமை சொக்கையா. இன்னிக்கு எட்டாவது நாள்'' என்றாள் துரைச்சி.

''மாப்பிள்ளை பீமன்மலை மலையப்பர் தானே?''

''அவனேதான். மங்கைக்கு அத்தான் முறை ஆச்சுதே. அதோடு இரண்டு பேரும் சிறு வயதிலிருந்து கூடிப் பழகினவங்க.''

''ஆமாம். நகுலர் மலையாரு துரைசிங்கம் குழந்தையைக் கட்டிக்கத் தனக்குத்தான் உரிமையின்னு சொல்லிக்கிறாராமே. பெரிய துரை இருந்த போதே பேச்சு கொடுத்திட்டாராம்?''

''அவன் கிடக்கிறான் அயோக்கியப் பயல். அவனுக்குப் போய் யாராவது பெண்ணைக் கொடுப்பாங்களா?''

''ஆனால் ரொம்ப வம்புக்காரர் அம்மா. கலகம் செய்தாலும் செய்வார். பெண்ணைத் திருடிக்கிட்டுப் போய்க் கலியாணம் செய்து கொள்கிறதுகூட எங்கவழக்கமின்னுகிறாராம்.''

''அவனையும் ஒரு மனிதனாக எங்களவர்கள் நினைக்கவில்லை. நாலு கல்லுக்கு அப்பாலே இருக்கிற சகுனி ஓடைதான் நம்ப எல்லை. அதை அவன் தாண்டி வருவானா? மலையப்பன் சங்கதி உனக்குத் தெரியாது?''

''ஏன் தெரியாது, தாயே! யானை மலை யாரை நடுங்க அடிச்சவராச்சே!''

''பின்னே சொல்றியே!''

இப்பொழுது துரைச்சி மங்கையர்க்கரசியும் அவள் தோழி சண்பகமும் பலமாகப் பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தனர்.

''ஏன் அம்மா, திரும்பி வந்துவிட்டீர்கள்?'' என்றாள் துரைச்சி பார்வதி அம்மாள்.

''பெரியவர் முருகப்பனார் தடுத்து விட்டார் அம்மா. 'அந்தப் பாலை மரத்துப் புதரிலே பதுங்கியிருக்கிறது புலியாகக்கூட இருக்கலாம்! திருமணத்தை முந்தி வைத்துக் கொண்டு நீ ஆபத்திலே அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' என்று எங்களைத் துரத்திவிட்டார்.''

''மெய்தானே?''

''ஆமாம், அவருக்குக் கண் தெரியாது. அது நரியாகக்கூட இருக்கும். புதருக்கு ஒரு முழத்துக்கு மேலே அம்பைப் போடுறார்'' என்று அவள் இடிஇடி என்று சிரித்தாள். துரைச்சி பார்வதியம்மாள் முகத்திலும் ஒரு புன்முறுவல் படர்ந்தது.

மங்கையர்க்கரசி ஒரு போர்வீரனைப் போல் தோற்றம் அளித்தாள். நல்ல உயரம். வில்லைப் போல் வளையும் உடல். பருத்த விழிகளில் வீரமும் அன்பும் கருணையும் ஒன்று சேர்ந்து அவளுடைய முகத்துக்கு ஓர் அலாதியான கவர்ச்சியைக் கொடுத்தன. காண்பவர் மனத்தைப் பறிகொடுக்கும்படி பெண்மையின் பொலிவு எடுப்பாகவே தெரிந்தது. அவள் வெறும் மலைவாசியல்ல, மலைக் குழந்தை என்றே சொல்லவேண்டும். தருமர் மலையின் அடிவாரத்தில் அவள் கால் படாத இடம் கிடையாது. அவ்விடத்தை விட்டுப் போக அவளுக்குச் சிறிதளவும் விருப்பமில்லை. ஆகையினால் திருமணத்துக்குப் பிறகு அத்தானே தருமர் மலைக்கு வந்துவிடுவதாக அன்னையும் பேசிக்கொண்டது அவளுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது.

திருமணத்துக்கு நடுவில் வியாழன் ஒரு நாளே இருந்தது. வீட்டில் உட்கார்ந்தவாறு துரைச்சி பார்வதி அம்மாள் திருமண ஏற்பாடுகளைத் திறமையுடன் செய்துகொண்டு வந்தாள். சொக்கையா, இளமை திரும்பியது போல் ஆடி ஓடி அலுவல்களைக் கவனித்தான். இரவில் வெகு நேரம் வேலை செய்ததால் அனைவரும் விடிந்ததும் தெரியாமல் உறங்கினர். பிறகு அடித்துப் புடைத்துக் கொண்டு பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து இறங்கப்போகும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு அருமையான சிற்றுண்டியைத் தயாரித்தனர். சிலர் அவர்களுடைய விடுதியில் யாதொரு குறைபாடும் இருக்காதபடி முயற்சியை எடுத்துக் கொண்டனர்.

விளையாட்டுப் போல் நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மூன்று மணியாகியும் மணமகனின் வீட்டார் வராதது கவலையைக் கொடுத்தது. மணி நான்கும் ஆகிவிட்டது. அப்பொழுதும் அவர்களைக் காணோம். துரைச்சி பார்வதியம்மாளுக்குப் பயம் அதிகரித்து விட்டது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த மங்கையர்க்கரசியின் முகத்திலும் அச்சம் படர்ந்து விட்டது.

சருனி ஓடையிலிருந்து தருமர் மலைக்கு வரும் வழியை வண்டிப் பாதை என்று சொல்ல முடியாது. எட்டு மைல் தூரத்துக்கு மேடும் பள்ளமும், நடு நடுவே நட்டு வைத்தாற்போல் கற்களும்தான். காட்டின் குறுக்கே சென்றால் அதில் பாதி தூரம்தான் இருக்கும். ஆனால் இந்த நடை பாதையில் வேட்டையாடும் நிபுணர்களைத் தவிர வேறு யாரும் போக மாட்டார்கள்.

''இதென்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே, சொக்கையா. நாம் முந்தியே சில ஆட்களை அனுப்பி யிருக்க வேண்டும். உடனே நாலு பேரை ஓடச் சொல்லு.''

சொக்கையா ஓடினான். வேதனை அவள் நெஞ்சைப் பிளந்தது. இப்பொழுது இடியும் மின்னலுமாய் இருப்பதைப் பார்வதியம்மாள் உணர்ந்தாள். ''மழை வேறு வருகிறதா என்ன?'' என்று புலம்பினாள்.

''பெரிய மழை வராது அம்மா. ஆனால் வடக்கே சரியான மழை படிச்சிருக்கு போலிருக்குது'' என்றான் ஒருவன் ஆகாயத்தை நோக்கியவாறு.

சொக்கையா திரும்புவதற்குக் கால் மணி நேரம் ஆயிற்று. அவன் பெருமூச்சைச் சொரிந்து கொண்டு வருவதைப் பார்வதியம்மாள் உணர்ந்தாள்.

''ஆட்கள் போய்விட்டார்களா?'' என்று கேட்கும்போதே அவள் குரலில் ஒரு பதற்றம் ஏற்பட்டு விட்டது.

''அம்மா!'' என்றான் சொக்கையா, அழுகையை அடக்க முடியாமல். ''யாரோ, ஒருத்தன் வேட்டைப்பாளையத்தானாம். சங்கதியைச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்...''

''என்ன, என்ன?''

''அந்தப் பாவி துரைசிங்கம், அம்பும் வேலுமாய் நூறு பேரைத் திரட்டிக்கிட்டு வந்து, மலையப்பரையும், கூட வந்தவங்களையும் தாக்கி மலையப்பரை ஒரு வீட்டிலே வச்சுப் பூட்டிட்டானாம். இல்லாத போனால் அவங்க உச்சிப் பொழுதுக்கே வந்திருக்க வேணுமாம்.''

''என்னது! நம்பக்கூடியதாய் இல்லையே. சொன்னவனை இங்கே அழைத்துக்கொண்டு வரக்கூடாது?''

''தலைக்குமேலே மழையின்னு ஓடிட்டான்.''

''அப்புறம்!''

''கும்பலோடு வந்து, குளந்தையைத் துரைசிங்கமே கட்டிக்கப் போறானாம்.''

''வரட்டும், வரட்டும். என் அம்பால் அவன் தலையைச் சிதற அடிக்கிறேன்'' என்றாள் மங்கையர்க்கரசி ஆவேசத்தோடு.

''என்ன சொக்கையா, இப்பவும் என்னாலே நம்ப முடியவில்லையே! அவன் முப்பாட்டன் காலமா இது. ஆட்களைக் கூட்டு வதற்கும் அம்பு எறிவதற்கும்? போலீஸ் இல்லையா? அரசாங்கம் இல்லையா? அப்படியாப்பட்ட சண்முகத் துரையையே ஒரு நாளில் எலியைப் போல் நசுக்கிவிட்டார்களே! இவன் எந்த மூலை?''

''அதுக்குள்ளே தாலியைக் கட்டிவிட்டால்....'' என்றான் சொக்கையா.

''மூடு வாயை!'' என்று மங்கையர்க்கரசி கர்ஜித்தாள். ''நான் வெட்டுக்கு நிற்கும் கடாவா? என் அம்புகள் அவனைத் துளைக்

கும்! இருந்த இடம் தெரியாமல் நரிக்கு அவன் இரையாவான்.''

துரைச்சி பார்வதியம்மாள் பேசாதிருக்கும்படி சொக்கையாவுக்குச் சைகை செய்தாள். வானத்தில் மந்தாரம் அதிகரித்தது. வீட்டில் ஒளி இல்லாமல் செய்துவிட்டபடியால் விளக்கை ஏற்றவேண்டியிருந்தது.

மங்கையர்க்கரசி சண்பகத்துடன் வெளியே சென்று வானத்தை நோக்கினாள். சூழ்ந்து கொண்ட இருண்ட மேகங்கள் மாலையை இரவாக்கிக் கொண்டிருந்தன. சண்பகத்தை ஒதுக்கமாக அழைத்துக் கொண்டு போய் அவள் இரகசியமாகக் கூறினாள். ''சண்பகம்! நான் சருனி ஓடைக்குக் காட்டு வழியாகப் போகிறேன்!''

''என்ன துரைச்சி அம்மா, உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?''

''இல்லே, இல்லே. அந்தத் துரோகி துரைசிங்கத்தை ஊருக்குள் நுழைவதற்கு முந்தியே கொன்றுவிடப் போகிறேன். என்னால் முடியும். என்னைத் தொட்டுப் பார். மலைகாளியம்மன் என்னுள் புகுந்து விட்டாள்! பதறாதே. நான் சொல்வதைக் கேள். என் அம்புக் கூடு, வில், கால்களில் கட்டிக்கொண்டு விளையாடுவோமே, அந்தச் சலங்கை, எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு வா. சறுக்குப் பாறை மறைவில் வேட்டைக்குத் தயாரித்துக் கொள்கிறேன். ஒரு சுளுந்தும் தீப்பெட்டியும் கூட வேண்டும். நான் முதலில் போகிறேன். நீ ஒருவருக்கும் தெரியாமல் வரவேண்டும்.''

''இருட்டுலே, காட்டுலே தனியாகவா போகப் போறீங்க?''

'' எனக்குப் பயமில்லே. இறந்தாலும் எனக்கு வெற்றி. அந்தப் பாவியைக் கொன்று விட்டால் இரட்டிப்பு வெற்றி.''

''அம்மா, என்னை விட்டு விட்டா போறீங்க!'' என்று சொல்லும்போதே சண்பகத்துக்கு அழுகை வந்து விட்டது.

''அநியாயமாக நீ ஏன் சாக வேண்டும்? பாம்பு தீண்டலாம், புலி மேலே விழலாம், அம்பும் பாயலாம்.''


''ஆனால் என்ன? உங்களுக்கு ஆகிறது எனக்கும் ஆகட்டும். என்னைத் தடுத்தால் பாம்பாட்டி மருதன் விஷம் தடவிக்கொடுத்த அம்பு என்கிட்டே இருக்குது. ஆமாம், சொல்லி விட்டேன்! என்னை விட்டுப் போக உங்களுக்கு எப்படித்தான் மனம் வருது?'' என்று சண்பகம் அழ ஆரம்பித்து விட்டாள்.

''சரி, நீயும் வா, சத்தம் போடாதே. இரண்டு சுளுந்துகளை எடுத்துக் கொள். நான் முந்திப் போய் விடுகிறேன். மலை அரசிகளில் உயிரை மதிக்காத வீர மாதர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்று உலகம் அறியட்டும்!'' என்று கூறி நகர்ந்தாள்.

அரைமணி நேரத்துக்குள் சறுக்குப்பாறையில் வேட்டை வேடம் பூண்ட இரு பெண்களும் சருனி ஓடையை நோக்கிச் சென்றனர். பேய்க் காற்றடித்து, மேகங்களைக் கலைத்து, மழையைத் தடுத்துவிட்ட போதிலும், இருள் அந்தப் பிரதேசத்தில் கவிழ்ந்து கொண்டது. சுளுந்து வெளிச்சத்தால் அவர்கள் ஒற்றையடிப் பாதையில், அடிமேல் அடி வைத்து, மங்கை முன்னும் சண்பகம் பின்னுமாக

ஆசிரியர்களுக்கு அஞ்சலி

இன்று துள்ளித் திரிந்து ஆனந்தமாய் விளையாடும் குழந்தைகளின் கையிலேதான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறதென்றால் அந்தக் குழந்தைகளின் உடல் — உள்ள வளர்ச்சியை அருகிலிருந்து கண்காணிக்கும் ஆசிரியப் பெருமக்கள்தான் பாரதத்தின் வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கப் போகிறவர்கள் எனலாம். இப்படிப்பட்ட பெரும் பொறுப்பை மேற்கொண்டுள்ள உபாத்தியாயர்கள் செல்வச் சிறப்புடன் வாழ நினைப்பவர்களல்ல; ஏழைமையில் உழலாமல் இருந்தாலே போதும் என எண்ணுபவர்கள்தான். அத்தகையோரிடம் பெற்றோர்கள் பண்புடன் பழகிப் பிள்ளைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். சமுதாயத்தில் தங்களுக்கு ஓர் உயரிய ஸ்தானம் உண்டு என்று ஆசிரியர்கள் உணரும் வகையில் மதிப்பும் மரியாதையும் கொடுத்து அன்பு செலுத்தவும் வேண்டும். இந்தக் கடமையை, பாரதத்தின் ராஷ்டிரபதியாகவும் உப ராஷ்டிரபதியாகவும் முன்னாள் ஆசிரியர்களையே தேர்ந்தெடுத்த மக்கள் மறக்கவில்லை. ஒவ்வொரு வருஷமும் இன்றைய ராஷ்டிரபதியின் பிறந்த நாளாகிய செப்டம்பர் ஐந்தாம் தேதியை 'ஆசிரியர்கள் தின'மாகக் கொண்டாடுவதுடன் நாடெங்கிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் எண்பத்தைந்து பள்ளி ஆசிரியர்களுக்கு நற்சான்றுப் பத்திரமும் ரூபாய் ஐந்நூறு ரொக்கப் பரிசும் ராஷ்டிரபதியைக் கொண்டே அளிக்கச் செய்து ஆசிரியர் சமூகத்தைக் கௌரவிக்கிறார்கள். ஆசிரியர் தினத்தன்று பிரதமருக்குக் கொடி அணிவிக்கப்படுவதையே அருகிலுள்ள படத்தில் காண்கிறீர்கள்.





''ஒரு ராஜிநாமாப் படலத்துக்கப்புறம் 14 காரட்டிலிருந்து 18 காரட் தங்கத்துக்குச் சர்க்கார் வந்திடுவாங்க போலிருக்கே!''

''அப்ப இருபத்திரண்டு காரட்டுக்கு வர ணும்னு இன்னொரு ராஜிநாமாப் படலம் ஆரம்பிக்கணுமோ?''

மெள்ள நடந்தனர். இடையிடையே ஒரு சல சலப்பு ஏற்படும். அவர்களுக்குச் சுமார் ஐம்பது அடிக்கு முன் ஒரு பெரிய மிருகம் குறுக்கே ஓடுவதையும் அவர்கள் கவனித் தார்கள். ஆனால் அஞ்சவில்லை; அநேகமாய் முக்கால் வழியைக் கடந்து விட்டார்கள். சகுனி ஓடை இன்னும் ஒரு மைல்தான் இருக் கும். இங்கிருந்து வண்டிப் பாதையும் ஒன்றோ டொன்று ஒட்டினாற் போல் சென்றன. இடை யில் நூறடி தூரத்துக்கு மேல் இராது.

இப்போது இருட்டில் ஒரு வண்டிச் சக்கரம் மணலில் ''நர நர''வென்று உருளும் ஓசை கேட்டது. மரங்களின் அடைப்பால், சுளுந் தின் ஒளி அப்பால் இருந்தவர்களுக்குத் தென் பட முடியாமல் இருந்தபோதிலும் அவர்கள் உடனே சுளுந்துகளைத் தரை மட்டத்துக்குத் தாழ்த்தி, உற்றுக் கவனித்தார்கள். வண்டிக் குப்பின், 'மினுக், மினுக்' என்று எரியும் சில விளக்குகள் தென்பட்டன. பிறகு பல்லக்குப் போன்ற இரண்டொரு வாகனங்கள் நகர்ந்து வருவது போலவும் இருந்தது.

''வெளிச்சமில்லாமல் கடைசி வரையிலே எப்படியப்பா போகிறது?'' என்ற பேச்சு கேட்டது. வண்டிக்காரன் போலும்.

''மரமோ, மட்டையோ கொளுத்தாமல் முடியாது. காடும், கல்லும், இருட்டும் மெய்யாலும் அவங்க திருட்டுக் கலியாணம் போலத்தான் இருக்குது'' என்றான் மற் றொருவன்.

மங்கையர்க்கரசிக்கு ஆத்திரம் பொங்கி எழுந்தது. எரியும் சுளுந்துகளை, அணையாத படி, தரை மட்டத்துக்கு அரை அடி உயரத் துக்குப் படர்ந்திருந்த முட்செடியின் மீது சாத்தி வைத்தாள்.

பிறகு சமீபத்திலிருந்த ஒரு பழுத்த மரத் தின் மறைவிலிருந்து வந்து உரக்கக் கூவினாள். ''ஏ, துரைசிங்கப் பதரே! நில்! உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன். எங்கள் குல தருமம் புலியையும் எச்சரிக்கை இல்லாமல் கொல்ல மாட்டோம். அதனாலே, இதோ, இது உனக்கு எச்சரிக்கை அம்பு!'' ஓர் அம்பு ''விஸ்'' என்று ஆகாயத்தில் பறந்தது.

''மலையப்பா! மங்கையின் குரல் போல் இருக்கிறதே!'' என்றாள் பக்கத்தில் இருந்த ஒரு பெண்மணி மிகப் பதற்றத்துடன். மறு கணத்தில், எடுத்த அம்பு மங்கையர்க்கரசி யின் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. ''அத்தே!'' என்று அவள் அலறினாள்.

''நீ ஏன் இந்தக் காட்டுக்குள் தனியாய் வந்தாய்?'' என்று மலையப்பன் பரிவோடும் கோபத்தோடும் கேட்டான். அவளால் பதில் கூற முடிய வில்லை. தேம்பலும் அழுகையுமே அதிகரித்தன.

அவளுக்குப் பதிலாகச் சண்பகம் சொன் னாள்: ''துரையே! நீங்கள் எல்லாரும் இருட் டும் வரையில் வராததினால், பெரிய துரைச்சி அம்மா நடுங்கிக்கிட்டு இருந்தாங்க. அப்போ ஒரு ஆள் வந்து துரைசிங்கம் ஆட்களைச் சேர்த்துக்கிட்டு உங்களையெல்லாம் முறியடிச் சிட்டு, சின்ன துரைச்சிக்குத் தாலி கட்ட வந்துக்கிட்டு இருக்கான்னு சொன்னான்.....''

''அட, திருட்டுப் பயலே! அப்படியா சொன் னான்? நீங்கள் அதை எப்படி நம்பினீர்கள்? குழப்பத்தை உண்டாக்கப் புரளி கட்டி விட் டிருப்பான். என் பேரைச் சொன்னாலே அவன் காத வழி ஓடுவானே? அதற்காகவா நீங்கள் புறப்பட்டு வந்தீங்க?''

''சின்ன துரைச்சியை அடக்க முடியவில்லை, துரையே! அம்மாவிடம் சொல்லாமல்,— துரைசிங்கத்தைப் பழிக்குப் பழி வாங்கவேணு மின்னு புறப்பட்டு விட்டாள். நான் என்ன செய்யறது?'' இதற்குள் மங்கையர்க்கரசி சமாளித்துக் கொண்டு, சண்பகத்துடன், மலையப்பன் அருகே வந்து நின்றாள்.

மணமக்கள் மெய்ம்மறந்து ஒருவரை ஒருவர் நோக்கியவாறு சில கணங்கள் நின்ற னர். மறுபடியும் கண்களில் நீர் பொங்கி வரவே, மங்கையர்க்கரசி, வில், அம்பு முதலிய வற்றை மலையப்பனிடம் கொடுத்து விட்டு, அத்தையின் தோளில் சாய்ந்து விம்மினாள்.

''பகலில் வருவதாகச் சொல்லி விட்டு, ஏன் — ஏன் இவ்வளவு தாமதம்....?''

''ஐயோ, மங்கை! இந்தச் சகுனி ஓடை, தன் சகுனி வேலையைச் செய்து விட்டதே! பகலில் பொங்கின ஓடை, இது வரையிலும் அதைத் தாண்ட முடியாமல் செய்து விட் டதே!'' என்றான் அத்தை.

பிறகு அத்திருமணக் கூட்டம் ஊர்வலம் போல், ஆரவாரத்துடன் திருமலைக்குச் சென்றது.


உல்லாசத்திற்கு
உயர்ந்தவை!



மாடல் பிஎக்ஸ்எஸ்-338
(போர்டபிள் செட்)
8-ட்ரான்ஸிஸ்டர் 2-பாண்டு
குரல் கட்டுப்பாடு
எக்ஸைஸ் டூட்டி உள்பட ரூ. 365
(வரிகள் தனி) உறை தனி விலை

Sharp
JHANKAR

ஹயாகாவா எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
ஜப்பான் தொழில் நுட்பக்
கூட்டுறவோடு தயாரிக்கப்பட்டது.



மாடல் யூஸி-143 (மேஜை மாடல்)
4-ட்யூப் 3-பாண்டு
விசேஷப் பாதுகாப்புவாய்ந்த
ஸர்க்யூட்
எக்ஸைஸ்.டூட்டி உள்பட ரூ. 210
(வரிகள் தனி)





மாடல் பிஇஸட்-490
(போர்டபிள் செட்) 9-ட்ரான்
ஸிஸ்டர் 4-பாண்டு நேர்த்தியான
ட்யூனிங் & ரேடிக்கேட்டர்
எக்ஸைஸ் டூட்டி உள்பட ரூ. 415
(வரிகள் தனி) உறை தனி விலை

JHANKAR

டிரான்ஸிஸ்டர் ரேடியோக்கள்
தயாரிப்பதில் தலைசிறந்தவர்கள்;
ரேடியோ டிவைஸஸ்,
இண்டியன் ப்ளாஸ்டிக்ஸ் லிட்.,
பம்பாய்—67

ASP/JR-40 TAM

உங்கள் அருகாமையிலுள்ள ஷார்ப்-ஜங்கார் டீலரை அணுகுங்கள்

மதராஸ், ஆந்திரா, கேரளா, மைசூர் பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள்

ஜே.டி. போன் கம்பெனி, 13. தங்கசாலைத் தெரு, மதராஸ்

பற்றற்றான் பற்று

வி. கோபாலன்

கூட்டம் ஒருகணம் மெய்ம்மறந்திருந்தது.

"மெய்யன்பர்களே! கடல் சூழ்ந்த இவ்வுலகில் நித்த நித்தம் ஓயாது உழைத்துப் பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளிச் சேர்த்து வைத்த ஆயிரமாயிரம் உள்ளங்களுக்கும் கூட அந்தப் பொன்னாலும் பொருளாலும் அடைய முடியாத ஒன்றும் உண்டா? ஏன், இல்லை? ஒன்றே ஒன்று இருக்கிறது! அதுதான் மன அமைதி. மடத்தில் முடங்கிக் கிடக்கும் பரதேசியால் அந்த அமைதியை அடைந்து விட முடிகிறது. ஆனால் ஆயிரம் படைத்த அதிபதிகளால் அதை அடைய முடிவதில்லை. அந்த அமைதியை — ஆத்ம ஆனந்தத்தைப் பெறப் பொன்னும் பொருளும் அல்லாது வேறு ஒரு விலை கொடுக்க வேண்டும். அந்த விலைதான் ஆசை. அவ்வாசையை-பற்றை-விட்டுவிட்டால் நாம் தேடும் அமைதி நம் கண்ணெதிரே வந்து நிற்கும். அந்த அமைதியை அடையப் பற்றுக்கள் எதுவுமில்லாத பரம்பொருளிடம் பற்றுதல் கொண்டு, மற்றப் பொய்யான ஆசைகளை விலக்கி மெய்யான—நிலையான அமைதியை அடைய வேண்டும். இதைத்தான் நம் தெய்வப் புலவரும், 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' எனப் பகர்ந்தார்..."

எங்கோ ஒரு மூலையில் அழுது கொண்டிருந்த பச்சைக் குழந்தைகூடத் தனது அழுகையை நிறுத்தி விட்டது.

கணீரென்ற குரல்; பிரகாசமான முகம்; நல்ல உயரம்; உயரத்துக்கு ஏற்ற பருமன்; நீல வானில் மிளிரும் நிலவைப் போல் நெற்றியில் வெள்ளை வெளேரென்ற மூன்று விபூதிப் பட்டைகள். அதன் நடுவே கண்ணில் மணியைப் போல ஒரு குங்குமப் பொட்டு; உடலைக் காக்கும் காவி வஸ்திரம்; உருத்திராட்சங்கள் உருள, உதடு அசைகிறதோ இல்லையோ என்ற சந்தேக நிலையில் உருகிய உள்ளத்திலிருந்து பெருகிவரும் 'நமசிவாய' நாமம். இதுதான் அந்த வட்டாரத்தில் 'விபூதி சுவாமிகள்' என்று பெயர் பெற்ற பரமானந்தப் பரதேசியாரின் திருக்கோலம். இதைத் தவிர கனிவான அந்தப் பார்வையும் அவருக்கே சொந்தம்!

சொற்பொழிவு முடிந்ததும் விபூதி சுவாமிகளைக் கூட்டம் சூழ்ந்து கொண்டு விட்டது. இமைகளைக் கொஞ்சம் தாழ்த்தினால் உட்காருங்கள் என்று அர்த்தமோ? சுவாமிகளைச் சூழ்ந்துகொண்டு எல்லோரும் உட்கார்ந்தனர்.

"மூன்று நாட்களாய்க் காய்ச்சலுங்க. மழையிலே நெனைஞ்சுகிட்டு வரப்பு வெட்டினேனுங்க. அன்னைக்கு ராவு புடிச்ச சொரம், ஒடம்பு நோவுங்க...." — கூட்டத்தில் ஒருவன் எழுந்திருக்க முடியாமல் எழுந்து நின்று கொண்டு கூறுகிறான்.

கையமர்த்தி அவனை உட்கார வைத்து விட்டு ஒரு கணம் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் மூழ்குகிறார் சுவாமிகள். அடுத்த கணம் மலர்ந்த முகத்துடன் தட்டிலிருந்து கொஞ்சம் விபூதியை எடுத்து அவனிடம் தருகிறார் அவர். அவன் பணிவுடன் அந்தப் பிரசாதத்தை — மருந்தைப் பெற்றுக் கொண்டு செல்கிறான். அவன் நடையில் தான் என்ன புதிய திடம்? சற்று முன்பு இவனுக்குத்தானா உடல் நலமில்லை?

"ராவிலே தூக்கமே இல்லீங்க சாமி."

"பகலிலே நன்றாக வேலை செய்யேன், தம்பி!" — முகத்தில் சிறு புன்னகை ஒன்றை நெளிய விட்டபடியே அந்த வாலிபனுக்கு இதமாகச் சொல்கிறார் சுவாமிகள்.

அதே தியானம்; அதே விபூதி!

"சுவாமி! என் புருஷன் இந்தக் கிராமம் பிடிக்கல்லேன்னு பட்டணம் போச்சுங்க. போய் மாசம் ஆறு ஆச்சு. ஒரு தகவலும் இல்லீங்க." — அந்தக் கூட்டத்தில் அத்தனை பேர்களுக்கு நடுவே பேச வெட்கி வெந்து கொண்டு சொல்கிறாள் சோகமே உருவாக நிற்கும் அந்த அபலைப் பெண்மணி.

துறவியின் முகத்திலும் துயரம் படர்கின்றது. கண்கள் வேதனை நிரம்பிய இந்த உலகத்தைக் காணச் சகிக்காது மூடிக் கொள்கின்றன. நெற்றிப் பரப்பில் சுருக்கங்கள் தோன்றி மறைகிறது. விரல்கள் விபூதியை அள்ளி அந்தப் பெண்ணிடம் கொடுக்கின்றன.

"கவலைப்படாதே அம்மா! ஆறு மாதத்துக்கு மேலே அவனுக்குப் பட்டணமும் அலுத்து விடும். நிச்சயம் அவன் சீக்கிரம் உன்கிட்டேயே வந்து விடுவான்."

சுவாமியார் நாவினால் தன் கணவன் வந்து விடுவான் என்று சொல்லக் கேட்டதும் அந்தப் பெண்ணின் மனத்தில் கணவன் வந்து விட்டதாகவே நம்பிக்கை. விபூதியைப் பயபக்தியுடன் நெற்றியில் இட்டுக் கொண்டு புதிய தெம்புடன் நடக்கிறாள் அவள்.

அவளுக்கு மட்டும் அல்ல. சிவப்பு மலை கிராமவாசிகள் எல்லோருக்குமே விபூதிசுவாமிகளின் வார்த்தையிலும், விபூதியிலும் அப்படி ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை. சிவன் கோவிலில் தினமும் சுவாமிகளின் உபன்யாசம் முடிந்ததும் அவரது அருட்பிரசாதத்துக்கும் அன்பு வார்த்தைகளுக்கும் அப்படி ஒரு கூட்டம்!

எல்லோரையும் விசாரித்து அனுப்பி விட்டு இறைவனை வணங்கிப் பிறகு கோவில் பிராகாரத்துக்கு வந்தார் சுவாமிகள். பிரசங்கத்தில் காணிக்கையாக வந்த வாழைப்பழங்களை விநியோகித்தது போக மீதியைக் கோவில் பசுவுக்கு அளிப்பது அவரது தினசரி வழக்கம்.

"நமஸ்காரம் சுவாமி!" என்று சொல்லிக் கொண்டே அங்கு வந்தார் மணியக்காரர் மார்க்கசகாயம்.

"யாரு? மார்க்கசகாயமா! என்னப்பா, என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லே சுவாமி. உங்களுக்கு ஒரு கடுதாசு வந்திருக்கு."

"என்ன! கடுதாசா.... எனக்கா?"

"ஆமாம், சுவாமி! உங்க கிராமம் பன்னீர் மலைக்கு இந்தக் கடுதாசு வந்திருந்ததாம். நம்ப மடப்பள்ளிக்காரர் சோணாசலம் உளுந்து அறுவடையைப் பார்த்து விட்டு வரேன்னு பன்னீர் மலைக்குப் போய் வந்தாருங்க.

அப்போ போஸ்ட்மாஸ்டர் ஐயா அவரு மூலம் நீங்க இங்கே இருக்கீங்க என்று தெரிஞ்சுக்கிட்டு உங்க பெயருக்கு அங்கே வந்திருந்த இந்தக் கடுதாசை உங்கிட்டே கொடுக்கச் சொல்லி அவருகிட்டே கொடுத்தாராம்.''

பரமானந்தப் பரதேசியாருக்கு அதைக் கேட்க வியப்பாகவே இருந்தது. மணியக்காரரிடம் இருந்து கடிதத்தை வாங்கிக் கொண்டு கோவில் பிராகாரத்தில் இருந்த நந்தவனத்தின் நடுவே போடப்பட்டிருந்த தம் குடிலுக்குள் நுழைந்தார் அவர். சுருட்டி வைக்கப்பட்டிருந்த பாயை விரித்து அதில் அமர்ந்து கொண்டதும், அரிக்கேன் விளக்கு நாடாவைப் பெரிதாக்கி விட்டு, வெள்ளெழுத்துக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டார் அவர்.

கடிதத்தைப் பிரித்ததும் சுவாமிகளின் விழிகள் சற்று முன்னே வந்தன.

'என்ன?..' அவர் வியப்பு அதிகமாயது.

கொழும்பு,

அநேக நமஸ்காரங்கள். இத்தனை வருஷங்களுக்குப் பிறகு என் கடிதத்தைப் பார்ப்பதற்கு உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். உங்கள் வார்த்தையைக் கேட்காமல் நான் தான்தோன்றித்தனமாக அண்ணனை நம்பி இங்கு ஓடி வந்து விட்டதற்கு நல்ல தண்டனையை அடைந்து விட்டேன். இப்போது என் அண்ணன் சம்சாரியாக ஆகிவிட்டான். இங்கு நான் அவர்களுக்கு ஓர் அநாவசியமான பொருளாகவே இருக்கிறேன். ஆனால் இதற்காக நான் கொஞ்சமும் வருத்தப்படவில்லை. உங்களுக்கு நான் செய்த துரோகத்துக்கு இந்தத் தண்டனை எனக்குப் போதவே போதாது. இப்போது நான் காச நோயால் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறேன். என் முடிவைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நமது குழந்தை இபாருக்காகத்தான் நான் அழுகிறேன். இபாரு உங்கள் சொத்து. உங்களிடமிருந்து உங்களை வெறுத்து ஓடிப்போன நான் என் அறியாமைக்காக இப்போது அழுது அழுகிறேன். அதற்கெல்லாம் பிராயச்சித்தமாக உங்கள் குழந்தையை இன்று தனியாகக் கப்பலேற்றி விடுகிறேன். அவனிடம் வழியெல்லாம் சொல்லியிருக்கிறேன். அவனே உங்களிடம் வந்து விடுவான். அவனைக் கைவிடாதீர்கள். நான் எப்படியோ போகிறேன். நம் குழந்தையை நல்ல மனிதனாக உருவாக்குங்கள். அவன் என்னிடம் இருந்தால் என் குணம் அவனுக்கும் ஒட்டி விடும். என்னை மன்னியுங்கள்.

—ரஞ்சிதம்.

சுவாமிகளுக்குத் தலை சுற்றியது உடல் பதறியது. உள்ளம் சிதறியது. 'ஈசுவரா.......! இது என்ன சோதனை?' — சுவாமிகள் மனம் கலங்கிப் பரிதவித்தார். விபூதி சுவாமிகளின் மனக் கண்களின் முன்னால் பத்து வருஷங்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் விஸ்வரூபம் எடுத்து விரிந்தன.

பன்னீர்மலை கிராமத்தில் யாரையாவது, 'பரமானந்தத்தைத் தெரியுமுங்களா?' என்று கேட்டால், 'யாரு? சிவானந்தம் பேரப் புள்ளைதானே! பையன் ரொம்ப யோக்கியமுங்க. தான் உண்டு. தன் காரியம் உண்டு என்று இருப்பான். வாக்கு சுத்தம் உள்ளவன். ஒரு தப்புத்தண்டா காரியம் ஏதாவது.....ம்...பேசப்படாது' என்று தான் சொல்வார்கள். பரமானந்தத்



தின் ஒரே உறவுக்காரரான அவனுடைய பாட்டனார் சிவானந்தம் பரமானந்தத்தை ரஞ்சிதத்தின் கையில் பிடித்துக் கொடுத்து விட்டுக் கண்ணை மூடிவிட்டார். ரஞ்சிதத்துக்குப் பரமானந்தத்தின் அப்பாவித்தனம் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நாகரிகமான வாழ்வு விழைந்த அவள் மனம் பட்டிக்காட்டுப் பரமானந்தத்தை வெறுத்ததில் ஆச்சரியம் இல்லைதான்! பரமானந்தத்துக்கு ரஞ்சிதம் சொல்வது ஒன்றும் புரியவில்லை. 'இந்தப் பயாஸ்கோப்பை யெல்லாம் பார்த்து ரொம்பக் கெட்டுப் போயிட்டே புள்ளே நீ' என்று மட்டும் பதில் சொல்லுவான் பரமானந்தம். நடுவே அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்து விட்டது. ஒரு நாள் கொழும்பி லிருந்து வந்த தன் அண்ணனோடு, தன் குழந்தையையும் எடுத்துக் கொண்டு ரஞ்சிதம் கொழும்புக்கே போய் விட்டாள். பரமானந்தம் என்ன சொல்லியும் பிரயோசனம் இல்லை. அவளையே பிடிக்காதபோது அவள் வார்த்தைகள் மட்டும் அவனுக்கு எப்படிப் பிடிக்கும்?

ரஞ்சிதத்தின் பிரிவு பரமானந்தத்தின் வாழ்க்கையையே வெற்று வெளியாக்கி விட்டது. கொஞ்ச நாட்களுக்கு விரக்தியுடன் வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டிருந்தான் அவன். இறுதியில் ஒரு நாள் சிவப்பு மலை ஈசுவரன் கோயிலுக்குச் சென்ற பரமானந்தம் துயரத்தை யெல்லாம் துறந்து காவி அணிந்து சந்நியாசியாக ஆகிவிட்டார். முதலில் பரமானந்தப் பரதேசி என்று அந்த வட்டாரத்து மக்களால் அழைக்கப்பட்ட அவர், கொஞ்ச நாட்களில் தமது கனிவான வார்த்தைகளாலும் இறைவனைத் தியானித்து அவன் அருளுடன் அளிக்கும் தனிச் சிறப்பு வாய்ந்த விபூதி விநியோகத்தாலும் 'விபூதி சுவாமிகள்' என்று அபிமானத்துடன் அழைக்கப்பட்டார்.

தம்மை அறியாமலே தம் இமையோரங்களை எட்டிப் பார்க்கும் நீர்ப் படலத்தைத் துடைத்துக் கொண்ட சுவாமிகள் தமது நடுங்கும் கரங்களால் மேல்துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அதில் சாய்ந்தார்.

'ஈசுவரா....! இது என்ன விளையாட்டு? ஊரறிந்த பரதேசியாகக் காவி அணிந்த என்னுடன் நாளை என் மகனும் சேர்ந்து வசித்தால் நான் சந்நியாசி என்று யார் நம்புவார்கள்? மரத்தில் படரலாம் என்று ஓடி வரும் அந்தப் பச்சைக் கொடிக்கு நான் எங்கிருந்து இடம் கொடுப்பேன்? என்னைச் சோதிக்காதே. அவன் தேடி வரும் தந்தையாக நீதான் இருக்க வேண்டும்.'

வானத்தில் விடிவெள்ளி முளைத்தவுடன் வழக்கம் போல் எழுந்திருந்து உஷத்கால பூஜைக்காகப் புஷ்பங்களைப் பறிக்கக் குடலையை எடுத்துக் கொண்டு நந்தவனத்துக்குள் நுழைந்தார் சுவாமிகள். குடலை நிரம்பியவுடன் ஈசுவரன் சந்நிதிக்குச் சென்று கைகூப்பித் தியானத்தில் ஆழ்ந்தார் அவர். மெய்ம் மறந்து அவனிடம் லயித்து இறைவனிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார் சுவாமிகள்.

''ஈசுவரா, சரணம்!''

குரலையும் அதைத் தொடர்ந்து யாரோ படபடவென்று கன்னத்தில் போட்டுக்கொள்ளும் சத்தமும் கேட்கவே திகைத்துத் திரும்பினார் சுவாமிகள். ஒரு சிறுவன் பயபக்தியுடன் இறைவன் சந்நிதியில் நின்றுகொண் டிருந்தான். கோவில் பிராகாரத்துக்கு வந்தார் சுவாமிகள்.

''சுவாமி!''

குரல் கேட்டுத் திரும்பினார் சுவாமிகள்.

''யாரப்பா நீ? உனக்கு என்ன வேண்டும்?''

''சுவாமி! எனக்கு ஒரு சந்தேகம்....''

''சந்தேகமா? என்ன அது?''

''நாம் துன்பத்தை மறந்து கடவுளிடம் பற்றுக் கொள்ள வேண்டும். இல்லையா?''

சிறுவனது பேச்சைக் கேட்டதும் சுவாமிகளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ''ஆமாம், தம்பி! ரொம்ப அழகாகச் சொல்லி விட்டாயே. பலே!'' என்றார் அவர்.

''நேற்று இரவு உங்கள் உபன்யாசத்தைக் கேட்டுத்தான் நான் இந்த உண்மையை உணர்ந்து கொண்டேன் சுவாமி.''

''ஓ! அப்படியா! நீகூட உபந்நியாசத்துக்கு வந்திருந்தாயா ?''

''ஆமாம், சுவாமி'' என்ற அந்தச் சிறுவன் சில நிமிஷங்கள் மௌனமாக இருந்து விட்டுப் பிறகு மெதுவாக, ''சுவாமி!'' என்றான்.

''என்னப்பா?''

''சுவாமி! நான் உங்கள் உபன்யாசத்தைக் கேட்டபிறகு என் மனத்திலிருந்த அழுக்குகளை அகற்றி விட்டேன். கலங்கிப் போயிருந்த என் மனம் தெளிந்து விட்டது. உள்ளம் நிர்மலமாகி விட்டது. உடல் சோர்வு கூட மறைந்து விட்டது. இனிமேல் நான் உங்களுடனேயே இருந்து இறைவனைத் துதிக்க விரும்புகிறேன். தயவுசெய்து என்னைத் தங்கள் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

சுவாமிகள் கடகட வென்று சிரித்து விட்டார். பத்துவயதுப் பாலகன் பரதேசி ஆவதா?

''அது சரி தம்பி. நீ யார்? உன் தாய் தகப்பனார் யார்?''

''அது ஒரு சோகக் கதை சுவாமி. என் பெயர் தியாகு. என் அப்பா யார், அவர் எங்கே இப்போ இருக்கிறார் என்று எனக்கே தெரியவில்லை. என் அம்மா கொழும்பிலே இருக்கிறாள். என் அப்பாவைத் தேடிக் கொண்டுதான் நான் கொழும்பிலிருந்து இங்கே வந்தேன். உங்கள் உபன்யாசத்தைக் கேட்ட பிறகு என் மனம் எதையும் விரும்பவில்லை. உங்களுடனேயே இருந்து இறைவனைத் துதிக்க விரும்புகிறேன். என்னை நீங்கள் உங்கள் சீடனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.''


சுவாமிகளுக்கு மெய் சிலிர்த்தது.

'என்ன இவன் என் மகன் தியாகுவா ? ஈசுவரா! என்னே உன் கருணை! பற்றுகளை விட்டு விட்டு மகனைக்கூடக் காண விரும்பாமல் தவித்த என்னிடம் என் மகனை மகனாக இல்லாமல் மனம் தெளிந்த சீடனாகவே அனுப்பி விட்டாயே. பற்றற்றவனாகிய உன்னிடம் பற்றுக் கொண்டு என்றும் உன் அடியனாக இருந்து கொண்டு இந்த மகனை - இல்லை, சிஷ்யனை ஏற்றுக் கொள்கிறேன்.'

பரமானந்தப் பரதேசியார் அன்புடன் அந்தச் சீடனை அணைத்துக் கொண்டார். அதை ஆமோதிப்பது போல் கணீர் கணீர் என்று ஒலித்தது உஷத்கால பூஜை மணி !

பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் ஏழு

வீரக் கல்

மண்ணுக்கு அடியிலே மறைந்திருக்கும் மலர்ச் செடியின் வேர்கள் ஒவ்வொரு கணமும் எத்தனை எத்தனையோ சோதனைகளுக்கு உள்ளாகின்றன. எவ்வளவோ எதிர்ப்புக்களையும் ஏமாற்றங்களையும், கொடுமைகளையும், வஞ்சனைகளையும் சமாளிக்கின்றன. செடியின் வாழ்வுக்காகப் பூமிக்கு அடியில் அவை இடைவிடாது ஒரு பெரும் போராட்டமே நிகழ்த்துகின்றன. ஆனால் செடியின் கொண்டையில் மலரும் பூக்களுக்கு அதெல்லாம் தெரிகிறதா? அல்லது அதையெல்லாம் பொருட்படுத்துகின்றனவா? இல்லை. பச்சைப் பசுந் தளிர்ப் பரப்புக்கிடையே அவை விதத்துக்கொரு வர்ண ஜாலம் காட்டுவதும், வேளைக்கொரு புன்னகை சிந்துவதும், தளிர இளங் காற்றில் நாணிக் கோணி நர்த்தனிப்பதும், நறுமணத்தை வாரி இறைப்பதும், உணர்ச்சிப் போதையில் தேனைச் சொரிவதுமாக உல்லாச வாழ்க்கை வாழ்கின்றன. தாம் சார்ந்து நிற்கும் பூமிக்கு அடியிலே என்ன நிகழ்கிறது என்பது பற்றியோ, தம்மைத் தாங்கி நிற்கும் வேர்கள் என்ன செய்கின்றன என்பது பற்றியோ அவற்றுக்குக் கவலையே இருப்பதில்லை.


இப்படித்தான், தமது நாட்டிலே தம்மைச் சார்ந்தவர்களிடையேயும்தாம் சார்ந்துள்ளவர்களிடையேயும் என்ன நடக்கிறதென்றே தெரியாமல்—தெரிந்து கொள்ள நாட்டமும் இல்லாமல்—தம்முடைய காதல் சாம்ராஜ்யத்தின் கதவுகளைப் பரக்கத் திறந்துகொண்டு பிரவேசித்து, அங்கே இனித்த பேச்சாலும், பனித்த பார்வையாலும், கன்னல் ரசப் பண்ணாலும், கனிச்சாற்றுச் சிரிப்பாலும், கனவாலும், கற்பனையாலும் இன்பப் பேராட்சி நடத்தி, அதனால் விளைந்த சுகானுபவங்களை அறுவடை செய்வதிலேயே பல தினங்களைக் கடத்திக் கொண்டிருந்த பல்லவ இளவரசன் கோவிந்தவர்மனும் சோழ இளவரசி இளங்கோப்பிச்சியும் அன்று மாலைதான் அந்த மாயப் பிரேம வாசத்திலிருந்து விடுபட்டவர்களாய் வெளியே வந்தார்கள்.

வானம் மப்பும் மந்தாரமுமாக இருண்டு கிடந்தது. தண்ணென்று வீசிய தென்றல் காற்று வறண்டு போய் எங்கும் ஒருவிதப் புழுக்கம் செறிந்தது. இடியும் மின்னலுமாக எந்த விநாடியும் மழை பொழிந்து கொட்டலாம் என்பதற்கான அறிகுறிகள் தோன்றலாயின.

ஆலம்பாக்கம் இளங்காரிக்குடையாரின் இல்லத்துப் பின்புறத்தே அமைந்த சிறியதொரு பூந்தோட்டத்தில் சிந்தனை வயப்பட்டவனாய், தனிமையில் அமர்ந்திருந்த கோவிந்தவர்மன் மெல்லத் தலைதூக்கி அந்தக் கார் பருவச் சூழலை வெறித்து நோக்கினான்.

எங்கோ, சோக மயமான பண்ணொலி யொன்று மிக மென்மையாக எழுந்து ஒலிப்பது கேட்டது. அவனைப் போலவே சோழ இளவரசி இளங்கோப்பிச்சியும் அந்த எளிய இல்லத்தின் ஏதோ ஓர் அறையில் அமர்ந்து, கடந்த காலத்தின் துன்பகரமான எண்ணங்களில் மூழ்கி அதனால் ஏற்பட்ட துயரப் புழுக்கத்தில் தன்னை மறந்து பாடிக் கொண்டிருக்கிறாள் போலும்!

நெல்வேலிப் போர் முடிவடைந்த உடனேயே பெருவளநல்லூரில் பரமேசுவரவர்மன் சளுக்கியருடன் போர் தொடுத்த சேதி கேட்டுப் பெரிதும் பரபரப்படைந்த கோவிந்தவர்மன், மேற்கொண்டு தான் என்ன செய்வது என்று குழம்பித் தவித்தபோது, பழையாறைச் சோழரிடமிருந்து சம்புவராயன் எடுத்து வந்த சேதி அவனைத் திடுக்குற வைத்து விட்டது. 'பெருவளநல்லூர்ப் போரில் ஈடுபடுத்த பாண்டியப் படைகளைக் கொண்டு வர வேண்டாம்; அத்துடன் எனது சோழியப் படைகளையும் கலைத்து விட வேண்டியது.' — பழையாறைச் சோழரின் இந்தத் திடீர் உத்தரவைக் கேட்டுக் குழப்பமும் கோபமும் அடைந்த அவன், நேரே பல்லவபுரத்துக்கு விரைந்து வந்தான். அங்கே, பழையாறைச் சோழர் தம்முடைய அந்த உத்தரவுக்கான காரணத்தை விளக்கிச் சொன்னதைக் கேட்டதும் அவனது கோபமெல்லாம் பரமேசுவரவர்மன்மேல் திரும்பியது. 'தீய நோக்கம் கொண்ட துரோகி! நன்றி கொன்ற சுயநலக்காரப் பாவி!' என்றெல்லாம் அவனை மனத்துக்குள் வசை பாடிக் குமுறிப் பொங்கிய அவன், பழையாறைச் சோழரின் யோசனைப்படி பெருவள நல்லூர்ப் போர்முனைக்குப் போகாமல் இந்த ஆலம்பாக்கம் இல்லத்திலேயே தங்கியிருந்து விட்டான். பிறகு பல்லவ—சளுக்கியப் போரில் பரமேசுவர வர்மன் வெற்றி பெற்ற சேதியை அவன் அறிந்து உள்ளூற மகிழ்ச்சி அடைந்தான் என்றாலும் அந்த மகத்தான வெற்றியில் தனக்குப் பங்கு இல்லாமல் போய் விட்டதே என்ற வருத்தம்



வெகுவாக வாட்டிப் பிழியலாயிற்று. தன் சகோதரனே தன்னைச் செல்லாக் காசாக்கித் தனக்கு நிரந்தரமான அவமானத்தைத் தேடித் தந்து விட்டானே என்று அவன்மீது முன்னிலும் அதிகமான வெறுப்பையும் குரோதத்தையும் வளர்த்துக் கொண்ட அவனுக்கு வாழ்க்கையே கசந்து விட்டது. அதனால் வெளியே தலை காட்டவும் வெட்கி இந்தச் சிறு இல்லத்திலேயே அடைந்து கிடந்த அவனை, சோழ இளவரசி இளங்கோப்பிச்சி மெல்ல மெல்லத் தேற்றித் தன் அன்பின் காந்த வட்டத்துக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டாள். அவளது காதல் அரவணைப்பிலே தன் துய

ரங்களையெல்லாம் மறந்து — அவற்றின் அடிப்படைகள் அனைத்தும் அற்ப மானவை என்ற போக்கில் — உல்லாச மாக நாட்களைக் கடத்தி வந்த அவ னுக்கு இன்று மீண்டும் பழைய கவலைகள் தோன்றி விட்டன. அந்தத் துன்ப மயமான கவலைகளில் தோய்ந்து தான் இதோ, துவண்டு உட்கார்ந்திருக் கிறான் அவன்!

இத்தனை காலமும் தன் சகோதர னை பரமேசுவரவர்மன் மீது அளப் பரிய அன்பும், பாசமும், பக்தியும், பணி வும், மதிப்பும், மரியாதையும் வைத்து நேசித்து வந்த அவன் இப்போது இந்த அளவுக்கு அவனை வெறுத்து விரோதிக் கும்படியாக, பழையாறைச் சோழர் அவனிடம் அப்படி என்னதான் சொல்லி விருப்பார் ?

அந்த விஷயத்தை அவன் மனத் தால் நினைத்துப் பார்க்கவே கூசினான். அப்படி நினைத்து விட்டாலோ அவனு டைய நெஞ்சம் எரிமலையாகக் குமுறும். இப்போதும் அத்தகைய குமுறல் ஏற் பட்டு விடவே, ''இருக்கட்டும், இருக் கட்டும்! எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து அவரைப் பழி வாங்காமல் விடமாட் டேன்!'' என்று ஆவேசக் கொந்தளிப் புடன் வாய்விட்டுக் கருவினான்.

''பல்லவ இளவரசர் யாரைப் பழி வாங்க இத்தனை பயங்கர சபதம் ஏற் கிறார்...?''

துணுக்குற்றுத் தலை நிமிர்ந்த கோவிந்தவர்மன், அங்கே இளநகை யுடன் வந்து நின்ற இளங்கோப்பிச்சி யைப் பார்த்துச் சினம் நீங்கியவனாய் எழுந்து சென்று அவளது மலர்க் கரத்தை மிருதுவாகப் பற்றி, ''உன் தந்தையார் வந்து விட்டாரா, இள வரசி?'' என்று ஏதோ ஓர் அவசர உணர்ச்சியுடன் வினவினான்.

''அவரை ஏன் இவ்வளவு ஆர்வத் தோடு எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று மெல்லச் சிரித்துக் கேட்டாள் இளங் கோப்பிச்சி.

''என்னுடையவும், அவருடையவும் எதிர்காலத்தைப் பற்றிய முடிவு ஒன்றை என்னிடம் இன்று தெரிவிப்ப தாகச் சொல்லிச் சென்றார். எனவே தான் அவரை ஒவ்வொரு விநாடியும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்.''

ஆழ்ந்த கவலையுடன் அவலப் புன் முறுவல் பூத்துப் பெருமூச்சு விட்ட இளங்கோப்பிச்சி, ''சிலருடைய வாழ்க் கையில் விதி குறுக்கிட்டுத் துன்பங்களை விதைக்கிறது; சிலர் தம் வாழ்க்கையில் தாமே குறுக்கிட்டு வேதனைகளை விளை வித்துக் கொள்கிறார்கள்!'' என்று எங்கோ பார்த்தவாறு தணிந்த குரலில் முணுமுணுத்தாள்.

''அப்படியானால் நானும் பழை யாறைச் சோழரும் தவறான முடிவில் இருக்கிறோம் என்பது உன் எண்ணமா, இளவரசி?'' என்று ஆக்கிரகத்துடன் பட படத்துக் கேட்டான்.

'' உண்மைகளைச் சிலர் தாமே தேடிச் சென்று அறிவார்கள்; மற்றும் சிலருக்குக் காலம்தான் அவற்றை எடுத் துக் காட்டி உணர்த்தும்!'' என்று இத மாகக் கூறிப் புன்னகை புரிந்த இளங் கோப்பிச்சி, ''என் தந்தையார் வந் திருக்கிறார். அதைத் தெரிவிக்கத்தான் இங்கு வந்தேன்'' என்றவாறு அவன் கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றாள்.

அந்த அழகிய இல்லத்தின் முன் வாசல் வேலியோரம் பச்சைக் குடை விரித்தாற்போல் வளர்ந்து நின்ற பவழ மல்லி மரமொன்றின் அடியில் சிறிய தொரு குழி பறித்திருக்க, அதன் எதிரே சோகமே வடிவாக ஒற்றை முழந்தா ளிட்டு அமர்ந்திருந்த பழையாறைச்


வாழ்க்கை ஒளிகளின்
வனப்பான அழகு
ஸான்போரைஸ்ட் பாப்ளின்ஸ்:
கோல்ட் ட்ரிங்க், ப்ளூபர்ட், எவர் ப்ரைட்,
குட் ஷைன்,
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா
தோதீஸ்: ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்,
ப்ளாடினம், காம்ராஜ்
ஸூட்டிங்ஸ்:
காபர்டீன்
ஜெசவான கலர் புட்டாக்கள்:
ப்ரிண்ட்ஸ்:
ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—ஷிரேவிலும்
புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

சோழர், நீண்ட சதுரப் பலகை போன்ற கல் ஒன்றை நிமிர்த்திப் பிடித்தவாறு அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்குச் சற்று அப்பால் ஆபத்துதவி சம்புவராயன் கையில் ஒரு மண் வெட்டியுடன் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான்.

ஆவலும் பரபரப்புமாக விரைந்து வந்த கோவிந்தவர்மன் இந்தக் காட்சியைக் கண்டு திகைப்புற்றவனாய் அப்படியே சமைந்து நின்று விட்டான். அவனுக்குப் பின்னால் வந்த இளங்கோப்பிச்சியும் அவனது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு நின்றாள். அவ்விருவரின் கண்களும், பழையாறைச் சோழர் நிமிர்த்திப் பிடித்திருந்த கல்லை வியப்புடன் நோக்கின.

அது ஒரு வீரக் கல். கடமை தவறாது அரிய வீரச் செயல் நிகழ்த்தி உயிர் துறந்தோருக்காக அவரது பெயரும், பீடும் எழுதி நாட்டப்படும் நினைவுச் சின்னம் அது. அந்தக் கல்லில், ஆபத்துதவி இளங்காரிக்குடையானின் அன்னையான மூதாட்டி அநந்தமதியின் உருவம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பெற்றிருந்தது. அவ்வுருவத்தின் இரு பக்கமும் இரண்டு குத்து விளக்குகள்; பின்னால் ஒரு பூக் கூடையும், ஒரு பானையும், ஒரு கத்தியும்; அவள் வீர சொர்க்கம் அடைந்தாள் என்பதற்கு அறிகுறியாக அவளது தலையின் இரு புறமும் இரண்டு கவரிகள் — இவை யாவும் அந்தக் கல்லில் அழகுறச் செதுக்கப்பெற்றிருந்தன. இவற்றின் கீழே, 'சளுக்கிய விநயாதித்தனின் வாளுக்குப் பலியாகவிருந்த பல்லவக் காடவன் மாதேவியையும், சோழ இளங்கோப் பிச்சியையும் காப்பதன் பொருட்டுத் தன் உயிரை நீத்த அநந்தமதி அம்மை இங்கே அதீதகரம் செய்விக்கப்பட்டாள்' என்னும் வரிகள் வெட்டப்பெற்றிருந்தன. கண்கலங்கி நீர் துளிக்க அவ்வீரக் கல்லையே பார்த்துக் கொண்டிருந்த பழையாறைச் சோழர், அதனைக் குழியில் நிமிர்த்தி வைத்துத் தம் கையாலேயே மண்ணைத் தள்ளி நட்டு விட்டு நிமிர்ந்து, சுற்றிலும் பாயாக உதிர்ந்து கிடந்த பவழமல்லிப் பூக்களை வாரித் தூவியவாறு, "வீரத் தாயே! உன் வீரம் செறிந்த மணித் திருவயிற்றில் நான் மைந்தனாகப் பிறக்கவில்லையே என்பதற்காக ஏங்குகிறேன்! ஆயினும் நீ பிறந்த வீரத் தமிழ் மண்ணில் நானும் பிறந்திருக்கிறேன் என்பதை எண்ணி ஆறுதல் அடைகிறேன்! வாழ்க, உன் வீரம்! வாழ்க, உன் தியாகம்!" என்று குரல் தழுதழுக்கக் கூறிக் கொண்டே எழுந்து நின்றார்.

"பழையாறைச் சோழரின் வீர வழிபாட்டில் பங்குபெற வாய்ப்புக் கிடைத்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்!"

சட்டென்று திரும்பினார் பழையாறைச் சோழர். அங்கே, அப்போது தான் தம் குதிரையை விட்டு இறங்கிப் புன்னகையுடன் வந்து கொண்டிருந்தார் பெரும்பிடுகு முத்தரையர்.

அத்தியாயம் எட்டு

பிணக்கு ஏன்?

"வெற்றி வீரர் வந்திருக்கிறாரோ? வரவேண்டும், வரவேண்டும்!" என்று குத்தலாகக் கூறி விஷமச் சிரிப்புச் சிரித்த பழையாறைச் சோழர் அலட்சிய மிடுக்குடன் நடந்து போய் அந்த இல்லத்தின் சித்திரத் திண்ணை மீது சாய்ந்து நின்றார். கோவிந்தவர்மனோ வெறுப்பும் கோபமுமாக முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். இந்தத் தர்ம சங்கடமான நிலைமையைக் கண்டு திகில் அடைந்து தவித்த இளங்கோப்பிச்சிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை; அம்மூவரையும் பயப்பிராந்தியுடன் பார்த்தவாறு பின்னால் நகர்ந்து ஒரு தூணின் மறைவில் போய் ஒடுங்கி நின்றாள்.

இதையெல்லாம் கவனியாத முத்தரையர் அந்த வீரக் கல்லின் எதிரே சென்று நின்று, அதில் செதுக்கியிருந்த அநந்தமதியின் உருவத்தையே விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். துக்கத்தால் அவர் முகம் வெளிறியது. கண்கள் இலேசாகக் கலங்கி நீர் கோத்தன. இரத்தினப் பரல்கள்போல் கொட்டிக் கிடந்த பவழமல்லிப் பூக்களை இரு கைகளாலும் வாரி அவ்வீரக் கல்லின் அடியில் பக்தி பூர்வமாக வைத்து விட்டு ஆழ்ந்த பெருமூச்சுடன் திரும்பினார். அங்குள்ள சூழ்நிலையைக் கண்டு அவர் எவ்வித பரபரப்பும் அடைந்ததாகத் தெரியவில்லை. 'எல்லாம் எதிர்பார்த்த மாதிரியே இருக்கிறது' என்பது போன்ற ஒரு புன்னகை தான் அவர் முகத்தில் அரும்பியது. ஒவ்வொருவரையும் வெகு அக்கறையாகக் கூர்ந்து கவனித்தவாறு கம்பீரமாக நடந்து வந்த அவர், "என் மதிப்புக்குரிய சோழ இளவரசியார் நலம்



வக்கீல் (தம் கட்சிக்காரனைப் பற்றி நீதிபதிக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படவேண்டுமென்று): என் கட்சிக்காரர் பரம யோக்கியர்; பரோபகாரி; நாணயம் தவறாதவர்.

கட்சிக்காரர்: என்ன ஐயா, என்னைப் பற்றிப் பேசப் பீஸ் கொடுத்தால் யாரையோ பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறீரே!

தானே?'' என்று அன்பும் பாசமும் பரிமளித்த குரலில் வினவினார்.

அழகாகக் கரம் கூப்பி வணங்கிய அவன், ''சந்திரலேகைச் சிற்றரசரின் அன்பாசியால் நன்னலமே!'' என்று மென்மையாகப் பதிலிறுத்தான்.

''தம்முடையவும் தமது நாட்டின் மக்களுடையவும் அன்னையாரான காடவன்மாதேவியை மீட்டுக் காத்துக் கொடுத்த சோழ இளவரசியாருக்கு மாமன்னர் பரமேசுவரவர்மர் தம் மனப்பூர்வமான நன்றியை என் மூலம் சமர்ப்பித்திருக்கிறார்!''

''கிடைக்கப் பெறாத பெரும் பேறாக இதை ஏற்கிறேன் ஐயா!'' என்று உள்ளார்ந்த குதூகலத்துடன் முகம் மலர்ந்து கூறினாள் இளங்கோப்பிச்சி.

கோவிந்தவர்மனும், பழையாறைச் சோழரும் அவனைச் சுட்டெரித்து விடுவதுபோல் விழித்துப் பார்த்து விட்டு வெடுக்கென்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டனர்.

முத்தரையர் மெல்லச் சிரித்தார். பிறகு சற்றுப் பின்னால் நகர்ந்து வந்து அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தவாறு அமைதியாகச் சொன்னார்: ''அடிமைத் தளையிலிருந்து விடுபட்டுள்ள பல்லவ நாட்டின் சுதந்திர மண்ணில் நின்று என் அருமை நண்பர் பழையாறைச் சோழரையும், எனது அன்புக்குரிய பல்லவ இளவரசரையும் இன்று சந்திக்க நேர்ந்தது பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்!''

எங்கும் ஆழ்ந்த நிசப்தம் சூழ்ந்தது. மெல்லத் தொண்டையைக் கனைத்துக் கொண்ட முத்தரையர் மேலும் சொன்னார்: ''ஆனால், அந்த மகிழ்ச்சியில் திளைக்க விடாதபடி விதியின் கொடிய கரம் குறுக்கிட்டு என்னைத் தடுத்திருப்பதை எண்ணி வருந்தவும் செய்கிறேன். ஆமாம், அன்பர்களே! பழம் பெருமை வாய்ந்த பல்லவ சாம்ராஜ்யத்தின் வீழ்ந்துபட்ட நந்திக் கொடி மீண்டும் விண்முட்ட எழுந்து நின்று பட்டொளி வீசிப் பறக்கும் இந்த நன்னாளைப் பொன்னாளாகக் கொண்டாடிக் களிக்க முழு உரிமை பெற்ற மூலவர்களை, மூன்றும் மகிதனை நான் அந்த உரிமையை நினைவுபடுத்தி அழைக்க வேண்டிய நிலைக்கு ஆளாகி நிற்பதை எண்ணியே அப்படி மனம் நைந்து வருந்துகிறேன்.''

பாறை வெடித்தாற் போன்ற ஒலி; பழையாறைச் சோழர்தான் அவ்வாறு சிரித்தார். ''நல்ல நாடகம் இது! இந்த வேடிக்கை நாடகத்தைக் காண விரும்பாமல்தான் முதலிலேயே எங்கள் முடிவைத் தெரிவித்து அனுப்பினோம்! மீண்டும் அதே நாடகத்தை இங்கு நடத்த வந்திருப்பது எங்களை மேலும் அவமானப்படுத்துவதாகவே எனக்குத் தோன்றுகிறது!'' என்று கோபமும் வெறுப்பும் கலந்தவாறு கடகடவென்று வெறிச் சிரிப்புச் சிரிக்கலானார் சோழர்.

முத்தரையரின் முகம் கன்றிச் சிவந்தது. ஆயினும் தம்மைச் சமாளித்துக் கொண்டு மிகவும் நிதானமாகச் சொன்னார்: ''நாடகம் அல்ல, நண்பரே! நல்ல மனங்களின் அன்புக் குரலே தங்களது செவிகளில் இப்போது ஒலிக்கிறது. காஞ்சியில் நடைபெறவிருக்கும் வீராபிஷேக முடிசூட்டு விழா வைபவத்தைத் தாங்களும் தங்கள் மருகரும் முன்னின்று நடத்திச் சிறப்பிக்க வேண்டும் என்பது மாமன்னர் பரமேசுவரவர்மரின் பெருவிருப்பம். இந்த விருப்பத்தைத் தம் வாய்மொழிகளாலேயே வெளிப்படுத்தி அவற்றைத் தங்களிடம் சேர்ப்பிக்கவே என்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்.''

பழையாறைச் சோழர் இதைக் கேட்டு ஒரு பயங்கர உறுமலுடன் தலையை வேகமாக ஆட்டினார்: ''வெற்றியா? வீராபிஷேகமா? அப்படி யாருக்காவது, ஏதாவது நடந்தால் அதற்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை! அதில் கலந்து கொள்ளக் கூடிய எந்த உரிமையும் எங்களுக்கு இல்லை! இதைப் போய்த் தங்கள் மாமன்னரிடம் கூறுங்கள்.'' (தொடரும்)

வாட்டர்பரீஸ்

வைடமின் காம்பவுண்ட்

சாப்பிடவேண்டியது எப்பொழுது?



■ எந்த சீதவெப்ப நிலையிலும், எப்பருவத்திலும் வயதுவந்தோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு உகந்த பொது டானிக் வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்.

■ வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், மால்ட் எக்ஸ்ட்ராக்ட் மற்றும் உடல் நலம், தெம்பு ஆகியவற்றுக்கு அவசியமான பொருள்கள் செறிந்தது வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட். பசியைத்தூண்டுவதுடன், ஆரோக்கிய உணர்வை ஊட்டுகிறது அது.

வாட்டர்பரீஸ்

வைடமின்

காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

WLY-9 TAM




ஆனந்த வெள்ளம்

“சுதந்திர தினத்தை முன்னிட்டு ‘ஆனந்தக் கண்ணீர்’ என்ற நாடகத்தைத் திறந்தவெளி அரங்கில் நடித்து ஒலிபரப்பப் போகிறோம். நிச்சயம் வர வேண்டும்” என்று திருச்சி வானொலியில் சேவை செய்யும் நாடகக் குழு நண்பர்கள் வருந்தி அழைத்திருந்ததன் பேரில் அங்கு போனேன். நாடகம் சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு இன்னல் கொடுத்த காவிரி வெள்ளப் பெருக்கைப் பின்னணியாக வைத்துப் புனைந்திருந்த ஒன்று. திரண்டு கூடியிருந்த மக்கள் நாடகத்தை மிகவும் ரசித்தார்கள். ஆனால் இந்த நாடகத்தில் என் மனத்தை வெகுவாகத் தொட்டுவிட்ட ஒரு சம்பவம், ‘வெல்லத்தில் மண்ணைக் கலந்து கொள்ளை லாபம் அடிக்க ஒரு நபர் முனைந்திருந்ததை, வெல்லத்தைக் கரைத்து, கோணிப் பைகளில் மண்ணை மாத்திரம் மீதி வைத்து விட்டது காவிரி வெள்ளம்’ என்பதுதான்.

நாடகம் முடிந்தது. நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நடிகர்கள் எல்லோரையும் பாராட்டிவிட்டு அப்பொழுதே திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் மதுரைக்குப் புறப்பட்டேன். ரயில் காவிரிப் பாலத்தில் போகும் போது பிரயாணிகள் ஆவலோடு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்கள். நானும் பார்த்தேன். கடந்த மாதம் முழுதும் இந்தக் காவிரியாறு மக்களை எப்படி வாட்டி வதைத்துவிட்டது என்று வெள்ளத்தைப் பற்றிப் பேச்சுத் தொடங்கிற்று. வெள்ளத்தை நேரில் பார்த்த ஒருவர்—அவர் தமிழ்ப் புலமை நிறைந்தவர்— “இந்தக் காவிரியை அப்போது நீங்கள் பார்த்திருந்தீர்களானால் ஆயிரம் தலைகளோடு கூடிய நாகம் படங்களை எடுத்துப் பிரம்மாண்டமாக விரித்துச் சீறிக்கொண்டு போவதைப் போலிருந்ததைக் கண்டு நடுங்கியிருப்பீர்கள். காவிரி எவ்வளவுதான் பெருக்கெடுத்தாலும் இப்படிச் செல்லமாக நடந்துதான் போக வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், இப்போதும்—எப்போதும் ‘நடந்தாய் வாழி காவேரி’ தான்” என்றார். கம்பீரமான குரலில் அவர் சொற்பொழிவாற்றுவதைப் போல் பேசியதால் நாங்கள் எல்லோருமே அதில் ஈடுபட்டோம்.

உடனே இன்னொருவர் “அதற்கு ஒரு காரணம் இல்லாமல் இருக்காது. பிரளயம் வருவதைத் தடுத்து இறைவன் இப்படி ஒரு கோணமாக ஒதுக்கி விட்டிருக்கார். காவிரி அதை ஏற்று நம்மை யெல்லாம் காப்பாற்றினாள்” என்றார். அதைத் தொடர்ந்து இன்னொரு நண்பர் சொன்னார்: “நீங்கள் சொல்வது ரொம்ப ரொம்பச் சரி சார். ஒரு காரணம் இல்லை. பல காரணங்கள்; பல காரியங்களை இந்த வெள்ளம் செய்துவிட்டுப் போயிருக்கிறது. பாருங்கள் சார். ஓர் ஊரில் ஒரு வீட்டுச் சுவரில் ஒரு பாகத்தை மாத்திரம் இடித்துக் கள்ள மார்க்கெட்டிலே சேர்த்த பணம் உள்ள ஒரு மரப்பெட்டியை



மாத்திரம் இழுத்துக் கொண்டு போயிருக்கிறது. பெட்டி மிதந்து போனதை அநேகர் பார்த்திருக்கிறார்கள். கள்ள மார்க்கெட் ஆசாமி வெள்ளம் வடிந்த பின்பு வந்து வீட்டுக் கதவைத் திறந்து பார்த்தபோது வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார். மற்றப் பொருள்கள் அப்படி அப்படியே வைத்த இடத்தில் இருக்க இது மாத்திரம் ஏன் போக வேண்டும்? எல்லாம் அவன் செயல்” என்றார். ஜன்னல் ஓரத்திலிருந்து வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தவர் “சரியான பாடம்” என்று மட்டும் சொல்லி விட்டு மீண்டும் வெற்றிலையை மடிக்க ஆரம்பித்தார்.

இந்தக் கள்ள மார்க்கெட் பணப் பெட்டி கதையைச் சொன்னவர் மதுரையிலிருந்து



வருகிறவர். 'ஆனந்தக் கண்ணீர்' வானொலி நாடகத்தைக் கேட்டிருக்கவோ பார்த்திருக்கவோ முடியாது. ஆனந்தவெள்ளத்தில் வந்த வெல்ல மூட்டை சம்பவமும் இந்தப் பணப் பெட்டி சம்பவமும் என்னைத் தீவிர சிந்தனைக்கு உள்ளாக்கின. அதற்குப் பின்பும் சகபிரயாணிகள் வெள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் என் உள்ளம் மாத்திரம் கடந்த 1955ம் ஆண்டு கீழ்க்கரையில் அடித்த புயலில் சிக்குண்டது. அப்போது நிகழ்ந்த அந்தச் சம்பவத்தைப் பல தடவைகள் நினைத்து நினைத்து அதற்கு ஒரு முடிவு காண விழைந்தேன். இன்று இந்தச் சக பிரயாணிகள் தங்கள் விருப்பம் போல் வெள்ளத்துக்குக் காரணம் கற்பித்தார்களே. அதிலிருந்து ஒரு பெரும் உண்மை புலப்பட்டதாக உணர்ந்தேன்.

அது 'என்ன உண்மை' என்று ஒரே வார்த்தையில் நான் விளக்கிவிட முடியாது. அந்தக் கதையை எனக்குத் தெரிந்த அளவில் நான் விளக்கிக் கூறினால்தான் அந்தப் பெரும் உண்மையை எப்படிப் புலப்பட்டதாக நான் கூறுகிறேன் என்பதை உங்களுக்கு ஓரளவு விளக்க முடியும் என்று நம்புகிறேன்.

பல தொடர்புகள் சந்தர்ப்ப வசத்திலும் ஏற்படுவது போல் வேதமூர்த்தியும் நானும் ஒரே கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தோம் என்ற ஒரே காரணம்தான் எனக்கு அவன் நண்பன் ஆனது; இல்லாவிடில் அவன் யார் என்பது எனக்குத் தெரியாமலேயே போயிருக்கலாம். எனக்கு வேலை கிடைப்பதற்கு முன்னாலேயே குடியிருக்க ஒரு கூடு தேடிக்கொண்டிருந்தேன். வீடு என்று சொல்வதற்குப் பதில் கூடு என்று சொல்வதுதான் பொருந்தும். ஏனென்றால் அது அவ்வளவு ஒதுக்கத்திலும் உயரத்திலும் இருந்தது. ஒரு வீட்டின் மூன்றாவது மாடியின் பின் பக்கத்திலுள்ள ஓர் அறை. அதற்கென்று பிரத்தியேகப் படிக்கட்டும், குளிப்பு முதலிய வசதிகளும் இருந்தன; படிக் ஏறிப் போவதுதான் சிரமமே ஒழிய, அங்கு போய்ச் சேர்ந்த பிறகு தூக்கணாங் குருவி கூட்டில் சேர்ந்த மாதிரிதான். கிழ்ப் பக்கத்து ஜன்னலைத் திறந்தால் மாடியளவு உயர்ந்த தென்னை மரங்களின் தேங்காயை எட்டிப் பறித்து விடலாம்.

வேதமூர்த்தி என்னோடு தங்க வந்தபோது அவனுடைய நோக்கம் அவனுக்கு ஓர் இடம் கிடைப்பது வரைதான் என்னோடு இருக்க வேண்டும். என்பது. ஆனால் ஏனோ என்னுடைய கூட்டின் வசதியைக் கண்ட பின்பு அவன் வீடு தேடும் முயற்சியை அடியோடு விட்டுவிட்டான்.

எனக்கு அவனை மிகவும் பிடித்துப் போய் விட்டது. எங்களுடைய அறையில் என் பொருள்கள் வேறு அவனுடைய பொருள்கள் வேறு என்று இல்லை. சேமிப்பை மட்டும்தான் பாங்கில் தனித் தனியாகப் போட்டிருந்தோமே ஒழிய மற்றபடி எல்லாவற்றுக்கும் ஒரே கணக்குத்தான். இப்போதுகூட இந்தக் கூட்டுக் குடும்பத்தில் அவன் பங்கில் அதிகம் செலவழிந்ததா அல்லது நான் அதிகம் செலவுக்குப் போட்டேனா, நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

வாரத்தில் இரண்டு சினிமாக்களாவது பார்க்காமல் இருக்க மாட்டோம். சினிமா இல்லாவிட்டால்படிப்பு. இதில் நான் பத்

வி.எஸ்.எஸ்

திரிகைகளுக்கு அவ்வப்போது எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தேனா? அதற்கெல்லாம் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் நடந்து கொள்வான். என் எழுத்துக்களைப் படித்துவிட்டு நாகரிகமாக விமரிசனம் செய்வான். அவன் கூறும் குணநலங்களை விடக் குற்றம் சொல்லும் முறைதான் எனக்குப் பிடித்திருந்தது. "இப்படி இருந்தால் நன்றாக இருக்காது என்று நினைத்தாயா?" "அந்தப் பாத்திரம் இடையே வந்து தோன்றியதாக எழுதியிருக்கிறாயே, அது சரியாக எனக்கு விளங்கவில்லை." "மைதிலியை இவ்வளவு தூர தேசத்துக்குக் கலியாணம் என்ற பேரால் அனுப்பியிருக்க வேண்டாம்!" — இம்மாதிரி முறையில் அவன் விமரிசனங்கள் அமைந்திருக்கும். ஆகவேதான் அவன் கதையை நான் எழுதும்போது அந்தப் பண்புக்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் எழுத ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது.

வேதமூர்த்தியைப் பற்றிய விவரங்கள் எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாக — அதுவும் அவன் அவ்வப்போது சொல்லும் விஷயங்களிலிருந்து தெரிய வந்தன. அவனுக்குப் பெற்றோர்கள் இல்லை. தாய் மாமனின் ஆதரவில் வளர்ந்து படித்துப் பட்டம் பெற்றான். தாய்மாமன் ஊர் வேதாரண்யம். தாய் மாமன் நல்ல வசதி படைத்தவர். வேதமூர்த்தியை மட்டும் அல்ல, அவனுடைய மூத்த சகோதரியையும் அவரே வளர்த்து, அவளுக்குக் கல்யாணம் செய்வித்து. அவள் வடக்கே கான்பூரிலோ, லக்னௌவிலோ இருந்தாள்.

நானும் வேதமூர்த்தியும் மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டதால் ஒருவர் செயலில் மற்றொருவர் குற்றம் காண முடியவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சில சமயங்களில் வேதமூர்த்தி நெடுநேரம் கழித்து வருவான் — இரவில். நான் அவனுடைய கட்டிலில் படுக்கையை விரித்துப் போட்டு அவசியமானால் புதிய விரிப்பையும் விரித்துத் தலையணைகளுக்கும் சலவை உறை போட்டு வைப்பேன். இந்தச் சிறிய உதவிகளைக் கூட மறக்காமல் அதிகாலையில் நன்றி சொல்லுவான். எனக்கு முன்னாலேயே எழுந்து போய்க் காப்பி சாப்பிட்டுவிட்டு, பிளாஸ்கில் காப்பி வாங்கி வந்து, "உனக்குக் காப்பி தயாராக இருக்கிறது அப்பா" என்பான். எழுத்தாளனுக்கே உரிய கவனக் குறைவினால் சிதறிக் கிடக்கும் புத்தகங்களையும் மற்றச் சாமான்களையும் எடுத்து ஒழுங்காக வைத்து அறையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை நாளடைவில் அவனே எடுத்துக் கொண்டான்.

அன்று எங்கிருந்தோ ஒரு ரிஜிஸ்தர் கடிதமோ, மணியார்டரோ வந்தது. கையெழுத்துப் போடுவதற்காக வேதமூர்த்தி மேஜையின் மேலிருந்த பேனாவை எடுத்துக் கையெழுத்துப்போட்டுவிட்டுத் தபால்காரரை அனுப்பினேன். பேனா எழுதிய நயத்தைக் கண்டு அதைப் பரிசோதித்துப் பார்த்தேன். சின்னப் பேனா—தங்க மூடி போட்டது. பச்சை வர்ணம். ஏதோ ஒரு புதிய பெயர் — பேனாவுக்கு. ஆனால் என்னைச் சட்டென்று கவர்ந்தது அதன் பச்சை உடலில் தங்க எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்த 'யாழ்மொழி' என்ற பெயர்தான்.

என்னமோ என் மனத்தில் பட்டது. அது அவனுடைய பேனா இல்லை என்று. இத்தனை நாட்களும் அதை நான் அவனிடத்தில் பார்த்ததில்லை. ஏதாவது புதிய சாமான் அவன் வாங்கினால், அதைப் பற்றி அவன் என்னிடம் சொல்லாமல் இருக்க மாட்டான். பேனாவை இருந்த இடத்தில் வைத்து விட்டேன். வேதமூர்த்தி அந்தச் சமயத்தில் குளித்துக் கொண்டிருந்தான். அவன் வந்ததும் நான் கேட்டேன்: 'இந்தப் பேனா ஏது? அழகாக இருக்கிறதே!' என்றேன். "நன்றாக எழுதுகிறது இல்லையா? நான்தான் வாங்கி ஒருவருக்குப் பரிசு கொடுத்து விட்டேன்." அவன் சொன்னது இவ்வளவுதான். என் மனத்தில் அடுத்து, "பரிசு கொடுத்த பேனா மீண்டும் உன் கைக்கு எப்படி வந்தது?" என்ற கேள்வி எழுந்தது. ஆனால் அதை நான் கேட்கவில்லை.

ஆனால் அவனே சொன்னான்: "விலை பதினைந்து ரூபாய். போன மாதம் வாங்கி அதில் பேர் எழுதியிருக்கிறதே 'யாழ்மொழி' அவளுக்குப் பரிசு கொடுத்துவிட்டேன்" என்றான். நான் 'சரிதான்' என்றேன். 'அந்தச் சரிதான்' என்ற வார்த்தையில் எந்த விதமான அர்த்தமோ, எகத்தாளமோ தொனிக்கவில்லை... ஆனால் என்னுள் எழுந்த இயற்கையான அடுத்த கேள்வி, "யாழ்மொழி யார்? அவளுக்கு நீ ஏன் பரிசு கொடுக்க வேண்டும்?"

வேதமூர்த்தி மேலும் சொன்னான்: "ஏன் அப்பா, உனக்குக் கலப்பு மணத்தில் நம்பிக்கை உண்டா?"

எனக்குச் சட்டென்று இந்த எதிர்பாராத கேள்விக்குப் பதில் அளிக்க முடியவில்லை. ஏனெனில் இந்தக் கலப்பு மணத்தைப் பற்றி நான் சிந்தித்ததே இல்லை; சிந்திக்கச் சந்தர்ப்பமும் இல்லை.

"ஏன், திடமான நம்பிக்கை உண்டு" என்றேன்.

"உண்மையாகவா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.


"உண்மையாகத்தான். ஏன், அதில் என்ன தவறு? மனம் ஒத்துப் போகவேண்டும்; அவ்வளவுதான். அதில் குறை இல்லாவிட்டால் நம்பிக்கைக்குப் பங்கம் வரவேண்டிய அவசியமே இல்லை."


"கதாசிரியன் பாணியில் சொல்லி விட்டாய்!"

எனக்கும் சிரிப்பு வந்தது. இதே வார்த்தைகளை வேதமூர்த்தி அல்லாமல் வேறு யாராவது சொல்லியிருந்தால் நான் ஒருவேளை வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உள்ளுக்குள்ளாவது எரிச்சல் கொண்டிருப்பேன். ஆனால் இவை — வேதமூர்த்தி கள்ளங்கபடு எதுவும் இல்லாமல் சொன்ன வார்த்தைகள். ஆகவே, நான் சிரித்துக்கொண்டே சோப்பு, துவாலை முதலியவைகளை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனேன்.

அன்று அந்தப் பேனா விஷயம் அத்துடன் முடிந்துவிட்டது என் வரையில். அதற்கு அப்புறம் அந்தப் பேனாவை நான் வேதமூர்த்தியிடம் காணவில்லை. அந்த 'யாழ்மொழி'யிடமே அவன் திரும்பவும் கொடுத்துவிட்டான் என்று நினைத்துக் கொண்டேன்.

ஒரு நாள் இரவு சுமார் பன்னிரண்டரை மணி இருக்கும். வேதமூர்த்தியை அவன்





ஒருசில லோமா துளிகள் நரைமயிரை

தவிர்க்க உங்களுக்கு உதவுகிறது

'லோமா'வைத் தவறாமல் தினந்தோறும் ஒரிரு தடவை உபயோகியுங்கள். நரை மயிர் மறையும் அடையாளங்களையும், அவற்றிற்குப் பதிலாகக் கண்கவர் கருமையான கேசம் இளமைப் பொலிவுடன் விளங்குவதையும் காண்பீர்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்கு வது மட்டுமல்ல, கேசத்திற்கு ஓர் போஷாக்கும் கூட!

ஏகபோக ஏஜெண்டுகள் &
ஏற்றுமதியாளர்கள்:

எம். எம். கம்பாத்வாலா,
அஹமதாபாத்-1. (இந்தியா)

ஏஜெண்டுகள்:

ஸி. நரோத்தம் & கோ., பம்பாய்-2.

TAM

[illegible] & [illegible] 260, [illegible]

படுக்கையில் காணவில்லை. எனக்குத் 'திக்' என்றது. அவன் வரவேயில்லை என்று தெரிந்தது. என்னிடம் சொல்லாமல் அவன் இப்படி வெளியே இரவில் தங்கியது இதுவரை இல்லை. அப்புறம் எனக்குத் தூக்கமே வரவில்லை. 'எங்கே போயிருப்பான்?', 'எங்கே போயிருப்பான்' என்று என் மனத்தில் எழுந்த கேள்விக்கு நேரடியான பதில் கிடைக்கவில்லை. ஆனால் உள்ளத்தில் ஒரு கோடியிலிருந்து, 'ஏன்... யாழ்மொழியிடம் போயிருக்கக் கூடாதோ?' என்று பதில் எதிரொலித்தது. இந்தப் பதிலை அந்தச் சமயத்தில் நான் ஏற்கத் தயார் இல்லை.

இரண்டு சம்பவங்கள்தான் அந்த எதிரொலிக்குக் காரணம். ஒன்று அந்தத் தங்க மூடி போட்ட பர்சைப் பேனா. மற்றொன்று அவனுடைய ''கலப்பு மணத்தில் உனக்கு நம்பிக்கை உண்டா?'' என்ற கேள்வி.

மறுநாள் அதிகாலையில் அவன் தோன்றினான். அவனிடம் என்ன கேள்வியைக் கேட்பது? ஆனால் என் பார்வையிலிருந்தே அவன் புரிந்துகொண்டான்.

''இரவு என்னை வெகு நேரம் எதிர்பார்த்தாயா?'' என்றான்.

''பன்னிரண்டு மணிக்கு அப்புறம் விழித்துக்கொண்டபோது உன்னை உன் படுக்கையில் காணவில்லை. அதன் பின்பு எனக்குத் தூக்கம் வரவில்லை'' என்றேன்.

''உன்னிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் வர முடியாமல் போகும் என்று எனக்குத் தோன்றவில்லை'' என்றான்.

இதற்கு மேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை. நானும் துருவித் துருவிக் கேட்கவில்லை. என்னிடம் சொல்ல வேண்டியதாக இருந்தால் அவனே சொல்லுவான். அப்படி இருக்க அவனிடம் வற்புறுத்திக் கேட்க எனக்கு விருப்பம் இல்லை.

என்றாலும் அன்றைய அவனுடைய இராத் தங்கலை முன் சொன்ன பேனாவோடும் அவனுடைய கலப்பு மணக் கேள்வியுடனும் மூன்றாவதாகச் சேர்த்துக் கொண்டேன்.

நான்காவதாக நடந்த சம்பவம்தான் அவன் நிலையை உறுதிப்படுத்தியது.

ஒரு நாள் நான் ஆபீஸிலிருந்து என் அறைக்குத் திரும்பியபோது யாரோ வேற்றொருவர் அங்கே வந்திருந்ததாக எனக்குப் பட்டது. எப்படி அது என் மனத்தில் தோன்றியது என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் எப்படியோ அதைக் கண்டுபிடித்தேன். அன்று வேதமூர்த்தி ஆபீஸுக்கு வரவில்லை. லீவு போட்டிருந்தான் என்பது அடுத்தபடியாக என் நினைவுக்கு வந்தது. இதற்குப் பின்பு என் கண்ணில் பட்டது வேதமூர்த்தி மேஜையின் மீது இருந்த ஒரு கைப் பை. அதாவது பெண்கள் வைத்திருக்கும் பை ஒன்று. கருங்காலி நிறம். சட்டென்று அதை எடுத்து அதைத் திறந்தேன். அதற்குள் என்ன என்னவெல்லாமோ இருந்தன. எடுத்த மறு கணத்தில் அதை மூடிப் பழையபடி இருந்த இடத்தில் வைத்து விட்டேன். அதைத் திறந்து பார்த்தது தவறு என்று என் மனம் உடனே இடித்துக் காட்டிவிட்டது.

சந்தேகமே இல்லை. 'யாழ்மொழி' என்ற ஒரு பெண்ணுடன் வேதமூர்த்தி தொடர்பு



''என்றைக்காவது அப்பாவுடைய சொக்காய் கிழிந்திருந்தால் அன்றைக்கு மட்டும் போனால் போகட்டுமென்று இந்தக் கோட்டை அவருக்குக் கொடுப்பேன், ஸார்!''

கொண்டிருக்கிறான் என்று நிச்சயம் செய்து கொண்டேன். வேதமூர்த்தியோ என்னிடம் அதைப் பற்றிச் சொல்லாதவரையில் நான் அவனிடம் எதுவுமே கேட்காமல் இருப்பது தான் முறை. என் மனத்துள் மட்டும், அவன் செய்வது ஒருவேளை தகாத செய்கையோ என்று லேசாக ஒரு சந்தேகம். எது எப்படியானாலும் அவனிடம் அதைப் பற்றி மூச்சு விடப் போவதில்லை. அந்தப் பையைக் கூட அவன் அங்கிருந்து எடுத்துப் போகும் வரை நான் அறைக்கு வராமல் இருப்பது நல்லது என்று நினைத்து, உடனே உடை மாற்றிக் கொண்டு ஒரு சினிமாவுக்குப் போய்விட்டேன். அன்று நான் அறைக்குத் திரும்புவதற்கு வழக்கத்துக்கு மாறாக மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டது.

இது நடந்து ஓர் இரண்டு மாதங்களுக்குப் பின்பு ஒரு நாள் வேதாரண்யத்திலிருந்து அவன் மாமாவின் கடிதம் வந்தது.

அதைப் படித்தவுடன் வேதமூர்த்தியின் முகம் மாறிற்று. அவன் மனத்துக்குப் பிடிக்காத செய்தி அதில் வந்திருக்கிறது என்று நான் ஊகித்துக் கொண்டேன். ஆனால் வேதமூர்த்தி என் ஊகத்துக்கு இடம் வைக்காமல் அந்தக் கடிதத்தைப் பற்றி என்னிடம் பேச ஆரம்பித்தான். ''என்ன அப்பா, என் மாமா என்னை வளர்த்து ஆதரவு கொடுத்தார். படித்துப் பட்டம் பெறச் செய்தார் என்பதற்காக அவர் பெண்ணை நான் கட்டாயம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா?'' என்றான்.

''கல்யாணம் செய்து கொள்ளலாம், செய்துகொள்ளாமலும் இருக்கலாம் வேதமூர்த்தி! உன் மாமாவைப் பற்றி நீ கொண்டிருக்கும் மதிப்பு, மரியாதை, அவருக்கு நீ எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறாய் என்பதைப் பொறுத்திருக்கிறது.''

''என்னப்பா இது? நேரடியாகவே பதில் வரவில்லையே உன்னிடமிருந்து?''

''எந்தக் கேள்விக்கும் பல கோணங்களிலிருந்து பலவிதமான பதில்கள் உண்டு.



''உன்னுடைய இரும்புத் தொப்பி எங்கே?''
''அதில் என் மனைவி அப்பளம் பொரித்துக்கொண்டிருக்கிறாள்!''

இல்லாவிட்டால் குருடர்கள் யானை பார்த்த கணக்குத்தான்.''

''ஆமாம். நீ சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன்.''

''ஒப்புக்கொள்கிறேன் என்றால்?''

''நான் அவர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் நன்றி மறந்தவனாகத்தான் ஆவேன். அவருக்கு ஆண் குழந்தை இல்லை. என் மீது அளவுக்கு மீறி அன்பு பாராட்டியது, பெற்றோர்களை இழந்த எனக்கு அந்த வருத்தம் கொஞ்சம்கூட இல்லாமல் நான் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் எடுத்துக் கொண்ட அக்கறை, என் விருப்பத்துக்கு இணங்க, பட்டணத்துக்கே என்னைக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பியது எல்லாம் எண்ணிப் பார்த்தால்தான் அவர் எனக்காக எவ்வளவு தியாகம் செய்திருக்கிறார் என்பதை உணர முடிகிறது.''

வேதமூர்த்தி என்னிடம் பேசினானா அல்லது தனக்குத் தானே பேசிக் கொண்டானா என்று எனக்குப் புரியவில்லை. அவன் பேசிய தோரணையிலிருந்து ஒன்று மட்டும் நிச்சயமாகத் தென்பட்டது. அவன் மன நிலை சரியான சிந்தனை வசத்தில் இல்லை என்பது தான் அது. மேலும் அவனிடம் நான் பேசத் தொடர விரும்பவில்லை. ஆகவே நேரம் ஆகிக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, ஆபீஸ் போவதற்கு அவனைத் துரிதப்படுத்தி அனுப்பினேன்.

அன்று மத்தியானம் ஆபீஸில் காகிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தபோது என் மனத்தில் சட்டென்று ஒரு யோசனை பட்டது. அதாவது யாழ்மொழி என்ற அந்தப் பெண்ணையே சந்தித்து, அந்த மர்மம்தான் என்ன என்று கண்டுபிடித்துவிட்டால் ஒருவேளை நான் வேதமூர்த்திக்கு அவன் அகப்பட்டிருந்த சூழலிலிருந்து மீள உதவி செய்ய முடியுமோ என்ற எண்ணம்தான். ஆனால் நான் அந்த எண்ணத்தை உடனே விட்டு விட்டேன். காரணம், அது மேலும் பல சிக்கல்களை உண்டாக்கிவிடலாம் என்ற சந்தேகம்தான்.

ஆனால் அன்று மாலையே என் மனத்தில் ஏற்பட்டிருந்த சந்தேகத்துக்கு விடை கிடைத்து விட்டது. நான் அறைக்குத் திரும்பியதும் வேதமூர்த்தி மேஜைமீது கிடந்த ஒரு கவர். அவன் விலாசம் இடப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்துவிட்டு அவசரம் அவசரமாக மடித்துக் கவருக்குள் மீண்டும் அடைத்துவிட்டு அறையை விட்டுப் பரபரப்பான நிலையில் அவன் ஓடிப் போயிருக்க வேண்டும். அந்தப் பரபரப்பில் அவன் கடிதத்தையும் எடுக்காமல் போயிருக்க வேண்டும்.

அந்தக் கடிதத்தை நான் படிக்கலாமா, வேண்டாமா என்று ஒரு கணம் யோசித்தேன். அதைப் படித்தால் விஷயம் தெரிந்து ஒருவேளை வேதமூர்த்திக்கு என்னால் உதவி செய்ய முடியுமோ என்ற ஆவல். ஆனால் நான் கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போது வேதமூர்த்தி வந்து அதைப் பார்த்து விட்டால்? என்றாலும் அந்தக் கடிதத்தை அவன் நன்மையை உத்தேசித்தே படிக்க வேண்டும் என்று தீர்மானித்து நான் செய்வது ஒருவேளை குற்றமாக இருந்தால் தெய்வம்தான் என்னை மன்னிக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு படிக்கலானேன்.

வேதமூர்த்தியின் அந்தரங்க வாழ்க்கையின் ஜன்னலைத் திறந்து விட்டது போலிருந்தது அந்தக் கடிதம். அவனுடைய வெளித் தோற்றத்தையும் இந்தக் கடிதம் வெளிப்படுத்தும் உண்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பிரமிப்பு என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றையும் சொல்வதற்கில்லை. இந்தக் கடிதம் வெளிப்படுத்திய உண்மைகளைச் சந்தேகிக்க எள்ளளவும் இடம் இல்லை.

யாழ்மொழியின் உருக்கமான வேண்டுகோள் என் மனத்தில் அந்தப் பேதைப் பெண்ணின் பரிதாபகரமான நிலையைத் தெற்றென எடுத்துக் காட்டிற்று. இந்தக் கடிதத்தின் இறுதி வாக்கியத்தை மட்டும் இங்கு குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். அதாவது ''கபாலீசுவரன் கோவிலில் கற்பகாம்பாள் சந்நிதியில் 'மரணத்திலும் என்னைக் கைவிடேன்' என்று நீங்கள் மனப்பூர்வமாகக் கொடுத்த வாக்குறுதியைத் தவிர எனக்கு வேறு ஒரு கதியும் இல்லை என்பதை மட்டும் சொல்லி இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.''

நான் கடிதத்தைக் கவரில் போட்டு இருந்த இடத்திலேயே வைத்து விட்டேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அன்று கூட வேதமூர்த்தி கொஞ்சம் நேரம் கழித்தே அறைக்குத் திரும்பினான். அவன் வந்த சமயத்தில் நான் விழித்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் ஏன் இவ்வளவு நேரம், எங்கு போயிருந்தாய் என்று வேண்டுமென்றே கேட்கவில்லை. அவன் முகம் வெகுவாய் வாட்டம் அடைந்திருந்தது. நான் கவனித்துக் கொண்டேன், அவன் மனம் வெகுவாய்ச் சஞ்சலம் அடைந்திருந்தது என்பதை. ஆகவே அதை என் கேள்விகளால் மேலும்

குழப்பமோ அல்லது துன்புறுத்தவோ விருப்பம் இல்லாமல் சாதாரணமாக இருப்பது போல் காட்டிக் கொண்டேன்.

மேலும் ஒரு வாரம் கடந்தது. வேதமூர்த்தியின் போக்கிலேயே ஒரு மாறுதல். அவன் தன் வசத்தில் இல்லை. ஆனால் அன்று காலையில் திடீரென்று சொன்னான்.

"நான் என் மாமா பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டேன்."

நான் சட்டென்று என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தேன். அவனுடைய அந்தரங்கங்கள் எனக்குத் தெரியாது என்றுதான் அவன் எண்ணம். "அப்படியானால் யாழ்மொழியின் கதி என்ன?" என்றுதான் நான் அவனிடம் கேட்டிருக்க வேண்டும். இந்த யாழ்மொழி யாரானாலும் சரி. அறிமுகமில்லாத அந்தப் பேதைப் பெண்மீது என்னையும் அறியாமல் வாஞ்சை ஏற்பட்டது. எனவே நான் சொன்னேன்:

"எதைச் செய்தாலும் வேதமூர்த்தி, தீர ஆலோசித்துச் செய். கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று வாக்குக் கொடுத்து விட்டு, அந்தப் பேதைப் பெண்ணின் மனத்தில் இல்லாத எண்ணங்களையும் உருவாக்கி விட்டுப் பின்பு பிறழ்வதில் பயன் இல்லை."

இந்த வார்த்தைகளை யாழ்மொழியை நினைத்துக் கொண்டேதான் பேசினேன் என்று எனக்கு இப்போது படுகிறது. ஆனால் எனக்கு அவன் விஷயங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை என்று அவனுடைய திடமான எண்ணம். ஆகவே அவன் சொன்னான்: "அதனால்தான் நான் இந்த முடிவுக்கு வந்து விட்டேன். என் மாமா மனம் நோக நடந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை." — என் வாயை அவன் அடைத்துவிட்டான்.

அன்று பிற்பகலில் அவன் ஆபீசிலிருந்து வந்துவிட்டான். மாலை ஐந்தரை மணிக்குத் தான் அந்த விஷயம் தெரிந்தது. ஆகவே எனக்கு முன் அறைக்கு வந்திருப்பான். அவனும் நானும் கடற்கரைக்கோ அல்லது ஏதாவது ஒரு சினிமாவுக்கோ செல்ல வேண்டும். அப்போது சந்தர்ப்பம் சரியாக இருந்தால் அவனுடைய பிரச்னைக்கு ஒரு வழி காண முயல வேண்டும் என்பது என் யோசனை.

ஆனால் எனக்கே வேதமூர்த்தியின் கடிதம் ஒன்று அறையில் என் மேஜைமீது காத்திருந்தது.

"நான் அவசரமாக நண்பர் ஒருவருடைய காரில் வேதாரண்யம் போகிறேன். உன்னிடம் நேரில் சொல்லிவிட்டுப் போக நேரம் இல்லை. நான் ஊரிலிருந்து விவரமான கடிதம் எழுதுகிறேன்."—இந்த மாதிரி சுருக்கமான கடிதம்தான்.

ஆனால் அன்று மாலையில்தான் கீழ்க்கடலில் அடிக்கப் போகும் புயலைப் பற்றிச் செய்திகள் பத்திரிகையில் வெளிவந்தன. இந்தச் சமயத்தில் வேதமூர்த்தி காரில் ஊருக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறானே என்று மிகவும் கவலை கொண்டேன்.

அதை அடுத்து மறுநாள் கீழ்க்கடற்கரை நெடுகவும் புயலும் கடற் கொந்தளிப்பும் விளைவித்த சேதங்களையும் அதனால் மக்கள் அடைந்த துன்பங்களையும் அநேகர் நேரில் அறிந்திருக்கலாம். பத்திரிகைகளில் படித்திருக்கலாம்.

வேதாரண்யத்துக்குச் சென்ற வேதமூர்த்தியிடமிருந்து எனக்கு எவ்விதத் தகவலும் இல்லை. அவனைப் பற்றிய கவலை எனக்கு அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆபீஸிலும் சரி என் அறையிலும் சரி, எனக்கு எந்த வேலையிலும் நாட்டம் கொள்ளவில்லை. அவனைப் பற்றி இனம் தெரியாத பயம் என்னை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

பத்திரிகைகளில் நாளுக்கு நாள் புயல் விளைவித்த உயிர்ச் சேதம், பொருட் சேதங்களைப் பற்றிப் பயங்கரச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. வேதாரண்யத்தில் விளைந்த சேதங்களைப் பற்றியே நான் துருவித் துருவிப் படித்துக் கொண்டிருந்தேன். கடல் விளைவித்த சேதத்தால் உயிரிழந்தோர் பெயர்ப் பட்டியலில் வேதமூர்த்தி — யாழ்மொழி என்ற பெயர்களை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லைதான். ஆனால் அந்தப் பெயர்களைப் பார்த்தபோது என்னால் நம்பவே முடியவில்லை. இம்மாதிரி ஒரு முடிவு நேரும் என்பது எள்ளளவும் என் மனத்துக்குட்பட்ட இல்லை. ஆனால் அந்தப் பத்திரிகையில் கடைசிப் பக்கத்தில் இருந்த ஒரு செய்திதான் என்னைப் பெருங் குழப்பத்துக்கு உள்ளாக்கி விட்டது. அந்தச் செய்தி இதுதான்:

"மரணத்திலும் பிரியாத தம்பதி

வேதாரண்யம் — யாழ்மொழி என்ற பெண் தன் கணவன் கரத்தைப் பற்றிக் கொண்டு தாழை மடலுக்கு அருகில் கிடந்த காட்சி மனத்தை உருக்குவதாக இருந்தது. வெகு சிரமத்துடன்தான் அவர்கள் கரங்களைப் பிரிக்க முடிந்தது."

* * *

"நீங்கள் என்ன பேசாமலிருக்கிறீர்கள்? இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று சட்டென்று கேட்டார் இவர், கள்ள மார்க்கெட் பணப்பெட்டி வெள்ளத்தில் போன கதையைச் சொன்னவர். இப்போது வேறு ஏதோ ஒரு சுவாரசியக் கதையைச் சொல்லிவிட்டு, அதற்கு என் அபிப்பிராயத்தைக் கேட்கிறார். ஆனால் நான் அந்த வண்டியில்தான் அவர்களோடு இருந்தேனே தவிர என் உள்ளம் 'யாழ்மொழி'யையும் 'வேதமூர்த்தி'யையும் சுற்றிக் கொண்டிருந்ததை அவரால் எப்படி உணர முடியும்?

"எல்லாம் அவன் செயல். ஆனந்த வெள்ளம்" என்றேன், ஏதாவது அவருக்குச் சொல்ல வேண்டுமே என்பதற்காக.

"பேஷ். அப்படிச் சொல்லுங்கள் ஸார். ஒவ்வொன்றும் நடக்கிறதைப் பார்த்தால் நம்மால் எதற்கும் காரணம் காட்ட முடியுமா? 'இன்றைக்கு இருப்பது நாளைக்கு இருக்கும் என்று எண்ணவோ இடமில்லையே' என்றார் தாயுமான சுவாமிகள். இந்த உண்மையைத் தான் நாம் தினசரி வாழ்க்கையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்றார் அந்த சர்வ சாதாரண ஞானி.



பலே மாமியார்!

மகேசுவரி



நார்பேட்ட வீதியில் வாடகைக் கார் வெகு ஜோராகச் சென்று கொண்டிருந்தது.

"அதோ.... அந்த நீல வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் நிறுத்துப்பா!" என்று கூறினான் முரளி. கார் அப்படியே நின்றது. முரளியும் கமலாவும் இறங்கி அந்த வீட்டுக்குள்ளே போனார்கள்.

அங்கே அவர்களுக்கு உபசாரம் பலமாக நடந்தது. இருவரும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். வெற்றிலைப் பாக்குத் தட்டில் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை வைத்துக் கமலாவிடம் கொடுத்தாள் அவளுடைய அம்மா.

"எதற்கம்மா, இதெல்லாம்....?" என்று பிகு செய்தாள் கமலா.

"என்னமோ நானும் முறைமையாக வந்திருக்கிறாய். எடுத்துக் கொள்" என்று கூறினாள் அவள் அம்மா.

"அப்படியானால் இப்போ என் மாமியாரும் ஏதாவது கொடுப்பார் என்று சொல்லு...." என்றாள் கமலா.

"நான் முறைமைகளில் நமஸ்காரம் செய்ய வந்தால், வெற்றிலைப் பாக்குடன் ஏதாவது வைத்துக் கொடுப்பதுதான் வழக்கம். உன் மாமியாரின் குணம் எப்படியோ...?" என்றாள் அவள் தாயார்.

இருவரும் வந்து காரில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். கார் புறப்பட்டது.

"இதைப் பத்திரமாகப் பர்ஸிலே வைத்துக் கொள்ளுங்கள். அப்புறமாக வாங்கிக் கொள்கிறேன்...." என்று கூறிப் பத்து ரூபாய் நோட்டை மட்டும் எடுத்துக் கணவனிடம் கொடுத்தாள் கமலா. முரளியும் அதை வாங்கித் தன்னுடைய பர்ஸுக்குள் வைத்துக் கொண்டான்.

வாடகைக் கார் திருவல்லிக்கேணி வேங்கடாசல முதலித் தெருவில் சென்று கொண்டிருந்தது.

"கம்பிக் கதவு போட்ட வீடு. லாந்தர் கம்பத்துக்குப் பக்கத்தில் ம்... இதுதான் வண்டியை நிறுத்திக்கொள்" என்று உத்தரவிட்டான் முரளி.

கார் நின்றது. இருவரும் இறங்கி உள்ளே போனார்கள். அது முரளியின் பெற்றோர்கள் வசிக்கிற வீடாகையால் அங்கே அவர்களுக்குப் பெரிதாக உபசாரங்கள் எதுவும் நடைபெறவில்லை. சகஜமான ஒரு வரவேற்புத்தான் கிடைத்தது.

புக்ககத்து நாட்டுப்பெண்ணுக்கு லட்சணமாகக் கமலா நேராகச் சமையலறைக்குள் போய் நின்று கொண்டாள்.

"கொஞ்சம் அந்த 'ஸ்டவ்'வைப் பற்ற வை கமலா. காப்பியைக் கலந்து வை. சுடட்டும். நாங்களெல்லாம் சாப்பிட்டாச்சு. உனக்கும் அவனுக்கும் தான்..." என்று உத்தரவு பிறப்பித்தவண்ணம் உள்ளே வந்தாள் மாமியார்க்காரி.

"கொஞ்சம் இருங்கோம்மா. அப்படியே நமஸ்காரம் பண்றேன்...." என்று கூறி மாமியாரை நமஸ்கரித்தாள் கமலா.

"சீக்கிரம் சீமந்தக் கல்யாணம் வரணும்" என்று ஆசீர்வாதம் செய்தாள் மாமியார்.

காப்பியைக் கலந்து கணவனுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டாள் கமலா.

"அந்தத் தூக்கில் வெற்றிலை இருக்கு. எடு...." என்ற மாமியாரின் கட்டளையை நிறைவேற்றினாள் கமலா.

அவள் அம்மாவைப் போல் மாமியாரும் வெற்றிலைப் பாக்குத் தட்டில் ஒரு பத்து ரூபாய் நோட்டை வைத்துக் கொடுத்தாள். இருவரும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

தயாராக வாசலில் நின்று கொண்டிருந்த காரில் இருவரும் ஏறி உட்கார்ந்ததும் கார் புறப்பட்டது.

"நேராக வீட்டுக்குப் போப்பா!" என்று டிரைவரிடம் கூறினான் முரளி.

"அம்மா கொடுத்த பத்து ரூபாயைக் கொடுங்கோ. உங்கம்மா ஒரு பத்து ரூபாய் கொடுத்தார். எங்கம்மா கொடுத்த பத்து ரூபாயுடன் இதையும் சேர்த்து வீட்டுக்குப் போகும் போது இருபது ரூபாய்க்கு ஒரு சின்னாளம்பட்டிப் புடவை வாங்கிக் கொண்டு விடப் போகிறேன். அப்புறம்னா வீட்டுக்கு உப்பு, புளி வாங்கியே செலவழிந்து போய் விடும்..." என்று கூறிக் கணவனிடம் கையை நீட்டினாள் கமலா குரலில் பெருமிதம் பொங்க.

"நான் டாக்சிக்கு என்று எடுத்து வந்தது தான் இருக்கு கமலா. என்னிடம் வேறு ரூபாய் இல்லை" என்றான் முரளி.

"கொஞ்ச நேரம் முன்னே தானே அம்மா கொடுத்ததைக் கொடுத்தேன். அதற்குள் அந்தப் பணத்துக்கு என்ன செலவு வந்துவிட்டது?" என்று கோபமாகக் கேட்டாள் கமலா.

"எங்கம்மா உனக்கு வெற்றிலைப் பாக்கில் வைத்துக் கொடுக்கக் கையில் பணமில்லை, ஒரு பத்து ரூபாய் இருந்தால் கொடுடா என்று கேட்டாள். நீ என்னிடம் கொடுத்ததைத் தான் நான் அவளிடம் கொடுத்தேன். அதைத் தான் அவள் உன்னிடம் கொடுத்திருக்கிறாள்" என்று அசடு வழியக் கூறினான் முரளி.

கமலா வாயைத் திறக்கவில்லை. தன் மாமியாரின் சாமர்த்தியம் அவளைத் திகைக்க வைத்து விட்டது!

ஆரோக்கியத்துக்கு நல்வரவு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.' இதைச் சாதிக்க உதவி புரிபவர் சமூகத்தின் மதிப்புக்கும் நன்றிக்கும் உரியவராவர்.

குறைவற்ற செல்வமென்பது அர்புதமென்னும் பரம்பொருள் ஒன்றே. அதற்குத் துல்யமானது நோயற்ற வாழ்வென்பது நம் முன்னோர் தெளிந்து நமக்குத் தெரிவிக்கும் ஓர் உண்மை. இந்தக் குறைவற்ற செல்வத்தைப் பெற உதவும் பத்திரிகை அல்லது ஆசிரியர் நமக்குப் புரியும் உதவிக்கு ஈடு இணை என்னவென்று சொல்ல முடியும்?

தர்மார்த்த காம மோக்ஷமென்னும் நான்கு வகைப் புருஷார்த்தங்களையும் சாதிக்க மூல காரணமா யிருப்பது ஆரோக்கியம். தபஸ், உபவாஸம், அத்யயனம், பிரம்மசர்யம், விரதானுஷ்டானம் ஏன், ஆயுள் நீடித்திருப்பதற்கும் கூட அனாரோக்யம் பெரியதொரு முட்டுக்கட்டையாக நின்று ஆன்மாவின் நற்கதிக்கான முயற்சிகளைச் செய்யவொட்டாது நம்மைத் தடுக்க வல்லது. ஆகவே அனாரோக்யத்துடன் போரிட்டுவெற்றி பெற்றால்தான் மனிதன் தனது பிறவிப் பயனை முற்றும் பெற வாய்ப்பு ஏற்படும். ஆகவே உள்ள ஆரோக்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதோடு அனாரோக்யம் அணுகாமல் இருக்க நாம் செய்யக் கூடியவை, தவிர்க்கத் தக்கவை என்ற இரு துறையில் நமது முயற்சியை ஒருமுகப்படுத்திடல் அவசியம்.



நல்வழி, நன்னெறிபரமான விஷயங்களைப் பலர் வாயிலாகவும் கேட்டல் நன்று; பன்முறையும் கேட்பது நன்று என்று ஒரு போதனாபரமான முதுமொழி. அதையொட்டிப் பார்க்கும்போது 'ஆரோக்கியம்' என்ற மாதப் பத்திரிகை மூலமாகவும் தத்பரமான விஷயங்களை அறிய ஒரு புது வாய்ப்பு ஏற்பட்டுள்ளது மிகவும் விரும்பத் தக்கது; வரவேற்கத் தக்கது.

மேற்சொன்ன விதம் உடலுக்கும் உயிருக்கும் ஒருங்கே ஹிதமானதை வைத்திய சாஸ்திரங்களிலிருந்து திரட்டி மக்களுக்கு உதவி புரிந்திடும் ''ஆரோக்கியம்'' என்று எதிர்பார்க்கலாம். ஆசிரியரோ அவ்வரும் பெரும் பணியைத் திறம்பட நிர்வகிக்கும் திறமை வாய்ந்தவர். மற்றும் ''ஆரோக்கிய''த்திற்கு விஷயதானம் செய்வோர்களும் அவ்விதமே படிப்பும் அனுபவமும் பெற்றிருப்பது பாராட்டத் தக்க விஷயமாகும்.

ஏழு அல்லது எட்டு சஞ்சிகைகளே இது வரையில் வெளிவந்துள்ள ''ஆரோக்கிய''த்திற்கு நல் வரவு கூறுவதோடு ஈசனருளால் பத்திரிகை சிறப்பும், வெற்றியும் பெற்று வளர வேணுமென்ற வகையில் இரண்டொரு புதிய சிறு பகுதிகளை வகுத்திடல் விரும்பத் தக்கதென்று சொல்லாமல் இருக்க இயலவில்லை.

ஸ்மிருதிகளில் காணும் வைத்திய விஷயங்களான ரோகங்கள், அவற்றுக்குக் காரணமான பாபங்கள் — அவற்றைப் போக்கிட வைத்தியபரமான உபாயங்கள் இவற்றை ஒரு பகுதியில் விளக்கிடல், ஆயுர்வேத சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற பண்டிதர்களுக்கும் மிகவும் பிடித்தமானதும் உபயோகமானதுமான ஒரு புதிய அம்சமாக விளங்கும்.

விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்த யுகத்தில் மனிதர்களின் பழக்க வழக்கங்களும் வாழ்க்கைத் திட்டங்களும் ஆகார விஹார ஆசாரங்களும் வெகுவாக மாறியுள்ளதால் இடம் பொருள், இன்பம், ஏவல், சூழ்நிலைகளையொட்டி வைத்திய சாஸ்திரங்களில் கூறிய போதனைகளை இன்றைய நிலைக்கு ஏற்றவாறு விஞ்ஞானபரமான போதனைகளுடன் ஒத்திட்டுச் சீர்தூக்கி ஸாதர்ம்ய வைதர்ம்ய தாரதம்ய பராமர்சபரமாக விளக்க ஒரு பகுதியையும் ஆரோக்கியத்தில் வகுத்திடின் பொன் மலருக்கு நாற்றமும் உடைத்தாற் போல் விளங்கும் ''ஆரோக்கியம்''.

ஆரோக்கியம்: மாதப் பத்திரிகை — ஆசிரியர்: ஆயுர்வேதாசார்ய, வைத்திய விசாரத பண்டித வி. பி. நடராஜ சாஸ்திரி — வெளியிடுபவர்: ஆயுர்வேத சேவா ஸமிதி, 27, சின்னக் கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி - 2. வருஷ சந்தா ரூ. 3.00. தனிப் பிரதி 25 காசு.

ஏக மூலிகா பிரயோகம்

ஹோமியோபதி வைத்திய வித்தையை யொட்டிய இருநூறுக்கு அதிகமான மருந்துகளின் குணகர்மங்களை விவரிக்கிறது இந்நூல். ''ஏக மூலிகா பிரயோகம்'' என்பது போன்ற அடிப்படைத் தத்துவத்தில்தான் இம்மருந்துகளின் உபயோகக் கிரமம் தெளிவுபட்டுள்ளது. நரம்புகள், தசைகள் முதலியவற்றில் எவ்வித இயக்கத்தை ஒவ்வொரு மருந்தும் உண்டாக்க வல்லது அல்லது மாற்ற வல்லது என்றும், எவ்விதக் குறிகளுள்ள ரோகங்களில் ஒவ்வொரு மருந்தும் உபயோகிக்கத் தக்கதென்றும் விளக்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருந்துகள் மிக மிகச் சிறிய அளவில்தான் கொடுக்கப்படுகின்றன என்பதை யாவரும் அறிவர். நோயின் கடுமையை யுணர்ந்து மருந்தின் அளவை நிச்சயித்திடும் விஷயம் ஹோமியோபதி வைத்தியத்தில் முக்கியமானதாகும். இவ்விஷயத்தில் நூலாசிரியர் தமது நீண்ட காலத்திய அனுபவசித்தமான தகவல்களைத் தந்துள்ளார்.

ஹோமியோபதி வைத்தியத்தில் அறியும் ஆர்வமுள்ளவர்களுக்கு இது மிகவும் உதவி பயக்கக் கூடியது. — ஸ்ரீஹரி

லீடர்ஸ் இன் ஹோமியோபதிக் திரப்யூடிக்ஸ்—ஆசிரியர்: டாக்டர் ஈ. பி. நாஷ்—தமிழில் மொழிபெயர்ப்பு: டாக்டர் வி. ஆர். மூர்த்தி—பிரசுரம்: இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஹோமியோபதி — கும்பகோணம் — விலை: ரூ. 12.00.



அவன் வடிவம்

டெலிபோன் ரிசீவரை ஆத்திரத்துடன் அதன் இடத்தில் அடித்து வைத்தாள் விஜயா.

"அம்மா! அந்த ஆள் இங்கே மந்திரியாம். அப்பாவுடன் சாப்பாட்டுக்கு வருகிறாராம். அப்பா 'போன்' செய்திருக்கிறார்" என்ற போது அவள் முகத்தில் கோபத்தோடு துக்கமும் பரவியது. எதிரே வந்து நின்ற அன்னையைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் போல் பொங்கிய எழுச்சியை அடக்கிக்கொண்டாள்.

கௌரியின் முகம் வெளிறியது. சிறிது நேரம் அசைவற்று நின்றாள். என்னசொல்வதென்று புரியவில்லை.

"எத்தனை அலட்சியம் — உன்னைப் பற்றி!" என்று மெதுவாக முணுமுணுத்தாள் விஜயா.

"இங்கே.... சாப்பாட்டுக்கா!"

"ஆமாம். விருந்து செய்து போட வேண்டியதுதான்."

"அவன்... ஏதோ வேலையில் அமரப் போவதாய் அல்லவா...."

"வேலை கிடைத்து விட்டதாம். அப்பாதான் சிபாரிசு செய்தாராம்! இன்று காலை ஊரிலிருந்து வந்தானாம். இந்த ஒரு வேளைக்கு நம் வீட்டில் சாப்பாடு போட்டு அனுப்பி விட்டால் போதுமாம். ராத்திரியிலிருந்து ஹோட்டலில் தங்க ஏற்பாடு ஆகி விட்டதாம்."

ஏன், இப்போதும்தான் — இந்த ஒரு வேளைக்குக்கூட — ஏதேனும் ஒரு ஹோட்டலுக்குப் போயிருக்கக் கூடாதா? தாயும் மகளும் மனதில் இந்த ஒரே எண்ணத்தோடு ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

"அப்பாவுக்கு என்ன, மனசே இல்லாமல்போய்விட்டதா? எத்தனை தைரியம்!"

"அவர் வீட்டுக்கு அவர் யாரை வேண்டுமானாலும் அழைத்து விருந்து வைக்கலாம். இதில் நாம் கோபப்பட என்ன இருக்கிறது?" என்றாள் கௌரி.

"அம்மா!" — விஜயா அதிர்ச்சியுடன் கூவினாள்.

"எனக்கு என்னவென்றால்.... அந்தப் பையன் எப்படி அதற்கு ஒத்துக் கொண்டான் என்றுதான்."

கௌரி யோசனையோடு மௌனமானாள். அவளைப் பார்த்துக் கொண்டு நின்ற விஜயாவின் கண்களில் மெள்ள ஈரம் கசிந்தது. கணவன் என்னதான் செய்தாலும் அவனைக் குறை கூறாமல் பிறரை நோகும் இந்தக் குணத்தைப் பெண்ணினத்தின் பெருமை என்பதா, பேதைமை என்பதா?

"அவன் பேரிலும் தப்புதான். ஆனால் எனக்கு அப்பா மேல்தான் இன்னும் அதிக ஆத்திரம் வருகிறது. இதை 'ஸஜஸ்ட்' செய்ய அவருக்கு மனசு எப்படியம்மா வந்தது? இது.. உனக்கு அவமானம் இல்லையா? அப்புறம் இந்த வீட்டில் உனக்கு என்னதான் மரியாதை வைத்திருக்கிறாரென்று ஆகிறது?" என்றாள் விஜயா.

கௌரியின் பொறுமை பூண்ட முகம் மகளின் பேச்சைக் கேட்கக் கேட்க வேதனையில் சுருங்கியது. இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"என்னம்மா, என்ன? மறுபடியும் நெஞ்சை வலிக்கிறதா? அம்மா!" ஓடி வந்து அணைத்துக்கொண்ட மகளின் பரிவில் கௌரியின் தாபமெல்லாம், பெண்மையெல்லாம் பொங்கிப் பொருமியது.

"இப்படி அதிர்ச்சி வந்தால் நீ எப்படித் தாங்குவாய்? பாவம். அம்மா, அப்படியே என் மேல் சாய்ந்து கொள்...."

"நான் போய்ப் படுத்துக் கொள்கிறேன் விஜயா. எனக்கு என்னமோ படபடப்பாய் இருக்கிறது."

மகளின் அணைப்பிலிருந்து தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டு கௌரி உள்ளே திரும்பினாள். இந்த இருதய நோய் ஒன்று அடிக்கடி தலை தூக்கி அச்சுறுத்துகிறதே! ஏதாவது அதிர்ச்சியானாலும் இப்படி வந்து விடுகிறது. அவள் தனக்காகப்

பயப்படவில்லை. உலகத்தில் எத்தனை அதிகம் முடியுமோ அத்தனை காலம் வாழ்ந்திருக்க அவள் துடித்ததெல்லாம் சந்துருவுக்காகத்தான்.

படுத்துக்கொள்ள எண்ணிச் சென்ற கௌரி இந்த நினைவு எழுந்ததும் சந்துருவின் அருகில் போய் உட்கார்ந்து கால்களை நீட்டியவாறு சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். வகை வகையான வேதனைகள் முகத்தில் கவிந்தன.

''என்னம்மா? ஏன் எப்படி ஏதோ ஒரு மாதிரி இருக்கிறாய்?''

கௌரி கண்களைத் திறந்தாள். நெஞ்சில் இன்னும் நோவு மாறவில்லை. உதடுகள் துடிக்க மகனைப் பார்த்தாள். இருபது வயது வாலிபன். விஜயாவைவிட இரண்டு வயது மூத்தவன். உலகின் களிப்பில் கலந்து மகிழ்ந்திருக்க வேண்டிய பருவத்தில் இதோ கால்களின் உபயோகத்தை இழந்து படுக்கையோடு முடங்கிக் கிடக்கிறானே! விதியால் வஞ்சிக்கப்பட்ட அவனது ஐந்தாம் வயதிலிருந்து தாயின் இதயத்தில் ஒரு மாறாத அன்புச் சுமையாக அமைந்து விட்டான். அவனுடைய கவலையும், துயரமும், கவனிப்பும், பாதுகாப்பும் அவளைச் சுற்றியே கனத்து வளர்ந்தன. பெண்ணைப் பற்றிக் கூட அவளுக்கு அத்தனை சிந்தனை இல்லை. இந்த மகனுக்குத் தாயாக, அன்பினால், அவனுக்கு ஓர் அரணாக, எத்தனை காலம் வாழ்ந்திருக்க முடியுமோ, வாழ வேண்டுமென்ற தாபம்தான் அவளுடையது.



''என்னம்மா?'' என்று கேட்டான் சந்துரு மீண்டும்.

''ஒன்றுமில்லையடா!''

''மார்பு வலிக்கிறதா?''

''ஆமாம்.''

''படுத்துக் கொள்ளேன். வேலையையெல்லாம் விஜயா பார்த்துக் கொள்ளட்டும். கொஞ்சம் ஓய்வாய் இரேனம்மா.''

இன்றைய நெஞ்சு வலிக்கு மருந்தாகப் படுத்துக் கொண்டு விட்டால் மட்டும் போதுமா?

இத்தனை நாள் இம்மாதிரியான சந்தர்ப்பம் நேரவில்லை. சாம்பசிவம் தமது இன்னொரு வாழ்க்கையை இந்த வீடு வரை எட்டவில்லை. அவருடைய அலுவல்கள் கௌரிக்குத் தெரியாதவையல்ல. 'கல்யாணம்' என்ற பேச்செல்லாம் அந்த நாளில் காதில் படாமல் இல்லை. பெண்மை வெகுண்டது. ஆயினும், நெஞ்சைக் கொல்லும் ஒரு பெருமூச்சுடன், அவள் முன்பே — இள வயதிலேயே — அந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டு, விலகி விட்டாள். அவளுக்கும் அவள் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளில் அவர் ஏதும் குறை வைக்காததாலும், அந்த வீட்டைப் பொறுத்தவரை அவளுடைய கௌரவத்தை மற்றப் பிணைப்புகளால் பாதிக்காமல் அவர் இருந்ததாலும் அப்படி ஏற்றுக்கொள்வது அவளுக்குச் சாத்தியமாக இருந்தது. குறையுற்ற மகனைப் பார்க்கும்போதெல்லாம் மட்டும் அவள் உள்ளம் குமுறும். அவருக்கு... அவருக்கு எப்படி மனசு வந்தது!.... இப்படியே ஆண்டுகள் வேகமாகச் சென்று விட்டன.

படுக்கையிலேயே கிடந்தவாறு புத்தகம் படிக்கும் சாக்கில் தன்னுள்ளேயே ஆழ்ந்தவனாய் வாழ்ந்து வரும் சந்துருவுக்குத் தகப்பனாரைப் பற்றித் தெரியும். வெளிப்படையான ரசாபாச மில்லாதிருந்தும், யாவருக்கும் விஷயம் தெரிந்திருப்பதைத் தடுக்க முடியாதிருந்த சாம்பசிவத்தின் தன்மையில் ஒரு கண்ணியம் இருந்தாற் போலவும் தோன்றியது. கௌரி அதை ஒப்புக் கொள்ளாமலில்லை. ஆனால் முதலிலெல்லாம் அவள் உணர்ந்த அமைதி பிறகு நிலைக்கவில்லை. ''எவளோ ஒருத்தி'' என்ற நினைவு மட்டும்

ஆர். சூடாமணி

இருந்தபோது அவன் அலட்சியமாய் இருக்க முடிந்தது. ஆனால் அந்த உறவில் குழந்தை ஒன்று இருப்பதாகத் தெரிந்த நாள் முதலாக அவள் உள்ளத்தின் ஒரு பாகம் நிரந்தரக் கல்லாகிவிட்டது. எங்கோ தொலைவில் விவரமற்ற நிழலாக இருந்து வந்த அந்த விஷயத்துக்குத் திடீரென்று ஒரு மறுக்கவொண்ணாத வாஸ்தவ நிலை ஏற்பட்டு விட்டதுபோல் இருந்தது. அதற்கு அவள் மனத்தில் அதன் பின் மன்னிப்புக் கிட்டவில்லை. தன் குழந்தைகளின் தந்தை என்ற ஒரே மதிப்புடன், ஒட்டாத உறவின் மரியாதை எல்லையில் அவள் அந்த வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

அந்த அமைதிக்கு அல்லவா இன்று பங்கம் விளைந்து விட்டது! அந்த.... இன்னொரு குழந்தை — இன்று ஒரு வளர்ந்த வாலிபன்— அவனை இந்த வீட்டில் சாப்பிட அழைத்திருக்கிறாரே அவர்! அவள் இருக்கும் வீட்டில்! விஜயா சொன்னதை அவள் வெளிப்படையாய் ஒப்புக் கொண்டிரா விட்டாலும் உள்ளத்தில் அதே உணர்ச்சிதான்! இது அவளுக்கு அவர் இழைக்கும் எத்தனை பெரிய அவமானம்! என்ன இதயமில்லாத் தன்மை!

'அவர் அவனை இங்கே கூப்பிடுவதை நான் தடுக்க முடியாது. ஆனால் அவனை நான் பார்க்க மாட்டேன். பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று என்னை யார் கட்டாயப் படுத்த முடியும்? அவர் இந்த வீட்டின் எஜமானர் என்றால் நான் எஜமானி....'

குரோதமும் துக்கமும் ஆவேசமும் பொங்கச் சிவந்து தோன்றிய தாயின் முகத்தைப் பார்த்துச் சந்துரு வியப்படைந்தான்.

''என்ன விஷயம் அம்மா? மனசிலே என்ன நினைக்கிறாய், முகம் இப்படி மாறும் படியாக.....?''

''டே, சந்துரு! எனக்கும் இந்த வீட்டிலே அதிகாரம் இருக்குடா. இருக்கு. உன் அப்பா தன்னை என்னவென்று நினைத்துக் கொண்டார்...?''

''அம்மா!''

கௌரியின் மார்பு வேகமாய் ஏறி இறங்கியது. கண்களிடமிருந்து மனக் கஷ்டமும் உதாசீனமும் நெஞ்சில் புதுப் புயலாக வீசித் திருந்தன.

அவர் என்னமோ தனக்கு இன்றுதான் துரோகம் இழைத்து விட்டது போல் ஒரு தீவிர ஆக்ரோஷம். பதைக்கும் கைகளோடு மகனின் கால்களைத் தடவினாள். எப்படி அவருக்கு மனசு வந்தது? இம்மாதிரி ஒரு மகன் இருக்கும் போது....

''அம்மா, என்ன நடந்து விட்டது இன்று? சொல்லம்மா!'' சந்துரு முழங் கையை ஊன்றித் தலையணை மேல் முதுகை உயர்த்தி வலது கையால் அவள் தோளைப் பற்றியவாறு கேட்டான்.

அவள் ஆவேசம் சட்டென்று அடங்கியது. கண்ணீர் நிறைந்த அவனுடைய முகத்தைப் பார்த்தாள். அவன் ஆண் பிள்ளை. தனது சக்தியற்ற குழந்தை என்ற பரிவு, பாசம், நெருக்கம் யாவையும் மீறிக் கொண்டு அந்தக் கணம் அவன் ஆண், அவள் பெண் என்ற வித்தியாசம் பெரிதாக எழுந்து அவர்களிடையே ஒரு விசித்திரத் தொலைவை உண்டாக்கியது. தன்னுள் பொங்கிய வேதனை எழுச்சியை மறைத்துக் கொண்டாள்.

''மார்பு வலிதான் ரொம்ப அதிகமாக இருக்கிறது சந்துரு. நான் படுக்கப் போகி றேன். நீ படி. என்ன புத்தகம் அது?''

அவன் பதில் அவள் காதுகளில் விழவில்லை. எழுந்து சென்று மாடி அறையில் படுத்துக் கொண்டாள். கீழே சாப்பாட்டு விவரமெல்லாம் விஜயா சமையல்காரனுக்குச் சொல்லி விடுவாள்.

தாயே, இன்று ஏன் நெஞ்சு இப்படி நோகிறது ?

கடவுளே! என்னை இத்தனை சீக்கிரம் எடுத்துக் கொண்டு போய் விடாதே. சந்துருவுக்காக நான் ரொம்ப நாள் வாழ வேண்டும்— எத்தனை சிரமப்பட்டாலும்....

நேரம் கடந்தது.

''அம்மா, அப்பாவும் அவனும் வந்தாயிற்று. நீ எங்கே என்று அப்பா கேட்கிறார்.'' பேசிக் கொண்டே விஜயா அறைக்குள் நுழைந்தாள்.

கௌரிக்கு ஒரு நிமிஷம் உடலெல்லாம் தீப் பற்றுவது போல் எரிந்தது. அவன்.... வந்து விட்டானா? இந்த வீட்டிலா?

''நான் கீழே வரவில்லை விஜயா. ரொம்ப மார்பு வலியாய் இருக்கிறதென்று அப்பா விடம் சொல்லு.''

''அதுதான் சரியம்மா. நீ எதற்காகக் கீழே வந்து அவனைப் பார்க்க வேண்டும்? அப்பாவுக்குத்தான் வெட்கமில்லை என்றால்..''

''சீ! சீ! வாயை மூடு! அப்பாவைப் பற்றி இதெல்லாம் பேசாதே. எனக்கு நிஜமாகத் தான் வலிக்கிறது. நீ போய்ச் சொல்லு.''

தான் நெருங்க முடியாத ஓர் எல்லை இங்கு இருப்பதை விஜயா உணர்ந்து கொண்டாள். தலை குனிந்தவாறு வெளியேறினாள்.

நேரம் சென்றவாறு இருந்தது. கடிகாரத்தின் அசைவு ஒலிகள் உள்ளத்துள் தாக்கும் சவுக்கடிகளாகத் தோன்றின கௌரிக்கு. நெஞ்சு வலி சற்றுக் குறைந்திருந்தது. ஆனால் நெஞ்சில் வலி தாங்க முடியவில்லையே?

கீழே சாப்பாட்டு அறையிலிருந்து எழுந்த பேச்சொலிகள் இங்கும் இலேசாய்க் கேட்டன.

அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான், அவள் வீட்டில். அவள் செய்து வைத்த ஆவக்காய் ஊறுகாயை இந்நேரம் சுவைத்துக் கொண்டிருப்பான் —அவள் தன் குடும்பத்தினருக்காகச் செய்து வைத்ததை.

ஒரு விதத்தில் அவளுக்கே தன் போக்கு விசித்திரமாக இருந்தது. இத்தனை வயதுக்கு மேல் இதெல்லாம் என்ன உணர்ச்சிகள்? எப்போதோ உருவாகிவிட்ட கட்டத்தின் வெறும் தொடர்ச்சிதான் இன்றைய சம்பவம். ஆனாலும் — இத்தனை நாள் இல்லாமல் இன்று அவளுடைய வீட்டில் அவன்! சந்துருவைப் போல அவனும் அவருடைய மகன். இந்த எண்ணம்தான் தாங்க முடியவில்லை. இதில் புதிது ஒன்றுமில்லை. ஆனால் இன்று புதுக் கூர்மையுடன் இதயத்தைத் தாக்குகிறது... அவன் சீக்கிரமே போய் விடட்டுமே.

மாடிப் படிகளில் காலடியோசை கேட்டது. தலைநிமிர்ந்த அவள் முன் சாம்பசிவம் காணப்பட்டார்.

''கௌரி!''

குரலில் இலேசான சீற்றம். அவன் பதில் உரைக்க வில்லை.

"இமே வராமல் வேண்டுமென்றே சத்தி யாக்கிரகம் செய்து விட்டாய், இல்லையா?"

இதற்கும் பதில் இல்லை.

"அவளை மாடிக்கு அழைத்து வர எனக்கு எத்தனை நேரம் ஆகும்?"

அவன் வாய் துடித்தது. கண்ணீர் நெஞ்சில் பாய்ந்தது.

"இத்தனை நாள் இப்படி ஆயிற்று? ஏதோ இந்த ஒரு சந்தர்ப்பத்தில்...."

"எனக்கு அவள் முகத்தில் விழிக்க இஷ்டமில்லை. நினைத்தாலே உடம்பு பதைக்கிறது. நீங்கள் செய்த காரியம் உங்களுக்கே நன்றாக இருக்கிறதா? ஊரில் தேராட்டல்தானே, இல்லை...?"

"இந்த வீட்டில்...."

"சாப்பாடு ஆகி விட்டதல்லவா? இன்னும் என்ன? முதலில் வெளியே அழைத்துக் கொண்டு போங்கள், உங்களுடைய......"

அடுத்த வார்த்தையை அவன் நா உரக்கக் கூற முடியவில்லை. விம்மல் ஒன்று மெல்லத் தெறித்தது.

"கடைசியில் கேவலம் பெண்தானே! அந்த அற்பத்தனத்தைக் காட்டி விட்டாய்."

"நான் பெண்ணென்பதை நினைத்துப் பார்த்திருந்தால் நீங்கள் இன்று இப்படிச் செய்திருக்க மாட்டீர்கள்."

"அது போகட்டும். பாக்கு எங்கே? அதைக் கேட்கத்தான் நான் வந்தேன். இமே இல்லை. வேணுவுக்குச் சாப்பாட்டுக்கப்புறம் வாயிலே பாக்குப் போட்டுக் கொள்ள வேண்டும்" என்றார் அவர் சாவதானமாக.

வேணு....வேணு....எத்தனை இலகுவாகச் சொல்லிப் பழக்கப்பட்ட சலுகையோடு அவன் காதில் அப்படி ஒரு புதுப் பெயரைப் போடுகிறார்! வேணு.

சந்துரு.

"பாக்கு நேற்று ராத்திரியோடு ஆகி விட்டது. இனி மேல் வாங்கினால்தான்." அவள் கோபத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டு படுத்தாள். சிறிது நேரம் அறையில் அசைவில்லை. பிறகு அவர் வேகமாய்க் கீழே இறங்கிச் செல்லும் சத்தம் கேட்டது.

அவள் மனத்தோடு போராடிக் கொண்டிருந்தாள். வேணுவாம், வேணு. மீண்டும் மீண்டும் ஆத்திரத்தின் அஸ்திவாரத்தில் அதே எண்ணம் - அவருக்கு எப்படி மனசு வந்தது? படுத்த படுக்கையாகச் சந்துரு. அவர்களது செல்வக் குழந்தை.. அவன் குறை அவளுடைய நெஞ்சை விட்டு நீங்காத துன்பமாய் அழுத்துகிறதே. சந்துரு.... வேணு.... அவருக்கு எப்படி மனசு வந்தது?

தோட்டத்தில் பேச்சொலி கேட்டது. நடந்து போகிறார்களா, காரில் கொண்டு போய் விட்டு வரப் போகிறாரா?

பேச்சொலியோடு இப்போது சிரிப்பொலியும் சேர்ந்தது. அவள் நெஞ்சில் நெருப்பு மூண்டெழுந்தது. கோபமும் துன்பமும் உள்

அட்டைப்பட விளக்கம்

நவராத்திரி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி ஆக விளங்கும் அன்னை பராசக்தியை வணங்கி வழிபட நம் பெரியோர்கள் நவராத்திரித் திருவிழாவை ஏற்படுத்தினார்கள். இந்த நவராத்திரி சாக்தமதம் பரவிய வங்கத்திலே பெரிய வீர வழிபாடாகவே இன்றும் நடைபெறுகிறது.

சக்தியின் மற்றொரு அம்சம் சிவன். சிவபெருமானை ஆனந்த நடனம் ஆடும் கலையுருவிலே போற்றி வணங்கி மகிழும் பண்பாடுடையவர்கள் தமிழர்கள் அல்லவா? அந்த மரபுப்படி சக்தியின் திருவிழாவான நவராத்திரியைக் கலை விழாவாகவே தமிழகத்தில் பண்டை நெடுங்காலமாகக் கொண்டாடி வருகிறோம்.

நவராத்திரியின் தத்துவம் உணர்ந்த பெரியோர்கள் இந்த ஒன்பது நாட்களும் நியமப்படி பூஜை, பாராயணம் செய்கிறார்கள். இளம் பருவத்துப் பெண்களும் தாய்மார்களும் வண்ண வண்ண மண்பொம்மைகளையும், மரப்பொம்மைகளையும் அழகுபட அடுக்கி மனையில் உள்ள பெண்களை அழைத்து வந்து தங்கள் கலைத் திறனைக் காட்டி மகிழ்கிறார்கள். தாம்பூலம் வாங்க வரும் பெண்கள் வந்த இடத்தில் பாட்டுப் பாடித் தங்கள் சங்கீதக் கலைத் திறனைக் காண்பித்துச் செல்கின்றனர்.

ஏதோ சினிமா வந்த பிறகுதான் 'மேக்–அப்' கலை வந்தது என்றில்லை. வீட்டிலுள்ள சிறுமிகளையும், சிறுவர்களையும் கண்ணன் போலவும் ராதை போலவும் வேஷம் போட்டு நாலு வீடுகளில் அழைக்க அனுப்பும் காட்சி மனோரம்மியமான காட்சி. இப்படி எத்தனை எத்தனையோ வேஷங்களைத் தங்கள் குழந்தைகளுக்குப் போட்டு மகிழ்வார்கள் நம் தாய்மார்கள்.

இதோ இந்த அட்டையில் ஒரு தாய் தன் மகளுக்கு ராஜஸ்தானி — மார்வாரி உடை அணிவித்து மகிழ்ந்து போவதைப் பாருங்கள். இதைப் பார்க்கும் போது நமக்கே மகிழ்ச்சி பொங்குகிறதல்லவா? இது சித்திரக்காரர் 'கல்பனா'வின் கைவண்ணம் புரியும் ஜாலம்!

இந்தியாவில் சமூகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால், அந்தச் சீர்திருத்தத்தால் ஆத்மிகம் எவ்வளவு உயரும் என்பதைக் கருத்தில் கொண்டே செய்ய வேண்டும்; இந்தியாவில் அரசியல் கருத்துக்களைப் பரப்ப வேண்டுமானால் அவை எவ்வளவுக்குத் தேசத்தின் ஒரே தேவையான ஆத்மிகத்துக்கு உதவும் என்பதைக் கவனத்தில் கொண்டே பரப்ப வேண்டும். இந்தியாவில் சோஷலிஸத்தையோ, இதர அரசியல் கருத்துக்களையோ பெருக்க விரும்பின் ஆத்மிகத் தத்துவங்களை நாடெங்கும் பிரவாகமாகப் பொழிய விட வேண்டும். — ஸ்வாமி விவேகானந்தர்

யத்தைச் சூறையாடின. சட்டென்று ஒரு விவரமற்ற ஆவேசம். பார்க்கத் தூண்டிய வெறுப்பின் வேகம். அவள் எழுந்தாள். பார்த்தால் வேதனை தானாகும் என்று தெரியும். ஆயினும் அந்த வேதனையை வலிய வேண்டிப் போவதில் அவள் கால்கள் பின்னடையவில்லை.

மாடிப் பால்கனியின் கைப்பிடிச் சுவரோரம் நின்று கீழே பார்த்தாள்.

கீழே தோட்டத்தில் மோட்டாரின் பக்கமாய் நின்று சாம்பசிவம் பேசிக் கொண்டிருந்தார். அவரோடு இருந்த இளைஞனைக் கௌரிக்குத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. நல்ல உயரம். அடர்ந்த கரும் கேசம். முகத்தில் அழகான புன்முறுவல். வெளிர் உடைகளிலும் எடுப்பான வாலிபத் தோற்றம். கௌரி பார்த்துக் கொண்டே இருந்தாள். அவ்விருவரின் பேச்சொலி எங்கோ தொலைவிலிருந்து வருவது போல் இருந்தது. அவள் உள்ளத்தில் பதற்றம் தாங்க முடியவில்லை. உணர்ச்சி பொங்கிப் பெருகியதில் கீழே மயக்கமாக விழுந்து விடுவோமோ என்ற பயத்தோடு அவள் பாதி இமை மூடிய நிலையில் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்ட அதே சமயம் விஜயா பின்னாலிருந்து ஓடி வந்து அவளைத் தாவிப் பற்றியவாறே "அம்மா!" என்று கூவினாள்.

அந்தக் குரல் கீழே நின்றவர்களுக்குக் கேட்டிருக்க வேண்டும். சாம்பசிவமும் வேணுவும் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தார்கள்.

"கொஞ்சம் இருங்கள். பாக்கு வேண்டுமென்றீர்களே!"

திடீரென்று அந்தக் குரல்! விஜயா விழித்தாள். ஆம், கௌரிதான் கணவனுக்குக் குரல் கொடுத்தவள். மயக்க நிலை தெளிந்து தன்னைச் சமாளித்துக் கொண்டு விஜயாவின் கரங்களை மெல்ல விலக்கியவாறே, "இதோ கொண்டு வருகிறேன். அதற்குள் கிளம்பிவிட வேண்டாம்" என்று கூறியவாறு உள் பக்கம் திரும்பினாள்.

சாம்பசிவத்துக்கு வியப்புத் தாங்கவில்லை. சற்று நேரம் முன்பு கோபமும் வெறுப்பும் பொங்கத் தம்புருவுடன் மாடி அறையில் சண்டை போட்ட மனைவியா இவள்? வேணுவும் அவளைப் பார்த்து விட்டதால் அவ்வியருக்கு முன் கணவனின் மானத்தைக் காப்பாற்ற நினைக்கிறாளா?

கௌரி பீரோவைத் திறந்து, புதிதாய் வாங்கி வைத்திருந்த வாசனைப் பாக்குத் தூளைப் பொட்டலத்துடன் எடுத்துக்கொண்டு படிகளில் இறங்கித் தோட்டத்தை வந்தடைந்தாள். அவளுள் ஒரு துடிப்பு புது உயிராகப் பற்றி இயக்குவது போல் இருந்தது.

"இதோ பாக்கு."

சாம்பசிவம் கையை நீட்டினார். ஆனால் கௌரியின் கரம் பாக்கோடு வேணுவின் பக்கம்தான் நீண்டிருந்தது. அவள் கண்களும் அவன் வடிவத்தை விட்டு அகலவில்லை.

"தாங்க்ஸ்."

இளைஞன் குனிந்த தலை நிமிராமல் அவ்விடமிருந்து பொட்டலத்தைப் பெற்றுக் கொண்டான். கொஞ்சம் பாக்குத் தூளை எடுத்துக் கொண்டு திருப்பித் தந்தான்.

"நமஸ்காரம். நான் வருகிறேன்."

மோட்டார் ஓடி மறைந்தது. அவள் முன் குனிவும். ஆனால் கண்களும் ஏதோ நிறைந்திருந்த உணர்வை அவளால் அகற்ற முடியவில்லை.

"அம்மா!" விஜயாவின் குரல் ஏமாற்றத்துடன் ஒலித்தது. "கடைசியில் பெண்களுக்கு உறுதி இல்லை என்று சொல்லும்படி நடந்து கொண்டு விட்டாயே! அவனைப் பார்க்க மறுத்து மாடியில் படுத்துக் கொண்டு அப்பா செய்த அவமானத்தைக் கண்டித்தாய் நீ என்று சந்தோஷப்பட்டேனே! உன் சுயகௌரவத் தன்மையைப் பாராட்டிக் கொண்டேனே! கடைசியில் அவனுக்கு நீ உபசாரம் செய்ய வேண்டித்தான் இருந்ததா?"

கௌரி மெல்லத் தன் தலையைத் திருப்பினாள். அவள் முகத்தில் வேதனையின் இடத்தில் இப்போதும் வேதனைதான் இருந்தது. ஆனால் கோபத்தின் இடத்தில் காணப்பட்ட பாவனையை விஜயாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கௌரி தாப வேகத்துடன் உதடு துடிக்கக் கூறினாள்.

"விஜயா! அதே சாயல்தானடி! அப்படியே இருக்கிறான்! அதே அச்சுத்தான்! முகம், உடல் வாகு எல்லாம்! சந்துருவின் கால் சரியாயிருந்தால் அவன் எப்படி இருந்திருப்பான் என்று பார்த்து விட்டேன். இது போல் உயரமாய், கம்பீரமாய், களையாய் இருப்பான். இன்று என் சந்துருவை முழுசாகப் பார்த்து விட்டேன் விஜயா! கடவுளே! கடவுளே... கடவுளே... அந்தப் பையன் நன்றாயிருக்கட்டும். இனி மேல்.... அவரிடம் கூட எனக்குக் கோபம் இல்லை...."

முன்பு ஒரு மனைவியின் கொந்தளிப்பைக் கண்டு மனம் நைந்து போன விஜயா, இப்போது ஒரு தாயின் உள்ளத்துக்கு முன், அதன் பிரதிபலிப்பாகக் கண்ணீரினூடே கலந்து ஒளிர்ந்த புன்னகைத் துடிப்புக்கு முன், கை கூப்பி நின்றாள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

